தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

வியாழக்கிழமை, 1979 மார்ச் 29.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

(1) அறிவிப்பு.

மேலவைத் தலைவரிடமிருந்து வந்துள்ள செய்தி குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்ற மேலவையில் கீழ்க்கண்ட சட்ட முன் வடிவுகள் ஆய்வு செய்யப்பெற்று பரிந்துரைகள் ஏதுமின்றி திருப்பி அனுப்பப்பெற்றுள்ளன என்று மாண்புமிகு மேலவைத் தலைவரிடமிருந்து செய்தி வரப்பெற்றுள்ளது.

(1) தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு முன் நிதி ஒதுக்க (செலவினக் கணக்கின்மீது வாக்கெடுப்பு) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 16/1979).

(2) தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 17/1979).

(3) தமிழ் நாடு 1979 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 2) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 18/1979).

(2) அறிக்கை அளித்தல்.

(அ) பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கை.

திரு. இரா. முத்தையா : தலைவரவர்களே, பொது நிறுவனங்கள் குழுவின் 1973-74 ஆம் ஆண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் (சிவில்) அறிக்கையில் வீராணம் முதலிய குடிநீர் வழங்கும் திட்டங்கள் குறித்த பத்திகளின் மீதான பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கையை (ஆறாவது அறிக்கை) அவைமுன் வைக்கிறேன்.

(3) தகவல் கோரல்.

அவையில் எடுத்துக்கொள்ளப்பெற வேண்டியவைகள் குறித்து.

திரு. க. சுப்பு : இன்றைக்குக் கேள்வி நேரம் உண்டா, இல்லையா ? கேள்வி நேரம் இல்லை என்றால் அதற்கு ரெசலூஷன் மூவ் செய்ய வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 27-ந் தேதியே முடிவு செய்யப்பட்டு, தீர்மானமும் நிறைவேற்றப்பட்டுவிட்டது. அதனால் இன்றைக்கு மீண்டும் தீர்மானம் கொண்டுவர வேண்டியதில்லை.

திரு. க. சுப்பு : விதிப்படி தீர்மானம் இன்றைக்குத்தான் கொண்டுவரப்பட வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விதியில் அப்படி இருப்பதாகத் தெரியவில்லை. இருந்தபோதிலும் அவையில் முடிவு எடுத்துவிட்டால் அதைத்தான் நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். 'கால் அட்டன்ஷன்' கூட அப்படி விதியை ரிலாக்ஸ் செய்து எடுத்துக்கொண்டிருக்கிறோம்.

திரு. ரா. உமாநாத் : தலைவரவர்களே,

* * * *

அதனால் ரூல் 42-ன் கீழ் நான் ஒரு தீர்மானம் கொடுத்திருக்கிறேன்.

* * * *

Mr. SPEAKER: Raise the point alone, don't go into the details. பாயின்ட் ஆஃப் ஆர்டர் என்னவென்று மட்டும் சொல்லுங்கள்.

திரு. ரா. உமாநாத் : * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பிரச்சனை என்ன என்பதை மட்டும் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவாருங்கள். விவரங்களை எல்லாம் இப்போது பேசக்கூடாது. அப்படி பேசியவைகளை நீக்கும்படி உத்தரவிடுகிறேன். நான் கொடுத்தது என்னவாயிற்று என்று மட்டும் கேளுங்கள்.

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

1979 மார்ச் 29]

திரு. ரா. உமாநாத் : அந்த விஷயமாக 42-வது விதியின் கீழ் அட்ஜர்ன்மென்ட் மோஷன் கொடுத்திருக்கிறேன். இது ஒரு முக்கியமானப் பிரச்சனை. ஆகவே, அதைத் தாங்கள் இன்றைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, இது சம்பந்தமாக 42-வது விதியின்கீழ் நானும் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன். அது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சனை என்பதால் அதை இன்றைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்று காலை 8-22 மணிக்குத்தான் என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறீர்கள். அதை அரசின் கவனத்திற்கு அனுப்பியிருக்கிறேன். அவர்களிடமிருந்து பதில் வந்ததும் எடுத்துக்கொள்கிறேன்.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, இதே பிரச்சனை சம்பந்தமாக விதி 42-ன் கீழ் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நானும் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதே பிரச்சனைக்கு ஏற்கெனவே தீர்ப்புச் சொல்லிவிட்டேன்.

Thiru K. SUPPU : Rule 186 ; A matter of privilege must be raised after the questions and before the list of the business for the day is entered upon....என்று இருக்கிறது. இன்று 'கொஸ்டின் அவர்' இல்லை.

திரு. ரா. உமாநாத்: 8-22-க்குத்தான் தீர்மானம் கொடுத்ததாகச் சொன்னீர்கள். இந்தப் பிரச்சனை சில நாட்களாகவே சீரியஸாக இருக்கிறது. இது ஒரு புதிய பிரச்சனை அல்ல. ஆகையால் அரசாங்கத்திற்கு இதுபற்றிய தகவல் முழுமையாகத் தெரிந்திருக்கும் ; உடனே பதில் சொல்லலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏற்கெனவே இந்தப் பிரச்சனையைப்பற்றி இந்த அவையில் பேசப்பட்டிருக்கிறது. அரசு தரப்பில் ஏற்கெனவே தெரிந்திருந்தாலும், இதுபற்றி விவாதிக்கப்பட்டிருந்தாலும் அரசின் கவனத்திற்கு தாங்கள் கொடுத்ததைக் கொண்டு சென்றிருக்கிறேன். நாளை அதைப் பற்றிச் சொல்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவரவர்களே, சட்டமன்ற விதிகள் மிகத் தெளிவாக இருக்கின்றன. "....A Member shall not raise a point of order to ask fo

information. . . .'' ஆகவே மாண்புமிகு திரு. உமாநாத் போன்றவர்கள் இங்கே பாயின்ட் ஆஃப் ஆர்டர் என்று எழுப்பி இது குறித்து கேட்பதற்கு விதிகளிலே இடம் இல்லை.

திரு. ரா. உமாநாத் : தலைவரவர்களே, நான் கேட்கவில்லை. வற்புறுத்தினேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் கொடுத்தது என்னுடைய கவனத்திற்கு வந்தது. அதனை ஆய்வுக்கு எடுத்துக் கொண்டிருக்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப் : This is not a question of seeking information. This is only a submission.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்பர்மேஷனோ அல்லது சப்மிஷனோ எதுவாக இருந்தாலும் தலைவர் அனுமதி கொடுத்த பிறகுதான் எடுத்துக்கொள்ள முடியும்.

THE HON. THIRU S. RAMACHANDRAN : The submission can be made by the Hon'ble Members always to the Chair. It is for the Chair to dispose of that.

(கூச்சல், குழப்பம்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்பர்மேஷன், சப்மிஷன் என்று என்னிடம் தகவல் அறிந்துகொள்வது வேறு, கோரிக்கையாக வைப்பது வேறு. நான் திரு. உமாநாத் அவர்கள் எழுப்பிய பிரச்சினைக்கு பதில் சொல்லுகின்றபோது அவர் கொடுத்தது என்னுடைய ஆய்விலே இருக்கிறது என்று சொன்னேன். இன்றைக்கு அது எடுத்துக்கொள்ளப்படவில்லை. அரசின் தரப்பிலே இருந்து வந்த பிறகு நாளைக்கு எடுத்துக் கொள்ளலாமா என்பது பற்றி நாளை தெரிவிக்கிறேன். இதற்கு மேல் அதிலே பேசக் கூடாது.

திரு. எம். ஏ. லத்தீப் : * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேசக்கூடாது, உட்காருங்கள்.

(கூச்சல், குழப்பம்.)

திரு. ரா. உமாநாத் : * * * நான் ஒத்திவைப்பு தீர்மானம் கொடுத்திருந்தேன். அதன் முக்கியத்துவத்தைக் கருதி உடனடியாக அது எடுத்துக்கொள்ளப்படாததன் காரணத்தால், அனுமதி கொடுக்கப்படாததன் காரணத்தால் நாங்கள் சிறிது நேரம் வெளிநடப்பு செய்கிறோம்.

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, * * * அரசாங்கத்தின் நடவடிக்கை திருப்திகரமாக இல்லை என்ற காரணத்தால் நாங்கள் வெளிநடப்பு செய்கிறோம்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, அரசாங்கத்திறகு தக்க விவரங்கள இல்லை. * * *

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, * * * நாங்கள் 42-விதியின் கீழ் தீர்மானம் கொடுத்திருக்கிறோம். அது எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைத் தாங்கள் அறிவீர்கள். (குறுக்கீடு-கூச்சல், குழப்பம்.) * * *

திரு. சேலம் மு. ஆறுமுகம் : பேரவைத் தலைவரவர்களே, * * * ஆகவே இது சம்பந்தமாக. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆறுமுகம் அவர்களும் மற்றவர்களும் வெளிநடப்பு செய்கிறேன் என்று கூறி இருந்தால் அது இருக்கட்டும், மற்றவைகளை நீக்கும்படி உத்தர விடுகிறேன். அதுபோன்றுதான் திரு. ஜேம்ஸ் அவர்களும் மற்ற விஷயங்களைப் பேசி இருந்தால் அவைகளையும் நீக்கும்படி உத்தர விடுகிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவரவர்களே, * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் அனுமதிக்க முடியாது. அடுத்து மதிப்பீட்டுக் குழுவின் தலைவர் அதன் அறிக்கையை அளிப்பார்.

(2.) அறிக்கை அளித்தல்—தொடர்ச்சி.

(ஆ) மதிப்பீட்டுக் குழுவின் 8-வது அறிக்கை.

திரு. கா. செங்கோடன் : தலைவரவர்களே, மருத்துவ மனைகள் மற்றும் மருந்தகங்கள் பற்றி மதிப்பீட்டுக் குழு அளித்த பரிந்துரைகள் மீது அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்த குழுவின் 8-வது அறிக்கை அவைமுன் வைக்கப் பட்டிருக்கிறது என்பதைத் தெவித்துக்கொள்கிறேன்.

(4) அரசினர் தனித் தீர்மானம்.

விற்பனை வரி (மேல் வரி) சட்ட விஸ்தரிப்பு குறித்து.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1971-ம் ஆண்டு விற்பனை வரி (மேல்வரி) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 24/1971) 1-ஆவது பிரிவைச் சேர்ந்த (3) உட்பிரிவில் (b) பகுதியின் கீழ் வெளியிடக் கருதப்பட்டுள்ள கீழ்க்காணும் அறிவிப்பின் வரைவு, மேற்சொன்ன சட்டத்தின் 1-ஆவது பிரிவைச் சேர்ந்த (5) உட் பிரிவில் சொல்லியுள்ளவாறு ஏற்பளிக்கப்பட வேண்டும்",

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

[திரு. எஸ். டி. சோமசுந்தரம்] [1979 மார்ச் 29

வரைவு அறிவிப்பு.

தமிழ்நாடு 1971-ஆம் ஆண்டு விற்பனைவரி (மேல்வரி) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 24/1971) 1-ஆவது பிரிவைச் சேர்ந்த (3) உட்பிரிவில் (b) பகுதியில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு ஆளுநர் அவர்கள்: இந்த அறிவிப்பின் இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள திருச்சிராப்பள்ளி ஆகிய நகராட்சி நகரங்களிலிருந்தும் 16 கி.மீ. தொலைவுக்கு மேற்படாத புறநகர்ப் பகுதியிலும், மேற்சொன்ன சட்டம் 1979-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1-ஆம் நாள் முதல் செயலுக்கு வர வேண்டும் என இதனால் ஆணையிடுகின்றார்." என்ற தனி தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

தனித் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று' நிறைவேற்றப்பெற்றது.

(முற்பகல் 9-10.)

திரு. க. சுப்பு : தலைவர் அவர்களே, இதிலே நான் பேச வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தேவை இல்லை. * * * வாக்கெடுப்பிற்கு விடும்போது உறுப்பினர் இருக்கையில் இல்லை. தீர்மானம் நிறைவேறி விட்டது. இப்போது ஓடிவருகிறீர்கள். என்ன செய்வது; பேச முடியாது. திரு. ஏ. ஆர். மாரிமுத்து....

திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, * செய்தது வேறு ஒரு காரணத்திற்காக. அதற்கு இடையில் இது முடிந்து விட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 'வாய்ஸ் ஓட்' எடுத்து தீர்மானம் நிறைவேறியாகி விட்டது. இப்போது வந்து பேச வேண்டும் என்றால் எப்படி பேச அனுமதிப்பது ?

திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, தீர்மானம் நிறைவேற்றப்பட்டதற்கு வருத்தப்படவில்லை. இப்போது பேசுவதற்கு அனுமதிக்க முடியாது என்று சொல்கிற நேரத்தில் * * என்று காரணம் சொல்லக் கூடாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை.

திரு. க. அன்பழகன் : அவர் வருவதற்குள் நேரம் தவறி விட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் அதைத்தான் சொன்னேன்.

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[1979 மார்ச் 29

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க் கட்சித் துணைத் தலைவர் அவர்கள் தங்களுடைய தீர்ப்பைப் பற்றிப் பேசவில்லை, ** செய்து விட்டார்கள் அதனால் தீர்மானம் வாக்கெடுப்பிற்கு விடப் பெற்றபோது இருக்கையில் இல்லை என்று சொல்வதை விட, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இருக்கையில் இல்லாததனால் பேச முடியவில்லை என்கிற அளவிற்கு அந்த வாசகத்தை.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : * செய்ததனால் இருக்கையில் இல்லை என்று சொன்னேன்.

திரு. க. அன்பழகன் : * செய்தார் என்று சொன்னால் அது சரியில்லை, * செய்ய உறுப்பினருக்கு உரிமை இருக்கிறது., அதனால் தாங்கள் சொல்வது, * செய்வதே குற்றம் போல் இருக்கிறது. * என்பதற்குப் பதிலாக, இருக்கையில் இல்லாததனால் அவர் பேச முடியவில்லை என்று சொல்லுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேராசிரியர் அவர்கள் சொன்னதைப் போல ** என்று சொன்னதை நீக்கி விட்டு உறுப்பினர் இருக்கையில் இல்லை என்பதை மட்டும் வைத்துக் கொள்ள வேண்டுமென்று உத்தரவிடுகிறேன்.

திரு. க. சுப்பு : தலைவர் அவர்களே, ** **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து உட்காருங்கள். அது என் ஆய்வில் இருக்கிறது. ** ** ** ** ** என்று சொன்னதைக் கூட நீக்கும்படி நான் உத்தரவிடுகிறேன்.

திரு. க. சுப்பு : * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் அதற்கு அனுமதி கொடுக்கவில்லை. திரு. சுப்பு அவர்கள் சொன்ன அனைத்தையும் நீக்கும்படி உத்தரவிடுகிறேன்.

திரு. கோ. இளங்கோவன் : தலைவர் அவர்களே, நடவடிக்கைக் குறிப்பில் இருந்து நீக்க வேண்டும் என்று சொன்னால் எதை எதை நீக்க வேண்டும் என்பதை நீங்கள் தெளிவாகச் சொல்லிவிட்டால் நல்லது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்படி நடந்து கொண்டால் அனைத்தையும் நீக்காமல் வேறு என்ன செய்யமுடியும்?

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

திரு. க. சுப்பு : ** ** **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வழக்கறிஞர் சுபபு அவர்களுக்கு எல்லாம் தெரிந்திருக்கலாம். உட்காருங்கள்.

(குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சும்மா உட்காருங்கள்.

திரு.க. சுப்பு : * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் எவ்வளவு வேண்டுமானாலும் பேசிக் கொண்டே இருங்கள். நீங்கள் பேசுவதை எல்லாம் நான் பெரிதாக எடுத்துக் கொள்ள மாட்டேன்.

(குறுக்கீடு).

திரு.க. சுப்பு : * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது என்னுடைய உரிமை.

திரு.க. சுப்பு : * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எக்ஸ்பஞ்ச் பண்ணுவது தான் கடைசி என்று வைத்துக் கொள்ளாதீர்கள். உங்கள் குரல் இங்கே இருக்க வேண்டும் என்று நான் ஆசைப்படுகிறேன். தயவு செய்து உட்காருங்கள்.

திரு. க. சுப்பு : * * *

(குறுக்கீடு).

திரு. கோ. இளங்கோவன் : பாயின்ட் ஆப் ஆர்டர்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நோ-பாயின்ட் ஆப் ஆர்டர், திரு. மாரிமுத்து....

திரு. கோ. இளங்கோவன் : * * * பாயின்ட் ஆப் ஆர்டர் என்ன என்று விளக்க வேண்டாமா ? ஒரு விளக்கம் தேவை.

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

1979 மார்ச் 29]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சரி, கேளுங்கள்.

திரு. கோ. இளங்கோவன் : பேரவைத் தலைவர் அவர்களே, ஒத்துழைக்க வேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு இந்தக் கருத்தைச் சொல்லுகிறேன். எங்களுக்கு விளக்கங்கள் தேவைப் படுகிறது. சில முறைகளைத் தெரியாமல் உறுப்பினர்கள் பேசுகின்றபோது அவைக்குறிப்பிலிருந்து எந்தெந்த நேரத்தில் எடுத்துவிட வேண்டும் என்று பேரவைத் தலைவர் சொல்லலாம் அல்லது எந்தெந்த நேரத்தில் அதை நீக்க வேண்டும் என்று அவை முடிவு எடுக்க வேண்டும். ஆகவே, தயவுசெய்து இதை விளக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவை முடிவுக்கு நான் கட்டுப்பட்டவன். எதை நீக்க வேண்டும், எதை நீக்க வேண்டாம் என்று சொல்ல எனக்கு முழு உரிமை உண்டு.

(குறுக்கீடு).

திரு. கோ. இளங்கோவன் : அப்படி விதியிருக்கிறதா, அந்த விதியை காண்பியுங்கள். விதி இருக்கிறதென்றால் அதைப் படித்துச் சொல்லுங்கள். நான் இதற்காக மெத்த வருத்தப் படுகிறேன்....

(குறுக்கீடு.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் பேசிக்கொண்டேயிருங்கள். திரு. மாரிமுத்து அவர்கள் பேசுங்கள்....

திரு. கோ. இளங்கோவன் : அது போன்ற விதி இருக்கிறது என்று சொன்னால் அதைப் படித்துக் காண்பியுங்கள்.

(குறுக்கீடு.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்களே விதியைப் பாருங்கள்.

திரு. க. சுப்பு : * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சுப்பு அவர்களுக்கு இதில் வேலை இல்லை. உட்காருங்கள். அவர்கள் உரிமையை நீங்கள் பறிக்கிறீர்கள். நீங்கள் உட்காருங்கள்.

திரு. கோ. இளங்கோவன் : பேரவைத் தலைவர் அவர்களே, மெத்த பணிவன்போடு 235-வது விதியை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்....

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

Rule 235 : If the Speaker is of opinion that a word or words has or have been used in debate which is or are defamatory or indecent, or unparliamentary or undignified or grossly irregular he may in his discretion, order that such word or words be expunged from

(குறுக்கீடு)

திரு. க. சுப்பு : * * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : * * *

திரு. க. சுப்பு : * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் கட்டுப்பாட்டுக்குள் இருக்க வேண்டும். இதை ஹவுஸ் என்று நினைக்கிறீர்களா, இல்லையா? உங்கள் கட்சிக் கட்டுப்பாட்டுக்குள் இருக்க வேண்டும். கட்சித் தலைவரின் கட்டுப்பாட்டுக்குள்ளும் இல்லை என்றால் என்ன செய்வது?

(குறுக்கீடு)

திரு. க. சுப்பு : * * *

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : * *

[முற்பகல் 9—20]

MR. SPEAKER: Rule 64-Any member who desires to speak on any matter before the House shall rise in his seat and on being called by the Speaker address his remarks to him from his place.

Rule 235 : If the Speaker is of opinion that a word or words has or have been used in debate which is or are defamatory or indecen t,or unparliamentary or undignified or grossly irregular. . . . (Interruption)

திரு. க. சுப்பு : * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்னுடைய அனுமதி இல்லாமல் பேசுவதே இர்ரெகுலர்தான். he may in his discretion, order that such word or words be expunged from the official report of the proceedings of the House.

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

1979 மார்ச் 29] [பேரவைத் தலைவர்]

என்னுடைய அனுமதியின்றி திரு. சுப்பு அவர்கள் பேசியது அனைத்தையும் நீக்கும்படி உத்தரவிடுகிறேன்.

Thiru K. SUPPU ; * * *

MR. SPEAKER : No, I won't; செயலாளர் பற்றி திரு. சுப்பு கூறின கருத்துக்கள் எல்லாம் நீக்கப் பெறவும் உத்தரவிடுகிறேன். அதையொட்டி மற்றவர்கள் ஏதாவது கூறியிருந்தாலும் நீக்கப் பெற உத்தரவிடுகிறேன்.

The Hon. Thiru S. RAMACHANDRAN ; * * *

(5) வரவு-செலவுத் திட்டம் 1979–80 வாக்கெடுப்பு.

(அ) கோரிக்கை எண். 17—கல்வி—தொடர்ச்சி.

* திரு. ஏ. ஆர். மாரிமுத்து : மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, கல்வித் துறை பற்றி கொண்டு வரப்பட்டிருக்கும் இந்த மான்யத்திலே என்னுடைய கட்சியின் சார்பிலே ஒருசில கருத்துக்களைச் சொல்வதற்கு முன்வந்திருக்கிறேன். கல்விதான் தேசத்தினுடைய முன்னேற்றத்திற்கு அடிப்படையாக அமையக்கூடிய ஒன்று. கல்வி சரியாக அமையவில்லை என்றால், நாட்டிலே இதர அமைப்புகள், செயல்முறைகள் சரியாக அமையாது என்பது நாட்டிலே உள்ள அனைவருடைய கருத்து. அந்த நிலையிலே தமிழ்நாட்டிலே கல்விக்காக நாம் அதிகத் தொகை செலவழிக்கிறோம் என்றாலும்கூட, கல்வித் துறையிலே இருக்கின்ற குறைபாடுகளையெல்லாம் நாம் போக்கி விட்டோமா என்றால் போக்கவில்லை. அப்படி நீக்கவேண்டிய குறைபாடுகள் நிறைய இருக்கின்றன என்பதை நான் ஆரம்பத்திலே சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

முதலிலே, ஆரம்பக் கல்வியை எடுத்துக்கொண்டால், ஆரம்பக் கல்வியிலே 6 வயது முதல் மாணவர்கள் அனைவரும் கட்டாயமாக பள்ளிக்குப் போக வேண்டுமென்று, கட்டாயக் கல்வித் திட்டம் தமிழ்நாட்டிலே அமுலில் இருக்கிறது. ஆனால், அப்படி கட்டாயக் கல்வித் திட்டம் அமுலில் இருந்தாலும்கூட, 6 வயது ஆன அத்தனை பேரும் படிக்கிறார்களா, பள்ளிக்கூடத்திற்கு வருகிறார்களா என்று பார்த்தால் இன்னும் ஒரு கணிசமான பகுதியினர் பள்ளிக்கூடங்களை எட்டிப்பார்ப்பதே கிடையாது ; பள்ளிக்கூடங்களுக்கு வருவது இல்லை. இதுதான் இன்றைக்கு இருக்கின்ற நிலை. கிராமப்புறங்களிலே இப்படிப்பட்ட நிலை இருப்பதைத் தெளிவாகப் பார்க்கலாம். நகரப்புறங்களிலும், சேரிப் பகுதிகளுக்குச் சென்று பார்த்தால் இது தெளிவாகத் தெரியும். சேரிப் பிள்ளைகள் தெருவிலே

* * * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. ஏ. ஆர். மாரிமுத்து] [1979 மார்ச் 29

விளையாடிக்கொண்டிருப்பதைப் பார்க்கலாம். ஆகவே, கட்டாயக் கல்வி என்று ஒரு சட்டம் போட்டாலும்கூட, அனைத்து பேரும் படிப்பதற்கு ஏற்பாடு செய்திருந்தாலும்கூட, இது சரியாக அமுலாக்கப்படவில்லை.

அடுத்து, அப்படிப் படிக்க வருகின்ற மாணவர்களுக்கு நாம் வசதிகள் செய்ய வேண்டியிருக்கிறது. அதற்கு வேண்டிய வசதிகளை நாம் இன்னும் செய்யவில்லை. கிராமங்கள்தோறும் பள்ளிக்கூடங்கள் அமைக்கப்பட்டு விட்டன. ஆனால், அந்தப் பள்ளிக்கூடங்களிலே ஆரம்ப, அடிப்படையான வசதிகள் செய்து கொடுத்திருக்கிறார்களா என்றால் இல்லை. பள்ளிக்கூடங்கள் ஆரம்பிக்கப்பட்டு, இட வசதிகள் செய்து கொடுத்திருக்கிறார்களே தவிர, கட்டிடங்கள் இல்லை. அப்படியே இருந்தாலும், அந்தப் பள்ளிக்கூட ஆசிரியர்கள் அங்கே தங்குவதற்கு வசதி இல்லாத நிலைதான் நிலவுகிறது. இன்டீரியர் கிராமங்களிலே வேலை செய்யக்கூடிய ஆசிரியர்கள், நகரங்களிலே தங்கி, அங்கிருந்துதான் கிராமங்களிலே உள்ள பள்ளிகளுக்கு வந்து வேலை பார்க்கின்ற சூழ்நிலை இருக்கிறது. அதனால், அந்தப் பள்ளிகளை அவர்களால் சரியாக நடத்த முடிவதில்லை ; போதிய கவனம் செலுத்த முடிவதில்லை. அப்படி போதிய கவனம் செலுத்த முடியாத காரணத்தினால், அந்தப் பள்ளிக்கூடங்களிலே உள்ள மாணவர்களின் தரம் மிகவும் குறைவாக இருக்கிறது.

ஆகவே, பள்ளிகளில் மாணவர்களுக்கு வேண்டிய கட்டிட வசதிகள், ஆசிரியர்கள் குடியிருப்பு வசதிகள் செய்யவில்லை என்றால் கீழ்நிலையில் இருக்கும் மாணவர்களின் தரத்தை உயர்த்த முடியாது என்பதை அரசு கவனத்தில் கொள்ள வேண்டும்.

அடுத்து இம்மாதிரி ஆரம்பப் பள்ளிகளில் தரம் கம்மியாக இருக்கிறது. மேலே போகப் போக தரம் மிகவும் குறைவாக போகிறது. கல்லூரி மட்டத்திலும், சரி, செகண்டரி எஜுகேஷன் மட்டத்திலும் சரி, அடி மட்டத்திலும் சரி தரம் நிலைநிறுத்தப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் பயிற்சி பெற்ற ஆயிரக்கணக்கான பேர்கள் இன்று வேலையில்லாமல் இருக்கிறார்கள். எப்படி அவர்களுக்கு வேலை கொடுக்கப் போகிறோம் என்று அரசு சொல்லவில்லை. அவர்களுக்கு வேலை கொடுக்கக்கூடிய அளவுக்கு வாய்ப்பு இல்லையா என்றால் வாய்ப்பு இருக்கிறது. கிராமப் புறங்களில் இருக்கின்ற ஆரம்பப் பள்ளிகளில் ஆசிரியர் மாணவர் விகிதாச்சாரத்தைக் குறைக்க வேண்டும். ஆறு வயது ஏழு வயது ஆன சிறு குழந்தைகளை 40 அல்லது 50 பேரை ஒரு வகுப்பில் வைத்துக் கொண்டு பாடம் சொல்லிக் கொடுப்பது என்றால் எப்படி முடியும்? அப்படி சொல்லிக் கொடுப்பது என்பது ரொம்பச் சிரமமான வேலை. அந்தப்

1979 மார்ச் 29] [திரு. ஏ. ஆர். மாரிமுத்து]

பிள்ளைகளின் படிப்பு தரம் குறைகிறது. ஆகவே, இன்றைக்கு இருக்கிற மாணவர்களின் எண்ணிக்கையை வைத்துக் கொண்டு ஆசிரியர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தும் முயற்சியை அரசு மேற்கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆசிரியர் பயிற்சியைப் பொறுத்து முன்பு லோயர் கிரேடு என்று இருந்தது. அதை எடுத்துவிட்டு லோயர் கிரேடு ஆசிரியர்களாக இருந்தவர்களை எல்லாம் ஹையர் கிரேடாகப் பிரமோஷன் பண்ணினோம். இப்போது ஹையர் கிரேடும் எடுத்துவிட்டு செகண்டரி கிரேடு மாத்திரந்தான் இருக்கிறது. 20 வருஷத்திற்கு மேல் செர்வீசில் இருக்கக்கூடிய அந்த ஹையர் கிரேடு ஆசிரியர்களை செகண்டரி கிரேடு ஆசிரியர்களாக ப்ரொமோட் செய்ய வேண்டுமென்பது ஆசிரியர்களின் கோரிக்கைகளில் ஒன்று. அதனைச் செய்யவேண்டும்.

பஞ்சாயத்து யூனியன் ஆரம்பப் பள்ளிகளை நிர்வகிக்கிறது. பஞ்சாயத்து யூனியன் நிதிநிலை சரியாக இல்லாத காரணத்தால் அப்போதைக்கப்போது சிறு பழுதுகள் ஏற்பட்டால் கூட பழுது பார்க்கக்கூட பஞ்சாயத்து யூனியனால் முடியவில்லை. அந்தப் பள்ளிகளுக்கு கீத்துக் கூரை போடப்பட்டிருக்கிறது. மழையாலும் புயலாலும் பாதிக்கப்பட்டு மாணவர்கள் இருக்க முடியாத நிலை ஏற்பட்டாலும் கூட உடனுக்குடன் பழுது பார்க்க யூனியன் நிதிநிலை சரியாக இல்லை. செலவழிப்பதற்கும் அதிகாரம் இல்லை. இம்மாதிரி இடங்களில் குழந்தைகள் சுகாதார வசதியுடன் இருந்து படிப்பதற்கு யூனியன்களுக்கு அதிகமான கிராண்ட் கொடுத்து கட்டிடம் கட்ட நிதி வசதி செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உயர்நிலைப் பள்ளிகளைப் பொறுத்தவரை தமிழ்நாடு முழுவதும் ஆங்காங்கு மிக அதிகமான அளவுக்கு உயர்நிலைப் பள்ளிகளை ஏற்படுத்தி அதிக தூரம் நடந்து செல்ல வேண்டிய நிலைமை இல்லாமல் செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் ஆரம்பப் பள்ளிகளை விட உயர்நிலைப் பள்ளிகளுக்கு கட்டிட வசதி மிகவும் மோசமாக இருக்கிறது. கட்டிட வசதி இல்லாமல் எப்படி பள்ளிகளை ஒழுங்காக நடத்த முடியும் ?

அதுமட்டுமல்லாமல் உயர்நிலைப் பள்ளிகளில் படிக்கிறவர்களுக்கு லாபரடரி வசதி வேண்டும். அநேக புதிய உயர்நிலைப் பள்ளிகளில் லாபரடரி கிடையாது. அந்த மாணவர்கள் அப்படி உயர்நிலைப் பள்ளிப் படிப்பு படித்து விட்டு மேல்நிலைக்குப் போகும்போது எப்படி தகுதியைப் பெற முடியும் ? கிராமப் புறங்களில் எஸ். எஸ். எல். சி. படித்து வருகிறவர்கள் மிகக் குறைந்த மார்க்குகள் வாங்கி கல்லூரியில் சேர்ந்து படிக்கும்போது அதிகமான மார்க் வாங்க முடிவதில்லை. அதனால் டெக்னிகல் எஜுகேஷன்—மருத்துவக் கல்லூரியில் இடம் கிடைப்பதில்லை. எஞ்சினியரிங் கல்லூரியில் இடம் கிடைப்பதில்லை. கிராமப்புற

சூழ்நிலையில் படித்து வருகிற மாணவர்கள் தரம் மிகக் குறைவாக இருக்கிறது. கிராமப் புறங்களில் இருக்கிற மக்கள் தொகை விகிதாசாரத்திற்குத் தகுந்தவாறு அவர்கள் டெக்னிகல் எஜுகேஷன் படிக்க இடம் கொடுக்க வேண்டுமென்று தெரிவித்துக்

[முற்பகல் 9-30]

கொள்கிறேன். ஆகவே, அதற்கு நாம் செய்யவேண்டிய காரியம் என்னவென்றால் எல்லாப் பள்ளிகளிலேயும் படிப்பதற்கு தகுதியான கட்டிட வசதிகள், பரிசோதனைக் கூடங்கள் ஏற்பாடு செய்து கொடுக்கவில்லையென்றால் அவர்களுடைய தரம் கம்மியாக இருக்கும். அதனாலே தான் நகரப் புறங்களிலே படிக்கின்ற மாணவர்களுக்கும், கிராமப் புறங்களிலே படிக்கின்ற மாணவர்களுக்கும் ரொம்ப வித்தியாசம் இருக்கிறது. அந்த வித்தியாசம் இல்லாமல் செய்வது என்பது அரசாங்கத்தினுடைய கடமை, ஆகவே அதிலே கவனம் செலுத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேல் நிலைப் பள்ளிகளை எடுத்துக் கொண்டால் பத்தாவது வகுப்புகளிலே தரம் குறையாமல் இருந்தால்தான் மேல் நிலைப் பள்ளிகளுக்குப் போக முடியும். பிளஸ் 2 கொண்டு வருவது நல்லது. ஆனால் மத்தியிலே இன்னும் இதை குழப்பிக்கொண்டிருக்கிறார்கள். எட்டு பிளஸ் நான்கு வைத்துக் கொள்ளலாமா அல்லது பிளஸ் டூவை வைத்துக் கொள்ளலாமா என்றெல்லாம் குழப்பிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் மாநில சர்க்கார் ஒரு ஸ்திரமான முடிவை எடுத்திருக்கிறது. நான் பாராட்டுகிறேன். நம்முடைய மாநிலத்திலே பிளஸ் டூவைத்தான் செயல்படுத்தப் போகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். நம்முடைய கல்வி அமைச்சர் அவர்கள் எதற்காக இதைச் செய்கிறோம் என்று சொல்லுகிறபோது, தொழிற் கல்வி முறையை இதன் மூலம் புகுத்தப் போகிறோம் என்று சொன்னார்கள். நல்லது. ஆனால், இந்த இரண்டு ஆண்டுகளிலே அவர்கள் படிக்கிறபோது அவர்களுக்கு எந்த எந்தத் தொழில்களைக் கற்பிக்கப் போகிறோம், ஏதோ பெயரளவிற்கு தொழிலைக் கற்பிக்கப் போகிறோம் என்று சொல்வதிலே பிரயோசனம் கிடையாது. பத்து ஆண்டுகளுக்குப் பிறகு அவர்கள் அதிகமாகப் புத்தகங்களைப் படிப்பதைக் குறைத்துக் கொண்டு தொழிலைக் கற்பதற்கு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். தொழிற் கல்வி என்பது, மெக்கானிக்கல், எலக்ட்ரானிக்ஸ் போன்ற தொழிற் கல்வியில் பயிற்சியை அளிக்க வேண்டும். பட்டுப் பூச்சி வளர்த்தல், விவசாயம் பண்ணுவது இவற்றிலே மாத்திரம் அதிகமாகத் தொழிற் கல்வி என்ற பெயராலே கற்பிப்பதில் பிரயோசனம் இல்லை. அதற்கு வேண்டுமானால் நாம் தனியாக அக்ரிகல்சரல் ஸ்கூல்ஸ் வைத்து நடத்தலாம். பல்வேறு வகையான தொழில்களை அவர்கள் படிப்பதற்கான ஏற்பாடுகளை, வசதிகளை செய்து கொடுக்க வேண்டும். மாணவர்கள் எதில் எதில் ஆர்வம் காட்டுகிறார்களோ அந்த ஆர்வத்திற்குத் தக்கவாறு மேல்நிலையில் படிப்பதற்கு ஏற்பாடு

1979 மார்ச் 29] [திரு. ஏ. ஆர். மாரிமுத்து]

களைச் செய்ய வேண்டும். இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு கல்லூரிக்கு அவர்கள் போகலாம், போகாமல் இருக்கலாம். அது வேறு. ஆனால் நாம் ஏற்கெனவே ஆர்ட்ஸ் காலேஜ்கள் அதிகமாகக் கட்டி அதிலே படித்த லட்சக்கணக்கான மாணவர்கள் இன்றைக்கு வேலையில்லாமல் இருக்கிறார்கள். தொல்லைப்படுகிறார்கள். அவர்கள் எல்லாம் தொழில் பயிற்சி இல்லாதவர்களாகத் தான் இருக்கிறார்கள். இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை இருக்கிறபோது மேலும் மேலும் ஆர்ட்ஸ் காலேஜ்களில் அவர்கள் சேருகிற நிலை ஏற்பட்டு அதன் மூலமாக கிளார்க் போஸ்ட்டைத் தவிர வேறு எதிலும் சேரமுடியாது என்ற நிலைக்கு நாம் கொண்டுபோய் விட்டால் அது நாட்டிற்கு நல்லது கிடையாது. அது நாட்டிற்குக் கெடுதலாகத்தான் இருக்கும் என்பதால் தொழிற் கல்வியை அதிகமாகக் கொண்டுவருவதற்கு முயற்சிக்க வேண்டும்.

ஒரு ஆண்டு பி. யூ. சி. என்பதை கல்லூரியிலே வைத்தோம் இப்போது அதை ஹைஸ்கூல்களிலே வைத்து விட்ட காரணத்தால் அதிகமாக மாணவர்கள் படிக்கிற வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. 75 ஆயிரம் மாணவர்கள் படித்த நிலைமை போய் இன்றைக்கு 1 லட்சத்து 10 ஆயிரம் மாணவர்கள் சேர்ந்து இருக்கிறார்கள். அவர்கள் செலவு இல்லாமல் தங்கள் பகுதியிலேயேப் படிப்பதற்கான வாய்ப்புகள் ஏற்பட்டு இருக்கின்றன. அவர்கள் டெக்கனிக்கல் கல்விக்குப் போகவேண்டுமே தவிர, ஆர்ட்ஸ் காலேஜ்களுக்குப் போவதற்கு ஊக்குவிக்கக் கூடாது. இங்கிலாந்து நாட்டிலே செகண்டரி எஜுகேஷனில் படித்தவர்களில் 10 சதவீதம் தான் ஆர்ட்ஸ் காலேஜ்களுக்குப் போகிறார்களே தவிர பாக்கி 90 சதவீதம் தொழிற் கல்விக்குத்தான் போகிறார்கள். ஆனால் நம்முடைய நாட்டிலே 90 சதவீதம் ஆர்ட்ஸ் காலேஜ்களுக்குத் தான் போகிறார்கள். 10 சதவீதம் தான் தொழிற் கல்விக்குப் போகக் கூடிய நிலைமை இருக்கிறது. இல்லாவிட்டால் வேறு வழி கிடையாது என்ற நிலைமை தான் இருக்கிறது. இன்றைக்கு இருக்கிற ஆர்ட்ஸ் காலேஜ்கள் எல்லாம் தொழிற் கல்விக் கூடங்களாக மாற்றப்பட வேண்டும். வக்கீல்களுக்கு எவ்வளவு தேவை, கவர்ன்மெண்ட் அட்மினிஸ்ட்ரேஷனுக்கு என்ன தேவை, கிளார்க் வேலைக்கு என்ன தேவை என்பதைப் பார்த்து அந்த அளவிற்கு மட்டும் ஆர்ட்ஸ் காலேஜ்களில் படிக்க ஏற்பாடு செய்து விட்டு பாக்கிப் பேர்கள் தொழில் கல்வி பயில்வதற்கான முறைகளை ஏற்படுத்தினால்தான் எதிர்காலம் சுபிட்சமாக இருக்கும், இல்லாவிட்டால் படித்தவர்களுக்கு வேலையில்லை என்ற நிலைமை வந்தால் நாட்டிலே அமைதியே இல்லாமல் போய்விடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தொழிற் கல்லூரிகளில் இப்போது theory தான் படிக்கிறார்கள். அவர்களுக்கு பிராக்டிக்கல் கிடையாது. எஞ்சினியரிங் மெக்கானிக்கல் படிக்கிறார்கள் என்றால் அவர்களுக்கு மெக்கானிசம் பிராக்டிக்கலாகக் கிடையாது, அவர்கள் படித்துவிட்டு

வேறு எங்காவது போய்த்தான் அதைப் பயிலவேண்டும். ஆகவே, தொழிற் கல்லூரிகளிலே பிராக்டிக்கலையும் வைக்க வேண்டும். அவர்கள் படித்துவிட்டு வெளியே வந்தவுடன் அந்தக் தொழிலிலே நல்ல பக்குவம் உள்ளவர்களாக இருக்க வேண்டும். எலக்ட்ரானிக்ஸ்ஸைப் பொறுத்தவரையில் 500 என்ஜினியர்கள் வேலையில்லை என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குப் பிராக்டிகலாகச் செய்யத் தெரிந்திருந்தால் அரசாங்கத்திடம் வேலை கேட்க வேண்டிய நிலை இல்லாமல், சுயமாகவே தொழில் செய்வதற்கு ஆரம்பித்து விடலாம். இப்படி செய்முறைப் பயிற்சி கொடுக்காத காரணத்தினால்தான் இப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்படுகின்றன. எனவே, அதற்கேற்றவாறு கல்வி முறையானது ஆரம்பத்திலேயிருந்தே அமைய வேண்டும். இரண்டாண்டுக் கல்வி முறையில், அதற்குத் தகுதியுடையவர்களாக ஆக்குவதற்கு இதிலேயே ஆரம்பித்து விட்டால் நல்ல தரத்தை ஏற்படுத்துவதாக அது இருக்கும். இதிலே தரம் இல்லாமல் போய்விட்டால் பிறகு மேலும் தரம் இருக்காத நிலைமை ஏற்பட்டுவிடும்.

பலயிடங்களில் மேல் நிலை கல்வி ஆரம்பிக்கப்பட்டும் பள்ளிகள் கிடையாது, கட்டிட வசதி இல்லை என்று சொல்கிறார்கள். லேபரட்டரி சாமான்களை அனுப்பினாலும் கூட அவைகளை எங்கே வைப்பது என்று அவர்களுக்குப் புரியவல்லை என்ற நிலைமையைப் பத்திரிகை ரிப்போர்ட்டிலிருந்து நாம் பார்க்கிறோம். எனவே, அந்தப் பள்ளிகளிலே இட வசதியையும் லேபரட்டரி போன்ற வசதிகளையும் உடனடியாக ஏற்படுத்துவதற்கு முயற்சி யெடுத்துக் கொள்ள வேண்டும்.

தொழிற் கல்வி போதிப்பதற்கு இப்பொழுது ஆசிரியர்கள் போதுமானவர்களாக இருக்கிறார்களா என்று தெரியவில்லை. தொழிற் கல்வி போதிப்பதற்குச் சரியான பயிற்சி அளிப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

சென்ற ஆண்டு ஹையர் செகண்டரி கல்விக்குப் புத்தகங்கள் அவசரம் அவசரமாகத் தயார் செய்யப்பட்டன. அதன் காரணமாக அவற்றில் தவறுகள் இருக்கலாம். அவைகள் ஒழுங்காகப் பரிசீலனை செய்யப்பட்டு அவர்களுக்கு அந்தப் புத்தகங்கள் சரியானபடி கிடைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தனியார் பள்ளிகளில் இருக்கின்ற குறைபாடுகளை எடுத்துச் சொல்ல நான் விரும்புகிறேன். பெரும் பகுதி இருக்கிறது. சுமார் ஏழாயிரம் பள்ளிகளுக்கு மேல் இருப்பதாகச் சொல்கிறார்கள். அவ்வாறு உள்ள ஏழாயிரம் பள்ளிகளில் இருக்கின்ற ஆசிரியர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்பதற்காக சட்டம் போட்டோம். ஆனால் அந்தச் சட்டம் சரியாக அமலாக்கப்படுகிறதா என்றால் இல்லை. ஆசிரியர்கள் வேலைநீக்கம்

1979 மார்ச் 29] [திரு. ஏ. ஆர். மாரிமுத்து]

செய்யப்படுகிறார்கள். வேலை நீக்கம் செய்யப்பட்டவர்களைத் திரும்பவும் அந்தப் பள்ளிகளில் வைக்க வேண்டுமென்று அரசாங்கம் உத்தரவு போட்டாலும்கூட அதை அவர்கள் அமலாக்குவதில்லை. அவ்வாறு அந்த உத்தரவுகளை அமலாக்காத பள்ளிகளின்மேல் அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்தது. சட்டத்தைப் போட்டுவிட்டால் மட்டும் போதாது, போட்ட சட்டத்தை அமலாக்கவும் வேண்டுமல்லவா? வேலையிலிருந்து நீக்கப்பட்ட ஆசிரியர்கள் வேலையில்லாமல் இருந்து கொண்டிருக்கிறார்கள். வேலை நீக்கம் செய்தது தப்பு என்று அரசாங்கம் சொல்லி, அவர்களை வேலையில் வைத்துக்கொள்ள வேண்டும் என்று உத்தரவு போட்டாலும்கூட, தனியார் பள்ளிகளில் அந்த உத்தரவை அமலாக்குவதில்லை.

தனியார் பள்ளிகளில் உள்ள ஆசிரியர்களுக்கும் அந்த மேனேஜ்மெண்டுக்கும் அந்த நிர்வாகத்திற்கும் — எப்படிச் சண்டை வருகிறது என்று பார்க்க வேண்டும். வேலையில்லாத ஆசிரியர்கள் ஆயிரக்கணக்கான பேர்கள் இருக்கிறார்கள். தனியார் பள்ளி மேனேஜ்மெண்டாருக்கு ஆசிரியர்களைத் தேர்ந்தெடுக்கக்கூடிய அதிகாரம் இருப்பதால் அவர்களே வேலை கொடுக்கிறார்கள். கொஞ்சம் குறைவான சம்பளத்தில் ஆசிரியர்களை அமர்த்துகின்ற சூழ்நிலை வருகிறது. ஆசிரியர்கள் தங்களுக்குச் கொஞ்சம் சர்வீஸ் ஆனவுடனே தங்களுக்கு உரிய சம்பளம் வேண்டுமென்று கேட்கிறார்கள். உடனே மேனேஜ்மெண்டார் ஆசிரியர்கள் மீது வேறு ஏதாவது சார்ஜ் செய்து வெளியே அனுப்புகிறார்கள். ஆகவே நிர்வாகிகளுக்கு ஆசிரியர்களை நியமிக்கின்ற அதிகாரம் இருக்கக் கூடாது. ஏனென்றால் ஆசிரியர்களின் சம்பளத்தை அரசுத் தரப்பிலேயிருந்து, நம்முடைய கஜானாவிலேயிருந்து கொடுக்கிறோம். எனவே, ஆசிரியர்களை நியமனம் செய்கின்ற அதிகாரம் அரசுக்கே இருக்க வேண்டும். அரசு கொடுக்கின்ற பேனலிலேயிருந்துதான் அவர்கள் ஆசிரியர்களை எடுக்க வேண்டுமே தவிர, அவர்களாகத் தங்கள் இஷ்டத்திற்கு நியமித்துக் கொள்ளும் முறை இருக்கக்கூடாது. அல்லது பயிற்சி பெற்றவர்களின் சீனியாரிட்டி வரிசையிலிருந்துதான் ஆசிரியர்களை அவர்கள் எடுக்க வேண்டுமென்று உத்தரவு போட வேண்டும். இப்படியில்லாமல் தனியார் பள்ளி மேனேஜ்மெண்டார்கள் அவர்கள் இஷ்டத்திற்கு யாரை வேண்டுமானாலும் ஆசிரியர்களாக நியமனம் செய்து கொள்ளலாம் என்ற அதிகாரம் அவர்களுக்கு இருப்பதால்தான் இம்மாதிரியான தகராறுகள் ஏற்படுகின்றன.

அது மட்டுமல்லாமல், நம்முடைய விகிதாசாரப்படி ஆசிரியர்கள் நியமனம் தனியார் துறை பள்ளிகளில் நடக்காது. யார் அந்தப் பள்ளிகளை நடத்துகிறார்களோ அவர்களின் சொந்தக்காரர்கள் போன்றவர்களைப் போட்டுக் கொள்வதற்கு முயற்சிப்பார்களே தவிர அரசு முறைப்படி, விகிதாச்சாரப்படி எவ்வளவு கொடுக்க வேண்டுமோ அந்த அளவிற்கு வேலை கொடுப்பது

என்பது நடக்காது. எனவே, ஆசிரியர்கள் நியமனம் என்பதில், அரசால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களைத்தான் அவர்கள் நியமித்துக்கொள்ள வேண்டுமென்ற நிலையை நாம் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், நியமனம் செய்யப்பட்ட ஆசிரியர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு அந்த மேனேஜ்மெண்டுக்கு அதிகாரம் இருக்கிறது. அந்த அதிகாரம் அந்த மேனேஜ்மெண்டாருக்கு இருக்கக்கூடாது. கல்வி அதிகாரிகளுக்கு அந்த அதிகாரத்தைக் கொடுத்து, மேனேஜ்மெண்டார் அந்த ஆசிரியர்கள்மீது சார்ஜ் செய்யும்போது, அது சரியா தப்பா என்று இரு தரப்பினரையும விசாரித்து நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தைக் கல்வி அதிகாரிகளுக்குக் கொடுத்தால் இம்மாதிரியான சங்கடங்கள் தவிர்க்கப்படலாம் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுபோலவே, கல்லூரி ஆசிரியர்களும், பி.டி. ஆசிரியர்களும் தங்கள் குறைபாடுகளை நிவர்த்தி செய்ய வேண்டுமென்று சொல்கிறார்கள். இம்மாதிரியான ஆசிரியர்கள் மத்தியிலிருக்கின்ற குறைபாடுகளைப் போக்குவதற்குத் தக்க நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆசிரியர்களின் கோரிக்கைகளில், தாங்கள் ஓய்வு பெறும் பொழுது பத்தாயிரம் ரூபாய் கொடுக்க வேண்டுமென்று கோரியிருக்கிறார்கள்.

[முற்பகல் 9-40]

நான் கூடப் படித்துப் பார்த்தேன், இது என்ன ஓய்வு பெறுகிறவர்களுக்கு ரூ. 10,000 கேட்கிறார்கள். ஏற்கெனவே, கிராச்சுவிட்டி வேறு, பென்ஷன் வேறு கொடுக்கப்படும்போது, ரூ. 10,000-ஐ அரசுத் தரப்பிலே எப்படி கொடுப்பது என்று நினைத்தேன். அவர்கள் என்ன கூறுகிறார்கள் என்றால், அரசு கஜானாவிலிருந்து கொடுக்க வேண்டியதில்லை. அரசு ஊழியர்களாக இருந்தாலும், ஆசிரியர்களாக இருந்தாலும் மாதம் ரூ. 10 வீதம், $7\frac{1}{2}$ இலட்சம் ஊழியர்கள் கொடுத்தால், மாதம் ஒன்றுக்கு ரூ. $7\frac{1}{2}$ கோடி வரும். அதைக் கொண்டு ஓய்வு பெறுகிறவர்களுக்கு ரூ. 10,000 கொடுத்தால், அரசுக்கு ஒன்றும் இழப்பு ஏற்படாது என்று கூறினார்கள். அதை அரசே ஏற்றுக்கொள்ளவில்லையென்றால், எங்களுக்கு அனுமதி கொடுத்து விடுங்கள், நாங்களே தனியாக நடத்திக் கொள்கிறோம் என்று கூறுகிறார்கள். அதை அரசு பரிசீலித்து அரசே நடத்த முடியும் என்றால் நடத்தட்டும். இல்லாவிட்டால், அவர்களுக்குத் தனியாக பர்மிஷன் கொடுத்தால், இந்தக் கட்டணத்தை வசூலிப்பதில், திட்டத்தை அமுல்படுத்துவதில் சிரமம் கிடையாது, அதனால் லாபம் இருக்கிறது என்று அவர்கள் கூறுகிற காரணத்தால், அந்த பர்மிஷன்

1979 மார்ச் 29] [திரு. ஏ. ஆர். மாரிமுத்து]

கொடுப்பதற்கு சிந்தனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, ஆரம்பப் பள்ளியிலிருந்து கல்லூரி வரையிலும் படிகின்ற மாணவர்களுக்குக் கல்வியின் தரம் குறையாமல் பாடம் போதிக்கின்ற நடவடிக்கையை அரசு எடுக்க வேண்டுமென்று கூறி, என்னுடைய உரையை முடிக்கிறேன், வணக்கம்.

திரு. ரா. கிருஷ்ணன்: தலைவரவர்களே, கல்வி மானியத்தின்மீது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக ஒருசில கருத்துக்களை கூற முற்படுகிறேன். இன்றைக்கிருக்கிற கல்வி முறையில் ஒரு தெளிவில்லாத நிலைமைதான் இருந்து வருகிறது. குறிப்பாக, இன்றைக்கு ஒரு முறை, நாளைக்கு ஒரு முறை என்ற வகையில், பிளஸ் 2, 8 பிளஸ் 4 பிளஸ் 2 என்று இப்படிப்பட்ட ஒரு குழப்பமான சூழ்நிலை இருக்கிற காரணத்தால், அதை முறைப்படுத்த வேண்டிய கட்டாயத்திலே நாம் இருக்கிறோம். ஏதோ புதிய முறை என்று சொல்லிக்கொண்டு தலைவலிக்கு தலையணையை மாற்றுவதுபோல், எந்தவிதமான முன்னேற்றமும் இல்லாத வகையில் இது அமைந்திருக்கிறது என்று கூற விரும்புகிறேன்.

மேல்நிலைக் கல்வி நிலையங்கள் ஒரு ஊராட்சிக்கு ஒன்று என்று வைக்கப்படுவதாக வாக்குறுதி கொடுக்கப்பட்டது. வாசுதேவநல்லூரில், 7, 8 உயர்நிலைப் பள்ளிகள் இருந்தாலும் சிவகிரியில் ஒரு மேல்நிலைப் பள்ளி உருவாக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சங்கரன்கோவில் ஊராட்சி ஒன்றியத்திலிருந்து கரிவலம்வந்த நல்லூரில் ஒரு மேல்நிலைப்பள்ளி உருவாக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். வாசுதேவ நல்லூர் தொகுதியிலேயிருந்து மேல்நிலைப் பள்ளிக்கு 20 கிலோ மீட்டர் தூரம் போக வேண்டியிருக்கிற காரணத்தால், சிவகிரியில் ஒரு மேல்நிலைப் பள்ளி துவக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டத்தில், நாகைப் பட்டிணத்தில் சிக்கல் என்ற நகரத்திலே பள்ளிக்கூடம் இருந்தும்கூட, மேல்நிலைப் பள்ளி உருவாக்க வேண்டுமென்று கோரிக்கை விடப்பட்டிருக்கிறது. நிலம், கட்டிடம் இல்லையென்று சொன்னாலும் கூட, அதற்கான முக்கியத்துவத்தைக் கருதி, மேல்நிலைப் பள்ளி ஏற்படுத்த முயற்சிக்க வேண்டுமென்று நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அதோடு, பழங்குடியினருக்குக் கல்வியில் நாங்கள் அக்கறை செலுத்துகிறோம் என்று சொல்கிறார்கள். கோவை மாவட்டத்தில் பரங்கிமலைப்பகுதியில் ஒரு செட்டில்மென்ட் இருக்கிறது. 50, 60 வீடுகள் கொண்டது ஒரு செட்டில்மென்ட் என்று கூறப்படுகிறது. ஆனால், அங்கு 72 வீடுகள் இருந்தும் ஒரே ஒரு பள்ளிக்கூடம் தான் இருப்பதாகக் கூறப்படுகிறது. ஆகவே, அங்கும் பல்வேறு துவக்கப்பள்ளிகளைத் துவக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு, சில பகுதிகளில், சில பள்ளிக்கூடங்களில், ஆசிரியர்களை நியமனம் செய்ய வேண்டுமென்றால், சி.இ.ஓ. அனுமதிக்க வேண்டும். அதிகாரிகளுடைய விருப்பு வெறுப்புப்படி அனுமதி வழங்கப்படுவதாக சென்ற ஆண்டும் குற்றம் சாட்டினேன். குறிப்பாக, கோவில்பட்டியில் இப்படிப்பட்ட முறைகேடு இருப்பதைச் சுட்டிக்காட்டினேன். மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் கூட இதைப்பற்றி சுட்டிக்காட்டினேன். வாசுதேவநல்லூரில், 56, 58 மாணவர்கள் படிக்கக்கூடிய 4ஆவது வகுப்பில் ஒரே ஒரு ஆசிரியர்தான் பணியாற்றுகிறார் என்று நான் சொல்லும்போது, அவர் உண்மைக்கு மாறாக, இரண்டு ஆசிரியர்கள் பணியாற்றுகிறார்கள் என்று எனக்குக் கடிதம் அனுப்பினார். ஆனால், நான் மீண்டும், சி.இ.ஓ.வுக்குக் கடிதம் எழுதினேன். அது தவறு, அங்கு ஒரே ஒரு ஆசிரியர்தான் இருக்கிறார் என்று. அந்தக் கடிதத்திற்கு இதுவரையில் பதில் வரவில்லை. ஆகவே, எந்த, எந்தப் பள்ளிகளுக்கு, தேவையோ, அந்தந்தப் பள்ளிகளில், ஆசிரியர்களை நியமனம் செய்ய ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஆசிரியர்களுக்கு ஓய்வு ஊதியம் வழங்குவதில் பெருத்த காலதாமதம் ஏற்படுகிறது. சங்கரன்கோவில் சரகத்தில் பெருமாள்பட்டி கிராமத்தில் பாப்பம்மாள் என்ற மூதாட்டி இருக்கிறார். அவர்களுடைய கணவன் இறந்து 12 வருடமாகியும் இன்னும் 'ஃபாமிலி பென்ஷன்' கொடுக்கப்படவில்லை. இது மிகவும் வேதனை அளிக்கக்கூடிய ஒன்று. அதிலே துரித நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பள்ளிகளில் புத்தகங்கள் வழங்கப்படுவதில் காலதாமதம் ஆகிறது. குறிப்பாக மேல் வகுப்புகளுக்கு நவம்பர், டிசம்பர் மாதம் கூட புத்தகங்கள் வழங்கப்படவில்லை. துரிதமாக புத்தகங்களை வழங்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தற்போது மாணவர்கள் படிக்கக்கூடிய பாடங்களில் முற்போக்கான, விஞ்ஞான ரீதியான கருத்துக்களை இடம்பெறச் செய்து, அவர்களுக்கு உரிய வாய்ப்பை ஏற்படுத்த வேண்டும். இந்த ஆண்டு பெரியார் நூற்றாண்டு விழா ஆண்டாக இருக்கிறது. இருந்தாலும் பழைய பத்தாம்பசலிக் கொள்கைகள்தான் பாடப் புத்தகங்களில் இடம்பெற்றிருக்கின்றன. அதைத் தவிர்க்க வேண்டும்.

அடுத்து, சில நேரங்களில், தோழர் உமாநாத் அவர்கள் குறிப்பிட்டதைப்போல காரல்மார்க்ஸ் தத்துவங்களை திரித்து, தவறாக புத்தகங்களில் வெளியிடுகிறார்கள். ஒருவேளை அது 'காமன்ட்' என்று சொல்லுவார்கள். காமன்டாக இருந்தாலும் தவறான கருத்துக்களை அளிப்பதாக இருந்தால் அதைப் புத்தகத்தில் இடம்பெறச் செய்வது சரியல்ல. உதாரணத்திற்குச் சொல்லப் போனால் பேரறிஞர் அண்ணா அவர்கள் கருத்துக்களை

1979 மார்ச் 29] [திரு. ரா. கிருஷ்ணன்]

வேறொருவர் தவறாக எழுதி, புத்தகமாக வெளியிட்டால் நாம் நிச்சயமாக அதை ஏற்றுக்கொள்ளமாட்டோம். அந்த அடிப்படையில் இப்படிப்பட்ட தவறான கருத்துகளை வெளியிடும் புத்தகங்களை பாடப்புத்தகங்களாக வைக்கக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நூலகங்கள் ஆணைக்குழு இன்றைக்குச் சரியாக இயங்கவில்லை. வாழ்க்கைக்குத் தேவையான விஞ்ஞான ரீதியான புத்தகங்கள் நூலகங்களில் இடம்பெறவில்லை. அப்படிப்பட்ட புத்தகங்களை வாங்கி வைக்க வேண்டும்.

இன்றைக்கு நூலகங்களில் வைக்கப்படுகின்ற புத்தகங்கள் எல்லாம் மேலதிகாரிகளின் விருப்பு-வெறுப்புகளின் அடிப்படையில் வாங்கப்படுகின்றன; அது கூடாது. கல்லூரிகளில் 'தி ஹார்வெஸ்ட்' என்ற புத்தகத்தை வைக்க வேண்டுமென்று எல். டிஸ். 57871/ஆர்.4/78 டேட்டட், 2–5–1978ல் உத்தரவு போடப்பட்டது. பிறகு எல்.டிஸ். 95524/ஆர்.4/78 டேட்டட் 20–7–1978ல் முதலில் போட்ட உத்தரவை ரத்து செய்திருக்கிறார்கள். அதற்கு என்ன காரணம் என்று தெரியவில்லை. அதிகாரிகளின் விருப்பு வெறுப்புகளுக்கு இடங்கொடுக்காமல் வாழ்க்கைக்குத்தேவையான கருத்துக்களைக்கொண்ட, விஞ்ஞான ரீதியான தத்துவங்களை விளக்கும் புத்தகங்களை எல்லாம் வாங்கி வைக்க வேண்டும்.

இன்றைக்கு நூலகங்களில் இருக்கக்கூடிய புத்தகங்களில் பெரும்பகுதி பாலுணர்வைத் தூண்டக்கூடியவையாக இருக்கின்றன. அம்மாதிரியான புத்தகங்களை அனுமதிக்கக் கூடாது.

கன்னிமரா நூலகத்தில் பிபிலியாகிரபி பதவி பற்றி ஏற்கெனவே குறைகூறப்பட்டிருக்கிறது. அதைப்பற்றி கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து ஆசிரியர்களுக்கு ஜனநாயக உரிமை மறுக்கப்படுகிறது. வேறுசில மாநிலங்களில் அவர்கள் தேர்தலில் நிற்கக்கூடிய உரிமை வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால் இங்கே நிலைமை மிகவும் மோசமாக இருக்கிறது. குறிப்பாக ஒரு ஆசிரியர் தன்னுடைய ஓய்வு நேரத்தில் சில விவரங்களைத் தெரிந்துகொள்வதற்காக அரசியல் வகுப்புக்குப் போனார் என்பதற்காக அவர்மீது குற்றஞ்சாட்டப்பட்டிருக்கிறது. அரசியலில் ஈடுபடக் கூடாது—ஈடுபட்டார் என்றால் தவறு. ஆனால் அரசியல் கருத்துக்களை தெரிந்துகொள்வது கூட தவறா?

செங்கற்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் ஆர்.சி. 50718/78, டேட்டட் 9–9–1978 அன்று அரசியல் வகுப்புக்கு ஒரு ஆசிரியர் போனார் என்பதற்காக அவர்மீது குற்றஞ்சாட்டி உத்தரவு பிறப்பித்திருக்கிறார்.

[திரு. ரா. கிருஷ்ணன்] [1979 மார்ச் 29

......Joint Secretary to Tamil Nadu Elementary School Teachers Federation who is residing at Maduranthakam is reported to be a CPM sympathiser having close cantacts with CPM Members and he attended a CPM Party class held at Chengleput on 21-3-1978 என்றும் அதோடு மேலும் சொல்லப்பட்டிருப்பது என்னவென்றால் In the circumstances as stated above as the teacher has attended a CPM party class பார்ட்டி வகுப்புக்குப் போவதற்கு without prior permission of the Director of Rural Development, it has to be construed that the individual has expresed disloyal sentiments and has engaged himself in subversive activities. இதில் என்ன சப்வர்சிவ் என்பது தெரியவில்லை. சில விவரங்களைத் தெரிந்துகொள்ள வாய்ப்பு இருக்கக்கூடாதா? அல்லது ஒரு அரசியல் கட்சியின் அனுதாபியாக ஒருவர் இருக்கக்கூடாதா? எல்லோரும் ஏதாவது ஒரு அரசியல் கட்சியின் அனுதாபியாகத் தான் இருப்பார்கள். அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை இருக்கும் போது அரசியல் வகுப்புக்குப் போனார் என்று குற்றஞ்சாட்டி, 'டிஸ்லாயல்' என்று குற்றஞ்சாட்டியிருப்பது முறைகேடானது. இப்படிப்பட்ட உத்தரவு சட்டவிரோதமானது என்று சொல்லுகிறார்கள். ஆகவே, அதை அரசு கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[முற்பகல் 9-50]

அடுத்து கல்வி நிலையங்களில் போலீஸ் அடிக்கடி நுழைந்து தாக்குதல் செய்வது என்பது இப்போது அன்றாட நிகழ்ச்சியாக ஆகிவிட்டது. குறிப்பாக, பச்சையப்பன் கல்லூரி, சென்னை மாநிலக் கல்லூரி போன்ற கல்லூரிகளில் காம்பவுண்டிற்குள்ளேயே முன் அனுமதி இல்லாமல் போலீஸ் அத்துமீறி நுழைந்தது சரியல்ல. ஆகவே இதற்கெல்லாம் முறையான, தெளிவான ஒரு உத்தரவை போலீஸ் அதிகாரிகளுக்குப்போடுவது மிகஅத்தியாவசியம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். பொதுவாக, இன்றைக்கு போலீஸ், மாணவர்களிடம் ஆத்திர உணர்ச்சியைத் தூண்டுகின்ற வகையில் நடந்துகொண்டிருக்கிறார்கள்.

இப்போது ஏற்கெனவே செமஸ்டர் முறையில் அதாவது இன்டர்னல் அசெஸ்மென்ட் முறையில் விருப்பு வெறுப்புக் கேற்ற வகையில் சில இடங்களில் முறைகேடுகள் நடப்பது குறித்து மாணவர்கள் எதிர்ப்பு தெரிவித்து வருகிறார்கள் என்று பலமுறை சொல்லியிருக்கிறேன். அதற்கான எந்த விதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

அடுத்து பல்கலைக் கழகத்தின் செனட், சிண்டிகேட் போன்றவைகளில் மாணவர்களுக்கும் பிரதிநிதித்துவம் கொடுக்கப்படவேண்டும் என்பதை வலியுறுத்திக் கூற விரும்புகிறேன் பக்கத்திலே உள்ள மற்ற மாநிலங்களாகிய கேரளம், கர்நாடகம், ஆந்திரம் போன்ற மாநிலங்களிலே எல்லாம் செனட், சிண்டிகேட்

களில் மாணவர்களுக்குப் பிரதிநிதித்துவம் கொடுக்கப்படுகிறது. மாணவர்களுக்குரிய பிரச்சினைகள் குறித்தும், கல்வி முறைகள் குறித்தும் மாணவர்களும் கருத்துச் சொல்லுகின்ற விதத்தில் அவர்களுக்கும் செனட், சிண்டிகேட்டுகளில் பிரதிநிதித்துவம் கொடுக்கப்படவேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து கல்வி நிறுவனங்களை இன்றைக்குத் தனியார் வைத்துக் கொண்டு இருக்கிறார்கள். அதாவது அவை சிறுபான்மையோருக்குரிய கூடமாக பல இடங்களில் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. ஆனால் உண்மை நிலையினைப் பார்க்கின்றபோது அரசாங்கம்தான் கல்வி நிறுவனங்களுக்கு மானியம் கொடுக்கிறது. அதுமட்டுமல்லாமல் ஆசிரியர்களுக்கும் அரசாங்கம்தான் ஊதியம் வழங்குகிறது. இப்படி இருந்தும் அந்த நிறுவனங்களைத் தனியார்களிடம் கொடுப்பது சரியல்ல. ஆகவே அப்படிப்பட்ட நிலையினை மாற்றுகின்ற வகையில் கல்லூரிகளையும், கல்லூரி நிறுவனங்களையும் அரசே ஏற்றுக் கொள்ளக்கூடிய முறையிலே ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆனால் தனியார்களைப் பொறுத்தவரையில், அவர்கள் தங்களது சிறுபான்மையோர் உரிமை பாதிக்கப்படுகிறது என்று சொல்கிறார்கள். அதாவது அரசியல் சட்டத்திலே இருக்கக் கூடிய முறைகளுக்கு மாறுபாடான முறை இது என்று சொல்கிறார்கள். அவ்வாறு சொல்வது சரியல்ல. முறைகேடுகளைத் தடுப்பதற்குரிய வகையிலே கல்வி நிறுவனங்களை அரசுடைமையாக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

வீரகேரளம்புதூர் என்ற இடத்தில் அண்ணா நடுநிலைப் பள்ளி இருக்கிறது. அங்கே அண்ணா பெயரால ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் பல்வேறு முறைகேடுகளை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆசிரியர்கள் அதிகாரி முன்னால் தாக்கப்பட்டும் தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. 7—2—1979 அன்று பள்ளி நிர்வாகியின் மகனும் மகளும் பள்ளிக்கு வந்த ஆசிரியை பழனியம்மாளை * காலணியால் தாக்கியிருக்கிறார்கள். அந்தப் பள்ளியில் பணியாற்றிய ஆசிரியர் மரியலூயிசை அந்தப் பள்ளியின் நிர்வாகியின் மனைவி கத்தியால் குத்தி கொலை செய்ய முயற்சி செய்திருக்கிறார். அந்த ஆசிரியரின் உடம்பில் பல பாகங்களில் குத்தப்பட்ட குத்துக்களின் காரணமாக குத்துயிரும் கொலை உயிருமாக மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டார், இப்படி இருந்தும் கூட காவல் துறை அங்கே சரியான நடவடிக்கை எடுக்காமல் இருக்கின்றது, இது மட்டுமல்ல பல்வேறு முரண்பாடுகள் அங்கே காணப்படுகின்றன.

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க திருத்தப் பெற்றது.

[திரு. ரா. கிருஷ்ணன்] [1979 மார்ச் 29

ரீஜினல் டைரக்டர் நியமிப்பதற்கு இந்த அரசு ஒத்துக் கொண்டது. அதன்படி துரிதமாக நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அடுத்து ஆசிரியர்களைப் பொறுத்தவரை அரசாணை தெளிவாக இல்லை என்று கூறப்படுகிறது, அரசாணை என்றாலே தெளிவில்லாத நிலை என்று இருக்கக்கூடாது. அதிலே பல விதமான குழப்பங்கள் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அதாவது செலக்ஷன் கிரேடு சம்மந்தப்பட்ட விஷயத்திலும் நடுநிலைப்பள்ளி தலைமையாசிரியர் நியமனம் சம்மந்தப்பட்ட விஷயத்திலும் பல குழப்பங்கள் இருப்பதாகச் சொல்லப்படு கிறது. ஆகவே அரசு ஆணைகளைப் பொறுத்தவரையில் தமிழிலே தெளிவாகப் போட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அரசாணை எண் 2502-ன் உத்தரவுப்படி 1 : 20 என்ற முறை அமல்படுத்தப்பட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து பள்ளி சீரமைப்பு மாநாடு என்று சொல்லிக்கொண்டு பல இடங்களில் பள்ளி துணை ஆய்வாளர்களுடைய முறைகேடு கள் நடப்பதாகச் சொல்லப்படுகிறது, யாராவது ஒரு ஆசிரியரை லீவு போடச் சொல்லிவிட்டு, அந்த இடத்திலே வேலையில்லாமல் இருப்பவர்களைப் போட்டு அவர்கள் வாங்குகின்ற சம்பளத்தில் பாதிச் சம்பளத்தை நன்கொடையாகப் பெற்றுக்கொண்டு இப்படிப் பள்ளி சீரமைப்பு மாநாடுகள் நடத்தப்படுகின்றன.

குறிப்பாக புளியாங்குடி துணை ஆய்வாளர் என்னைக் கேட்காமலேயே நிகழ்ச்சியில் என்னுடைய பெயரையும் சேர்த்து போட்டிருக்கிறார். நான் போகின்ற போது அந்த மாநாடு ரத்தாகி இருக்கிறது என்பது தெரிய வந்தது. இது குறித்து நான் புகார் கொடுத்தும் எனக்கு இதுவரை ஒரு பதிலும் வரவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து ஆசிரியர்கள் இயக்கங்களில் பங்கெடுத்துக் கொள்ளாத அளவில் அவர்களிடம் கையெழுத்து வாங்கப்படுகிறது. அதாவது அவ்வாறு பங்கெடுத்துக் கொண்டால் வேலை நீக்கம் செய்யப் படலாம் என்று எழுதி வாங்குகிறார்கள். இப்படிப்பட்ட முறைகேடுகள் தவிர்க்கப்பட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அத்தோடு ஐ. டி. ஐ.-ல் சர்வே டிரெயினிங் இரண்டு ஆண்டு கோர்ஸ் இருக்கிறது, அதை அங்கீகாரம் செய்யாத காரணத் தால் அந்தக் கோர்ஸ் படித்தவர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைப்ப தற்கு வழியில்லை என்று சொல்லப்படுகிறது. அத்தோடு பேரறிஞர் அண்ணா தொழில் நுட்ப பல்கலைக் கழகத்தைப் பொறுத்த வரையில் அங்கே பணி புரிகின்றவர்கள் நான் டீச்சிஸ்

ஸ்டாப், முதலில் சென்னை பல்கலைக் கழகத்தில் பணி புரிந்தவர்கள். ஆகவே அவர்கள் தாங்கள் ஏற்கனவே சென்னை பல்கலைக் கழகத்தில் செய்த பணியையும் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். அது மறுக்கப்படுவதாகவும் சொல்லப்படுகிறது. மேலும் ஒரு பாரத்தில் கையெழுத்து வாங்கப்பட்டதாகவும் சொல்லப்படுகிறது. அது சரியில்லை. அத்தோடு அங்கே பேரறிஞர் அண்ணா தொழில் நுட்ப பல்கலைக் கழகத்தைப் பொறுத்த வரையில், அதற்குத் துணைவேந்தராக இருப்பவர் முன்னாள் ஒரு இன்ஜினியராக இருந்திருக்கிறார். அவர் ஏற்கனவே ஒரு கட்டடம் அவருடைய பொறுப்பில் கட்டப் பட்டதாகவும் அந்தக் கட்டடம் இடிந்து விழுந்து 16 தொழிலாளிகள் செத்துவிட்டதாகவும் அது குறித்து, விசாரணை நடத்துகிற போது (மணி அடிக்கப்பட்டது)

ஒரு நிமிடத்தில் முடித்துக் கொள்கிறேன். அங்கே சீனியாரிட்டி அடிப்படையில் பதிவாளர் பதவி தரப்படவில்லை என்று சொல்லப்படுகிறது. மேலும், ஜெனரல் போர்மன் நியமனத்திலும் ஊழல் நடந்திருப்பதாகவும் சொல்லப்படுகிறது. அதை இந்த மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அடுத்து கேர் சிஸ்டத்துக்கு 10 பைசா அரசும், 5 பைசா ஊராட்சி ஒன்றியமும் கொடுத்து வருகிறது. 5 பைசா கொடுப்பதில் அந்த ஒன்றியத்தில் பெரிய ஊழல் நடைபெற்று வருவதாக புகார் வந்திருக்கிறது. அந்த முறையை மாற்ற வேண்டும். இப்போது கொடுக்கும் 15 பைசாவிற்குப் பதிலாக 25 பைசா கொடுக்க அரசு முன் வர வேண்டும் என்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன். மத்திய சமையல்கூடங்கள் எல்லா மாவட்டங்களிலும் அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்து நர்சரி பள்ளிகளைப் பொறுத்த வரையில்....

(மணி அடிக்கப்பட்டு திரு. மார்க்கபந்து அவர்கள் பேச அழைக்கப் பட்டார்.)

<u>திரு. ரா. மார்க்கபந்து</u> : பேரவைத் தலைவரவர்களே.....

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : தங்களுக்கு 15 நிமிஷங்கள் கொடுக்கப்படுகிறது, சீக்கிரமாக முடிக்க வேண்டும்.

*<u>திரு. ரா. மார்க்கபந்து</u> : பேரவைத் தலைவரவர்களே, எழுத்தறிவித்தவன் இறைவனாகும் என்பது பழமொழி. நம முடைய அறிவுக்கெல்லாம் யாரோ ஒரு ஆசிரியர்தான் இருந்து கொண்டிருக்கிறார்........

திரு. க. மருதாசலம் : தலைவர் அவர்களே, கிருஷ்ணன் அவர்கள் பேசுகிறபோது வீரகேரளத்தில் ஏதோ ஒரு ஊழல் நடந்ததாகக் குறிப்பிட்டார்கள். என்னுடைய தொகுதியிலும் ஒரு வீர கேரளம் இருக்கிறது. எதைக் குறிப்பிடுகிறார்கள் என்பதை அவர்கள் குறிப்பிட வேண்டும். என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன் ; தலைவர் அவர்களே, நெல்லை ஆலங்குளம் பகுதியில் வீரகேரளப்புதூர் என்று ஒன்று இருக்கிறது அதைப்பற்றித்தான் சொன்னேன்.

திரு. ரா. மார்க்கபந்து: இந்த நேரத்தைக் கழித்து என்னைப் பேச அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இடைநிலை ஆசிரியர்கள் தமிழகம் பூராவும் சமீபத்தில் உண்ணா விரதம் இருந்தார்கள். தமிழகத்தின் பல்வேறு பகுதியில் இருக்கிற பல்லாயிரக்கணக்கான ஆசிரியர்கள் தமிழக அரசாங்கத்தை வேண்டியிருக்கிறார்கள். 16 கோரிக்கைகளை வைத்து அந்தக் கோரிக்கைகளின் நகலை தங்கள் அனுமதியோடு கல்வி அமைச்சர் அவர்களுக்குச் சமர்ப்பிக்க விரும்புகிறேன். அவர்களது கோரிக்கை சாதாரணமான கோரிக்கைகள்தான். ஹையர் கிரேடு டீச்சர்ஸ் என்ற நிலையை மாற்றி செகண்டரி கிரேடு டீச்சர்ஸ் என்று மாற்றித் தாருங்கள் என்று கேட்டிருக்கிறார்கள். அதற்குரிய காரணத்தைச் சொல்கிறபோது அவர்கள் சொல்கிறார்கள், செகண்டரி கிரேடு டீச்சர்ஸ் டிரெயினிங் இப்போது நிறுத்தப்பட்டிருக்கிறது என்று சொல்கிறார்கள் ஆகையால் அவர்களை செகண்டரி கிரேடு டீச்சர்ஸ் பதவியாக மாற்றித் தாருங்கள் என்று கேட்டிருக்கிறார்கள்.

[முற்பகல் 10–00]

என்சினியரிங் டிப்பார்ட்மென்டில் ஜூனியர் எஞ்னியர் என்பதை மாற்றி அவர்கள் எல்லோரையும் அஸிஸ்டன்ட் என்சினியர்கள் என்று மாற்றியிருக்கின்ற காரணத்தினால், அந்தக்கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ளலாம். அதில் இந்த அரசாங்கத்திற்கு எந்தவிதமான சங்கடமும் இருக்காது.

அதே நேரத்தில், புதிய சம்பள நிர்ணய குழுவில் அவர்களுக்கு இன்கிரிமென்ட் அடிப்படையில் 5 சதமானம் பெனிஃபிட்ஸ் ஒன்று இருக்கிறது. அவர்கள் வைக்கின்ற கோரிக்கை அவர்கள் இதை ஏற்றுக் கொள்கின்ற நேரத்தில் இன்க்ரிமென்ட் ஒன்றிரண்டு சேர்ந்த பிறகு அவர்கள் ஆப்ஷனலாக புதிய சம்பள விகிதத்தை ஏற்றுக்கொள்கிறோம் என்று சொல்வதின் மூலமாக ஆசிரியர்களின் ஓய்வு பெறுகின்ற நேரத்தில் பென்ஷனில்—ஓய்வு ஊதியத்தில் அடிப்படையில் சற்று ஊதியம் அதிமாக கிடைக்கும் என்ற கோரிக்கையை வைத்து ஏழை ஆசிரியர்கள் போராடிக்கொண்டிருக்கிறார்கள். அதை ஏற்றுக் கொள்வது இந்த அரசாங்கத்திற்குப் பயன் உள்ளதாக இருக்கும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

1979 மார்ச் 29] [திரு. ரா. மார்க்கபந்து]

குறிப்பாக, மருத்துவப்படி வழங்குவதில், கிராமப் புறங்களில் வேலை செய்கின்ற ஆசிரியர்களுக்கு நான் கேள்விப்பட்ட வரை எந்த ஆசிரியர்களுக்கும் மருத்துவப்படி அலவன்ஸ் அல்லது ரீஇம்பர்ஸ்மென்ட்—டோ கிடைப்பதில்லை என்று சொல்கிறார்கள். மெடிகல்ஸ் ரீஇம்டர்ஸ்மென்ட் அரசாங்கத்தில் இருக்கின்ற பிற ஊழியர்களுக்கு ஏதோ ஒரு விதத்தில் கிடைத்து வருகிறது. ஆனால் இந்த கிராமப் புறங்களிலுள்ள ஆசிரியர்களுக்கு கிடைப்பதில்லை என்ற குறை இருந்து வருகிறது. அண்ணா அவர்கள் ஆட்சி புரிந்த காலத்தில் ஆசிரியர்களுக்கு ப்ளாட் ரேட்டாக சம்பளத்தில் 2 சதவீதம் 3 சதவீதம் என்று நிர்ணயித்து கொடுக்கப்பட்டு வந்தது, அதே மாதிரி, இப்போது குறைந்தது 10 ரூபாய் அல்லது 15 ரூபாய் என்ற அளவில் தரவேண்டும் என்ற கோரிக்கையை ஆசிரியர்கள் வைத்திருக்கிறார்கள். ஆகவே கிராமப் புறங்களில் இருக்கின்ற ஆசிரியர்களுக்கு ப்ளாட் ரேட்டாக மெடிக்கல் அலவன்ஸ் என்ற அளவில் கொடுப்பது தேவையானது. அதை அரசாங்கம் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே கிராமப்புறங்களில் இருக்கின்ற ஆசிரியர்களுக்கு வீட்டுவாடகைப்படி இல்லை என்பது அரசாங்கம் ஏற்றுக்கொண்டிருக்கிறது. வீட்டுவாடகைப்படி கிராமப்புறங்களில் சென்று உழைக்கின்ற ஆசிரியர்களுக்கு நிச்சயம் கொடுக்கவேண்டும். நகர்ப்புறத்தில் வேலை செய்கிறவர்களுக்கு பலவிதமான சலுகைகள் தரப்படுகிறது. ஆனால் கிராமங்களில் சென்று பணியாற்றுகின்ற ஆசிரியர்களுக்கு வீட்டுவாடகைப்படி தரப்படாத காரணத்தினால் தான் எல்லா ஆசிரியர்களுக்கும் நகர்புறங்களுக்கு வரவேண்டும் என்று விரும்புகிறார்கள். அனால் கிராமங்களில் வாயில்லாப் பூச்சிகளாக இருக்கின்ற ஆசிரியர்களுக்கு மருத்துவப்படி வீட்டுவாடகைப்படி போன்றவை தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[மாண்புமிகு பேரவை மாற்றுத்தலைவர் (திரு. எஸ். ஜே. இராமசாமி) தலைமை]

தற்போது அரசாங்கத்தின் நிலவரப்படி 10, 15 ஆண்டுகள் தொடர்ந்து வேலை செய்து வந்தால் அந்தத் தரத்தில் பதவி உயர்வு இல்லை என்று வந்தால் அவர்களுக்கு செலக்ஷன் கிரேட் தருகிறார்கள். அந்த முறையில் 20 ஆண்டுகள் பணியாற்றினால் அவர்களுக்குச் சிறப்பான ஊதியம் அளிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஒரு முறை நியமிக்கப்பட்ட ஆசிரியர்கள்—மற்றவர்களுக்கு ஏணிப்படிகளாக இருக்கிறார்களே தவிர ஏறுகின்றவர்களாக இல்லை. ஆகவே தான் இந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மற்றும், இந்தத் தலைமை ஆசிரியர்களுக்கு தனி ஊதியம் வேண்டும் என்றும், தகுதிக்கு ஏற்ற ஊதியம் வேண்டும் என்றும் கோரப்பட்டிருக்கிறது. ஆசிரியர்கள் தலைமை ஆசிரியர்க

ளாகப் பணியாற்றும்போது அவர்கள் அட்மினிஸ்ட்ரேஷன் வொர்க் செய்கிறார்கள். அதிகமான அட்மினிஸ்ட்ரேஷன் வொர்க் செய்வதால் அவர்களுக்குச் சிறப்பு ஊதியம், கொஞ்சம் கூட தருவதில்லை என்று சொல்கிறார்கள். ஆசிரியர்களுக்கும் தலைமை ஆசிரியர்களுக்கும் வித்தியாசம் இல்லாமல் இருக் கிறது. இதைப்போக்கி தலைமை ஆசிரியர்களாக இருக்கின்ற வர்களுக்கு மதிப்பு தருகின்ற வகையில் அவர்களுக்கு தனி ஊதி யம் தருவது சிறப்பாக இருக்கும். அதை அரசாங்கம் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்தில் எர்ன்ட் லீவ்—அவர்கள் 200 நாட்கள் வேலை செய்கிறார்கள். எர்ன்ட் லீவாக 3 நாட்கள் தான் தந்திருக்கிறார்கள். அதை உயர்த்தவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் ஓய்வு பெறும்போது 10 ஆயிரம் ரூபாய் தரவேண்டும் என்று கேட்கிறார்கள். அரசாங்கத்திடம் அவர்கள் நீங்களும் கொஞ்சம் தாருங்கள், நாங்களும் கொஞ் சம் தருகிறோம், அதன் மூலம் பிற்காலத்தில் ஓய்வு பெறுகிற நேரத்தில் மொத்தமாக ஒரு செலவுக்குப்போதுமான அளவில், ஓய்வு பெறுகின்ற நேரத்தில் பாதுகாப்பு நிதியாக 10 ஆயிரம் தாருங்கள் என்று கேட்கிறார்கள். அதை அரசாங்கம் பரிசீ லிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்

ரயில்வே துறையிலே வேலை செய்கின்ற ஊழியர்கள், வேலை முடிந்து ரிடையர்ட் ஆகின்றபோது அவருடைய குடும் பத்திலே உள்ள ஒருவருக்கு வேலைவாய்ப்பு தருகிறார்கள். அதே போல், இந்த ஆசிரியர் குடும்பங்களிலே ஆசிரியர்கள் பதவியை விட்டு ரிடையர்ட் ஆகின்றபோது, எனது மகன் ஆசிரியர் பயிற்சி பெற்றிருக்கிறான், அவனுக்கு வேலை வாய்ப்பு வேண்டு மென்று கேட்டால், அப்படி வேலை கொடுப்பதற்கு அவர் களுக்கு பிரையாரிடி கொடுக்கவேண்டும். அதையும் இந்த அரசாங்கம் செய்துகொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இந்த ஆசிரியர்கள் ஏற்கனவே மாற்றுதல் செய்வது என்ற அதிகாரத்தின் அடிப்படையில், எந்தவிதமான குற்றமும் செய்யாமல் இருக்கும்போது, அரசாங்கத்தாலோ அல்லது இந்த இலாகா அதிகாரிகளாலோ மாற்றப்படுகி றார்கள். இதிலேயும் இந்த அரசாங்கம் கொஞ்சம் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். எங்கா வது குற்றம் குறைகள் இருந்தாலோ அல்லது ஒழுக்கக் கேடுகள் நேர்முகமாகவோ அல்லது மறைமுகமாகவோ இருந்தால், அப்போது அந்த ஆசிரியர்களை மாற்ற வேண்டுமே அல்லா மல், ஒரு குறைபாடும் இல்லாத ஆசிரியர்களை மாற்ற வேண் டாம் என்ற கோரிக்கையையும் இந்த அரசு கவனிக்க வேண்டும்.

அதே நேரத்தில் மாணவர்களின் கல்வித் தரத்தை அதிகப்படுத்துவதற்காக இப்போது இருக்கின்ற இந்த 1:40, ஒரு ஆசிரியருக்கு 40 மாணவர்கள் என்ற விகிதத்தை மாற்றி,

1979 மார்ச் 29] [திரு. ரா. மார்க்கபந்து]

ஒரு ஆசிரியருக்கு 20 மாணவர்கள் என்ற முறையிலே நீங்கள் இந்த மாணவர்கள் விகிதத்தை மாற்றியமைத்தால், மாணவர்களின் கல்வியின் தரம் அதிகமாகும். அது மட்டுமல்லாமல் செகண்டரி கிரேடு பாஸ் செய்துவிட்டு, 1969, 1970—லிருந்து வேலை இல்லாமல் இருக்கும் ஆசிரியர்களுக்கும் வேலை வாய்ப்பு ஏற்படும். எனவே இதிலேயும் இந்த அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்திலே, பாலிடெக்னிக்குகளை எடுத்துக்கொண்டால், அதற்கு மாணவர்கள் எஸ்.எஸ்.எல்.சி. படித்துவிட்டு, ஒரு ஆண்டு பி.யூ.சி. படித்துவிட்டு, பி.இ., படிப்பு படிக்க வாய்ப்பு இருந்தது. ஆனால், இப்போது இந்த ஹையர் செகண்டரி கிரேடு வந்தபிறகு, அந்த வாய்ப்புகள் மறுக்கப்படுவதாகக் கேள்விப்படுகிறேன். எனவே, பாலிடெக்னிக் மாணவர்கள் நேரடியாக பி.இ. செல்வதற்கு முடியாமல் நிறுத்தப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, இந்த 4 ஆண்டு காலங்களில், பாலிடெக்னிக் கோர்ஸை அதிகமாக்கி இருக்கின்ற காரணத்தால், இரண்டு ஆண்டுகள் முடித்துவிட்டு, பி.டி.சி. அதாவது பிரீ-டெக்னிகல் கோர்ஸ்போல் இதை ஈக்குவேட் செய்து, அவர்கள் பி.இ., சென்று படிப்பதற்கான நடவடிக்கைகளை இந்த அரசாங்கம் செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், இன்றைக்கு இந்த ஐ.டி.ஐக்களையும்,—பாலிடெக்னிக்குகளையும் அதிகமாக்க வேண்டும். காரணம், இந்த அரசாங்கத்தின் நோக்கம் ஜாப் ஓரியன்டேடட் எஜுகேஷன் கொடுக்க வேண்டுமென்பது. எனவே, அந்தப் படிப்பு பயனுள்ள படிப்பாக இருக்கவேண்டும். ஏட்டுச் சுரைக்காயாக இருக்கக்கூடாது என்ற காரணத்தால், படித்துவிட்டு வெளிவந்தால் வேலை வாய்ப்பு கிடைக்கக் கூடிய காரணமாக அமைகின்ற வகையிலே, இந்த பாலிடெக்னிக்குகள், ஐ.டி.ஐ.க்கள் எண்ணிக்கைகளை அதிகமாக்க வேண்டும்.

கல்வி அமைச்சர் அவர்கள் 2, 3 நாட்களுக்கு முன்பு என்னுடைய தொகுதியிலே பேசுகின்றபோது சொன்னார்கள். ஹையர் செகண்டரி கல்வி நிலையங்களில் செக்ரட்டேரியல் கோர்சை இன்ட்ரொட்யூஸ் செய்திருக்கிறோம் என்றார்கள். அதன்மூலம் அதிகமான மாணவர்கள் படிக்க வாய்ப்பு இருக்கின்றது என்றும் சொன்னார்கள். அது வரவேற்க வேண்டியது. ஆனால், அதே நேரத்தில் இந்த ஹையர் செகண்டரி கோர்சிலே, இன்னும் அதிகமான பாடங்களைச் சேர்த்து, எப்படி ஐ.டி.ஐ. மாணவர்களுக்கு சர்டிபிகேட் கொடுக்கப்படுகின்றதோ, அதேமாதிரி இதிலே உள்ளவர்களுக்கும் கொடுக்க வேண்டும். அப்படி கொடுதது, வேலை வாய்ப்பிலே இவர்களுக்கு ப்ரிஃப்ரென்ஸ் கிடைக்கின்ற வகையிலே இந்த சர்டிபிகேட்டுகள் கொடுக்க உத்தரவிடவேண்டும்.

அதே நேரத்திலே ஹையர் செகண்டரி எஜுகேஷனிலே செமிஸ்டர் முறை தேவைப்படுகிறது. அந்த செமிஸ்டர் சிஸ்டத்தை நீங்கள் அமுல்படுத்தவேண்டும். குறிப்பாக, பள்ளிக்கூடங்களிலே அமினிடிஃபண்டு என்றிருக்கிறது. அந்த அமினிட்டிஃபண்டு எதற்காக இருக்கிறது என்று சொன்னால், பள்ளியிலே ஏதாவது ரிப்பேர் தேவைப்பட்டால் செய்துகொள்வதற்காக. ஆனால், அதை அங்குள்ள இலாகா அதிகாரிகள் மூலம்தான் செய்யவேண்டுமென்று சொன்னால், அவரிடமிருந்து சாங்ஷன் ஆகி வருவதற்கு 6, 7 மாதங்களுக்கு மேல் ஆகிவிடுகிறது. ஆகவே, அந்தக் காரணத்தால் உரிய காலத்திலே ரிப்பேர் செய்ய முடியாமல் போய்விடுகிறது. எனவே, குறிக்கோள் நிறைவேறாமல் போய்விடுகிறது. இதிலே ரெட் டேபிசம் வேறு விளையாட ஆரம்பிக்கிறது. ஆகவே, 'ஆன்—தி ஸ்பாட் ஸ்டடி' என்ற முறையிலே அங்குள்ள சி.இ.ஓ., டி.இ.ஓ.சி, பி.டபிள்யூ.டி. எக்சிகியூடிவ் இன்சினியர், அந்தத் தொகுதி எம்.எல்.ஏ., ஆகியோர் சேர்ந்த ஒரு குழுவை ஏற்படுத்தி, அந்தக் குழுவினர் 'ஆன் தி ஸ்பாட் ஸ்டடி' செய்து, அங்கே என்னென்ன தேவைகள் இருக்கின்றதோ அந்தத் தேவைகளை எல்லாம் உடனடியாகச் செய்யக்கூடிய அளவிலே நடவடிக்கைகள் எடுப்பதற்கு, அந்தச் சட்டத்தைத் திருத்தியமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நிர்வாகத்திலே, ஆசிரியர்களுக்கு பிரமோஷன் கொடுப்பதிலே 'கான்ஃபிலிக்டிங்' ஜீ.ஓ. க்கள் போடப்படுகின்றன. இன்றைக்கு ஒரு ஜீ.ஓ. போடப்பட்டு, பிறகு மறுதினமே அதற்கு 'கான்ஃபிலிக்டிங்'காக ஒரு ஜீ. ஓ. போடப்படுகிறது..

(முற்பகல் 10-10)

ஆகையால் பலவிதமான அவசர உத்தரவுகள்—கான்ஃபலிடிங்டு ஈச் அதர்—ஒரு சாராருக்குச் சாதகமாக இருக்கும் அரசாங்க உத்தரவு மற்றொரு சாராருக்கு பாதகமாக ஆகும் நிலைமை இருப்பதால் பலவிதமான ரிட் பெட்டிஷன்கள் ஹைகோர்ட்டில் தேங்கிக் கிடக்கும் நிலைமை இருக்கிறது. ஆகையால் எல்லாவிதமான அரசாங்க ஜி.ஓ.க்களையும் ஒருங்கிணைத்து திருத்தி இதன்படிதான் ஆசிரியர்கள் நியமனம் செய்யப்படும். ப்ரொமோஷன்கள் கொடுக்கப்படும் என்ற முறையில தீவிர கவனம் செலுத்தி மாற்றம் செய்ய வேண்டும்.

ஆசிரியர்களை நியமிப்பதைப் பொறுத்தவரை இப்போதிருக்கும் அச்சம் எல்லாம் அதிகாரிகளிடத்தில் அதிகமான பொறுப்பைத் தந்திருக்கும் காரணத்தால் பலவிதமான தவறுகள் ஏற்பட இடம் இருக்கிறது. இந்த முறைகளிலே சீர்திருத்தம் செய்வது சிறப்பானதாக இருக்கும்.

1979 மார்ச் 29] [திரு. ரா. மார்க்கபந்து]

ஐ.டி.ஐ. யை தனியார் நிறுவ முன்வரும்போது அவர்களுக்கு அரசாங்கம் உதவி செய்ய வேண்டும். தனியார் ஐ.டி.ஐ. ஆரம்பிப்பதன் மூலம் வேலை வாய்ப்புக்கான கல்வியில் நாட்டு மக்களுக்கு அதிகமான வாய்ப்பு கிடைக்கும், அரசாங்கத்தில் வேலை வேண்டுமென்று கோருகிற மாணவர்களின் எண்ணிக்கை குறையும், ஆகவே, ஐ.டி.ஐ.யை தனியார் ஏற்று நடத்த வாய்ப்பினை இந்த அரசாங்கம் தரவேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடிக்கிறேன். நன்றி.

திரு. கே. கந்தசாமி: தாற்காலிகத் தலைவர் அவர்களே, கண் போன்ற கல்விக்காக மாநிலத்தின் மொத்த வருவாயில் நான்கில் ஒரு பங்கை ஒதுக்கி எதிர்கால சந்ததியினர் அறிவாளிகளாக, தமிழகத்தின் கண்களாக விளங்கவேண்டுமென்ற நல்லெண்ணத்தோடு அரசு நிதி ஒதுக்கியிருப்பதைப் பாராட்டுகிறேன் என்றாலும் நாம் விரும்புகிற அளவுக்கு விளைவுகள் கிடைக்கின்றனவா என்பதைப் பற்றி மிகவும் கவனமாக நோக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். காரணம்—மிக வறுமையும், பஞ்சமும், எதிர்பாராத இயற்கைக் கோளாறுகளினால் நாட்டு மக்களுக்கு ஏற்பட்ட பெருத்த பாதிப்பும் உள்ள நிலைமையில் வருவாயை மிக சிரமப்பட்டுச் சேர்த்து அதில் மிகப் பெரும் பகுதியை இந்த ஒரு துறைக்காக ஒதுக்கியிருக்கும்போது எந்த ஒரு நல்ல நோக்கத்திற்காக ஒதுக்கினோமோ அந்த நல்ல நோக்கம் நிறைவேற்றப்பட்டிருக்கிறதா என்பதை மிகவும் உன்னிப்பாகச் சிந்தித்துப் பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறோம்: We are having quantitative education and not qualitative education; I beg to say this with due respect to Education Department. என்று குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இப்படிக் குறிப்பிடும்போது நான் கல்வித் துறையில் இருக்கிற அதிகாரிகளை அல்லது கல்வியமைச்சர் அவர்களைக் குறிப்பிடுகிறேன் என்று பொருள் அல்ல. இன்றைய அரசியல் சூழ்நிலையில் இருக்கிற நிலை இதுதான்.

இன்று நல்ல முறையில் கல்வி பயனளிக்க வேண்டுமென்ற முறையில் ஹையர் செகண்டரி சிஸ்டம், ஐ.டி.ஐ. போன்ற தொழிற் கல்வி ஆகியவற்றைப் புகுத்த முயன்று வருகிறோம். என்றாலும் அது போதாது என்பதுதான் என்னுடைய கருத்து. எவ்வளவோ துறைகளுக்கு மிஷன்களைப் போடுகிற நம்முடைய அரசு சமுதாயத்தின் மிக முக்கியமான, மனிதனின் அவயங்களில் முக்கியமான கண் போன்று உள்ள கல்விக்கு அந்த கல்வியில் சீர்திருத்தம் செய்வதற்கு ஒரு குழுவைப் போட்டுப் பரிசீலிக்க வேண்டும். நல்ல கல்வி நிபுணர்கள், ஓய்வு பெற்ற பள்ளிக் கல்வி கல்லூரிக் கல்வி டைரக்டர்கள், வைஸ் சான்சலர்கள் போன்ற மூத்த அறிஞர்கள் இருக்கிறார்கள். அவர்களைக் கொண்ட கமிஷனை அமைத்து அவர்கள் தரும் சிபாரிசுகளை அரசு மறுபடியும் பரிசீலனை செய்து எந்த முறையில் கல்வித்

[திரு. கே. கந்தசாமி] [1979 மார்ச் 29

திட்டததைச் சீர்திருத்தம் செய்து நடைமுறைக்குக் கொண்டு வந்தால் நாட்டில் நல்ல நிலைமையை ஏற்படுத்தும் என்ற வகையில் சிந்திதது செயலாற்றுவது மிகவும் அத்தியாவசியம் என்று கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அப்படி இல்லையென்றால் இப்போது பள்ளிகளைப் பார்க்கிறோம். நல்ல நோக்கத்தோடு, அறியாமையைப் போக்குவதற்கு படிப்பது தலையாய கடமை என்பதை உணர்ந்து பள்ளிகளைப் பெருக்குகிறபோது, ஆசிரியர்களின் எண்ணிக்கையைப் பெருக்கிறபோது அதனுடைய விளைவு என்ன? படித்தவர்களாக ஆகிறார்கள். அது மட்டும் போதாது. அவர்கள் சமுதாயத்தில் வாழ்வு தொடர்வதற்கும், வாழ வைப்பதற்கும் அமைப்புகளாக அவைகள் அமையவேண்டும் என்பது என்னுடைய நோக்கம். அவர்களை வாழ வைக்கிறோமா என்றால் அது கேள்விக்குறியாக இருக்கிறது. மிக துரதிருஷ்டமான ஒன்று, வெஸ்ட் ஜெர்மனியில் இருந்து பார்லிமெண்டரியன்கள் வந்து இருந்தார்கள். அவர்கள் சபாநாயகர் சேம்டரில் இருந்தபோது எங்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டார்கள். நாஞ்சிலார் அவர்களோடு சேர்ந்து நாங்களும் அவர்களோடு விவாதம் செய்தோம். நீங்கள் அங்கே வேலை இன்மையைப் போக்க என்ன திட்டங்களை வைத்து இருக்கிறீர்கள். அவர்கள் சொன்னார்கள், எங்களுக்கும் அது ஒரு பிரச்னையாகத்தான் இருக்கிறது. இது ஒரு துர்ப்பாக்கியமான பிரச்சனை என்று சொன்னார்கள். இந்த வேலையின்மை என்டது நம்முடைய நாட்டில் மட்டுமல்ல, எல்லா முன்னேறிய நாடுகளிலும் அந்தப் பிரச்சனை இருக்கிறது. ஆனால், இந்த அளவிற்கு இல்லை என்பதை நாம் உணர வேண்டும். ஆகவே, அவர்களெல்லாம் படிப்பதற்கு, அவர்களுக்கு எல்லாம் எழுத்தறிவிப்பதற்கு நம்முடைய நாட்டில் ஏழைகள் கிராமங்களில் வாழ்கிறார்கள். வறுமையில் வாடுகிறார்கள் என்கிற நிலையை உணர்ந்து தான் நம்முடைய பள்ளிகளில் பெரும்பகுதியில் மதிய உணவு இலவசமாகவும் சீருடை, புத்தகம் ஆகியவற்றை இலவசமாகவும், மான்யமாகவும் கொடுக்கிற நிலையை நாம் உருவாக்கியிருக்கிறோம். இலவசக் கல்வி கொடுப்பதே அவர்களுக்கு இருக்கும் வறுமையை உணர்ந்து தான் செய்யப்பட்டு இருக்கிறது. அப்படி வறுமையில் வாடுகிற மாணவர்கள், இப்படி இலவசமாக படிக்கும் மாணவர்கள் அவர்களது குடும்பங்கள் எந்த நிலையில் இருக்கின்றன என்டதை சிந்திக்க வேண்டும். அவர்கள் மிகவும் ஏழைகளாக இருக்கிறார்கள். அவர்களுக்கு அரசு மானியம் ஓரளவு கல்வி பெற ஒத்துழைக்கிறது. மற்றவர்கள் எப்படி இருக்கிறார்கள் என்றால் கொஞ்சம் நில புலன்களையும் விற்றுவிடுகிறார்கள். அரசு அதிகாரிகளாக இருந்தால் வருகிற வருவாயை வைத்துக் கொண்டு அதில் சிக்கனப்படுத்தி மேல்படிப்பு படிக்க வைக்கிறார்கள்.

பட்டம் பெற்ற பிறகு அவர்களுடைய கதி என்ன? நான் சமீபத்தில் ஆண்டிப்பட்டியில் நடைபெற்றதை சட்டமன்றத்தில் குறிப்பிட்டேன். ஆண்டிப்பட்டி பஞ்சாயத்து

1979 மார்ச் 29] [திரு. கே. கந்தசாமி]

யூனியனில் ஆசிரியர் தேர்வு நடந்தபோது மிகக் கணிசமாக லஞ்சம் கொடுக்கப்பட்டது. அப்படி வாங்கப்பட்டது என்று சட்ட மன்றத்தில் நான் சொன்னவுடன் அமைச்சர் அவர்கள் கலெக்டரிடத்தில் அதைச் சொல்லி விசாரணை வைத்து இருக்கிறார்கள். அங்கேயிருக்கும் பி.ஏ. அதிகாரிகளை சரியான வகையில் சாட்சி சொல்லக்கூடாது என்று மிரட்டிக்கொண்டு இருக்கிறார். இந்த நிலைமை ஏன் அங்கே நடந்தது? அங்கே தேர்வு நடந்த நேரத்தில் 1965 லேயே ஹையர் கிரேடு சர்ட்டிபிகேட், செகன்டரி கிரேட் சர்டிபிகேட் வாங்கிய ஆசிரியர்கள் எல்லாம் இருந்தார்கள். அவர்கள் தேர்ந்தெடுக்கப்படவில்லை. அப்படி ஏன் தேர்ந்தெடுக்கப்படவில்லை என்று கேட்டேன், அவர்களுக்கு எல்லாம் பிரியாரிட்டி கொடுக்க வேண்டாமா சீனியாரிட்டி முறையில் தேர்வு இருக்க வேண்டாமா என்று கேட்டேன். அதற்கு அதிகாரிகள் சொன்னார்கள். அப்படிப்பட்ட அவசியம் இல்லை. படித்து விட்டு ஆசிரியர் பதவிக்கு லாயக்கு உள்ள எல்லோரையும் அழைத்து தேர்வு நடத்துகிறோம். அதிலே யார் அதிகமான மார்க்குகளை வாங்குகிறார்களோ அவர்களை நியமிக்கிறோம்.

பின்னர், முன்பே பாஸ் செய்தவர்களின் நிலை என்ன என்று கேட்டேன், அவர்களுடைய தலையெழுத்தை அவர்கள் தான் முடிவு செய்து கொள்ள வேண்டும் என்று சொன்னார்கள். இதை அவர்கள் சொன்னபோது ஏதோ கேலி செய்வதற்காகவோ அல்லது நிந்தனை செய்வதற்கோ சொல்லவில்லை. மிக வேதனையோடு சொன்னார்கள். அரசாங்க ஆணையில் இல்லாத ஒன்றை நாங்கள் செய்யமுடியாது என்று சொன்னார்கள். இப்படி படித்து விட்டு வேலை இல்லாமல் இருக்கிறார்களே என்று வேதனை பட்டார்கள். இருக்கிற நிலபுலங்களை விற்றுவிட்டு, நாம் பள்ளி செல்கிறோம் கற்கிறோம், நல்ல முறையில் வாழப்போகிறோம் என்று எண்ணி, அவர்கள் அந்தப் பணியை, பயிற்சியை மேற்கொண்டு இருக்கிறார்கள். ஆகவே, நான் தெரிவிக்க விரும்புகிறது என்னவென்றால் ஆசிரியர் பயிற்சியை ஒரு தொழில் கல்வியாகவே வைக்கலாம். அப்படி தொழில் கல்வியாக வைத்தால் தற்போதுள்ள பதட்ட நிலை குறையும். தற்போது படித்தவர்களுக்கு வேலை கிடைக்கவில்லை, ஐ.டி.ஐ. படித்தவர்களுக்கு, இன்ஜினியர், டாக்டர் பட்டம் பெற்றவர்களுக்கு வேலை இல்லாதபோது, பள்ளி எண்ணிக்கையைப் பெருக்குவதால் என்ன லாபம். இட் ஈஸ் எ லாஸ்டு டு பப்ளிக் ரெவின்யூ. இது அவசியமா என்பதை சிந்தித்துப் பார்க்கவேண்டும். இப்படிச் சொல்கிறபோது, பள்ளிகளை நிறுத்தி விடலாமா என்றால் ஆம் என்று சொல்லிவிட முடியாது. பள்ளிகள் கல்வி தொடர்பு ஏற்படுத்துவதற்கு மிகவும் அவசியம்தான். ஆனால், எப்படி அந்தக் கல்வி போதிக்கப்பட வேண்டும், எப்படி போதிக்கப்பட்டால் சமுதாயத்தில் அவர்கள் வாழ்வதற்கு வகை தேடித்தரும் என்பதைச் சிந்திக்க வேண்டும்.

[திரு. கே, கந்தசாமி] [1979 மார்ச் 29

[முற்பகல் 10-20]

எதிர்கால வாழ்க்கைக்கு ஒரு கியாரண்டி கொடுக்கக்கூடிய ஒரு கல்வியாக அமையவேண்டும். அதற்கு நம்முடைய அமைச்சர் அவர்கள் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களோடு கலந்துபேசி, அருள் கூர்ந்து, அவர்கள் எதிர்காலத்தில் சமூக விரோதச் செயல்களில் ஈடுபடாமல், அவர்கள் விரக்தி அடையாமல் அவர்கள் பலவிதத் தவறுகளுக்கு இலக்காகிவிடாமல் சில இடங்களில் நடப்பதைப்போல அவர்கள் தற்கொலை செய்து இறந்துவிடுகிற அளவுக்கு ஒரு துர்ப்பாக்கியமான நிலைமையை அனுமதிக்காமல் அவாகளின் எதிர்கால வாழ்க்கைக்கு ஒரு கியாரண்டி கொடுக்கக்கூடிய நிலைமையை, கற்றறிந்த நிபுணர் கள், அனுபவம் மிக்க நிபுணர்கள், சமுதாயத்திலே அக்கறை கொண்ட நிபுணர்களை எல்லாம் வைத்து ஒரு கமிட்டி போட்டு ஒரு சுற்றுப் பயணம்கூட அவர்கள் செய்து பலருடைய கருத்துக் களைக் கேட்டு ஒரு நல்ல திட்டத்தை உருவாக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, குவாலிடேடிவ் எஜுகேஷன் இல்லை என்று சொன்னேன். இன்றைக்கு ஆசிரியர்கள், பலதிறப்பட்ட ஆசிரியர்கள் பலதரப்பட்ட கோரிக்கைகளை வைத்துக் கொண்டே இருக்கிறார்கள். ஆசிரியர்கள் மட்டுமல்ல, எல்லாத் துறைகளிலேயும் உள்ளவர்கள் இன்றைக்கு; It has become the fashion of the day or order of the day to put forth grievances by everybody every individual and organisation என்று சொல்லக்கூடிய துர்ப்பாக்கியமான ஒரு நிலைமையைத் தான் நாம் பார்க்கிறோம். ஒருவருக்கொருவர் போட்டி போட்டுக்கொண்டு எங்களுடைய கோரிக்கைகளை ஏற்றுக் கொள்ளவேண்டும், இல்லையென்றால் இந்த நேரத்திலே இந்த இடத்திலே நாம் போராட்டம் நடத்தினால் தான் சாதிக்க முடியும் என்று தான் திட்டமிடுகிறார்களே ஒழிய— நான் பொது வாகச் சொல்கிறேன், யாருக்கும் விரோதமாக சொல்லவில்லை— அந்த மாணவர்களை அவர்கள் சிறந்தவர்களாக உருவாக்க, வில்வித்தையில் தேர்ந்தவர்களாக, விளையாட்டுப் போட்டி களிலே ஆற்றல் மிகுந்தவர்களாக, கற்றறிந்தவர்களாக எதிர் காலத்திலே அவர்கள் நல்ல பிரஜைகளாக விளங்கக் கூடிய பிரச்சினையைக் கவனிப்பதை விடுத்து போராட்டங்களிலே —மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சரைப் போல் சிலம்பு விளையாட்டு என்றால் தற்காப்புக்காகத்தானே தவிர பிறரைத் தாக்குவதற்காக அல்ல— என்ற முறையிலே சிந்தனையைச் செலவிடாமல் போராட்டங்களிலே பல தரப் பினரும் ஈடுபட்டிருப்பது உண்மையிலேயே வருந்தத்தக்கது..

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. எஸ். ஜே. இராம சாமி); சீக்கிரம் முடித்துவிடுங்கள்.

1979 மார்ச் 29]

திரு. கே. கந்தசாமி: முக்கியமான பிரச்சினை. என் தொகுதிக்கு கூட நான் வரவில்லை.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. எஸ். ஜே. இராமசாமி).—நீங்கள் சிலம்பத்தை விட்டு கருத்துக்கு வாருங்கள்.

திரு. கே. கந்தசாமி: அடுத்து என்.சி.சி. பயிற்சியில் எல்லா மாணவர்களும் ஈடுபட்டாக வேண்டும். ஒவ்வொரு மாணவனும் துப்பாக்கியைத் ஏந்த வேண்டும். All able-bodied persons should learn the National Service in a disciplined way. தேசத்தை அழிக்கக்கூடிய திட்டங்களை நாம் நடைமுறையிலே செய்துகொண்டு தேசியம் எங்கே இருக்கிறது என்ற எண்ணத்தை மாணவர்கள் உள்ளத்திலே வளர்த்தால் என்ன ஆகும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

உ.பி.யிலே இருக்கிறவன் இங்கே வரவேண்டும், இங்கே இருக்கிறவன் உ.பி.க்கு போகவேண்டும். காலையிலே 4 மணிக்கு அவன் எழுந்து பூட்ஸை துடைத்து ரெடியாகி துப்பாக்கியைத் தூக்கவேண்டும். அந்த முறையிலே எல்லோரும் என்.சி.சி. படிக்கக்கூடிய முறையிலே கட்டாயமாக்க வேண்டும். அவர்கள் உத்தியோகத்திற்குப் போகிறபோது ஒரு கணிசமான மார்க் கொடுக்கவேண்டும். அவர்களுக்கு உத்தியோகம் கிடைப்பதற்கு அது பயன்பட வேண்டும்.

அடுத்து பிரைவேட் மேனேஜ்மெண்ட் பள்ளிகளிலே உள்ளவர்களுக்கு நேரடியாக சம்பளம் கொடுக்கக்கூடிய முறையை நாம் கொண்டுவந்திருக்கிறோம். என்னுடைய தொகுதியிலே சிலர் அமைச்சரோடு கூடப் படித்தவர் என்று மேடையிலே பேசிக் கொண்டிருக்கிறார்கள். அமைச்சர் திரு. இராஜா முகமது, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களோடு படித்தோம் என்று சொல்கிறார், அண்ணன் என்று சொல்கிறார், அண்ணன் தம்பி என்றெல்லாம் பேசுகிறார். அவர் அப்படிப் படித்திருக்க முடியாது, காரணம் அவர் வயது முதிர்ந்தவர், அந்த அளவிற்குப் பேசிக்கொண்டு இருக்கிறார்களே தவிர அவர்கள் கடமையாற்றுவதாகத் தெரியவில்லை.

It will amount to virtual taking over of the institution itself 5 லட்சம், 10 லட்சம் ரூபாய் என்று இன்வெஸ்ட் பண்ணி மேனேஜ்மெண்ட் காலேஜ் ஸ்டார்ட் பண்ணி அவர்களை அப்பாயின்ட் பண்ணக்கூடிய பவர் இருக்கிறதா, அவர்கள் டியூட்டி சரியாகச் செய்கிறார்களா என்று பரிசீலிக்கக்கூடிய பவர் இருக்கிறதா என்று பார்த்தால் அவர்களுக்கு அந்தப் பவர் இல்லை என்றால் என்ன பயன் Government may very well pass a resolution saying எல்லா மேனேஜ்மெண்ட்களையும் எடுத்துவிட்டேன் என்று கூடச் சொல்லலாம். ஆனால்.....

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, மேனேஜ்மெண்டைச் சேர்ந்தவர்கள் மக்களுக்காகக் கல்விப் பணியாற்ற வேண்டுமென்று பள்ளிக்கூடங்களையும் கல்லூரிகளையும் நடத்துகிறார்களோ அந்த உணர்வோடுதான் உறுப்பினர் அவர்கள் பேசுகிறார்கள் என்று கருதுகிறேன். ஆசிரியர்கள், மாணவர்களின் அறிவு, ஆற்றல் வளர்ச்சிக்காகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இரு சாராருக்கும் முரண்பாடுகள் அல்லது மோதல்கள் வருவதற்கு எந்த விதமான அடிப்படையும் இல்லை. அப்படி வருவதாக இருந்தால் அதை எடுப்பதற்கான முயற்சியில் அரசு ஈடுபடுகிறதே தவிர, விரிவு படுத்தி கல்லூரிகளும், பள்ளிகளும் சரியாக இயங்காத அளவிற்குச் செய்வதில் ஈடுபடவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. கந்தசாமி: அரசின் நன்னோக்கத்தை நான் பாராட்டுகிறேன். விளைவுகள் இப்படி வந்துவிடும் என்பதை நினைவூட்டுவதற்கு நான் கடமைப்பட்டிருக்கிறேன் என்ற நிலையில் சொன்னேனே தவிர வேறல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஹையர் செகண்டரி பள்ளிகளில் லைப்பரரிகள் வெல்—ஈகுபைட் லைப்ரரிகளாக இருக்க வேண்டும். லைபரரியன்கள் படித்தவர்களாகப் போடப்பட வேண்டும்.

ஆண்டிப்பட்டியில் ராஜதானி என்ற இடத்தில் ஒரேயொரு ஹைஸ்கூல் தான் இருக்கிறது, அதுகூடக் கூரை வசதியில்லாமல், இட வசதி இல்லாமல் இருக்கிறது. அதையும் கவனிக்க வேண்டும்.

பிற்பட்ட நலத்துறையில் ஆண்களுக்கு ஒன்றும், பெண்களுக்கு ஒன்றுமாக இரண்டு ஹாஸ்டல்களை ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உசிலம்பட்டியில் 'டைரக்டர் ஆஃப் பேக்வார்ட் கிளாசஸ்' பார்வையிட்டபோது 800 மாணவர்களை, 200 மாணவர்கள் தங்கக்கூடிய இடத்தில் அடைத்து வைத்திருக்கிறார்கள் என்பதை பார்த்திருப்பார்கள்.

சில பள்ளிகளில் கூரை வசதி இல்லை. அவைகளைச் சீர் திருத்தம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

'டைரக்டர் ஆஃப் மெடிகல் எஜுகேஷன்'-ன் வயதைக் கூட்டியிருக்கிறோம், அவருடைய தொழில்நுட்பமும், அறிவாற்றலும், சேவையின் மூலம் பயன்பட வேண்டுமென்று வயது வரம்பை உயர்த்தியிருக்கிறோமோ அதைப்போல, கல்வி நிபுணர்களுடைய வயதையும் உயர்த்த வேண்டும். குறிப்பாக,

'டைரக்டர் ஆஃப் காலேஜியேட் எஜுகேஷன்' 'டைரக்டர் ஆஃப் செகண்டரி எஜுகேஷன்' ஆகியவர்களின் வயதையும் உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவ்வாறு செய்வதன் மூலம் அவர்களுடைய அறிவுத்திறனும், அனுபவமும் நாட்டிற்குப் பயன்படும் என்று நான் கருதுகிறேன். இதையும் அரசு சீர் தூக்கிப் பார்த்து, அவசியம் ஏற்பட்டால் அதையும் செய்ய வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக் கொண்டு பேசுவதற்கு எனக்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்து முடிக்கிறேன். வணக்கம்.

திரு. ஜே. ஜேம்ஸ் : மாண்புமிகு தலைவரவர்களே, மாண்புமிகு கல்வியமைச்சரவர்கள் அவையில் வைத்திருக்கின்ற கல்வி மானியக் கோரிக்கையின் மீது சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். கடந்த ஆண்டு ஓரளவிற்கு ஆசிரியர்கள் பிரச்னைகளும், மாணவர்கள் பிரச்னைகளும், சுமுகமாகத் தீர்வு காணப்பட்டு, மாணவர்களின் கல்வி அதிக அளவிற்குப் பாதிக்காமல் இருந்த நிலைமைகளை எண்ணும் போது, இந்தத் துறை பல்வேறு பிரச்னைகளை நல்ல முறையில் அணுகி முடிவு கண்டிருக்கிறது என்பதனை நான் வரவேற்கிறேன். பெரிய பிரச்னைகள் எழுந்தன, கல்லூரி ஆசிரியர்கள் பிரச்னை பெரிய அளவில் எழுந்து வந்தன. அவற்றையெல்லாம் சுமுகமாகத் தீர்த்து வைத்தமைக்காக ஆசிரியர்கள் மனநிறைவோடு இருக்கிறார்கள் என்பதனை உண்மையிலேயே நான் கூறக் கடமைப் பட்டிருக்கிறேன். ஆனால் பிரச்னைகள் அனைத்தும் தீர்க்கப்பட்டனவா என்று எண்ணும்போது, இன்னும் பல்வேறு பிரச்னைகள் இருக்கின்றன.

ஆயிரக்கணக்கான ஆசிரியர்கள் சில நாட்களுக்கு முன்பு கோட்டை முன் உண்ணாவிரதம் என்ற விளம்பரத்தைப் போட்டு உண்ணாவிரதம் இருக்க வந்ததையும் மறக்க இயலாது. ஆகவே ஏற்கனவே பல பிரச்னைகளைத் தீர்த்ததைப் போல, இப்பொழுது ஆசிரியர்களுக்கு இருக்கின்ற பிரச்னைகளையும் தீர்த்து வைக்க வேண்டுமென்று மாண்புமிகு கல்வியமைச்சரவர்களைக் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஏறக் குறைய 209 கோடி ரூபாய் கல்வித் துறையில் இந்த ஆண்டு நாம் செலவு செய்ய இருக்கிறோம். அனைத்துத் தலைப்புகளிலும் பார்க்கும் பொழுது 264 கோடி ரூபாயை மாநில அரசு செலவு செய்கிறது. அதற்கு மேலாக 1.54 கோடி ரூபாயை மத்திய அரசும் தமிழ்நாட்டில் கல்வித் துறைக்காகச் செலவு செய்ய இருக்கிறது. ஆக, இந்த மாநில அரசு வருவாயில் ஏறக் குறைய நான்கில் ஒரு பங்கு பணத்தைக் கல்வித் துறைக்காகச் செலவு செய்கிறோம் என்றால் எந்த அளவிற்கு இதற்கு முக்கியத்துவம் கொடுத்திருக்கிறோம் என்பதனை உண்மையிலேயே நாம் மறுக்க இயலாது.

[திரு. ஜே. ஜேம்ஸ்] [1979 மார்ச் 29

இருந்தாலும் செலவு செய்கின்ற பணத்திற்குக் தக்க இலாபம் ஏற்படுகிறதா என்று பார்க்கும் பொழுது வருந்தத் தக்க நிலைதான் இருக்கின்றது என்பதை நான் கூறிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த அவையில் பல்வேறு புள்ளிவிவரங் களை இலாக்கா தந்திருக்கிறது.

(முற்பகல் 10-30)

அவற்றைப் பார்க்கின்ற பொழுது, 1978—79 வது ஆண்டு மொத்த மாணவர்கள் எண்ணிக்கை 64.95 இலட்சம். அதில், பள்ளிகளில் சேர்க்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 61·21 இலட்சம்—அதாவது 6 முதல் 11 வயது வரம்பில் உள்ள பிரிவைச் சேர்ந்த மாணவர்கள் என்ற விவரம் தெரிகிறது. அதுபோன்று, 11—14 வயது குருப்பில், 29.23 இலட்சம் மாணவர்கள் மொத்தம் இருக்கிறார்கள். ஆனால், சேர்க்கப்பட்ட மாணவர்கள் 16.95 இலட்சம் என்ற புள்ளி விவரத்தை இங்கே தந்திருக்கிறார்கள். அதுபோல், 14—17 வயது குருப்பில், மொத்தம் உள்ள மாணவர்களின் எண் ணிக்கை 24.12 இலட்சம். அதில், கல்லூரிகளில் சேர்ந்த மாண வர்களின் எண்ணிக்கை 7.27 இலட்சம் என்று பார்க்கும்பொழுது மொத்தத்தில் 61.21 இலட்சம் மாணவர்கள் சேர்ந்து, கடைசியில் பள்ளி இறுதி வகுப்பில் சேர்ந்திருக்கின்ற மாணவர்கள் 7.27 இலட்சம் என்று வந்தால், மொத்தமுள்ள மாணவர்களில் ஏறத் தாழ 80 சத வீதம் டிராப் அவுட் ஆகிப் போகிறார்கள், 20 சதவீதம் மாணவர்கள் தான் எஸ்.எஸ்.எல்.சி. வரையிலும் வந்து சேருகிறார்கள் என்று பார்க்கும்போது, இந்த நாட்டில் உள்ளவர்களின் வருவாய், ஏழை, எளிய மாணவர்களின் முன்னேற்றத்திற்காக நாம் செலவழிக்கின்ற பணம், விழ லுக்கு இரைத்த நீராகப் போகிறது என்பதை நான் இங்கே கூறிக் கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

நமது மாநிலம் கைக் கொண்டிருக்கிற கல்வி முறை ஆரம்பக் கட்டாயக் கல்வி. ஆரம்பக் கட்டாயக் கல்வியை ஆரம்பித்த பொழுது மாணவர்களெல்லாம் பள்ளிக் கூடங்களுக்கு வராத பொழுது, அனைத்து மாணவர்களையும் பள்ளிகளில் சேர்க்க இலவச மதிய உணவு, இலவச புத்தகம் போன்ற நல்ல திட்டங் களைக் கொண்டு வந்தோம். ஆனால், கட்டாயக் கல்வி என் றால், இத்தனை ஆண்டுகள் ஆகியும் 1965—66 ஆம் ஆண்டு 29.65 சத வீதம் மாணவர்கள் தான் எஸ்.எஸ்.எல்.சி படித் தார்கள் என்ற புள்ளி விவரம் இங்கே இருக்கிறது. அதுபோல், இந்த ஆண்டு 1978—79 ஐப் பார்க்கும்போது 30.1 சத வீதம் மாணவர்கள் தான் எஸ்.எஸ்.எல்.சி. படிக்கிறார்கள் என்று பார்க்கும் போது, இந்த மாநிலத்தில் கட்டாயக் கல்வித் திட்டம் அமுலில் இல்லை என்பதனை உண்மையிலே நான் வருத்தத் தோடு சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். ஆக, கட்டாயக் கல்வி தோல்வி யுறுவதற்கு என்ன காரணம் என்பதை இந்த அரசு சிந்திக்கக் கடமைப் பட்டிருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்டுகிறேன்.

1979 மார்ச் 29] [திரு. ஜே. ஜேம்ஸ்]

பள்ளிகளில் மாணவர்கள் வருவதற்காக கட்டாயக் கல்வி ஆரம்பித்து, மாணவர்கள் வராமல் இருக்கிறார்கள். எனவே, மதிய உணவு அளித்தால்தான் மாணவர்கள் வருவார்கள் என்ற அடிப்படையில் மதிய உணவுத் திட்டம் ஆரம்பிக்கப் பட்டது. ஆனால், மாணவர்கள் மத்தியானத்தில் உண்ணக் கூடிய விதத்தில் உணவைப் பள்ளிகளில் கொடுத்தால், மாண வர்கள் படிப்பார்கள். இத் திட்டத்தின்கீழ், அரசு ஒரு மாண வனுக்கு 10 காசு கொடுக்கிறது, பஞ்சாயத்து யூனியன் 5 காசு கொடுக்கிறது. பல பஞ்சாயத்து யூனியன்கள் அந்தக் காசைக் கொடுப்பதில்லை. அங்கே இருக்கிற ஆசிரியர்கள் ஏதோ முறையில் சமாளித்து, ஏதோ உணவை அளிக்கின்ற காரணத் தால் தான் மாணவர்கள் இந்த உணவைப் பிடிக்காமல், வீட்டில் தங்கிவிடுவது மேலென்று வீட்டில் தங்கிவிடுகிறார்கள். தங்கள் வீடுகளில் கிடைக்கும் உணவைவிட மோசமான உணவை பள்ளிகளில் தருவதால், உணவை அடிப்படையாகவைத்து மாணவர்களைத் தருவிக்க முடியாமலிருக்கிறது.

அது மட்டுமல்ல, ஏழைகள் குடிசைகளில் வாழ்கிறார்கள். ஆனால், அதைவிட மோசமான பள்ளிக் கூடங்களில் நிச்சய மாக அவர்கள் படிப்பதற்கு விரும்பமாட்டார்கள். அதுவும் ஒரு சூழ்நிலை என்பதை இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன். ஆக, ஆரம்பக் கல்வி, கட்டாயக் கல்வி வெற்றிகரமாக நடக்க வேண்டுமென்றால், மாணவர்களை கவரக் கூடிய வகையில் திட்டங்கள் அமைக்கப்பட வேண்டும், மதிய உணவு நல்லமுறையில் கொடுக்கப்பட வேண்டும், பள்ளிக் கூடங்கள், கட்டிடங்கள், சிறப்பாக அமைக்கப்பட வேண்டும்.

உயர்நிலைப் பள்ளிகளில் படிக்கும் முறை கூட, இப்போது 16.95 லட்சம் மாணவர்கள். 14 முதல் 17 வரையுள்ள குரூப்பில் பார்க்கிற போது, இங்கே படித்து விட்டு உயர்நிலைப் பள்ளி களில் வருவது 7.27 என்று சொன்னால், அந்த மாணவர்கள் எங்கே போகிறார்கள் என்பதை அரசு சிந்திக்கக் கடமைப் பட்டிருக்கிறது. வீட்டிலிருந்து பள்ளிக்குத் திரும்புகிற வழி யில் 2 பக்கம் இருக்கும் சினிமா போஸ்டரில் இருக்கும் கவர்ச்சிப் படங்களைப் பார்த்தால் அவர்கள் பள்ளிக்குப் போவார்களா, அல்லது அந்தப் படங்களைப் பார்க்கும் சினிமா தியேட்டருக்குச் செல்வார்களா என்பதைச் சிந்திக்க வேண்டும். இன்றையதினம் உயர்நிலைப் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களை பாழ்படுத்தும் சினிமா ஒழிக்கப்பட வேண்டும் என்பதை நான் வலி யுறுத்திச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒரு வேளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சினிமா உலகில் சிறந்த நடிகர், புரட்சி நடிகர் என்று பெயர் பெற்று, புரட்சித்தலைவ ராக அரசியலுக்கு வந்து, முதலமைச்சராக வந்ததற்குப் பிறகு இப்போது எல்லாம் சினிமாவுக்கும், திரை உலகத்திற்கும் தான் அதிகமாக வளர்ச்சி அடைவதற்கு வழிவகை செய்து கொண்டு இருப்பதை நாம் அனைவரும் அறிவோம். இந்த நிலையில்

[திரு. ஜே. ஜேம்ஸ்] [1979 மார்ச் 29

அவர்கள் பள்ளிகளைப் பார்க்கிறார்களா அல்லது சினிமாவை வளர்க்கிறார்களா என்கிற ஐயம் எழாமல் இல்லை. இளம் தலைமுறையினர் மீது இந்த அரசுக்கு அக்கறை இருக்குமானால் இந்த நாட்டின் மாணவர்களை இளைஞர்களைப் பாழ்படுத்திக் கொண்டு இருக்கும் தரக் குறைவான சினிமா படங்கள் தவிர்க்கப்பட வேண்டும் என்று சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பள்ளிகளில் மாணவர்கள் படிக்கிறார்கள். அப்படிப் படித்துவிட்டு வருவதால் என்ன நிலைமை ? வேலை இல்லை அவர்களுக்கு என்கிற ஒரு டெஸ்பரேட் நிலை. படித்த பிறகும் வேலை கிடைக்கவில்லை என்கிற நிலைமை இருப்பதால்தான், பள்ளிக்குப் போனால் என்ன, வேறு இடத்திற்குப் போனால் என்ன என்கிற மனநிலை ஏற்படுகிறது. அந்த எண்ணத்தைப் போக்குகிற வகையில் ஜாப் காரண்டி ஸ்கீம் வைத்து இருக்கிறீர்கள். அது உண்மையிலேயே எல்லா படித்த இளைஞர்களுக்கும் வேலை வாய்ப்பு கிடைக்கும் வகையில் இருக்கும்என்கிற உத்தரவாதம் செய்தால், நிச்சயமாக மாணவர்கள் இப்போது இருப்பது போல் டெஸ்பரேட்டாக இருக்க மாட்டார்கள், இறுதி வரையில் படிப்பார்கள், கல்லூரி படிப்பு வரையில் படிக்க வருவார்கள் என்பதைச் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆரம்பப் பள்ளிகளில் மாணவர்கள் வராமல் இருப்பதற்குக் காரணம், இந்தச் சமுதாயத்தில் இருக்கும் வறுமை என்பதை இந்த அரசு தெரிந்து கொள்ள வேண்டும். இளைஞர்கள் பள்ளிகளுக்கு வருவதற்கு பதிலாக பெற்றோர்கள் அவர்களை சிறு சிறு பாக்டரிகளில் வேலைக்கு அழைத்துச் சென்று விடுகிறார்கள். குழந்தைகளை வேலைக்கு வைக்கக் கூடாது என்று சட்டம் இருந்தாலும் பெருவாரியான குழந்தைகள் வறுமையின் காரணமாக வேலைக்கு அமர்த்தப்படுகின்றனர். வறுமையின் காரணமாகத்தான் பள்ளிகளுக்கு குழந்தைகளை அனுப்பாமல் வேலைக்கு பெற்றோர்கள் அனுப்பி விடுகிறார்கள் என்பதைச் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இவ்வளவு தூரம் அதிகம் பணம் செலவு செய்தும் கூட, இந்த பள்ளிக் கட்டிடங்களைப் பார்க்கிற போது 76 பள்ளிக் கூடங்கள் தான் கடந்த 1978–79 ஆம் ஆண்டில் கூடுதலாகக் கட்டப்பட்டு இருக்கின்றன. அது மட்டுமல்ல, ஆசிரியர்கள் எண்ணிக்கையைப் பார்க்கிறபோது அதற்கு முந்திய ஆண்டைவிட 6551 ஆசிரியர்கள் குறைவாகத்தான் இப்போது இந்த இலாகாவில் எதிர்பார்க்கிறார்கள் என்பதை நான் இங்கே சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். 1965–66-ல் ஆசிரியர்-மாணவர்கள் விகிதங்கள் பார்க்கிற போது 27 என்ற விவரம் தான் கொடுக்கப்பட்டு இருக்கிறது. ஆனால் 1978–79ல் பார்க்கிற போது 38 ஆக உயர்ந்து இருக்கிறது. மாணவர்

களின் தரம் கூட வேண்டும் என்று சொன்னார்கள். அப்படி யானால் ஆசிரியர்கள் மாணவர்கள் விகிதாச்சாரங்கள் நிச்சய மாக மாற்றப்பட்டு, அதிகமாக மாணவர்கள் நல்ல முறையில் படிக்கும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பல்வேறு பள்ளிகளில் ரிசல்ட் மோசமாக இருக்கிறது. சில பள்ளிகளில் செண்ட் பர்செண்ட் ரிசல்ட் வருகிறது. சில பள்ளி களில் நல்ல ரிசல்ட்டும், சில பள்ளிகளில் மோசமான ரிசல்ட்டும் வருவதற்குக் காரணம் என்ன ? இம்மாதிரி குறைந்த ரிசல்ட் வரும் பள்ளிகளில் உள்ள ஆசிரியர்கள் மீது அரசு என்ன நட வடிக்கைகளை மேற்கொண்டு இருக்கிறது. அப்படி நடவடிக்கை எடுக்கவில்லையென்றால் அந்தப் பள்ளிகளின் தரத்தை உயர்த்து வதற்கு என்ன நடவடிக்கை மேற்கொண்டு இருக்கிறது. இப்படி பட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசு முன் வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சில ஊர்களில், சில இடங்களில், தனியார்கள் பள்ளிகளை நடத்துகின்றனர். நர்சரி பள்ளிகளை நடத்துகின்றனர். இப்படி அவர்கள் நடத்துவதன் மூலம் கல்வியை ஒரு கமர்சியல் வென் சராக, வியாபார நோக்கமாக வைத்துச் செயல்படுகிறார்கள் என்பதை அரசு நன்றாக உணர வேண்டும். அதைத் தவிர்க்க என்னென்ன நடவடிக்கைகளை அரசு எடுக்கவேண்டுமோ அவற்றை எல்லாம் நான் இங்கே விரிவாகக் கூறவிரும்பவில்லை, அது நிச்சயமாகத் தவிர்க்கப்பட வேண்டும் என்பதைத் தான் நான் இங்கே வலியுறுத்திக் கூற கடமைப்பட்டிருக்கிறேன்.

[முற்பகல் 10-40]

அதுமட்டுமல்ல, இப்போது நாம் மேல்நிலைப் பள்ளிகளை ஆங்காங்கே ஆரம்பித்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் இன் றைக்குப் போதுமான பள்ளிகள் இருக்கின்ற இடத்தில் கூட அரசியல் நோக்கத்தோடு மேலும் புதிதாகப் பள்ளிகளை ஆரம் பிக்கின்ற காரணத்தால் ஏற்கனவே நடந்துகொண்டிருக்கிற பள்ளிகளில் மாணவர்கள் எண்ணிக்கை குறைகிறது. அதனால் அரசாங்கத்திற்கு வீணாக செலவு ஏற்படுகிறது. இருக்கின்ற பள்ளிக்கும், புதிய பள்ளிக்கும் போதுமான மாணவர்கள் கிடைக்காமல் அவதியுறுகின்ற நிலைமை இருக்கிறது. ஏற்கனவே தனியார் பள்ளிகள் இருக்கின்ற இடங்களில் அரசுப் பள்ளிகளை ஆரம்பிக்கின்ற சூழ்நிலை இதற்கு முன்னதாக இருந்த அரசின் கொள்கை காரணமாக, பல தனியார் பள்ளிகள் மாணவர்கள் எண்ணிக்கை இல்லாமல், பல ஆசிரியர்களை சும்மா வைத்து சம்பளம் கொடுக்கின்ற நிலைமை உருவாகியிருக்கிறது.

குறிப்பாக, கன்னியாகுமரி மாவட்டத்தில் காட்டாத்துறை தனியார் பள்ளியில் 30 ஆசிரியர்கள் இருக்கிறார்கள். வகுப்புக்கு 7 அல்லது 8 மாணவர்கள்தான் இருக்கிறார்கள். இந்த மாணவர் எண்ணிக்கையை வைத்துக் கொண்டு இந்த ஆசிரியர்களுக்கு சம்பளம் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். அதற்குக் காரணம் அங்கே இருந்த ஒரு அரசு பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக மாற்றினார்கள். அதனால ஏற்கனவே இருந்த பள்ளிக்கூடத்திற்கு 'ஸ்ட்ரெங்க்த்' இல்லாமல் இந்த நிலை ஏற்பட்டது. நான் ஏற்கனவே அரசின் கவனத்திற்கு இதைக் கொண்டுவந்திருக்கிறேன். இந்த தனியார் பள்ளியை அரசு ஏற்று எடுத்து, இந்த இரண்டு பள்ளிகளையும் ஒன்றை ஆண்கள் பள்ளியாகவும், ஒன்றை பெண்கள் பள்ளியாகவும் மாற்றினால் நல்ல பலன் அளிப்பதாக இருக்கும். தனியார் பள்ளியில் இருக்கின்ற ஆசிரியர்களுக்கும் அவர்களை சும்மா வைத்து சம்பளம் கொடுக்கிறோம் என்ற நிலை மாறும். ஆகவே, அரசாங்கம் அதில் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக சோவையில் இருக்கின்ற பிச்சனூர் இன்டர்நேஷனல் ஹைஸ்கூல் ரெகக்னைஷனை 1-6—76 முதல் அரசு சாங்கம் 'வித்ட்ரா' செய்திருக்கிறது. நிர்வாகத்தில் இருக்கிற கோளாறு காரணமாக ரெகக்னைஷன் வித்ட்ரா செய்யப்பட்டதாக சொல்கிறார்கள். அப்படி வித்ட்ரா செய்யும்போது அங்கே இருக்கிற நிரந்தர ஆசிரியர்களுக்கு மாற்று வேலை உடனடியாகக் கொடுத்திருக்க வேண்டும். இரண்டு ஆண்டுகள் ஆகியும் அவர்களுக்கு வேலை கொடுக்காமல் அவர்கள் அனாதைகளாகக் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். பல்லாண்டு காலம் அந்தப் பள்ளியில் பணியாற்றிய 8 ஆசிரியர்கள் இன்று வரையில் வேலையில்லாமல் இருக்கிறார்கள். அதை அரசாங்கம் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக தனியார் பள்ளிகளுக்கு 'மெயின்டனன்ஸ் கிரான்ட்' கொடுக்கிறார்கள். அதைக் காலாகாலத்தில் கொடுத்தால் நல்லது. அதுபற்றி பலமுறை எடுத்துச் சொல்லியிருக்கிறோம். ஆனால், இந்த ஆண்டுகூட இதுவரையில் கொடுக்கவில்லை என்ற முறை இருக்கிறது என்பதைத் தெரிவிக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேல்நிலைப் பள்ளிகளை ஆரம்பிப்பதைப்பற்றி திடீரென்று முடிவெடுத்தோம். எடுத்த முடிவைப் பாராட்டுகிறேன். ஆனால் இப்படி திடீரென்று முடிவெடுக்கும்போது எந்த அளவுக்கு சீர்கேடு இருக்கிறது என்பதை அரசு நன்றாக அறியும். போதுமான அளவில் தகுந்த பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் இல்லை. மேல்நிலைப் பள்ளிகளுக்கு அறிவிக்கப்பட்டிருக்கிற சிலபஸைப் பார்த்தால் ஏற்கனவே இருந்த உயர்நிலைப்பள்ளி சிலபஸ், பி. யு. சி. சிலபஸ், அதோடு பி. ஏ. பட்டப் படிப்பு படிக்கும் மாணவர்களுக்கு இருக்கிற ஒரு பகுதி சிலபஸ் அனைத்தையும் சேர்த்து வைத்திருக்கிறார்கள். இந்த அளவுக்கு தரத்தை

REPORTING SECTION

979 மார்ச் 29] [திரு. ஜே. ஜேம்ஸ்]

உயர்த்தியிருக்கிறோம். ஆனால், அதைச் சொல்லிக் கொடுக்க ஆசிரியர்கள் இல்லை; அதற்குப் போதுமான கட்டடங்கள் இல்லை; அதற்குப் போதுமான பாடங்கள் இல்லை; அதற்குப் போதுமான லேபரட்டரி இல்லை; இந்த நிலையில் இரண்டு ஆண்டு இந்தப் படிப்பை முடித்தவர்கள் கல்லூரிக்குச் செல்லும் போது அல்லது எம்.பி., பி.எஸ்., என்சினீயரிங் போன்ற ப்ரொஃபஷனல் கோர்ஸுக்குச் செல்லும்போது அவர்களுடைய தரம் குறைந்து காணப்படும் அபாயத்தை நீக்க என்ன முறையை மேற்கொள்ளப் போகிறார்கள் என்பது தெரியவில்லை. அவர்களை எல்லாம் அனுமதிக்க அரசு தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக தொழில் கல்வியை நாம் கொண்டுவந்திருக்கிறோம். தொழில் கல்வியை சொல்லிக் கொடுக்கக்கூட அந்தப் படிப்பைத் தெரிந்த ஆசிரியர்கள் இப்போது இல்லை. அது மட்டுமல்ல. ஏற்கனவே இருக்கின்ற தொழில்களை இந்த பள்ளிகளில் சொல்லிக் கொடுத்தால், இந்த மாணவர்கள் சென்று அந்தத் தொழில்களைத்தான் ஆரம்பிப்பார்கள். அப்படியானால் ஏற்கனவே அந்தத் தொழில்களை நடத்திக் கொண்டிருக்கிறவர்களுக்கும் நஷ்டம் ஏற்படுவதோடு இவர்களுக்கும் பலனளிக்காது. ஆகவே இந்தப் பள்ளிகளில் ஏற்கனவே இருக்கின்ற தொழில்களை சொல்லிக் கொடுக்காமல், புதிதாக நவீன முறையில் புதிய தொழில்களைக் கற்றுக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். அப்படியானால்தான் புதிய தொழில்களைத் தொடங்கி, அவர்களுடைய வாழ்க்கையை வளமானதாக ஆக்கிக் கொள்ள வாய்ப்பு இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இப்போது பி. டி. ஆசிரியர் ட்ரெயினிங் முடித்தவர்கள்; செகண்டரி கிரேடு ட்ரெயினிங் முடித்தவர்கள்; தமிழ் பண்டிட்ஸ் எல்லாம் வேலையில்லாமல் இருக்கிறார்கள். இவ்வளவு பணம் செலவிட்டு, அவர்களுக்கு ட்ரெயினிங் கொடுத்த பிறகு வேலையில்லாமல் இருப்பது நம்முடைய தேசத்திற்கு ஏற்பட்டிருக்கிற நஷ்டம் என்பதை உணர்ந்து அவர்களுக்கு எல்லாம் வேலை வாய்ப்பளிக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து கன்னியாகுமரி மாவட்டத்தில் பத்மநாபபுரம் பேலஸ் இருக்கிறது. அதிலே, ஏற்கனவே ஒரு மியூசியம் இருந்தது. அதனை மாற்றி அமைப்பதற்கு, அதிலே பழுதுபார்ப்பதற்கு 8 இலட்ச ரூபாய் அளவில் ஒரு மதிப்பீடு தயார் செய்யப்பட்டது. சமீபத்திலே கேரளா சட்டசபையிலேகூட அது விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. அப்போது தமிழ்நாடு பாதித் தொகை கொடுக்க வேண்டும் என்று சொல்லப்பட்டது. அதன் பிறகு தமிழக அரசு அங்கீகாரம் கொடுக்க முன்வராத காரணத்தால் வேலை ஆரம்பிக்கப்பட முடியாமல் இருக்கிறது என்று

[திரு. ஜே. ஜேம்ஸ்] [1979 மார்ச் 29

சொல்லப்பட்டிருக்கிறது. இங்கே நான் ஒன்றைக் கேட்க விரும்புகிறேன். தமிழ்நாட்டிலே இருக்கின்ற ஒரு மியூசியத்தை பழுதுபார்ப்பதற்கு கேரள அரசுக்கு என்ன அக்கறை வேண்டி இருக்கிறது. ஆகவே, முழு உரிமையையும் தமிழ்நாடு அரசுதான் எடுத்து அதைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்........ (மணி அடிக்கப்பட்டது).

இன்னும் தமிழ் பண்டிட் சம்பந்தமாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். தமிழ் பண்டிட்களுக்கென்று ஒரு ஜி. ஓ. வந்தது. அதாவது ஜி. ஓ. எண் 1132—நாள் 27-12-76 என்ற அந்த ஜி. ஓ. வின் அடிப்படையில் தனியார் பள்ளிகளில் பணியாற்றுகின்ற தமிழ் பண்டிட்களுக்கு உரிய பிரமோஷன் வழங்கப்பட்டது. ஆனால், அந்த ஜி. ஓ. வில் அரசுப் பள்ளியில் பணியாற்றுகின்ற ஆசிரியர்கள் சேர்க்கப்படாமல் ஏறத்தாழ 26 ஆசிரியர்கள் விடுபட்டுப் போய் இருக்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கும் இந்த ஜி. ஓ. பயனாகக் கூடிய அளவில் மாற்றி அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து டென் எ 1 ஆசிரியர்கள் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். அவர்களுக்கு சர்வீஸ் கமிஷனிலே இருந்து ஒரு டெஸ்ட் வைப்பதற்கு ஒரு ஜி. ஓ. பிறப்பிக்கப்பட்டது. ஆனால், இது வரையில் டெஸ்ட் வைக்கப்படவில்லை. அவர்களுக்கு நிரந்தரமாக வேறு வேலையும் அளிக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உயர்நிலைப்பள்ளிகளில் தலைமை ஆசிரியர்கள் நியமிப்பது முறையாக இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்து பென்ஷன் கொடுக்கப்படுவதை மணியார்டர் மூலமாக கொடுக்க வேண்டும் என்றும், அதுவும் குறைந்த அளவு 150 ரூபாயாவது கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அதைப் பரிசீலனை செய்து விரைவாக அவர்கள் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்று கேட்டு விடைபெற்றுக்கொள்கிறேன்.

*திரு. க. அன்பழகன்: மதிப்பிற்குரிய தலைவரவர்களே, தமிழக அரசினுடைய கல்வி வளர்ச்சிக்கான நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில் நான் பேசுவதற்கு ஒரு வாய்ப்பு பெற்றிருப்பதற்கு நன்றி தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். கம்பன் பிறந்த தமிழ்நாடு, கல்வியிற் சிறந்த தமிழ்நாடு என்று பாடிப் பாடி பழக்கப்பட்டவர்கள் நாம். ஆனால் கல்வியின் உயர்ந்த நோக்கம் சிந்தனையாளர்கள் சிலரால் அவ்வப்போது உரைக்கப்பட்டாலும் கூட அந்தக் கல்வியின் உயர்ந்த நோக்கம் மாணவர்களால் உணரப்படுவதற்குச் சூழ்நிலை இடம் தரவில்லை என்பதையும் கல்வி கல்விக்காக என்றோ, கல்வி ஒழுக்கத்திற்காக என்றோ, கல்வி பண்பாட்டிற்காக என்றோ சொல்ல முடியாத அளவுக்கு கல்வி, வாழ்க்கையினுடைய ஒரு தேவை என்ற அளவிலே

1979 மார்ச் 29] [திரு. க. அன்பழகன்]

தான் இன்றைக்கு இருக்கிறது என்பதையும், அந்தத் தேவைக்குப் பயன்பட வேண்டிய கல்வியும், மக்கள் அனைவருக்கும் நல்வாழ்வு அளிக்கக்கூடிய அளவுக்கு வளர்க்கப்பட முடியவில்லை என்பதையும் நான் நினைவூட்ட விரும்புகிறேன்.

கடந்த ஆண்டும், அதற்கு முதல் ஆண்டும் கல்வி நிதி ஒதுக்க அடிப்படையிலே—மானியம் என்ற சொல் மாறி உச்சரிக்கப்பட்டு மாணிக்கமாகவும் வேறு சொற்களாகவும் மாறிவிடக்கூடிய நிலை உள்ளது, ஆகவே நான் நிதி ஒதுக்கம் என்றே சொல்கிறேன். நிதி ஒதுக்கம் என்று சொல்வதே பொருத்தமாக இருக்கும் என்றும் கருதுகிறேன்—அப்படி கல்விக்காக நிதி ஒதுக்குவதற்கு நாம் முயற்சி எடுத்துக்கொள்கிறபோது கடந்த ஆண்டும் அதற்கு முதல் ஆண்டும்நான் என்னென்ன கருத்துக்களை எடுத்து வைத்தேனோ அந்தக் கருத்துக்களிலே பல கருத்துக்கள். இந்தத் துறையினரால் தகுந்த முறையிலே பரிசீலிக்கப்படவில்லை என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அதிலும் கடந்த ஆண்டு மேல்நிலை கல்விக்காக ஒரு புதிய திட்டம் செயல்பட வேண்டியநிலை ஏற்பட்டபோது பொதுவாக அந்த மேல்நிலைக்கல்வியைச் செயல்படுத்துவதை வரவேற்கிறேன் என்றாலும், அது செய்ய வேண்டிய ஒன்றுதான் என்று ஏற்றுக்கொண்டாலும் கூட ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். அதாவது இதனைச் செயல்படுத்துகின்ற போது ஏற்படுகின்ற மாற்றத்தின் காரணமாக ஏற்படுகின்ற இழப்புகள் முழு இழப்பாக ஆகிவிடாமல் பாதுகாக்கவேண்டிய முறைகளையும் நான் எனக்குத் தெரிந்த வரையில் விவரமாக எடுத்துச் சொன்னேன். அவைகளை எல்லாம் இந்தத் துறையைச் சார்ந்தவர்கள் தகுந்த அளவில் எண்ணிப்பார்த்திருக்கிறார்கள் என்று நான் கருதக்கூடிய நிலை இன்றைக்கும் இல்லை. முன்பெல்லாம் சட்ட மன்றத்திலே பல்வேறு உறுப்பினர்கள் நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையிலே விவாதிக்கின்றபோது அவர்களால் எடுத்துச்சொல்லப் படுகிற கருத்துக்களுக்கெல்லாம், கண்டனங்களுக்கெல்லாம் கேள்விகளுக்கெல்லாம் தகுந்த விடையை அந்தந்த மாண்புமிகு உறுப்பினர்களுக்கு அந்தந்தத் துறையைச் சார்ந்தவர்கள் சில மாத காலத்திற்குள் பதில் எழுதி அனுப்புவது ஒரு வழக்கமாக இருந்தது.

[முற்பகல் 10-50]

ஆனால் அப்படி எழுதுகிற முறை இப்போது அடியோடு இல்லை என்று கருதுகிறேன். கல்வி இலாகா சார்ந்தவர்களை நான் கேட்டுக்கொள்வதெல்லாம் சட்ட மன்றத்திலே எழுப்பப் படுகிற எல்லாக் கேள்விகளுக்கும், எல்லாப் பிரச்னைகளுக்கும் பல்வேறு விதமான காரண காரிய விளக்கங்களுக்கும் தகுந்த பதில் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் எழுத்து மூலமாக மன்ற உறுப்பினர்களுக்கு சம்பந்தப்பட்ட அமைச்சர் மூலமாகப் பதில் தருவார்களேயானால் பல குறைகளை

களையக் கூடிய ஒரு நிலை ஏற்படும். கல்வி அமைச்சர் அவர்கள் பல்வேறு துறைகளைக் காட்டிலும் கல்விக்கு அதிகமாக நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதற்காக அவர்கள் ஒரு வகையில் மகிழ்ச்சி அடையலாம். ஆனால் தேவைப்படுகிற அளவிற்கு அந்தக் கல்விக்கு நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறதா என்றால், அது மகிழ்ச்சியைத் தருவதற்குப் பதிலாகத் துக்கமாகத்தான் மாறும். இன்றைக்குக் கல்விக்கு நிதி ஒதுக்கியதைப் பற்றி ஒரு சில புள்ளி விவரங்களைக் குறிப்பிட விரும்புகிறேன். 1938—39ஆம் ஆண்டில் மொத்த வருவாய் ரூ. 16.13 கோடியாக இருந்தபோது கல்விக்காக ஒதுக்கப்பட்டது ரூ. 2.62 கோடி. அவ்வாறு ஒதுக்கப்பட்டது 16.2 சதவிகிதமாகும். 1969—70ஆம் ஆண்டில் கழக ஆட்சி நடைபெற்றபோது ரூ. 280.91 கோடியாக மொத்த வருவாய் இருந்தது. அதில் கல்விக்காகச் செலவிடப்பட்டது. ரூ. 66 கோடி. விழுக்காடு 23.5 ஆகிறது. கடந்த ஆண்டு கல்விக்காகச் செலவிடப்பட்டது ரூ. 175.69 கோடி. ஆனால் மொத்த வருவாய் ரூ. 680 கோடி. விழுக்காடு 25.8 ஆகிறது. ஆக ஆண்டுக்கு ஆண்டு கல்விக்காக விகிதாசார அடிப்படையில் ஒதுக்கப்படுகிற தொகை அதிகமாகிக் கொண்டு வருகிறது. அது மட்டுமல்ல, கல்விக்காக அரசு தீவிரமாகக் கவனம் செலுத்தி வருகிறது என்று கூறப்பட்டாலும் இந்த ஆண்டு விழுக்காடு குறைந்திருக்கிறது. ஆனால் இந்த ஆண்டு மொத்த வருவாய் 849.83 கோடி. அதாவது ரூ. 850 கோடி. ஆனால் கல்விக்காக ஒதுக்கப்பட்டிருப்பது ரூ. 208.53 கோடியாகும். தொகை அதிகமாக ஒதுக்கப்பட்டிருப்பதாகத் தெரிந்தாலும், விழுக்காட்டைப் பார்க்கிறபோது அது 24.6 ஆகிறது. எனவே, கல்விக்காக அதிகமாக ஒதுக்கியிருக்கிறோம் என்று சொன்னாலும், விழுக்காடு குறைந்திருக்கிறது என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வரக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த விழுக்காடு குறைந்ததற்குக் காரணம் என்ன? காரணம் எதுவாக இருந்தாலும் இந்த விழுக்காட்டை அதிகமாக்குகின்ற முறையில் சிறந்த முறையில் அந்த நிர்வாகம் தீவிரமாகச் செயல்படவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது கொண்டுவரப்பட்டிருக்கிற மேல்நிலைக் கல்வியில் வளர்ச்சி காண வேண்டிய நிலையில் இருக்கிறோம். அந்த முறையில் முதல் ஆண்டில் 1.14 லட்சம் மாணவர்களைச் சேர்த்திருக்கிறோம். ஏற்கெனவே கல்லூரி முதல் வகுப்பில், அதாவது பி.யு.சி.யில், 77,802 மாணவர்கள் இடம்பெற்றிருக்கிறார்கள். ஆகவே, 36,000 மாணவர்கள் அதிகம் மேல்நிலைக் கல்வி பெறுகின்றனர் என்று கல்வி அறிக்கையில் காணப்படுகிறது. கல்லூரி முதல் ஆண்டு எண்ணிக்கையோடு இதை ஒப்பிட்டுப் பார்ப்பதற்கு பதில்—பதினோறாவது வகுப்பு எண்ணிக்கையுடன் இதை ஒப்பிட்டுப் பார்த்தால் உண்மை நிலை தெரியவரும்.

கடந்த ஆண்டு 11-வது வகுப்பு படித்து விட்டு, அதாவது எஸ்.எஸ்.எல்.சி. படித்து விட்டு வந்த மாணவர்களின் எண்ணிக்கையைப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்

1979 மார்ச் 29] [திரு. க. அன்பழகன்]

கிறேன். கடந்த ஆண்டு எஸ்.எஸ்.எல்.சி. 11-வது வகுப்பை முடித்து விட்டு பரிட்சை எழுதிய மாணவர்களின் எண்ணிக்கை 2.17 லட்சம் ஆகும்.

அவர்களில் சிலர் 69-ஆம் ஆண்டு திருத்தப்பட்ட பாடத்திட்டத்தின்படி தேர்வு எழுதினார்கள் என்ற அடிப்படையில் கணக்கிட்டுப் பார்த்தால் ஏறத்தாழ ஒன்றரை லட்சம் பேர்கள் அந்த 11-வது வகுப்பில் படித்திருக்கக்கூடும் என்று கருதுகிறேன். அதற்கான புள்ளிவிவரம் தனித்தனியாகத் தரப்படவில்லை. அப்படி ஒன்றரை லட்சம் பேர் படித்திருப்பார்களேயானால், இந்தப் புதிய 11-வது வகுப்பில் ஒரு லட்சத்து 14 ஆயிரம் பேர்கள் சேர்ந்திருக்கிறார்கள் என்றால் இந்தப் புள்ளிவிவரத்தின்படி 36 ஆயிரம் பேர்கள் குறைந்திருக்கிறார்கள் என்று கணக்குத் தரவேண்டிய அரசு, இப்போது 36 ஆயிரம் பேர்கள் அதிகமாகச் சேர்ந்திருக்கிறார்கள் என்று, பி.யு.சி.வகுப்பை ஒப்பிட்டுக் காட்டுவதிலிருந்து இப்போது கல்லூரிகளில் வந்திருக்கின்ற முதலாவது வகுப்போடு ஒப்பிட்டு அந்த வகுப்பை உயர்நிலைப் பள்ளிகளுக்குக் கொண்டு வருகின்ற நேரத்தில், பரவலாக்கப்பட்டிருக்கின்ற கல்வி, ஏழைமக்களின் படிப்புக்காக ஏற்படுத்தப்பட்டிருக்கின்ற கல்வி, கிராமப்புற மக்களுக்காகக் கொண்டு வரப்பட்டிருக்கின்ற கல்வி என்றெல்லாம் சொல்லப்படுகின்ற நேரத்தில் 188 கல்லூரிகள் என்றிருக்கின்ற எண்ணிக்கையுடன் 912 மேல்நிலைப்பள்ளிகளை என்று ஒப்பிட்டுப் பார்ப்பது அல்லது ஒப்பிட்டுக் கணக்கைக் காட்டுவது, சட்ட மன்ற உறுப்பினர்கள் எதையும் புரிந்து கொள்ள முடியாதவர்கள் என்ற அடிப்படையில் அமைந்திருக்கிறது என்பதைக்கல்வி அமைச்சர் அவர்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன் 36 ஆயிரம் குறைந்திருக்கிறது என்பது மட்டுமல்ல. 1977—78 ஆம் ஆண்டு வரை உயர்நிலைப்பள்ளிகளில் படிக்கின்ற மாணவர்களின் எண்ணிக்கை வளர்ந்து கொண்டே வந்து கடந்த 1977—78-இல் 18.31 லட்சமாக உயர்ந்து, உயர்நிலைப்பள்ளிகளிலும் மேல்நிலைப் வகுப்புகளிலும் அதாவது 14-வது வயதிலிருந்து 17-வது வயது வரை என்றிருக்கிற கட்டத்தில் மாணவர்களின் எண்ணிக்கை வளர்ந்து 1977—78இல் 18.31 லட்சம் மாணவர்கள் ஆகி ஆனால் இப்போது 3,058 பள்ளிகள் இருந்த இடத்தில் 50 பள்ளிகள் இந்த ஆண்டில் அதிகமாகத் துவக்கப்பட்டு, 3108 பள்ளிகளாக ஆக்கப்பட்டும், இதே மாணவர்களின் எண்ணிக்கை 18 லட்சமாகக் குறைந்திருக்கிறது. உயர்நிலைப்பள்ளிகள் 50 அதிகமாக்கப்பட்டும் 34 ஆயிரம் மாணவர்கள் குறைந்திருக்கிறார்கள். கல்வி வளருகிறது, கல்விக்காகச் செலவிடப்படுகிற தொகை வளருகிறது, இதன் மூலமாகக் கல்வியைப் பரவலாக்க முயற்சிக்கிறோம் என்றெல்லாம் சொல்லப்படுகின்ற இந்த நேரத்தில் அவையெல்லாம் பயன்பட்டிருக்கிறதா என்று பார்த்தால் உயர்நிலைப்பள்ளிகளில் சேர்ந்திருக்கின்ற மாணவர்களின் எண்ணிக்கை 34 ஆயிரம் குறைந்திருக்கிறது. இது ஏன் குறைந்தது என்பதற்காகக் கல்வித்துறை அறிக்கை தந்திருக்கிறதா என்றால் இல்லை, அதற்கான காரணங்களும் இந்தக் குறிப்பேடுகளில் இல்லை.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, மாணவர்களின்க் எண்ணிக்கை குறைந்திருப்பது ஒரு மிகப் பெரிய குற்றச்சாட்டாகக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. பேராசிரியர் அவர்களுக்கு நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். உயர்நிலைப் பள்ளியில் ஒரு வகுப்பை எடுத்திருக்கிறோம். அதைக் கணக்கில் எடுத்துக்கொண்டால் மாணவர்களின் எண்ணிக்கை ஏன் குறைந்தது என்பது தெரியவரும். அதல்லாமல் எதையும் மூடி மறைக்கவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. க. அன்பழகன்: அமைச்சர் அவர்கள் தந்திருக்கின்ற குறிப்புகளைப் படித்துப்பார்க்கவேண்டுகிறேன். ஒரு வகுப்பை எடுத்திருக்கிறோம், ஒரு வகுப்பை வைத்திருக்கிறோம்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அதைத்தான் குறிப்பிட விருமபுகிறேன். உயர்நிலைப்பள்ளியில் எடுத்திருக்கிறோம். மேல் உயர்நிலைப் பள்ளியில் ஒரு வகுப்பை ஏற்படுத்தியிருக்கிறோம். அதையும் சேர்த்துத்தான் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும்.

திரு. க. அன்பழகன்: நான் மறுபடியும் குறிப்பைப் படித்து பார்க்கவேண்டும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். இதில் 17.9 என்று எண்ணிக்கையைச் சொல்லும் போது........ "This included 1.14 lakhs students of First Year to Higher Secondary course." என்றிருக்கிறது. தந்திருக்கின்ற குறிப்புகளிலுள்ள விவரங்களைப் பார்த்தால், 1.14 லட்சம் மாணவர்கள் மேல்நிலைப் பள்ளியில் சேர்ந்திருப்பதையும் சேர்த்து 17.97 லட்சம் என்றாகிறது—இவ்வாறு சொல்லப்பட்டிருப்பதைக் கூறுவது பெரிய குற்றச் சாட்டு கூட அல்ல. அரசாங்கத்தினுடைய துறை, எந்தக் கோணத்தில் இதைப் பார்க்கவேண்டும் என்று அமைச்சர் அவர்களுக்குத் தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறது என்பதற்காக, உங்கள் சார்பாகத்தான் நான் பேசுகிறேன். அமைச்சரவர்கள் எல்லாவற்றையும் தெரிந்து கொள்ளக்கூடிய, எல்லாவற்றையும் விசாரித்துத் தெரிந்துகொள்ளக்கூடிய, எல்லாவற்றையும் ஆராய்ந்து தெரிந்துகொள்ளக்கூடிய அளவுக்கு இருக்க முடியாது, நான் உட்பட. அந்தந்த துறையைச் சார்ந்தவர்கள் எந்தெந்த முறையில் இவை இயங்குகின்றன என்று தெரிவிக்கக் கடமைப்பட்டவர்கள், ஏன் குறைந்து இருக்கின்றது என்றால், அதற்குக் காரணம் அரசாங்கம் தான் என்றோ அல்லது ஆளும் கட்சி தான் என்றோ நான் சொல்ல முன்வரவில்லை. சமுதாயத்தினுடைய நிலைமை மாறியிருக்கிறது என்பதைக் கவனித்துப் பார்த்து 18.31 என்றிருந்தது, 18.61 ஆகவோ, 18.71 ஆகவோ பெருகுவதற்குப் பதிலாக 17.97 என்று குறையும்போது 80 ஆயிரம் குறைவு என்று மாணவர்களின் எண்ணிக்கை குறைகிற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. ஒருவேளை அந்த மாணவர்களுக்கு இந்தக் கல்வியின் மீது நம்பிக்கையற்ற நிலை உருவாகியிருக்கவேண்டும் என்று எண்ணுகிறேன்.

1979 மார்ச் 29] [திரு க. அன்பழகன்]

அது மட்டுமல்ல, இந்த வயதுவரம்புள்ள மாணவர்கள் எந்த அளவுக்கு விகிதாச்சாரத்தில் பள்ளிக்கூடங்களில் இடம் பெற றிருக்கிறார்கள் என்பதையும் எடுத்துக்காட்ட விரும்புகிறேன்

[முற்பகல் 11-00]

1973-74லே இந்த உயர்நிலைப்பள்ளிகளிலே 22·38 லட்சம் பேர்களிலே, 7.39 லட்சம் பேர்கள் படித்தார்கள்—அதாவது 33 சதவீதம். 1976-77லே இந்த உயர்நிலைப் பள்ளிகளிலே 23.46 லட்சம் பேர்களிலே, 8.02 லட்சம் பேர்கள் படித்தார்கள்—அதாவது 34.1 சதவீதம் படித்தார்கள். 1977-78லே 23.80 லட்சம் பேர்களிலே, 7.93 லட்சம் பேர்கள் படித்தார்கள்—அதாவது 33.4 சதவீதம் படித்தார்கள். 1978-79லே 24.12 லட்சம் பேர்களிலே 7.27 லட்சம் பேர்கள் படித்தார்கள்—அதாவது 30 சதவீதம் படித்தார்கள். இந்தக் குறைவு ஏற்பட்டிருக்கிறது. கடந்த 1977-78லே 33.4 சதவீதம், 1978–79லே 30.1 சதவீதம். இந்தச் சதவீதம் குறைந்திருக்கிறது. எனவே, குறைகின்ற நிலை உருவாகி இருக்கின்றது. இந்தச் செய்தி, The proportional number of students admitted in school of that age group is only 30% என்ற குறிப்பில் காணப்படுகிறது. எனவே, 14 வயதிலிருந்து 17 வயதுவரை உள்ளவர்களில் பள்ளியில் சேர்ந்து படிக்கக்கூடிய மாணவர்கள் 34 சதவிகிதத்திலிருந்து 30 சதவீதம் ஆகும் நம்முடைய கல்வியின் தரம், மக்களுக்குப்பயன்படாத அளவுக்குக் குறைந்து வருகிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

அது மட்டுமல்ல. இந்தக் கல்வி என்பது பள்ளிக் கல்வியிலே இருந்து, கல்லூரிக் கல்வி வரை படிப்படியாக அமைந்து வருகின்ற ஒன்றாகும். இன்றைக்குப் பள்ளிக்கூடங்களில் அதிகப்படியான மாணவர்கள் சேர்க்கப்படுகின்றார்கள் என்று சொல்லப்படுகிறது. அதன்படி, தொடக்கப் பள்ளிகளிலே 94 சதவிகிதம் மாணவர்கள் சேர்க்கப்படுகின்றார்கள் என்றும், ஆனால் அப்படிப் படித்துவிட்டு, 5-வது வகுப்புக்குப் போகிறபோது இந்த 94 சதவிகிதம் என்பது 58 சதவீதமாகக் குறைந்து விடுகிறது என்றும், அதற்குமேலே மேல்நிலைப் பள்ளிக்கு வருகின்றபோது இது மேலும் 30 சதவிகிதமாகக் குறைந்துவிடுகிறது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது நாடெங்கிலும் இருக்கக்கூடிய நிலையாக இருந்தாலும், இந்த குறைந்து வரும் விழுக்காடு வேகமாக வளரக்கூடாது. இது எவ்வளவு வேகமாகக் குறைந்து வருகின்றது என்பதைப் பார்த்தால், 90 சதவிகிதம், 60 சதவிகிதம் ஆகவும், பின் 30 சதவிகிதம் ஆகவும் குறைகின்ற நிலைமை இருக்கிறது. இன்றைக்கு இந்த மாணவர் தொகை வகுப்பு உயர உயரக் குறைந்து போகின்ற நிலைமையைப் பார்க்கின்றபோது, வேகமான சரிவு ஏற்படுகிறது. இதைப் பார்க்கும்போது, இதிலே கவனம் செலுத்தக்கூடியவர்கள் யாராக இருந்தாலும், நிர்வாகமாக இருந்தாலும், அரசாக

[திரு. க. அன்பழகன்] [1979 மார்ச் 29

இருந்தாலும், மேற்பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கின்றவர்களாக இருந்தாலும் இதிலே போதிய கவனம் செலுத்தப்படவில்லை என்று தெரிகிறது. இன்றைக்கு அரசாங்கம் தந்திருக்கின்ற ஆசிரியர் மாணவர் விகிதாசாரக் கணக்குப்படி. சில ஆண்டுகளுக்கு முன்னாலே 1965–66ல் உள்ளதைப் பார்க்கும்போது தொடக்கப்பள்ளிகளில் ஒரு ஆசிரியருக்கு 27 மாணவர்கள் என்றும், உயர் தொடக்கப் பள்ளிகளுக்கு ஒரு ஆசிரியருக்கு 35 மாணவர்கள் என்றும், உயர்நிலைப் பள்ளிக்கு ஒரு ஆசிரியருக்கு 31 மாணவர்கள் என்றும் விகிதாச்சாரம் இருந்தது. அதைத் தொடர்ந்து இந்த ஆண்டுக் கணக்கு இன்னொரு பக்கத்திலே இருக்கிறது. இந்த ஆண்டும் 1975-76, 1976–77-ஆம் ஆண்டும் இருக்கிறது. அப்படி நம்முடைய அறிக்கையிலே இருக்கின்ற இந்த விவரங்களைப் பார்க்கின்றபோது, 1978–79ல் தொடக்கப் பள்ளியில் ஒரு ஆசிரியருக்கு 38 மாணவர்கள் என்றும், உயர் தொடக்கப் பள்ளியில் ஒரு ஆசிரியருக்கு 36 மாணவர்கள் என்றும், உயர்நிலைப் பள்ளியில் ஒரு ஆசிரியருக்கு 24 மாணவர்கள் என்றும் இருக்கிறது. கல்லூரிகளில் ஏற்கெனவே பி.யூ.சி. யும் சேர்ந்து நான் கணக்கிட்டபடி ஒரு ஆசிரியருக்கு 17லிருந்து 20 மாணவர்கள் என்றும் ஆகிறது. இப்போது புகு முகவகுப்புக் கல்வியை எடுத்தவுடன், அந்த ஆசிரியர்களின் பணியை மேல்நிலைக் கல்வியிலும் ஈடுபடுத்த இயலாதது காரணமாக, இந்தக் கல்லூரிகளில் பணியாற்றிய புகுமுகவகுப்பு 3,800 ஆசிரியர்கள் பட்டப் படிப்புத் துறையிலே கலந்து பணி செய்ய இசைந்திருக்கிறோம். அப்போது என்ன விகிதாச்சாரம் வருகின்றது என்றால், ஒரு ஆசிரியருக்கு 10, 12 மாணவர்கள் என்றுதான் ஆகிறது.

நான் கடந்த ஆண்டே திரும்பத் திரும்பச் சொன்னேன் ஒரு நாள் தான் சொல்ல முடியும். தினமும் சொல்ல முடியாது. கல்லூரிகளில் புகுமுக வகுப்பை நீக்குவது என்று ஏற்றுக்கொண்டாலுங்கூட, அப்படி நீக்குவதைப் படிப்படியாகச் செய்யுங்கள், மேலும், இந்த ஆசிரியர்களை அந்தத் துறையிலேயே பயன்படுத்திக் கொண்டு, பட்டதாரி மேல் வகுப்புக்களுக்கு மாற்றுவதையும் படிப்படியாகச் செய்யுங்கள், இடையிலே இருக்கின்ற 3 ஆண்டுகளுக்கு இந்த பி.யூ.சி. ஆசிரியர்களுக்கு தருகின்ற சம்பளம் பயன்படுமாறு செய்ய மேலும் 3 ஆண்டுகளுக்குத் தொடர்ந்து அந்த வகுப்பு நீடிக்கும் என்ற நிலைமையில் ஏற்படுத்துங்கள், பி.யூ.சி-யில் முதலாண்டு 80,000, பின்பு 50,000, பின்பு 30,000 என்று மாணவர்களைக் குறையுங்கள், அதே காலத்தில் நீங்கள் ஏற்படுத்துகின்ற மேல் நிலைக் கல்வியைத் தரமுள்ளதாக, முழு வசதியுள்ளதாக, மாணவர்களுக்கு நிறைவுள்ளதாக ஆக்குங்கள் என்று கேட்டேன்.

அதை உள்ளபடியே அந்தத் துறையில் உள்ளவர்கள் உய்த்து உணரமுடியவில்லை. ஏற்கனவே அந்த மேல்நிலைக் கல்வியைப் பற்றித் தரப்பட்டிருக்கும் ஆலோசனையிலே கூட—"For another 5 years P. U. C. should continue to exist and it may be abolished at the end of the period of 5 years' என்ற குறிப்பு இருக்கிறது. அது எந்தக் காரணத்தாலோ ஏற்றுக்.

1979 மார்ச் 29] [திரு. க. அன்பழகன்]

கொள்ளப்படவில்லை. இப்போது என்ன நிலைமை என்றால் 3,800 ஆசிரியர்களுக்குப் பதவி, பணிப் பாதுகாப்புத் தரவேண்டிய கடமை அரசாங்கத்திற்கு ஏற்பட்டு வாக்குறுதி அளிக்கும் நிலை ஏற்பட்டது. பணிப் பாதுகாப்புக் கொடுத்ததைப் பாராட்டுகிறேன். பணிப் பாதுகாப்புக் கொடுத்தால் அந்த ஆசிரியர்களின் பணியை முழுவதும் பயன்படுத்திக் கொள்ள இந்த அரசாங்கத்திற்கு என்ன வழி? பட்டதாரி வகுப்புகட்கு ஆசிரியர்களாக இந்த ஆண்டு 500 அல்லது 600 ஆசிரியர்களை இணைக்கலாம். இல்லையென்றால் 1,200 பேரை இணைக்கலாம். கல்லூரியில் படிக்கும் மாணவர்கள் ஒரு ஆசிரியருக்கு 10 அல்லது 12 மாணவர்கள் என்னும் அளவுக்கு விகிதாச்சாரம் வர இருக்கிறது. இதை நான் மட்டும் சொல்வதாக நினைக்க வேண்டாம். ஆங்கிலத்தில் Dynamic Education என்னும் வெளியீட்டில் ஏற்கெனவே கல்வித் துறையில் இயக்குநராக இருந்தவர் அதிலே எழுதுகிறார்—

In Colleges the proportion of teachers, to students was 1:15. When the P.U.C. is dropped the teachers involved in that sector become surplus. It is estimated that 3890 teachers will become surplus because in most of the colleges the P.U.C. number is nearly 70% of the total. The salary to be paid to the P.U.C. teachers amount to Rs. 4.5 crores. The figures for the non-teaching staff should also be taken into consideration. If the present strength of teachers is retained in Colleges after dropping P.U.C. the teacher, student proportion will be 1:10.

அதற்கு மேல் இன்னும் பல விளக்கங்கள் இருக்கின்றன. ஒரு ஆசிரியருக்கு 10 மாணவர்கள் என்ற விகிதாசாரம் ஏதாவது ஒரு சில வகுப்புகளில் ஏற்படத்தான் செய்யும்; எம். ஏ., எம். எஸ். சி. ஆராய்ச்சித்துறை வகுப்புகளில் ஏற்படத்தான் செய்யும். அதைப் பெரிய குற்றமாக இப்போதும் சொல்லவில்லை. ஆனால் 3,800 பி. யு. சி. வகுப்பு நடத்திய ஆசிரியர்கள் பட்டப் படிப்பு வகுப்புக்கு ஆசிரியராகச் செல்வது அவர்களுக்கு மகிழ்ச்சி அளிக்கக்கூடிய ஒன்றுதான். ஆனால் அவர்களுடைய பணியை தகுந்த முறையில் பயன்படுத்திக் கொள்ளக்கூடிய நிலை இருக்கிறதா? ஆகவே, பி. யு. சி. வகுப்பை மேலும் 2, 3 ஆண்டுகள் நீடிக்கவில்லை என்பதால் இந்த நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதை நினைவூட்டுகிறேன். அதே நேரத்தில் விகிதாசாரத்தில் ஏற்பட்டிருக்கும் தலைகீழ் மாற்றத்தையும் நினைவுகூறாமல் இருக்க முடியாது. கல்லூரியில் சாதாரணமாக ஒரு வகுப்புக்கு 80, 100 மாணவர்கள் இருக்கலாம், உயர்நிலைப் பள்ளிகளில் ஒரு வகுப்பில் 40, 50 மாணவர்கள் இருக்கலாம். ஆனால் தொடக்கப் பள்ளியில் அந்த விகிதாச்சாரம் 20 அல்லது 25 மாணவர்கள் என்றுதான் இருக்க வேண்டும். இப்போதுள்ள நிலைமை தலைகீழாக இருக்கிறது. தொடக்கப்பள்ளியில் ஒரு ஆசிரியருக்கு 38 மாணவர்கள்; உயர் தொடக்கப்பள்ளிகளில் 36 மாணவர்கள்; உயர்நிலைப் பள்ளிகளில் 24 அல்லது 25 மாணவர்கள். ஆனால் கல்லூரிகளில் ஆசிரியர்—மாணவர்கள் விகிதாசாரம் 12, 13 என்ற அளவுக்கு இருக்கிறது. இந்த விகிதாசாரத்தை வைத்து

நினைவுபடுத்த விரும்புகிறேன். தொடக்கக் கல்வியில் அதிகக் கவனம் செலுத்தி அதிக ஆசிரியர்களை வேலையில் ஈடுபடுத்த முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். நிதி வசதியை அதற்கேற்ற வகையில் பயன்படுத்தியிருக்க வேண்டுமென்று நினைவுபடுத்த விரும்புகிறேன்.

இந்த ஆண்டு அறிக்கையில் தெரிவித்திருக்கிறார்கள். ஏறத்தாழ ஆயிரம் செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் இடைநிலை ஆசிரியர்கள் 200 பி. டி. ஆசிரியர்கள் 200 பகுதி நேர ஆசிரியர்களை முழு நேர ஆசிரியர்களாக நியமிப்பது என்ற வகையில் எல்லாம் 1600-இல் இருந்து 1,800 ஆசிரியர்கள் வரை வேலை தருவதாகத் தெரிவித்திருக்கிறார்கள். தொடக்கப்பள்ளியின் கல்வி தரத்தைச் செம்மைப்படுத்திட அந்த ஆசிரியர்களின் எண்ணிக்கை அதிகமானால் மாணவர்கள் ஆசிரியர்கள் விகிதாசாரத்தைக் குறைத்தால் அதன் காரணமாக நல்ல பலன் ஏற்படும். தொடக்க நிலையில் 100-க்கு 90 மாணவர்கள் படிக்கின்ற நிலை உயர் தொடக்க நிலையில் 60 ஆகவும், மேல் நிலைக் கல்வியில் 30 ஆகவும் குறைகிற நிலை மாறும். ஆசிரியர்களுக்கு வேலை கிடைக்கும் என்பதற்காக நான் சொல்லவில்லை. கல்வித் துறையில் மேலே போகப் போக மாணவர்கள் எண்ணிக்கை குறைவது பேரிழப்பாகும். ஆகவே, இந்த மாற்றத்தின் காரணமாக உயர்நிலைக் கல்வி படிக்க வரும் நிலையில் தொடக்கப் பள்ளியில் சேர்ந்தவர்களில் 100-க்கு 50 என்ற விகிதாசாரமாவது ஏற்படக்கூடும். ஆகவே, தொடக்கப்பள்ளி, உயர் தொடக்கப்பள்ளி, உயர்நிலைக் கல்வி என்ற முறையில் முன்னுரிமை தந்து ஆசிரியர்களின் எண்ணிக்கையை அதிகரித்து ஆசிரியர்—மாணவர்கள் விகிதாசார எண்ணிக்கையைக் குறைத்தால் படிக்கக்கூடிய மாணவர்கள் விழுக்காடு போகப் போகக் குறைந்து வரும் நிலை எதிர்காலத்திலாவது மாறும்

[முற்பகல் 11–10]

அதுமட்டுமல்ல, அடுத்து நான் சொல்ல விரும்புகிறேன். மேல் நிலைக் கல்வியிலே அரசு ஏற்படுத்தியிருக்கிற முறையில் இந்த ஆண்டு 1 லட்சத்து 14 ஆயிரம் பேர்கள் சேர்ந்து இருக்கிறார்கள் என்றாலும் அவர்களிலே 24 ஆயிரம் பேர்கள்தான் வொக்கேஷனல் பேஸ் என்ற அடிப்படையிலே தொழில் கல்விப் பயிற்சி என்ற முறையில் பயில்கிறார்கள். நான் இதை அமைச்சரே கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்தக் கல்வித் திட்டத்தைத் தொடங்குகிறபோது யுனெஸ்கோவினுடைய அறிக்கையை எடுத்துக் காட்டி தொழில் மனப்பான்மையை ஏற்படுத்துவதற்காக, ஒரு தொழிலிலே அவர்கள் ஈடுபட வேண்டுமென்பதற்காக ஏதாவது ஒரு தொழிலிலே அவர்களுக்குப் பயிற்சியை அளிப்பதற்காக, அரசாங்கத்தில் வேலை தேடிப் போகாமல்,கிளார்க் வேலைக்கு அதிகமான அளவில் விண்ணப்பங்கள் வராமல் இருப்பதற்காக இந்தத் திட்டம் கொண்டுவரப்படுவதாகச் சொல்லப்பட்டது. அந்தக் கருத்தை நீங்கள் தெரிவித

1979 மார்ச் 29] [திரு. க. அன்பழகன்]

திருக்கிறீர்கள். துறையைச் சேர்ந்தவர்களும் தெரிவித்திருக்கிறார்கள். இங்கே ஒரு குறிப்பு இருக்கிறது. அந்தக் குறிப்பினை நான் படித்துக் காட்டுவது பயன்தரும் என்று நம்புகிறேன்.

''தொழிற் கல்வி—பயிற்சி அடிப்படை: கல்வித் துறையில் செய்யப்பட்டுள்ள இச் சீர்திருத்தம் தொழிற்கல்வியையே சாரமாகக் கொண்டுள்ளது. பொருத்தமான தொழில்கள் அல்லது வாழ்க்கைக்கான தொழில்களைப் பற்றிய விவர அறிவு, அவைகளை உணர்ந்து செயல்லாற்றுதல், திறமை பெறுதல், தொழில் வகையான மனப்போக்கை வளர்த்தல் ஆகியவற்றைத் தழுவியே தொழிற்கல்விப் பயிற்சி அமைய வேண்டும் என யுனெஸ்கோ வரையறுத்துள்ளது. தொழிற்கல்வி என்பது வெறும் தொழிற் பயிற்சியாக இராமல் பொதுக் கல்வியின் கூறுகளையும் அடக்கியதாக இருக்கும். தொழிற்கல்வியின் நோக்கத்தை ஆராய்ந்தால் அதன் முக்கியத்துவத்தை உணரலாம்' என்று சொல்லப்படுகிறது.

இப்போது ஒரு லட்சத்து 14 ஆயிரம் பேர்கள் சேர்ந்திருக்கிறார்கள். அப்படிச் சேர்ந்திருக்கிற 1 லட்சத்து 14 ஆயிரம் பேர்களில் 24 ஆயிரம் பேர்கள்தான் தொழில் கல்வியைப் பெறுகிறார்கள், மற்றவர்கள் புதிய கல்வி என்ற பெயரால் ஏற்கனவே பி. யு. சி. யில் படித்ததையும், ஏற்கனவே 11 வது வகுப்பிலே படித்ததையும் இப்போது விஞ்ஞானக் கூறுகள் அமைந்த கல்வியாகப் படிக்கிறார்கள். அவ்வளவுதான். இப்படி 24 ஆயிரம் பேர்கள் மட்டுமே தொழில் கல்வி பயில, மிச்சம் இருக்கிற மாணவர்கள் பழைய முறையிலான கல்வியையே படித்துக் கொண்டிருக்கிற நிலைமை இருக்கிறது. மிச்சம் இருக்கிற அந்த 90 ஆயிரம் மாணவர்களுக்கு அப்படிப்பட்ட இழப்பு ஏற்படுகிறது, அவர்களுக்குத் தொழிற்கல்வி கிடைக்கவில்லை. ஏற்கனவே இருந்த பி. யு. சி என்ற முறையிலே படிக்காத காரணத்தால் அவர்களுக்குத் தொழில் கல்வியாவது கிடைக்க வேண்டும் என்று நான் கருதுகிறேன். ஆனால் அந்த வாய்ப்பு இல்லை என்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இந்த முறையிலே புதிய கல்வித் திட்டம் தன்னம்பிக்கையை வளர்க்கும் தொழில் கல்வித் திட்டம் என்று சொல்லி 4 மாணவர்களுக்கு ஒருவர்தான் அவ்வகையில் பயன்பெறக்கூடிய நிலைமை இருக்கிறது. அந்தக் கல்வியும் கூட எவ்வளவு குறைபாடுகள் உள்ளதாக இருக்கிறது என்று பார்த்தால் தொழில் கல்விக்குத், தேவையான தொழிற்கூடப் பயிற்சிக்கு அமைப்புகள் இல்லை, தகுந்த ஆசிரியர்கள் இல்லை, அதற்கான லேபரட்டரிகள் இல்லை, விஞ்ஞானக் கூடங்கள் ஏற்கனவே இருந்தவைதான் இருக்கின்றனவே தவிர, அதற்குத் தேவையான டெக்னிக்கல் லேபரட்டரிகளை ஏற்படுத்த முயற்சி எடுக்கப்படவில்லை என்று நான் ஏற்கனவே சொன்னேன். ஆனால் இன்றைக்குப் பார்த்தால் கூட டெக்னிக்கல் லேபரட்டரிஎன்ற பேச்சே இல்லை. யாராவது தொழிற்சாலை வைத்திருந்தால், அங்கே போய்ப் பயிலுங்கள்,

[திரு. க. அன்பழகன்] [1979 மார்ச் 29

பக்கத்திலே பெரிய மருத்துவ மனை இருந்தால் அங்கே போய்ப் பயிலுங்கள் என்ற அளவிற்குத்தான் இருக்கிறதே தவிர அதற்கான வசதிகள் செய்து தரப்படவில்லை. கடைசியிலே பார்த்தால் வகுப்பறைதான் மிச்சம் என்ற நிலைமைதான் இருக்கிறது. இப்படிப்பட்ட வசதிகள் இல்லாதபோது அது வெறும் தொழில் கல்வி என்று பெயருக்குத்தான் இருக்கிறதே தவிர வேறு தகுந்த பயன் இல்லை. 24 ஆயிரம் மாணவர்கள்தான் தொழிற்கல்வி பெறுகிறார்கள் என்றால் மிச்சம் 90 ஆயிரம் மாணவர்கள் இன்றைக்கும் பழைய பாட்டையிலேயே தான் போய்க் கொண்டிருக்கிறார்கள் என்றால் எதற்காக இவ்வளவு பெரிய செலவு? நான்கு பேர்களுக்கு ஒருவர்தான் புதிய முறையில் பயன் பெறுகிறார் என்றால் பழைய திட்டத்தை அடியோடு கைவிட்டு விட்டு, புதிய திட்டத்தை எதற்காகக்கொண்டுவர வேண்டும்? அது மட்டுமல்ல, இன்றைக்குத் தொழிற்கல்வியிலே படித்த மாணவர்கள் பின்னர் தாமாக ஒரு தொழிலுக்குப் போவார்கள் என்ற நம்பிக்கை உங்களுக்கு இருக்கிறதா? தொழிற்கல்வி பயிலும் மாணவர்கள் பின்னர் என்ன செய்வது என்பது பற்றிப்பல்கலைக் கழகத்தோடு தொடர்பு கொண்டு அதற்காக உரிய போர்டு தீர்மானிக்கும் மார்க் அடிப்படையில் பல்கலைக் கழக வகுப்பில் சேரலாம் என்று கூறப்படுகிறது அந்த போர்டுதான் அதைத் தீர்மானிப்பார்கள். மாணவர்களுக்குத்தொழிலில் ஈடுபடஉதவியாக செல்ப் எம்ப்ளாய்மென்ட் கோர்ஸ் என்று என்ன இருக்கிறது? நான் தெரிவித்துக் கொள்கிறேன், எல்லாருக்குமே இது தெரியாது என்றோ அல்லது அந்தத் துறைக்கே தெரியாது என்றோ நான் சொல்லவில்லை. இவ்வளவு பெரிய மாற்றம் செய்தபின் நான்கு பேர்களுக்கு ஒருவர்தான் பயன்பெறுவார் என்ற நிலைமை வருமானால் இதற்கு இவ்வளவு பெரிய இழப்பா? அதற்காக இவ்வளவு பெரிய செலவா? இதுதான் பி. யு. சி. யை உடனடியாக நிறுத்தியதற்கான நோக்கமா? இப்படிப்பட்ட இழப்பிற்குப் பிறகும் கூட 15, 20 கோடி ரூபாய் அதிகச் செலவு ஏற்படுவதன் காரணமாகச் சாதாரணமாக உயர்நிலைப் பள்ளிகளிலே கிடைக்க வேண்டிய விஞ்ஞானக்கூடங்களை அனைத்துப் பள்ளிகளிலும் அமைக்காத நிலைமை இன்றைக்கு இருக்கிறது. ஆரம்பப் பள்ளிக் கட்டிடங்களுக்கு ஒரு கோடி ரூபாய்க்குமேல் ஒதுக்க முடியாத நிலை. உயர்நிலைப் பள்ளிகள் பல இடங்களில் இல்லாத குறையை நீக்க முடியாத நிலை. இங்கே தந்திருக்கின்ற வெட்டுத் தீர்மானங்களில் ஏறக்குறைய 30, 35 உறுப்பினர்கள் பள்ளிக்குக் கட்டிடம் தேவை என்று தந்திருக்கிறார்கள். அதைக் கூட்டிப் பார்த்தால் அதற்கு 5 கோடி ரூபாய் தேவை. அதே நேரத்திலே விளையாட்டு, உடற்பயிற்சி ஆகியவற்றிற்கு ஒதுக்கிய பணம் குறைந்திருக்கிறது. அதற்காக திரு. சந்திரன் ஜெயபால் அவர்கள் வெட்டுத் தீர்மானம் கொடுத்துவிட்டுப் பேசினார்கள். அவர்கள் பேச்சின் மதிப்பைக் கணக்கிட்டால், அந்த வெட்டுத் தீர்மானத்தின் மதிப்பு 10 கோடி ரூபாய் வரும், அவ்வளவு தொகைக்குக் கொடுத்திருக்கிறார்கள். அதற்கு அந்த பத்து கோடி ரூபாய் இல்லை என்றாலும் நான்கு

1979 மார்ச் 29] [திரு. க. அன்பழகன்]

அல்லது மூன்று கோடி ரூபாயாவது ஒதுக்க வேண்டி வரும். அதைச் செய்ய முடியவில்லை. ஆனால் இவ்வளவு பணத்தை மேல் நிலைக் கல்விக்காகக் கொடுத்து அவர்கள் படித்து முடித்தவுடன், மேலும் படிக்க வாய்ப்பும், ஒரு தொழிலை நடத்துவதற்கான தன்னம்பிக்கையும் பெறுவதற்கு வழிவகுத்துக் கொடுத்தால் தான் அது சமுதாயத்தைக் காப்பாற்றும்.

நான் முன்பு சொன்னதை நினைவுபடுத்த விரும்புகிறேன். உயர்நிலைப் பள்ளி மாணவர்களின் எண்ணிக்கை குறைந்து போயிருக்கிறது என்று சொன்னால், படித்து விட்டு என்ன செய்வது என்ற மனப்பான்மை, கவலை, படித்துவிட்டால் மட்டும் எங்கே வேலை கிடைக்கிறது, படித்தால் கல்லூரியில் எம். ஏ., படிக்க வேண்டும், பி.ஏ., படிக்க வேண்டும்; இல்லாவிட்டால் வேலை இல்லை என்ற மனப்பான்மை இருக்கிறது. பட்டம் பெற்றாலும் வேலை இல்லை என்றும் எண்ணும் நிலைமை வளருகிறது.

படிக்க வேண்டும், முக்கியமாக அறிவையும் பெற வேண்டும், தொழிலும் நடத்த வேண்டும் என்ற எண்ணத்தில் இவ்வளவு பெரிய செலவில் மேல்நிலைக் கல்வியை நடத்தும் பொழுது, இங்கே சேர்கின்ற மொத்த மாணவர்களில் 100-க்கு 60 அல்லது 70 பேர் தொழிற் கல்வி பயின்றால் அதை வரவேற்கத் தயார். அப்படிப்பட்ட சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும் என்று நான் கூற விரும்புகிறேன்.

தொழிற் கல்விப் பயிற்சிக்காக, அதற்குத் தேவையான கட்டிடங்களுக்காக ஒவ்வொரு பள்ளிக்கூடத்திற்கும் இங்கே விஞ்ஞானத்திற்காக 1·47 இலட்சம் ரூபாய் ஒதுக்கியிருப்பதைப் போல கருவிகளுக்காக ஆறாயிரம், பத்தாயிரம், இருபதாயிரம் என்று ஒதுக்கியிருப்பதைப் போல் இந்தத் தொழிற்கல்வியில் பயிற்சி பெறுகின்ற மாணவர்களுக்காக ஒவ்வொரு பள்ளிக்கும் ஒன்றரை இலட்சம், இரண்டு இலட்சம் ரூபாய் ஒதுக்கி அதற்கு வழிகாண வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த ஆண்டு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது. ஒவ்வொரு மேல்நிலைப் பள்ளிக்கும் 5 ஏக்கர் நிலம் இருக்க வேண்டும், 10 ஏக்கர் நிலம் இருக்கவேண்டும் என்று. நான் இப்பொழுது கேட்கிறேன், அந்தப் பள்ளிக்கட்டிடம் உள்ள இடம் தவிர வேறு இடமில்லை என்று சொல்கிறார்கள். ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர்கள் தான் பலயிடங்களில் இருக்கின்றன, பலயிடங்களில் தகுந்த கட்டிடமே கிடையாது. இப்படி இருந்தால் எப்படி அந்தத் தொழிற் கல்வியை நடத்தப்போகிறோம் என்று எண்ணிப்பார்க்க வேண்டும்.

நான் மேலும் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். மொத்தம் துவங்கியிருக்கின்ற 912 மேல் நிலைப் பள்ளிகளில் 709 பள்ளிகளில் தான் தொழிற்பாடங்கள் உள்ளன. இந்த 709

[திரு. க. அன்பழகன்] [1979 மார்ச் 29

பள்ளிகள் தவிர மீதம் இருக்கின்ற 203 பள்ளிகளில் தொழிற் பாடம் இல்லை. இப்படித் தொழிற்பாடம் இல்லாமல் எப்படி மேல் நிலைக் கல்வியைத் தொடங்கலாம்? மேல் நிலைக்கல்வியைத் தொடங்கவேண்டிய நெருக்கடி ஏன் ஏற்பட்டது? பி. யு. சி. எடுக்கப்பட்டு வடுகிறது. எஸ். எஸ். எல். சி. க்கு ஈடாக பத்தாவது வகுப்பிலேயே பாடத்திட்டம் கொண்டுவரப்பட்டது. இப்படி இல்லாமல் எஸ். எஸ். எல். சி. 11—வது வகுப்பு வரை அந்தப் பள்ளிகளில் தொடர்ந்து அனுமதிக்கப்பட்டு பி. யு. சி. யின் ஒரு சேனல்-ஒரு பாதை-திறந்து இருக்குமேயானால்அதனால் புதிய செலவு வராது. 203 பள்ளிகளில் தொழிற்படிப்பு இல்லை. ஏறக்குறைய 709 பள்ளிகளில்தான் இருக்கின்றன. அநேக பள்ளிகளில் ஒரேயொரு தொழிற்பாடம் தான் இருக்கிறது. ஏறக்குறைய 34 அல்லது 35 வகையான தொழிற்பாடங்கள் தரப்பட்டிருக்கின்றன. அந்தத் தொழிற் பாடங்களில் ஒரே யொரு தொழிற்பாடம் தான் அந்தப் பள்ளிகளில் இருக்கிறது. 50, 60 மாணவர்கள் தொழிற்பாடம் படிக்கிறார்கள் என்றால் அந்த 50, 60 மாணவர்களும் ஒரேயொரு தொழிற்பாடத்தைத் தான் படிக்க வேண்டிய நிலைமை இருக்கிறது. மிச்சமிருக் கின்ற பள்ளிகளில் இரண்டு அல்லது மூன்று தொழிற்பாடங்கள் தான் இருக்கின்றன. அப்படி இருக்கும் தொழிற்பாடங்களிலும் செக்ரட்டேரியல் கோர்ஸ் படிப்பவர்களே அதிகம், தொழில் படிப்பில் ஏறக்குறைய 24,000 மாணவர்கள் இருக்கிறார்கள் என்றால் அதில் 11,000 மாணவர்கள்— நான் சொல்லுகின்ற புள்ளிவிவரத்திலே சிறு வேற்றுமை இருந்தாலும் இருக்கலாம்— 11,000 மாணவர்களுக்குமேல் காமர்ஸ் அண்ட் செக்ரட்டேரியல் கோர்ஸ் படிக்கின்ற நிலைமையே உள்ளது. ஏற்கனவே நான் மாணவனாக இருந்த காலத்திலிருந்தே கூட செகரட்டேரியல் கோர்ஸ் இருந்தது. 11,000 மாணவர்கள் செகரட்டேரியல் கோர்ஸ் படிக்கிறார்கள் என்றால் அவர்கள் மறுபடியும் அரசாங் கத்திடமோ அல்லது இன்னொரு நிறுவனத்திலோ வேலைக்கு விண்ணப்பம் போட்டுக் கொண்டுதான் இருக்க வேண்டும். டைப்ரைட்டிங், ஷார்ட்ஹாண்ட், மற்றும் புக்கீப்பிங் ஆகிய இவைகள் பாடமாக இருக்கக்கூடும். அவைகளும் பயனுள்ளவை தான். ஆனால் தொழில் பயிற்சி என்ற கருத்துக்கு அவை ஒத்து வராது. ஆகவே, (புரொப்போர்ஷனேட்டாக)—விகிதாசார முறைப்படி பார்த்தால் தொழிற்பாடங்கள் இந்த அளவிற்குக் குறைந்து போகின்றன. இந்தத் தொழிற்பாடங்களை நடத்தக் கூடிய ஆசிரியர்கள் போதியஅளவிலே இருக்கிறார்களாஎன்றுபார்த் தால் சிலயிடங்களில்தான் இரண்டு தொழில் பாட ஆசிரியர்கள் இருக்கிறார்கள். சுமார் 660 பள்ளிகளில் ஒரு தொழில் பாட ஆசியர்கள்கூட இல்லை. எந்த, தொழிற்பாடமானாலும் சரி, ஏறக்குறைய ஆங்கிலத்திற்கு 4 பிரிவு வேளை, தமிழுக்கு 4 பிரிவு வேளை, 4 பாடங்களுக்கு 6, 6 பிரிவு வேளை என்றாலும், ஒரு பாடம் தவிர மற்ற 18 பிரிவு வேளை தொழிற்பாடங்களுக்கு. 18 பிரிவு வேளை தொழிற்பாடங்களுக்கு இரண்டு பகுதி நேர ஆசிரியர்கள் எந்த வகையில் நல்ல முறையில் சொல்லிக் கொடுக்க

1979 மார்ச் 29] **[திரு. க. அன்பழகன்]**

முடியும்? 18 பிரிவு வேளைகளிலும் ஒழுங்காகப் பாடம் நடத்துவதற்கு அக்கறை செலுத்த அவர்களால் முடியுமா? நான்கு பாடப் பிரிவு வேளைகளுக்கும் பகுதி நேர ஆசிரியர்களை வேண்டுமானால் வைத்துக் கொள்ளலாம்.

[முற்பகல் 11-20]

18 பிரிவு வேளை, அதாவது மற்ற ஆசிரியர்களை விட பகுதிநேர ஆசிரியர் உழைப்பு அதிகம்—அவருக்குப் பெயர் பகுதி நேர ஆசிரியர்; அவர் அந்த மாணவர்களுக்கு அக்கறையாகப் பாடம் நடத்துவாரா? நாம் கேட்க விரும்புவது, அதை எப்படிச் செய்வது என்பதை ஆழ்ந்து சிந்திக்க வேண்டாமா? பகுதி நேர ஆசிரியர்கள் சில இடங்களில் கிடைக்காத நிலை இருக்கிறது. சென்னையிலே உள்ள ஒரு உயர்தரமான பள்ளிக்கூடம், நல்ல சம்பளம் வசூலிக்கின்ற பள்ளியில், பி.காம் படித்தவர் கிடைக்கவில்லையென்பதற்காக, அங்கே இருக்கிற மானேஜரைப் பாடம் நடத்தச் சொல்லி, வழக்கமாக 100-க்கு 80 மதிப்பெண்கள் வாங்குகிற மாணவர்கள், 100-க்கு 5—10 வாங்கியிருக்கிறார்கள். அதுபற்றிக் கேட்டபோது, பள்ளிக்கூடத்து மானேஜரைப் பாடம் நடத்தச் சொல்லிவிட்டோம், பி. காம். படித்த பட்டதாரிகளோ, மற்றவர்களோ, யாரும் முன் வரவில்லை, பி. காம். படித்த பட்டதாரிகள் பாங்கு வேலைக்குத்தான் போகிறார்கள், கிடைக்கவில்லை, ஆகவேதான் இந்த நிலை என்று தலைமையாசிரியர் சொன்னதாக நான் கேள்விப்படுகிறேன்.

இனி, மற்றத் தொழிற்பாடங்களை நடத்தக்கூடிய திறமையுள்ளவர்கள் கிடைப்பார்களா? பயிற்சிக்குப் போட்டிருக்கிற சிலபஸ்படி, பாடங்களை நடத்த ஆசிரியர்கள் கிடைப்பார்களா? சிலபஸ் முழு அளவு சீர்தூக்கிப் பார்க்கப்படவில்லையென்று கடந்த ஆண்டு சொன்னேன். 34 வகையான தொழிற்பாடங்கள் உள்ளன. அவற்றில் ஒரு பாடம் மாணவர் படிக்காலம் என்று சொன்னபொழுது, 18 பிரிவு வேளை, அதில் 6 அல்லது 8 பிரிவு வேளை பயிற்சிக்காகவே போகலாம், வேளாண்மைத் துறையிலே பண்ணைக்கான பயிற்சி என்கிறீர்கள். வேளாண்மைக்குத் தேவையான பண்ணைக்கு வழி செய்திருக்கிறீர்களா? பட்டுப் பூச்சி வளர்ப்பது என்று சொல்கிறீர்கள். தர்மபுரி, ஓசூர் தவிர, வேறு எங்கு பட்டுப்பூச்சி வளர்ப்பைச் சொல்லித் தரமுடியும் என்று கருதுகிறீர்கள்? தேனி வளர்ப்பு என்கிறீர்கள். தனியாகப் பாடம் நடத்தித்தான் மாணவர்கள் தெரிந்து கொள்ளவேண்டுமா, தேனி வளர்ப்பை? தேனி வளர்ப்பது என்பது 4 வார பாடம். தேனியைப் பற்றி 'சூவாலஜி' முறையிலா பாடம் நடத்தப் போகிறீர்கள்? ஆக, இரண்டு, இரண்டு தொழிலாகச் சேர்த்துப் பயிற்றுவித்தால் தவிர எந்த ஒரு மாணவனுக்கும் அதற்குப் பின்னாலே தொழில் நடத்தி வாழ முடியும் என்ற நம்பிக்கை ஏற்படாது. இவற்றையே பேசிக் கொண்டு போனால், நேரம் இராது. தொழில் பாடங்கள்,

இரண்டு இரண்டு பாடங்களை இணைத்து, அல்லது ஒரு தொழில் பாடத்திற்கு இன்னொரு தொழில் பாடத்தைத் துணைப் பாடமாக அமைத்து, அதன்மூலமாக அந்தப் பயிற்சியைத் தரமுள்ளதாக ஆக்குவதற்கு, பயனுள்ளதாக ஆக்குவதற்கு முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

'பால்பண்ணை, கோழிப்பண்ணை, சிறுபண்ணை நிர்வாகம் வேளாண்மையை மையமாக கொண்ட தொழில்கள், உழவு முறை இயந்திரவியலும் அறுவடைக்குப் பிந்திய தொழிலியலும், இவைகள் எல்லாம் படிக்கிறபொழுது நன்றாக இருக்கிறது. ஆக, ஏதாவது ஒன்றை மட்டும் கற்றுக்கொண்டு, வேளாண்மையிலே ஈடு படவேண்டுமென்றால், முடியுமா? ஒரு ஏக்கரோ, இரண்டு ஏக்கரோ ஒருவனுக்கு இருக்கட்டும், அல்லது இன்னொரு பண்ணைக்குப் போகட்டும், அவன் தனியாக, சுயமாக, ஒரு தொழிலை மட்டும் கற்றுக்கொண்டதன் காரணமாக, வாழ வழிகிடைக்குமா?

வேண்டுமென்றால், வணிக இயலும் வர்த்தக நடைமுறையும் என்ற பாடத்தைப் படிப்பதன்மூலம், அவர்கள் வேறு பணிகளில் சேரும்போது, துணையாக அது இருக்கும். அல்லது அதன்மூலம் தாங்களே தொழில்நடத்த முயறசிக்கலாம்.

மற்றொரு பாடம், உணவுப் பக்குவப்படுத்தல், பாதுகாப்பு, இன்னொரு பாடம், உணவு விதிமுறை, சத்துணவு, உணவு தயாரித்தல். சத்துணவு, உணவு தயாரித்தல் ஆகியவை வாழ்க்கையிலே பயன்படும். ஆனால், இவையெல்லாம் சேர்ந்து ''குக்கிங் டெக்னாலஜி'' ஆகுமா? மற்றொன்று, உணவு தயாரித்துப் பரிமாறும் கலை. மேல்நிலைப் பள்ளியிலே உணவு தயாரித்துப் பரிமாறும் கலையைச் சொல்லித் தர முடியுமா? 'காட்டரிங் டெக்னாலஜி' என்று சொல்லிக் கொடுத்தும், அவர்களே, எதை எப்படிச் செய்வது என்று தெரியாமல் குழம்புகிறார்கள். சிறு குறைகள் வருகின்றன. இவை வேண்டாமென்று சொல்லவில்லை. ஏதாவது ஒரு தொழில் என்ற பெயரிலே பெறுகிற அறிவை விட, தொடர்புடைய இரண்டு தொழில்களைப் பயில்வதன் மூலம் பெறுகிற அறிவு, ஏதாவது இரண்டு தொழில்களை அவர்கள் படித்து, தங்கள் வாழ்க்கையிலே பின்பற்றுகிற அளவு, அந்தத் தொழில் பாடங்களை இணைப்பதற்கான ஏற்பாட்டை அரசாங்கம் உடனடியாகச் செய்ய வேண்டுமென்று வலியுறுத்திக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, நான் தெரிவிக்க விரும்புவது, இன்றைக்கு அரசாங்கத்தின் சார்பாக வெளியிடப்பட்ட இந்த அறிக்கையிலே காணப்படுகிற ஒரு கருத்து, ''பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள்''—

அருள்கூர்ந்து கவனிக்கவேண்டும் —என்ற தலைப்பில் கொடுக்கப்பட்டிருப்பது, 'பள்ளிகளில் உள்ள வசதிகளைப் பெருக்கும் நோக்குடன் மக்கள் முயற்சியையும் ஆர்வத்தையும் தூண்டும் வகையில் 1978 செப்டம்பர் முடிய பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள் 578 நடந்துள்ளன. பொதுமக்களிடமிருந்து ரூ. 14·32 கோடி மதிப்புள்ள பொருள்கள் பெறப்பட்டுள்ளன' என்பதாகும். ரூ. 14·32 கோடி மதிப்புள்ள பொருள்கள் பெறப்பட்டது எந்தக் காலத்திலே ஆரம்பித்து? அதை ஆரம்பித்தவர் கிழவர் ஆகிவட்டார். 1978 செப்டம்பர் வரையிலே என்று சொல்கிறபொழுது, இந்த அரசு வந்த பிறகு, ஓராண்டு, இரண்டாண்டு ஆன பிறகு, ரூ. 30 இலட்சம், ரூ. 40 இலட்சம் வசூலித்திருக்கிறோம் என்றால், அது பெருமை. அந்த முறையிலே, மாநாடு எப்படி நடந்தது என்று மற்றொரு உறுப்பினர் இங்கே எடுத்துக் காட்டினார். ஏதோ பொருள் வருகிறது ரூ. 20,000, ரூ. 30,000 மதிப்புள்ள பொருள்கள் வசூலாகிறது என்று சொன்னார். ஆனால, இங்கே, ஏதோ இந்த அரசாங்கம், ரூ. 15 கோடி பெறும் அளவுக்குப் பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள் நடத்தியதைப் போலக் கருத்தைத் தருவது எந்த வகையில் பொருத்தம்?

அந்தத் தவறான நோக்கம் இந்தத் துறையின் அறிக்கையில் இருக்கிறது. 1978 செப்டம்பர் வரை ரூ. 303 கோடி செலவில் 41·22 இலட்சம் மாணவர்களுக்கு இலவசமாகச் சீருடை வழங்கப்பட்டுள்ளது. 41 இலட்சம் மாணவர்களுக்கு 3 கோடி செலவல் சீருடை வழங்கப்பட்டு இருக்கிறது 1978 செப்டம்பர் வரை என்று சொன்னால், அந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் இருந்து அப்படிச் சீருடை வாங்கியவர்களில் பெரும்பாலோர் இன்றைக்குப் பெரியவர்களாகி இருப்பார்கள். அறிக்கையில் புள்ளி விவரங்கள் தர வேண்டும் என்றால் எந்தக் காலத்தில் இருந்து என்பதைக் குறிப்பிடவேண்டும். 1965-ல் பார்க்கிறபோது 1962 முதல் 1965 வரை எவ்வளவு கொடுக்கப்பட்டது என்பதைப் பார்த்து நான் மேலவையில் உறுப்பினராக இருந்தபோது பேசியிருக்கிறேன். ஆனால் இந்த அறிக்கையில் அப்படிப்பட்ட முறையில் புள்ளி விவரங்களைத் தரவேண்டியது அவசியம என்ன என்பதைப் பார்க்கவேண்டும். நீங்கள் இப்போது 50,000 பேருக்குச் சீருடை வழங்கியிருக்கிறோம் என்று சொன்னால் கூட அதற்கு என் பாராட்டுகள்.

மதிய உணவு என்பது கல்விக்கு அடிப்படையாக இருக்கிறது என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். அந்தத் திட்டம் ஆரம்ப காலத்தில் இருந்ததை விட மேலும் மேலும் செம்மையாக நடந்து வருகிறது. ஆனால் அந்தத் திட்டத்திற்கு என்று ஏற்கனவே 10 பைசா அரசு மானியமாகவும், 5 பைசா உள்ளாட்சித் துறையும் கொடுப்பது என்ற முறையில் 15

[திரு. க. அன்பழகன்] [1979 மார்ச் 29

பைசா வீதம் கொடுத்தார்கள். இந்தத் தொகை நிர்ணயம் பல ஆண்டுகட்கு முன் செய்யப்பட்டது, எவ்வளவோ விலைவாசிகள் ஏறியிருக்கிறபோது இன்னும் அந்த 15 பைசா என்று சொன்னால் அது எப்படிப் பொருந்தும்? நான் மாணவனாக இருந்தபோது ஒரு ஆசிரியருக்குச் சம்பளம் ரூ. 14, நான் கல்லூரியில் படித்து, டியூட்டராக வேலைக்கு வந்தபோது ரூ. 75. தற்போது டியூட்டருக்கு என்ன சம்பளம் என்றால் 750. பண வீக்கத்தால், பணத் தின் மதிப்பு வீழ்வதால் அல்லது மற்றச் சூழ்நிலைகளால் அது பத்து மடங்கு உயர்ந்திருக்கிறது. அப்படிப்பட்ட உயர்வு தேவை. அப்படிப்பட்ட கோரிக்கைகள் வந்து கொண்டுதான் இருக்கும். நாமும் கொடுக்கவேண்டும். ஆனால் இந்த மதிய உணவுக்காகக் கொடுக்கும் தொகை உதவித் தொகை 15 பைசா என்று வைத்தது அப்படியே இருந்தால், மாண வனுக்கு ஒரு குவளை உணவு கொடுப்பதற்குப் பதிலாக ½ குவளை உணவு தான் கொடுப்பார்கள். ஏழைகளுக்கு, தாழ்த் தப்பட்ட வகுப்பினருக்கு, வீட்டில் சோறு உண்ண வழியில்லாமல் வரக்கூடியவர்களுக்கு உணவு கொடுப்பதற்காக மேலும் 2 கோடி ரூபாய் ஒதுக்கினாலும் இந்த நாடு தாங்கும். ஆகவே தற்போது கொடுக்கப்படும் தொகையை 25 பைசா என்ற அளவிற்கு உயர்த்தவேண்டும். 18 பைசா அரசும் 7 பைசாவை உள்ளாட்சித் துறையிடமிருந்தும் பெற்றுக்கொள்ள லாம். 25 பைசா என்ற அளவிற்குக் கொடுத்தால், நிச்சயமாக அந்தத் திட்டம் பயன் உள்ளதாக இருக்கும். 1 குவளை சோறு என்பதை ½ குவளை என்று மாற்றாமல் போடமுடியும். ஆசிரியர் பெருமக்களை தர்மஸ்தாபனங்கள் நடத்துபவர்கள் என்று கருதக்கூடாது. இது குறித்து இங்கே பல்வேறு கட்சி அங்கத்தினர்கள் பேசிய கருத்துக் களையும் நான் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

BOARDING HOUSES AND ORPHANAGES.

The institutions which are primarily Homes for children having facilities for the education of the inmates are admitted to aid from State Funds.

இந்த வகை அனாதைக் குழந்தைகள் இல்லங்கள் பராமரிக்கும் குழந்தைகளுக்குக் கல்வி வசதியும் வழங்கும் அளவுக்கு மாநில அரசின் நிதி உதவி பெறுகின்றன என்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்தத் தலைப்பில் அவர்களுக்குத் தரப்படுகிற பணத்தைக் கணக் கிட்டுப் பார்க்கிறபோது, ஒரு மாதத்துக்கு ஏறத்தாழ ஒரு குழந்தைக்கு ரூ. 14, சென்னையில் உள்ளவர்களுக்கும், 13 ரூபாய் மற்ற இடங்களில் உள்ளவர்களுக்கும், 18 ரூபாய் மலைப்பகுதிகளில் இருப்பவர்களுக்கும் கொடுக்கப்படுகிறது. ஒரு மலைப்பகுதியில் ஒரு குழந்தையை வைத்துப் பராமரிக்க ரூபாய் 18 போதுமா? அரசாங்க நிலையங்களில் வைத்து

அந்தத் தொகையில் காப்பாற்ற முடியுமா? சென்னை நகரத்தில் ரூபாய் 14 ஒரு குழந்தைக்கு என்று சொல்கிறார்கள். அமைச்சர் வீட்டில் நான் நான்கு குழந்தைகளை கொண்டு வந்து விடத்தயார். ரூபாய் 60 தரத்தயார். அவர் வளர்க்க முடியுமா? அந்தக் காலத்தில் இப்படி இருந்து இருக்கலாம். இந்தக் காலத்தில் அதற்கு மாற்றம் கொண்டு வரவேண்டும். அதைத்தான் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கழக ஆட்சி காலத்தில் தொழு நோயாளிகளைப் பராமரிக்கும தனியார் இல்லங்களுக்கு ஒரு தொழு நோயாளிக்கு ரூ. 15·16 தான் கொடுத்தார்கள். ஒரு தொழுநோயாளயை கிருஸ்துவ சகோதரிகள் நடத்தும் தொழு நோயாளிகள் இல்லத்தில் வைத்துக்கொண்டு சிகிச்சை அளித்தால் அரசாங்கம் அவர்களுக்கு ரூ. 15 தான் கொடுக்கும். ஆனால் ஒரு அரசாங்க மருத்துவ மனையில் அந்த ஒரு நோயாளிக்காக மாதம் ரூ. 100 செலவாகலாம். அப்படிப்பட்ட நிலைகள் இருந்தால் எப்படி அவர்கள் சரியான முறையில் அந்தச் சமூகத் தொண்டினைச் செய்ய முடியும். ஆகவே தான் சொல்கிறேன். அன்று இல்லாவிட்டாலும், இன்றைக்கு அதைச் செய்யுங்கள். அனாதை இல்லங்களில் இருப்பவர் சென்னையில் இருந்தால் மாதம் ரூ. 25-ம் மற்ற இடங்களில் இருந்தால் ரூ. 22-ம் மலைப்பகுதிகளில் இருந்தால் ரூ. 30-ம் என்றும் அரசாங்கம் அளிக்க முன்வர வேண்டும்.

[முற்பகல் 11·30]

நான் பேசுவதற்கு நேரம் அதிகமானாலும் அரசாங்கத்திற்கு உதவியாக இருக்கக்கூடிய கருத்துக்களைச் சொல்கிறேன் என்பதால் சிறிது நேரம் அதிகம் கொடுக்க வேண்டுமென்று தலைவரவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். அதுவும் நான் குறைகளைக் களைய வேண்டுமென்பதற்காகச் சொல்கிறேனே தவிர குற்றங்களைச் சொல்லி மகிழ்வதற்காகச் சொல்லவில்லை என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்குத் தொடக்க நிலைப் பள்ளி ஆசிரியர்கள் வேண்டுகோள் விடுகிறார்கள். கல்லூரி ஆசிரியர்கள், எம். ஏ. படித்தவர்கள், சிறைக்குப் போனால் அவர்கள் சொல்வதைக் கேட்கிறார்கள் ; நாங்கள் வேண்டுகோள் விடுத்தால் கேட்க மாட்டேன் என்கிறார்கள் என்ற எண்ணம் ஏற்பட்டு, இப்போது அவர்கள் சில இடங்களில் உண்ணாவிரதம் இருக்கிறார்கள். உண்ணாவிரதம் இருப்பது நியாயம். ஏனென்றால், வீட்டிலும் வசதி கிடையாது. சிறைக்குச் செல்லும் நிலையும் கிடையாது என்றால் அவர்களுக்கு உண்ணாவிரதம்தான் நியாயமாகத் தோன்றுகிறது. மூன்றாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகளை நிறைவேற்றுவதில் உள்ள குறைபாடுகளையும், பரிந்துரைகளிலுள்ள குறைபாடுகளையும் நிவர்த்திக்க வேண்டுமென்று கேட்டுக்

கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்டக் குறைபாடுகள் வரும் போது அதற்கு 'ஒன் மேன் கமிஷன்' அமைப்பது வழக்கம். ஆனால் அதை அமைக்கப் போவதில்லை என்று ஏற்கனவே மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் சொல்லி விட்டார்கள். அவர்களுக்கு குறைகள் அதிகமாக இருப்பதாகச் சொல்கிறார்கள். ஊதிய உயர்வு சலுகைகளைப் பலருக்குக் காட்டும்போது சிலருக்கு அது காட்டப்படவில்லை என்றால் அது பெரிய குறையாகத்தான் இருக்கும், அந்தக் குறைபாடுகளைப் போக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அகவிலைப்படி வழங்குவதுபற்றி நிதி அமைச்சரவர்கள் ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் எப்போது என்பதை மத்திய அரசு அறிவிப்பு வந்ததற்குப் பின்னால்தான் தெரிவிப்பேன் என்று சொல்லியிருக்கிறார்கள், அந்தக் கருத்தை கைவிட்டு, விரைவில் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

இளநிலை ஆசிரியர்களாக இருக்கிறவர்கள் இப்போது குறைந்து தேய்ந்து விட்டார்கள். அவர்களுடைய எண்ணிக்கை குறைந்து விட்டது. மீதி இருக்கிற 10 அல்லது 15 ஆண்டுகளுக்கு முன்னால் பணியில் சேர்ந்த இளநிலை ஆசிரியர்கள் இன்றைக்கு இடைநிலை ஆசிரியர்கள் பெறும் ஊதியத்தைப் பெறும் கட்டத்தில் இருக்கிறார்கள், ஆகவே, அவர்களை எல்லாம் இடைநிலை ஆசிரியர்களாக ஏற்றுக் கொள்ள வேண்டும் அல்லது இளநிலை ஆசிரியர் என்ற நிலைக்கு சற்று மேலாக ஒரு புதிய நிலையை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு தனி ஊதியம் அந்தப் பொறுப்பின் காரணமாகக் கொடுக்கிறார்கள். அதைப் போன்று தொடக்கநிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கும் ஊதியத்தை உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆசிரியர்களின் குழந்தைகள் கிராமப்புறங்களிலிருந்து உயர் படிப்பிற்காக வெளியூர் போய்ப் படிக்கும்போது அல்லது வெளியிடத்தில் படிக்கும்போது அவர்களுக்கு இலவசக் கல்வி பெற வாய்ப்பு வேண்டுமென்று கேட்கிறார்கள், அந்த வாய்ப்பை உருவாக்கிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக பணி வரன்முறைப்பற்றிச் சொல்கிறார்கள். 1—4—1970க்குப் பிறகு பணியிலே சேர்ந்த இடைநிலை ஆசிரியர்களை பட்டதாரி ஆசிரியர்களுக்கு வரன்முறை செய்திருப்பதைப் போல பணி வரன்முறை செய்ய வேண்டுமென்று கேட்கிறார்கள். 1973ஆம் ஆண்டுக்குப் பின்னால் பணியில் சேர்ந்த பட்டதாரி ஆசிரியர்களுக்குப் பணி வரன்முறை செய்யப்படவில்லை என்று பட்டதாரி ஆசிரிய சொல்கிறார்கள். இந்த 'ரெகுலரை

1979 மார்ச் 29] [திரு. க. அன்பழகன்]

சேஷன்' என்பது வேறுபல உரிமைகளுக்கு அடைப்படையாக இருக்கின்ற காரணத்தால பப்ளிக் சர்விஸ் கமிஷன்—பணித் தேர்வாணைக் கழகத்தின் மூலமாக நியமனம் செய்யப்பெற்ற நாளிலிருந்து இரண்டாண்டுகள் கழித்துதான் பணி வரன்முறை செய்யப்பட வேண்டிய நிலையை மாற்றி, பணியில் சேர்ந்த நாளிலிருந்தே வரன்முறை செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

சில மாநிலங்களில் மருத்துவப்படி வழங்கப்படுகிறது. மகாராஷ்டிரத்திலே ஒரு ஆசிரியருக்கு மாதம் 20 ரூபாய் மருத்துவப்படி வழங்கப்படுகிறது. மற்றொரு மாநிலத்தில் ஆண்டு ஒன்றுக்கு 70 ரூபாய் மருத்துவப்படியாக வழங்கப்படு கிறது. இதில் எது உங்களுக்கு ஏற்றதாக இருக்கிறதோ அந்த அளவுக்கு மருத்துவப்படி வழங்க முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேல்நிலைப்பள்ளிகளைத் தொடங்கும்போது தமிழாசிரியர் கள் வித்வான் படிப்பு முடித்து, அதற்குப்பின் பயிற்சியும் பெற்று 11ஆவது வகுப்பிற்கு பாடம் சொல்லிக் கொடுக்கிற வர்கள் மேல்நிலைப் பள்ளி வகுப்பில் பாடம் நடத்த தகுதி பெற்றவர் அல்ல என்று எந்தக் காரணத்தாலோ ஒரு தவறான எண்ணம் ஏற்பட்டு, முதுகலை—எம்.ஏ. படித்தவர்கள்தான் மேல்நிலைப் பள்ளி வகுப்புக்குப் பாடம் நடத்தத் தகுதி படைத்த வர்களாக இருப்பார்கள் என்ற கருத்து இருக்குமானால் அதை விட பைத்தியக்காரத்தனம் வேறு இருக்க முடியாது என்பது என்னுடைய கருத்து. நானும் முதுகலைப் பட்டம் பெற்றவன் தான், எம்.ஏ. படித்தவன்தான், வித்வான் படிப்பை முடித்து, 11ஆவது வகுப்புக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கிற தமிழாசிரியர் மேல்நிலைப் பள்ளி வகுப்புகளுக்கு பாடம் நடத்த தகுதி யற்றவர் என்பது பெறும் தவறு. கல்லூரியில் எம்.ஏ. படித்தவர் களைவிட வித்வான் பட்டையம் பெற்றவர்கள் எந்த வகையிலும் தமிழ்த் தேர்ச்சியில் குறைந்தவர்கள் அல்ல. இன்னும் சொல்லப் போனால் முதுகலைப் பட்டம் பெற்றவர்களைவிட நல்ல முறையில் பாடம் சொல்லிக் கொடுக்கும் வித்வான் பட்டம் பெற்றவர்களும் இருக்கிறார்கள். ஆகவே, அவர்களது உரிமையைத் தடுக்கக் கூடாது. வேண்டுமானால் இரண்டு ஆசிரியர்களும் இருந்தால், அவர்களில் யார் அதிகமான ஆண்டுபணி 'சர்விஸ்' ஆற்றியவராக இருக்கிறாரோ அவரை மேல்நிலைப்பள்ளி வகுப்புக்குப் பாடம் எடுக்கச் சொல்லலாம், அதில் தவறு இல்லை. தமிழ் படித்தவர் என்பதால் அவருடைய தரத்தைக் குறைக்கும் நிலை நிச்சயமாக மாற்றப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு பி.டி. படித்தவர்கள் தங்களுடைய குறைகளை எல்லாம் அரசுக்குத் தெரிவித்திருக்கிறார்கள். அவர்கள் பி.டி. தேர்வில் வெற்றி பெற்று, தேர்வாணைக் குழு கழகத்தின் மூலம் அரசாங்கப் பணிக்குத் தேர்வு செய்யப்பட்டு, நியமனம்

செய்யப்படும்போது 1970-க்கு பின்னால் பணிக்கமர்த்தப்பட்ட பட்டதாரி ஆசிரியர்கள் ஏற்கெனவை எத்தனை ஆண்டு பணியாற்றி இருந்தாலும் சர்வீஸ் கமிஷன் எந்த நாள் முதல் தேர்வு செய்கிறதோ அதன்பிறகு சில தேர்வுகள் எழுதிய பிறகு இரண்டாண்டுகள் கழித்துதான் பணி உறுதி செய்யப்படுகிறது. இந்த நிலையை மாற்றி அவர்கள் பணியாற்றத் தொடங்கிய நாள் முதல் பணி வரன்முறை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அரசு சார்பாக அவர்களுடைய பணிகள் எல்லாம் அந்த முறையில் வரன்முறை செய்யப்படும் என்று 1975-லே தெரிவிக்கப் பட்டது. அதற்குப் பின்னர் 1976-லே சொன்னார்கள்; 1977-லேயும் சொன்னார்கள்; 1978-லும் உரிய அதிகாரிகள் தெரிவித் தார்கள். ஆனால் இன்னும் வரன்முறை செய்யப்படவில்லை. அப்படிச் சொல்லப்பட்டது செய்யப்படாமல் இருந்தால் அது ஒரு குறை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.]

அடுத்து அரசுப் பள்ளிக்கூடங்களிலே இருக்கின்ற அந்த நிலைமைகளுக்கு அடுத்தபடியாக தனியார் பள்ளிக்கூடங்களிலே இருக்கின்ற ஆசிரியர்களுக்கும் போதிய ஊதியம் தரப்பட வேண்டும் என்று கோருகிறபோது ஆசிரியர் அல்லாதார் வகையைச் சேர்ந்த கண்டிஜென்சி ஸ்டாபைப் பற்றி அந்தக் குற்றேவலர்களைப்பற்றியும் இரண்டாவது ஊதியக் குழுவிலே அவர்களுக்கு கடைநிலை ஊழியர்களைப் போன்று சம்பளம் தரப்பட வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. மூன்றாவது ஊதியக் குழுவிலேயும் அவ்வாறு செய்ய வேண்டும் என்று சொல்லப்பட்டது. ஆனால் செய்யப்படவில்லை. ஆசிரியர் களுக்கெல்லாம் கிடைக்கின்ற விடுப்பும், இதர சலுகைகளும் இவர்களுக்குக் கிடைப்பதில்லை. எல்லாவற்றையும்விட ஒரு துயரமான நிலையை ட்ராஜடியைச் சொல்ல விரும்புகிறேன்.

1,500 மாணவர்களுக்குக் குறைவாகப் படிக்கின்ற பள்ளிகளிலே பணியாற்றுகின்ற வாட்ச்மேன், கார்டனர் போன்ற குற்றவேலர்களுக்கு வெறும் 18 ரூபாய்தான் சம்பளமாகத் தரப்படுகிறது. மற்றவர்கள் எல்லாம் 250 ரூபாயிலிருந்து 400 ரூபாயும் 150 ரூபாயிலிருந்து 300 ரூபாயும் ஊதிய உயர்வு பெறுகின்றபோது இந்தக் குற்றேவலர்கள் மட்டும் வெறும் 18 ரூபாய்தான் பெறுகிறார்கள். அவர்களுக்கு வேறு அலவன்ஸ் கிடையாது. இப்படி 18 ரூபாய்க்கு ஒருவர் பணியாற்ற வேண்டும் என்று நாம் எதிர்பார்க்கலாமா. ஆகவே இதனைக் குறைந்தது 100 ரூபாயாகவாவது வழங்க வேண்டும். மேலும், ஊதியக் குழுவின் சிபாரிசின் அடிப்படையிலே தர முன்வர வேண்டும். அவர்கள், தங்களது கஷ்டங்களையும் வேதனைகளையும் எடுத்துச் சொல்லத் தெரியாதவர்கள். அவர்கள் ஒன்று சேர

முடியாதவர்கள், அங்கங்கே சிதறி இருப்பவர்கள். அந்தக் குற்றவேலர்கள் இன்றைக்குக் குற்றுயிராக இருக்கிறார்கள். பரிதாபத்திற்குரியவர்களாக இருக்கிறார்கள். அவர்களை அப்படிப்பட்ட பரிதாபத்திற்குரிய நிலைக்குத் தள்ள வேண்டாம் என்றுநான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து இங்கே கூட எடுத்துச் சொல்லப்பட்டது பென்ஷன் பற்றி. இந்தப் பென்ஷனை ஓய்வு ஊதியத்தை ஆசிரியர்களுக்கு நேரடியாக அவரவர்கள் வீட்டிற்கு மணி ஆர்டர் மூலமாக அனுப்ப வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அதிலே செலவு அதிகம் ஏற்படும் என்று பார்க்காமல் ஓய்வு பெற்ற ஆசிரியர்களின் நிலையினைக் கருதி அவர்களுக்கு அவ்வாறு மணியார்டர் மூலமாக பென்ஷனைக் கொடுக்க இசைய வேண்டும்.

அடுத்து மேல்நிலைக் கல்வியைப் பொறுத்தவரையில் உரிய படிப்புப் படித்தவர்களை நியமிக்க வேண்டும். எந்த பாடத்தை நடத்த வேண்டுமோ அதை குறைந்த அளவு பட்டப் படிப்பு வகுப்பில் படித்தவர்களையாவது போட வேண்டும். அப்படி இல்லாமல் எம்.ஏ. (வரலாறு) ஹிஸ்டரி படித்தவரை அவர் எம்.ஏ. படித்திருக்கிறார் என்ற காரணத்தால் பட்ட படிப்பில் வேறு பாடத்தில் தேர்ச்சி பெற்றவரை வரலாற்றுக்கு ஆசிரியராகப் போடக் கூடாது எம்.ஏ. லிட்டரேச்சர் அதிகமாக இல்லாத காரணத்தால் ஆங்கிலத்திற்கு வேண்டுமானால் அப்படி போட்டுக் கொள்ளலாம். அப்படி இல்லாமல் மற்ற பாடங்களுக்கும் அந்த பாடத்தில் அடிப்படை பட்டம் இல்லாதவர்களை நியமித்து கொண்டிருப்பது சரியல்ல என்பதை நினைவூட்ட விரும்புகிறேன்.

அடுத்து தொழில் கல்வியைப் பற்றிக் குறிப்பிட விரும்பு கிறேன். இந்த டெக்னிகல் எஜுகேஷன் அதாவது பல்தொழில் நுட்பப் பயிற்சி—பல்தொழில் நுட்பப் பயிற்சி கழகம் என்று இன்றைக்கும் இதற்குப் பெயர் வழங்கப்படுகிறது. இதனைப் பல தொழில் நுட்பக் கழகம் என்றாவது சொல்லுங்கள். உண்மை யிலே சொல்லப் போனால் இதனை தமிழில் பஃறொழில் நுட்பக் கழகம் என்றுதான் சொல்ல வேண்டும். அப்படிச் சொல்வது சிரமம் என்றாலும் இதனை பல தொழில் நுட்பக் கழகம் என்றாவது சொல்லுங்கள்—தொழில் நுட்பக் கல்லூரியிலே பணியாற்றுகின்ற ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்படுகின்ற ஊதியத் திற்கும், கலைக் கல்லூரிகளிலே பணியாற்றுகின்ற பேராசிரியர், துணைப் பேராசிரியர் போன்றவர்களுக்கு வழங்கப்படுகின்ற ஊதியத்திற்கும் வேற்றுமை இருக்கிறது. ஏன் அவ்வாறு கொடுக்கப்பட வேண்டும்? இரண்டு பேருமே கிராஜுவேட் தானே. அதிலேயும் தொழில் நுட்பக் கல்லூரி ஆசிரியர்கள் தொழில் பயிற்சி அளிப்பதற்கான முக்கிய பொறுப்பிலே பணி யாற்றுகிறார்கள். ஆனால், இப்போது இருக்கின்ற நிலைமை என்ன? ஆனால், அங்கே இருக்கின்ற ஆசிரியர்களுக்கு இப்போது 700—40—1100—50—1,300 என்று வழங்கப்படுகிறது. ஆனால்

[திரு. க. அன்பழகன்] [1979 மார்ச் 29

கலைக் கல்லூரியில் உள்ளவர்களுக்கு 1100—50—1,500 என்று வழங்க உறுதி கூறப்பட்டுள்ளது. இப்படிப்பட்ட வேறுபாடுகள் நீக்கப்பட வேண்டும். அவர்கள ஒரே வகையான படிப்பு படித்தவர்களாக இல்லாவிட்டாலும் ஏறத்தாழ ஒரே தகுதி பெற்றிருப்பவர்கள்தானே.

[முற்பகல் 11–40]

அப்படிப்பட்ட நிலை உள்ளது என்பதை மிகத் தெளிவாகத் தெரிவித்திருக்கிறார்கள். எங்களுக்கு 200, 300 மொத்தத்தில் குறைந்து விடுகிறது. பி.ஈ. படித்தவர்கள், டெக்னிகல் கோர்ஸ் படித்தவர்கள், டிப்ளமா படித்தவர்கள், அதோடு டீச்சர்ஸ் டிரெயினிங் சர்டிபிகேட் பெற்றவர்கள் எல்லாம் இந்தக் குறை களைத் தெரிவித்திருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் இதைக் கவனிப்பார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

அடுத்து, தமிழ் வளர்ச்சியைப் பற்றிக் குறிப்பிட விரும்பு கிறேன். தமிழ் வளர்ச்சிக்கு இந்த அரசு பொறுப்பு எடுத்து கொண்டு, அதற்கான செயல்களைச் செய்துகொண்டு வருகிறது. 1977–78 ஆம் ஆண்டில் சிறந்த தமிழ் நூல்களுக்கான பரிசுத் தொகைக்காக 45,000 ரூபாய் ஒதுக்கப்பட்டது. ஆனால், இந்த 1977–78லே ஒதுக்கப்பட்ட பணம் அதற்காகச் செலவழிக்கப் பட்டதாகத் தெரியவில்லை. சிறந்த நூல்களை ஊக்குவிப்பதற் காக அரசு இந்த ஆண்டு அவ்வாறு எந்தத் தொகையும் ஒதுக்கிய தாகத் தெரியவில்லை. தமிழ் நூல்களில் பல்வேறு நூல்கள் அதாவது தொழிற் கல்வி சம்பந்தமான நூல்கள், கதை நூல், கட்டுரை நூல், பல்வேறுபட்ட பொருளாதார நூல், வரலாற்று நூல், அரசியல் நூல், சட்ட நூல் என்று இப்படி பத்து, பன்னிரெண்டு நூல்களுக்குப் பரிசுகள் வழங்கப்படாத நிலமை இருப்பதுடன் இந்த ஆண்டு பணம் ஒதுக்கியிருப்பதாகவும் தெரிய வில்லை. அரசவைக் கவிஞருக்கு ஊக்கம் ஏற்பட எத்தனையோ வழி இருக்கிறது. ஆனால் மற்ற எழுத்தாளர்கட்கு நூல் எழுத ஊக்கம் ஏற்படுத்த இது தவிர வேறு என்ன வழி இருக்கிறது ?

அடுத்து, ஒன்றை நான் சொல்ல விரும்புகிறேன். தமிழகத் திலே திரு. அவினாசிலிங்கம் செட்டியார் அவர்கள், அமைச்சராக இருந்த காலத்திலே தமிழில் கலைக் களஞ்சியம் ஒன்றை உரு வாக்குவதற்கான நல்லெண்ணத்தோடு, பொதுமக்கள் இடத்தில் நிதி பெற்று, இன்னும் பல்வேறு இடத்தில் நன்கொடை பெற்று, இந்தக் கலைக் களஞ்சியத்தை ஆரம்பித்தார்கள். ஐந்து ஆறு ஆண்டுகளுக்கு முன்னே இந்தக் கலைக் களஞ்சிய வேலை முடிவு பெற்று, அதற்குப் பிறகு குழந்தைகள் கலைக் களஞ்சியம் ஆரம்பிக்கப்பட்டு, அதுவும் முடிவுபெற்று, பிறகு இந்தக் கலைக் களஞ்சியத்தின் மறு பதிப்பு வர வேண்டும் என்றும் தீர்மானிக்கப் பட்டது. அதிலே, சேர்க்கப்பட வேண்டிய பல பொருள்கள் இருக்கின்றன. சர். பி. டி. தியாகராஜ செட்டியார் அவர்கள் பற்றியும், முதல் பிரதமராக இருந்த பனகல் அரசரைப் பற்றியும்,

1979 மார்ச் 29] [திரு. க. அன்பழகன்]

இன்னும் மிகுந்த செல்வாக்குப் பெற்றவர்கள் பற்றியும் அதிலே இடம் பெறவில்லை. மிகப் பெரிய சீர்திருத்தவாதியும், உலகத்திலேயே தலை சிறந்த பகுத்தறிவாதி என்று பாராட்டப் பெற்ற பெரியார் அவர்களைப் பற்றியும் அதிலே இடம் பெறவில்லை. அதுபோல், நாம் எல்லாம் போற்றக்கூடிய பேரறிஞர் அண்ணா அவர்கள் பெயரும் இடம் பெறவில்லை. எனவே, இந்தக் கலைக் களஞ்சியம் எனபது அடியோடு நின்றுவிடக்கூடிய ஒன்றல்ல ; தொடர்ந்து சேம்பர்ஸ் டிக்ஷனரிபோல், ஆக்ஸ்போர்ட் டிக்ஷனரிபோல், தொடர்ந்து செயல்படும் வகையில் மேலும் பல ஆண்டுகளுக்குத் தொடர்ந்து இருக்கவேண்டிய ஒரு அமைப்பாகும். அப்படி மேலும் தொடர்ந்து நடப்பதற்காக இந்த அரசு ஐந்து லட்சம் ரூபாய் ஒதுக்கியிருப்பதாகக் கேள்விப்படுகிறேன் ; அதற்கு பாராட்டுகிறேன்; அப்படி ஐந்து லட்சம் பணம் ஒதுக்கினாலும், நிர்வாகத்திலே உள்ளவர்கள் அதிலே சில சலுகைகளைத் தேடிக் கொள்ளுகிறார்கள் என்று கூறப்படுகிறது அவர்களால் ஏற்கெனவே கலைக் களஞ்சியத்திற்காக திரட்டப்பட்ட ஐந்து ஆறு லட்சம்ரூபாய் வேறு எதற்கோ முடக்கப்பட்டிருப்பதாகவும், இந்த ஐந்து ஆறு லட்ச ரூபாய் தமிழ் வளர்ச்சிக் கழகம் என்ற இன்னொரு அமைப்பிற்குப் போய்விட்டதாகவும், இந்த பணியிலே இருபது ஆண்டு காலமாக உழைத்துத் தேய்ந்தவர்களுக்கு எந்தப் பாதுகாப்பும் தரவில்லை என்றும் சொல்லப்படுகிறது.

விஞ்ஞானத் துறையில் ஏடுகள் பலவற்றைத் தமிழில் எழுதி வரும் திருப்பதி பல்கலைக் கழகத்தின் முன்னாள் பேராசிரியருமான திரு. ந. சுப்பு ரெட்டியார் அவர்களே இந்தக் கலைக் களஞ்சியத்தின் ஆசிரியராக அண்மையில் நியமிக்கப்பட்டிருக்கிறார். அவர் ஏற்கெனவே தமிழில் விஞ்ஞானத் துறையில் 36 நூல்களை வெளியிட்டிருக்கிறார். நீண்ட காலமாக அவரை அறிவேன் எந்தக் கட்சியையும் சார்ந்தவர் அல்ல. உங்கள் கட்சியைச் சார்ந்தவரும் அல்ல ; எங்கள் கட்சியைச் சார்ந்தவரும் அல்ல. தமிழ்ப்பற்று மிக்கவர். தமிழ்ப்பற்றும் விஞ்ஞானத்தைத் தமிழில் கொண்டுவரவேண்டும் என்ற ஆர்வமும் உள்ளவர். அப்படிப்பட்ட ஒருவரை இயக்குநராகப் போட்டு, ஆறு மாதங்கள் பணிகள் நடைபெற்ற பின்னர், அவருடைய முற்போக்கு எண்ணங்களின் மூலமாக பல பணிகள் தொடங்கப்பட்டும், இப்போது ஜூலை மாதத்தோடு அவரை அனுப்பிவிடுவதற்கு வழி செய்திருக்கிறார்கள் என்று கேள்விப்படுகிறேன். நான் கேட்டுக்கொள்வது, இந்த கலைக்களஞ்சியப் பணியை அரசே எடுத்துக்கொண்டு, அதில் பணியாற்றுகின்றவர்களுக்கும் பாதுகாப்பு தருவதோடு, இப்போது தந்திருக்கின்ற ஐந்து லட்சம் ரூபாயோடு, இன்னும் ஐந்தாறு லட்சம் ரூபாய் அதிகமாக தந்து அதில் பணியாற்றுகின்றவர்களைக் கொண்டு அதைச் செயல்படுத்த விரும்புகிறேன். அந்த அமைப்பின் நிருவாகத்தை நடத்தும் பெரியவர்களை நான் மதிப்பவனே. ஆனால் அவர்கள் பெரியவர்கள் அல்ல என்ற உண்மை இப்போது தெரிகிறது— ஏன் என்று அதற்கு விளக்கம் சொல்லச் சொல்லாதீர்கள். இந்தப் பணியை முக்கியமாக ஏற்று அரசு சிறந்த முறையில் நடத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. க. அன்பழகன்] [1979 மார்ச் 29

அடுத்து உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் நடைபெறுவதற்கு ஆண்டுக்கு மூன்று லட்சம் ரூபாய் செலவழிக்கப்பட்டு வருகிறது. இதற்கு International Tamil Reseach Institute என்று பெயர். "இன்டர்நேஷனல்" என்று அண்ணா அவர்கள் பெயர் வைத்ததே — உலகத்தில் தமிழை — நம்மைவிடப் பல்வேறு நாடுகளில் உள்ளவர்கள் நுணுக்கமாக ஆராயக் கூடியவர்களாக இருக்கிறார்கள். தமிழ் நாட்டினுடைய கலையை தமிழ் நாட்டினுடைய பண்பை தமிழ்நாட்டின் வரலாற்றை தமிழ்நாட்டிலுள்ள சுவடிகளை நுணுக்கமாக ஆராய்ந்துள்ள ஜெர்மானிய நாட்டுக்காரர்கள் பலர் என்பதை நாம் அறிந்திருக்கின்றோம். ஆனால், நமக்கு ஏற்பட்ட சூழ்நிலை தமிழ் நாட்டுக்கு என்று ஏற்பட்ட சாபக்கேடு, தமிழர்கள் சுரணையற்ற சமுதாயமாக ஆகிவிட்ட சூழ்நிலையில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் நிலைமையில் இருக்கிறோம். தஞ்சை சரஸ்வதி மகாலில் ஏறத்தாழ 2,000 தமிழ் சுவடிகளை இன்னும் அச்சடித்து வெளியிடுவதில் அவசரமும் பிடிப்பும் இல்லாத சூழ்நிலை, அதிலும் மத்திய அரசு உதவும் அளவுக்குத் தான் தமிழ்ச்சுவடிகளை தமிழில் அச்சடிக்க முடியும் என்ற நிலை அதில் அங்கு பொறுப்பில் உள்ள சமஸ்கிருத பேராசிரியர் சொன்னால்தான் தமிழ் சுவடிகளை அச்சடித்துக் கொண்டுவர முடியும் என்கின்ற நிலை இது அரசின் நேர்முகப் பொறுப்பில் இயங்கவில்லை என்றே, கருதுகிறேன். ஆனால், நாம் சார்ந்திருக்கின்ற மொழிக்கும், சமுதாயத்திற்கும் சம்பந்தப்பட்டது. இந்த நிறுவனம் இன்னும் வளைந்து கொண்டிருக்கிறது. இந்த நிலையை மாற்றி, இந்த 2,000 சுவடிகளையும் இன்னும் இரண்டு ஆண்டு காலத்தில் அச்சிட்டு வெளியிடக்கூடிய வகையில், வேலையில்லாது இருக்கும் தமிழ் புலவர்கள் ஐம்பது பேர்களை நியமித்து, வேலையில்லாது இருக்கும் தமிழறிஞர்களைப் பயன்படுத்தி — இந்த தமிழ் செல்வத்தை காக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன் சமஸ்கிருத மொழியில் தான் மூல நூற்கள் உள்ளன, தமிழ் மொழியில் மூல நூல் இல்லை என்கின்ற ஒரு கருத்து பலப்பல ஆண்டுகாலமாக இருந்து வந்திருக்கிறது. நானே இதைப்பல முறை கேட்டிருக்கிறேன். அந்த நிலைமையை மாற்றுகின்ற அளவில் சரஸ்வதி மகாலில் உள்ள நூல்கள் வெளிவர வேண்டும். அடுத்து உலக நாடுகளில் நடைபெறும் தமிழ் மொழி — இலக்கியப் பண்பாட்டு ஆராய்ச்சியினை இணைக்கும் ஆற்றலை உருவாக்கவே உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் காணப்பட்டது. இங்கு வெளிநாட்டிலிருந்து வருகின்றவர்கள தமிழ் ஆராய்ச்சியையே மேற் கொள்வதற்கான போதிய வாய்ப்பு உருவாகவில்லை என்பது பெரிய குறை. பிரெஞ்சு நாட்டுக்காரர் ஒருவர் — பாண்டிச்சேரியிலிருப்பவர் — தமிழ் அறிஞர் அவர்கூட இந்தக் குறையை தெரிவித்தார். அதாவது இதற்கான "அப்ரோச்" இல்லை என்றும், போதிய அளவில் ஆராய்ச்சி முறையில் நடைமுறை இல்லை என்றும் சொல்லுகிறார்கள். என்ன நடைபெறுகிறது என்றால் ஏதோ "ஹாபி" போல கூடி தமிழ் விரிவுரைகள் நிகழ்த்திச் செல்லுகின்ற நிலைமையைப் பார்க்க முடிகிறது. இதற்கு உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் என்னும் பெயருக்கு இது ஏற்றதாகாது. தமிழ்நாட்டு தமிழ் ஆராய்ச்சி நிறுவனம்

என்று வேண்டுமென்றால் வைத்துக்கொள்ளுங்கள். உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் என்றால் — அது இன்டர் நேஷனல் ஸ்டாண்டர்டு உடையதாக, உலகத் தொடர்பு வளர்ப்பதாக இருக்க வேண்டும். இதில் பணியாற்றுபவர்கள் பலர் நல்ல மொழி நூல் வல்லுநர்கள், அவர்களில் ஒருவர் பேராசிரியர் சேது பிள்ளை போன்றவர்களால் பாராட்டப்பெற்றவர், ஐம்பது வயதை நெருங்கும் நல்ல இளைஞர், ஐம்பது வயதாகிறது என்றாலும் எனக்கு அவர் இளைஞர் தான். அவர் பல நல்ல பணிகளைத் தமிழுக்குச் செய்து கொண்டிருக்கிறார், அவர் தமது பணி தடைப் படுத்தப்படுகிறது என்று குறைபட்டுக்கொள்கிறார். நல்ல பல காரியங்களுக்குத் தடை வருகிறது, பல முறை தவறுகளைச் செய்கிறார்கள் என்றெல்லாம் சொல்லப்படுகிறது. கல்வி அமைச்சர் அவர்களுக்கு நல்லெண்ணத்தோடு இதைச் சொல்ல விரும்புகிறேன். இந்த அமைப்பை எந்த அளவு நல்ல முறையில் செயல்படுத்துவதற்கு முடியுமோ அந்த அளவுக்கு திருத்தி அமையுங்கள் அங்கே பணியாற்றுவதில் பலர் ஆங்கிலத்தில் தமது ஆராய்ச்சியினை வெளியிடாமல் தமிழில் எழுதினாலும், அவற்றைப் பின்னர் மொழி பெயர்த்துக் கொள்ளலாம் என்னும் வகையில் உரிமை வழங்க வேண்டும். எந்த முறையில் எந்த நோக்கத்துக்காக இந்த நிறுவனம் பயன்படவேண்டுமோ அந்த அளவுக்கு மாற்றி அமையுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து நான் தெரிவிக்க விரும்புவது: International Centre of Dravidian Linguistics என்னும் அமைப்புக்குச் சென்ற ஆண்டு நிதி அமைச்சர் அவர்களோடும், கல்வி அமைச்சர் அவர்களோடும் பேசியதின் பின்னர் அதற்கென நிதியை ஒதுக்கித் தருவதாக சொன்னார்கள். இந்நிறுவனத்தின் அரங்குக்கு தொல்காப்பியர் பெயரை வைக்க வேண்டும் என்றும் முடிவு செய்துள்ளனர். அதற்கு 4.51 லட்சம் ரூபாய் அளவுக்கு, நான்-ரெக்கரிங் தொகையாகத் தருவதாகவும், அத்துடன் ஆண்டுக்கு ஒரு இலட்சத்து முப்பத்தாறாயிரம் ரூபாய் நடைமுறை செலவுக்கு ஐந்தாண்டுகட்குத் தருவதாகவும் அரசு இசைந்துள்ளது. இந்த ஆணையில் விளக்கங்கள் இருக்கின்றன. இதற்கான இசைவு தரப்பட்டது ஜூலை மாதத்தில், பின்னால் நிதி ஒதுக்குமாறு ஆணையிடப்பட்டது. செப்டம்பர் மாதத்திலும் கிடைக்காமல் திரும்பத் திரும்ப இதை எடுத்துச் சொல்லப்பட்டதின் காரணமாக டிசம்பர் மாதத்தில் இதற்கான அரசு ஆணை வெளியிடப்பட்டது. Government of Tamil Nadu Education Department G.O. No. 2242 Education-ல் ஆணை வெளியிடப்பட்டது.

[முற்பகல் 11—50]

இந்த அறிக்கை வந்தும் ஜனவரி 15ஆம் தேதி வரை பணம் கிடைக்கவில்லை என்ற நிலை இருக்கிறது. இலாக்காக்களில் இருக்கின்ற ஒருங்கிணைப்புத் தன்மை காரணமாக, மார்ச்சு, ஏப்ரலில்

பேசப்பட்டு, ஜூலையில் ஒத்துக் கொண்டு செப்டம்பரில் அதற்கு உறுதிமொழி கொடுத்து, டிசம்பரில் ஆணை பிறப்பித்து, ஜனவரி 15 வரையிலும் நிதி கிடைக்கவில்லை என்று சொல்லப்படுகிறது. மற்ற மாநிலங்களிலே இருந்து பணம் வந்து, செலவழிக்கப் பட்டுள்ளது எனத் தெரிகிறது. இன்றைக்கு இந்ததிராவிடியன் லிங்கு விஸ்டிக் இன்டர் நேஷனல் இன்ஸ்டிடியூட்டுக்கு இப்படிப்பட்ட நிலை என்ற ஒரு கருத்து இருக்கிறது. நிதி உதவி பெற்றிருக்கிறார்களே தவிர, இது குறித்து டிமாண்டிலே தனியாக ஒதுக்கப்பட்டிருப்ப தாகக் காணப்படவில்லை. டிமாண்டிலே இல்லா விட்டாலும், சப்ளிமெண்டரி டிமாண்டிலே சேர்த்துக் கொள்கின்ற உரிமை உங்களுக்கு இருக்கின்றது என்று சொல்லலாம். டிமாண்டிலே எங்காவது ஒரு இடத்தில், தலைப்பில், தமிழ்க் கலை, பண்பாடு என்னும் தலைப்பில் இடம் பெற்றிருக்கும் என்று இங்கு கொடுத் துள்ள விளக்கமான, நிதி ஒதுக்க டிமாண்டுகளிலே கடந்த 3 நாட் களாகத் தேடிப்பார்க்கிறேன். அத்தகைய தலைப்பு எதுவும் இல்லை. ஆனால் மேதமட்டிகல் இன்ஸ்டிடியூட், பெங்களூர் ஆங்கில இன்ஸ்டிடியூட் பற்றி யெல்லாம் இருக்கிறது. கேரள அரசாங்கம் மதித்து தொல்காப்பியரைப் போற்றி அங்கே அரங்கு அமைக்கும் நிலை இருக்கிறது. ஆனால், இங்கே பல ஆண்டு காலம் வரை அகஸ்தியர் பேரன்தான் தொல்காப்பியர் என்று சொல்லிக் கொண்டு வந்தார்கள். தற்போது அமைச்சர் அவர்கள் இதிலே அக்கறை எடுத்துக் கொண்டு, செயல்பட விரும்புகிறேன். இதற் காகத் தீவிரமாக செயல்பட்டு வரும் வி. ஐ. சுப்பிரமணியம் தென்னாட்டு மாநிலங்களில் எல்லாம் சுற்றிவந்து, டெல்லியிலும் வாதாடி அதற்கான உதவிகளைக் கேட்டு, கேரளத்தில் இப்படிப் பட்ட உதவிகளைப்பெற்று இன்ஸ்டிடியூட்டுக்கும் நமக்கும் பெருமை யைத் தேடித்தந்திருக்கிறார். அவர் என்னைப் பார்க்க வரும் போது திருநீறு பூசிக்கொண்டு வருவார். பக்திமான். அதை நான் ஒரு குறையாகச் சொல்லவில்லை. ஆனால், அவர் கேரளா வில் உலகத்தாரால் பாராட்டப்படும் தமிழுக்கும், தமிழ் மொழிக் குமான சிறப்பினைச்செய்யும் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருக் கிறார்கள். அவரது அரிய முயற்சிக்கு அவ்வப்போது காலத்தில் நாம் உதவி செய்ய முடியாதது வருந்தத்தக்கதாகும்.

டெல்லியிலே நடைபெற்ற மாநில ஆட்சி மொழிகள் மாநாட் டிலே அமைச்சர் அவர்கள் கலந்து கொண்டார்களா என் பது தெரியவில்லை. முன்னர் எழுந்த கேள்வி ஒன்றுக்கு அவரது பதிலில் அப்படிக் கலந்து கொண்டதாக சொல்லப்பட வில்லை. இதை ஒரு பெரிய குற்றமாகச் சொல்லவில்லை. அமைச்சர் கலந்து கொள்ளவில்லை, செயலாளர் மட்டும் கலந்து கொண்ட தாகச்சொல்லப்படுகிறது. ஒவ்வொரு மாநிலத்திலும் ஆட்சி மொழித் தீர்மானம், அந்தந்த மாநிலத்தின் சட்ட மன்றத்தில், அரசாங்கத் தினால் தான் நிறைவேற்றப்படவேண்டுமே தவிர, டெல்லியிலே ஒரு மாநாடு கூட்டி, அந்த மாநாட்டிலே ஆட்சி மொழியை நடை முறைப் படுத்துவது பற்றிய தீர்மானம் கொண்டு வருகின் அளவிற்கு. அதிலும், அந்த மாநாட்டிலே 8, 10 மாநிலத்தவர்

1979 மார்ச் 29] [திரு. க. அன்பழகன்]

இந்தி மொழிக்காரர்கள், ஆனால் தமிழகத்திலே இருந்து ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரி, தன் பதவியைக் காத்துக் கொள்ள வேண்டு மென்னும் நிலையில் உள்ள ஒருவர், கேரளாவிலிருந்து ஒருவர், ஆந்திரத்திலிருந்து ஒருவர், வங்காளத்திலிருந்து ஒருவர், என்று நான்குபேர் தென்னாட்டவர்களாகக் கூடி அந்த மாநாட்டில் தீர் மானம்போட்டால் அந்தத் தீர்மானங்கள் எப்படி இருக்கும் என் பதைப் பார்க்க வேண்டும். தமிழை ஆட்சி மொழியாக நடை முறைப்படுத்த வேண்டுமென்பதற்கான முயற்சியை எடுத்துக் கொள்ளுங்கள் என்று இப்படி சொல்லிக்கொண்டே வந்து, மைய அரசு இந்தி மொழியை ஆட்சி மொழியாக்குவதற்கு ஆக்கமும் ஊக்கமும் தருகின்ற வகையிலே, இந்தத் தீர்மானங்களில் இடம் பெற்றால் அது நல்லதா என்பதைத் தமிழக அரசைக் கேட்க விரும்புகிறேன். டெல்லியிலே ஒரு மாநாட்டை நடத்தி, அதன் மூலம் தமிழை ஆட்சி மொழியாக்குவதற்கான அக்கறையை அவர்கள் காட்டத் தேவையில்லை. முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள் தமிழை ஆட்சி மொழியாக நடை முறைப் படுத்துவது குறித்து இங்கு தீர்மானத்தைக் கொண்டு வரட்டும். இதற்கு டெல்லியிலே நடக்கும் மாநாட்டில் நாம்கலந்துகொள்ள வேண்டியதில்லை. திரு. அரங்கநாயகம் அவர்கள் இந்த அறிக் கையிலே உள்ள ஒவ்வொரு வரியையும் படித்துப் பார்க்கவேண்டும் மாநில மொழிகளை ஆட்சி மொழியாக்குவதாகக் கூறிக்கொண்டு ஆங்கிலத்தைக் குழி தோண்டி புதைத்து, இந்தியைப் புகுத்து வதற்காக இப்படி மூடி மறைத்துப் தீர்மானம் நிறைவேற்று வதற்கு இடந்தரவேண்டுமா?

'Indirect influence of Hindi over regional languages by extinguishing the usage of English.'

என்ற முறையில் ஆங்கிலத்தை குழிதோண்டி புதைப்பதற்காக ஒரு மறைமுகமான கருத்தை அவர்கள் வலியுறுத்தியிருக்கி றார்கள். தமிழர்களாகிய நாம் தமிழ் ஆட்சி மொழியாக வேண்டுமென்பதில், அவர்களுடைய மொழி உயர்விற்குக் குறைந் தவர்கள் அல்ல. ஆனால், சில நேரத்திலே தோல்வி அடைந் திருக்கலாம். கல்வி அமைச்சர் அவர்கள் கூட ஆங்கிலம் படித்திருப் பதால் அவருக்கு இந்தத் தந்திரம் விளங்கும் என நம்பு கிறேன். இந்திக்கு எதிராக ஆங்கிலம் பயன்படுவதில் தவறில்லை ஆனால், தமிழைக் காப்பதற்காகவும் இந்தியை எதிர்ப்பதற்காக வும் ஆங்கிலம் தேவை. டாக்டர் ஏ. எல். முதலியார் அவர்கள் ஆங்கிலம் கற்றிருந்ததால்தான் டெல்லியிலேயும் நாட்டிலேயும் செல்வாக்குப் பெற முடிந்தது. ஆங்கிலம் தெரியாமல் இருந் தால், அத்தகைய ஒரு மதிப்பை அவர் பெற்றிருக்க முடியாது அடுத்து அகில இந்தியத் தேர்வுகளில் விடைத் தாள்கள் அந்தந்த மாநிலத்தின் ஆட்சி மொழிகளிலே இருப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், கேள்வித்தாள்கள் ஆங்கிலத்திலும் இந்தியிலும் மட்டுமே வழங்கப்படும் என்று கூறப் படுகிறது. இந்த மாநாட்டில், எல்லா மொழிகளிலும் கேள்வித் தாள் இருக்கும் என்று கூறப்பட்டுள்ளது.

இந்தக் கருத்தை மத்திய அரசு ஏற்றுக் கொண்டதா, எல்லா மொழிகளிலும் கேள்வித்தாள் இருக்கவேண்டுமென்று இந்த மாநாடு சொல்லியிருக்கிறது. ஆனால் ஏற்கப்படவில்லை. அடுத்து ஒவ்வொரு மாநிலத்திலும் அது இயற்றப்படும் சட்டங்கள் அவரவர்கள் தாய் மொழியிலும், ஆங்கிலத்திலும் இருக்க வேண்டும் என்று கூறினாலும் எல்லாச் சட்டங்களையும் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்க வேண்டுமென்று அவசியம் இல்லை. சட்டங்களைத் தாய்மொழியில் நேரடியாக இயற்ற லாம் என்று கூறப்படுகிறது. அப்படியானால், லிங்க் லாங் வஜ் ஆக எது இடம் பெறும்? மத்திய அரசு மத்திய சட்டங்களை மூலத்தில் இந்தியில் இயற்ற ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்று இந்த மாநாடு சொல்கிறது. மையச் சட்டத்தை இந்தியில் இயற்ற வேண்டுமென்று சொல்ல அனைத்து மாநிலங்களின் பிரதிநிதிகள் கொண்ட ஒரு ஆட்சி மொழி மாநாடா? ஆட்சி மொழி என்பது நம்மைப் பொறுத்ததே தவிர, டில்லியைப் பொறுத்தது அல்ல. அவர்கள் சொல்லுகிற யோசனையை வைத்துக் கொண்டு தமிழ்நாடு செயல்பட வேண்டுமென்ற நிலை அறிஞர் அண்ணா அவர்களின் பெயரால் செயல்படுகின்ற நமக்கு அவசியம் இல்லை. இதிலே என்னுடைய இறுதியான வேண்டுகோள்—கல்வி என்பது மத்திய அரசின் ஆதிக்கமுடைய கன்கரண்ட் பட்டியலில் இருந்து மாநில அரசு பட்டியலுக்குக் கொண்டு வரவேண்டுமென்று ஏற்கெனவே இந்த அரசு சொல்லியிருக்கிறது, எல்லாக் கட்சி களும் சொல்லியிருக்கின்றன. சட்டமன்றத்தில் சொல்லியிருக் கிறோம். இந்த அறிக்கையில் அந்தக் கருத்து இடம் பெற வில்லை. கல்வித் துறையில் மத்திய அரசுக்கு அதிகாரம் செலுத்த இடம் கொடுக்கக்கூடாது. ஆலோசனை சொல்ல லாம். அமெரிக்காகாரன்கூட விஞ்ஞானத்தில் ஆலோசனை சொல்லலாம்; ரஷ்யாக்காரன் பொருளாதாரத்தில் ஆலோசனை சொல்லலாம். இங்கிலாந்து நாட்டுகாரன் ஆலோசனைச் சொல்லலாம் அது வேறு. ஆனால் மத்திய அரசு அதிகாரத்தில் 'கல்வி' இடம்பெறக்கூடாது,

பள்ளி சாராக் கல்வி என்ற முறையைக் கொண்டு வந்து அதன் மூலம் முதியோர் கல்வி மூலமாக மத்திய அரசின் நேரடி தயவு தாட்சணியத்தைப் பெற சில அமைப்புக்களை உருவாக்கி சில பேர், கல்வியில் அக்கறை இல்லாதவர்கள் பணம் சம்பாதிக்சு கூடிய ஏற்பாடுகள் இருக்கின்றன என்ற விவரங்கள் இருக் கின்றன. கல்வியில் முழு உரிமையும் மாநில அரசுக்குத்தான் இருக்க வேண்டும். அந்த உரிமை பாதுகாக்கப்படவேண்டும். அதுதான் சமுதாயத் துறையில் நம்மை உயர்த்தும். மத்திய அரசு கல்வித் துறையில் ஆலோசனை வழங்கலாமே தவிர, சட்டம் இயற்ற எந்த உரிமையும் இருக்கக் கூடாது.

பல்கலைக் கழக மானியக் குழுவுக்கு கூட இன்றுள்ள அளவுக்கு உரிமை இருக்கக்கூடாது. எந்த விகிதாச்சாரத்தில் உதவித் தொகை இருந்தாலும் மாநில அரசு மூலம் வழங்க

வேண்டும். பல்கலைக் கழக மாநிலக் குழு அகில இந்திய செல்வாக்கை பயன்படுத்தி சில மாற்றங்களைச் செய்ய சொல்வதன் மூலம் நம்முடைய கல்வித் துறையில் குழப்பங்கள் ஏற்பட இடம் ஏற்படுகிறது.

சட்டக் கல்லூரியில் உள்ள நிலைமை பற்றி ஏற்கெனவே கடந்த ஆண்டும் அதற்கு முதல் ஆண்டும் பேசியிருக்கிறேன். அதிலே உள்ள குறைகள் சில களையப்பட வேண்டுமென்று கடந்த ஆண்டே கூட பேசியிருக்கிறேன். அங்கு பல பேர் பணிாற்றுகிறார்கள். பேராசிரியர்கள் பலர் நிரந்தரமாக்கப் படவில்லை. கடந்த எட்டாண்டு காலமாக ரெகுலரிசேஷன் நடைபெறவில்லை. இன்று பணியாற்றுபவர்கள் பப்ளிக் சர்விஸ் கமிஷனால் தேர்ந்தெடுக்கப்பட்டு தகுதியுள்ளவர்கள் நிரந்தரமாக்கப்பட வேண்டும்.

டைரக்டர் ஆப் லீகல் ஸ்டடீஸ் நியமிக்க வேண்டும். ரிடையர்டு ஜட்ஜ் எவ்வளவோ பேர் இருக்கிறார்கள். உங்களுக்கு வேண்டியவர்களாகப் பார்த்து வேண்டுமானாலும் போட்டுக் கொள்ளலாம். அவ்வாறு போடமுடியாத காரணத்தால் கல்லூரி சரியாக நடைபெற முடியவில்லை. ஒரு ஆண்டுக்கு 30 நாள், 40 நாள்தான் கல்லூரி நடக்கிறது என்று ஆளும் கட்சி மாணவரே போர்டு எழுதி வைக்கிறார்; விளக்கத்திற்குப் பின் போக விரும்பவில்லை. சென்னை சட்டக் கல்லூரியின் முதல்வர் He is officiating as Principal of Madurai Law College. சென்னையில் இருக்கும் பிரின்சிபால் 'மதுரையில் அபிஷீயேட்டிங் பிரின்சிபால். மதுரையில் இருக்கும் வைஸ் பிரின்சிபால் சென்னையில் அபிஷியேட்டிங் பிரின்சிபால். இங்கிருந்து அவரை ஏன் டிரான்ஸ்பர் செய்யாமல் இப்படி வைத்திருக்கிறார்கள்? அபிஷியேட்டிங் என்று சொல்லி அந்தப் பொறுப்பில் இருப்பதாகவும், இந்தப் பொறுப்பிலும் இருப்பதாகவும் குழப்பும் நிலைமை ஏன்? 800 மாணவர்கள் சேர்க்கப்பட வேண்டிய சட்டக் கல்லூரியில் இந்த ஆண்டு 360 மாணவர்கள தான் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். திடீரென்று அந்த எண்ணிக்கையைக் குறைக்க என்ன காரணம் என்று கேட்டால் குழப்பமாக நிலைமை இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். குழப்பம் என்று இல்லை. 360 ஆகக் குறைத்த இந்த ஆண்டு தான் மாணவர் தேர்வு எழுதும்போது கூட குழப்பம் ஏற்பட்டிருக்கிறது. தேர்வு எழுதும் இடத்திற்குள் சென்று எல்லோரும் புத்தகத்தை வைத்துக் கொண்டு எழுதுங்கள் என்று தேர்வு எழுத ஒருவர் அங்கு செல்ல வேண்டியில்லாத ஒருவர் உள்ளே நுழைந்து கூச்சல் போட்டு குழப்பம் ஏற்படுத்தியது இந்த ஆண்டில்தான். அது பற்றிக் கல்லூரி முதல்வரால் விசாரிக்கப்பட்டாரா. நடவடிக்கை ஏதேனும் உண்டா? ஆகவே இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் அதிக அக்கறையோடும் பொறுப்போடும் செயலாற்ற முன்வாருங்கள் என்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

[1979 மார்ச் 29

[நண்பகல் 12—00]

மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, நம்முடைய சட்டப் பேரவையிலே வைக்கப் பட்டிருக்கிற கல்வி நிதி ஒதுக்கத்திற்கான அனுமதியைப் பெறு கின்ற இந்த நேரத்திலே மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். கல்வித் துறையிலே இருக்கின்ற பல குறைபாடுகளை மீண்டும் இங்கே கவனத்திற்குக் கொண்டுவந்திருக்கிறார்கள். அவற்றை எல் லாம் கேட்கிற நேரத்திலே நான் இதே சட்ட மன்றத்திலே இரண்டாண்டுக்காலம் எதிர்க்கட்சியிலிருந்து பேசியபோது நானும்கூட அப்படிப்பட்ட குறைபாடுகளை எடுத்துக் கூறி இருக்கிறேன் என்பது இப்போதும் என் நினைவுக்கு வருகிறது. ஆகவே பல ஆண்டுக்காலமாக தேங்கிக் கிடக்கின்ற அந்தக் குறைபாடுகளையெல்லாம் இந்த அரசு, இந்த நிதி ஒதுக்கத்தின் மூலம் அந்த அளவிற்குக் குறைக்க முயற்சி எடுத்துக் கொண்டு இருக்கிறது என்பதை நான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேனே தவிர குறைபாடுகளே இல்லை என்றோ அல்லது அவைகளை மறுக்க முயற்சி எடுக்கிறேன் என்றோ நிலைமை இருக்குமானால் நான் சரியான முறையிலே என் னுடைய கடமையை ஆற்றியிருக்கிறேன் என்று சொல்ல முடி யாது.

பேராசிரியர் அவர்கள் இங்கே பேசுகின்றபோது ஒன்றைக் குறிப்பிட்டார்கள். 1969—70 ஆம் ஆண்டிலேயிருந்து மொத்த நிதியில், கல்வி நிதியொதுக்கம் வளர்ந்துகொண்டேதான் இருக்கிறது, இறுதியாக இந்த ஆண்டு 209 கோடி ரூபாய் கேட்டு உங்களுடைய அனுமதிக்காக அந்தக் கோரிக்கை இங்கே வைக்கப்பட்டிருக்கிறது. வளர்ந்து வருகிற தொகையை வைத்து உங்களிடத்திலே நான் அதைப் பாராட்டிப் பேச முடியாவிட்டாலும் வளர்ந்து வருகிற அந்தத் தொகை மொத்தத் தொகையில் எந்த அளவிற்கு இருக்கிறது, எத்தனை சத வீதம் இருக்கிறது என்பதை நான் பேராசிரியர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரவிரும்புகிறேன். 1969—70இல் ஏறத்தாழ 21 சத வீதமாக இருந்தது இன்றைக்கு ஏறத்தாழ 25 சத வீதமாக உயர்ந்திருக்கிறது. மொத்த நிதி ஒதுக்கத் திலே ஏற்பட்டிருக்கிற இந்த குண மாறுபாடு, அந்தத் தன் மையிலே ஏற்பட்டு இருக்கிற மாறுபாடு தான் குவாலிடேடிவ் எஜுகேஷனாக இன்றைக்கு இருக்கிறது என்று நான் சொல் வேனேயானால் மாண்புமிகு உறுப்பினர்கள் யாரும் மறுக்க முடியாது என்று கருதுகிறேன். இந்த மாறுதல் எந்த அள விற்குக் கல்வித் துறையைச் சீர்படுத்தும், இந்தத் துறையிலே இருக்கிற குறைபாடுகளைப் போக்குவதற்கும் அதன் மூலமாக நாட்டு மக்களுக்குச் சிறந்த முறையிலே பணியாற்றுகிறது என் பதை நான் இங்கே சொல்வதன் மூலமாக உங்களுக்கு நான்

தரும் விளக்கமாக எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த 25 சதவீதம் என்பதை கல்வித் துறை மூலமாக இந்த சமுதாயத்திற்காக, மிகப் பெரிய காரியத்தை, மிகப் பெரிய நல்ல பலனைத் தருவதற்கான இந்த அரசினுடைய ஆர்வத்தின் வெளியீடாக மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் பேசும்போது மிக முக்கியமான ஒரு குற்றச்சாட்டைக் குறிப்பிட்டார்கள். பத்தாவது வகுப்புப் படிக்கின்ற மாணவர்களின் எண்ணிக்கை சென்ற ஆண்டை விட இந்த ஆண்டு குறைந்து இருக்கிறது என்று சொன்னார்கள். அது அவ்வளவு சரியில்லை என்று நான் அப்போதே மறுத்தேன். இருந்தாலும் ஒரு விளக்கத்தைச் சொல்ல விரும்புகிறேன். 1977—78 ஆம் ஆண்டிலே உயர் நிலைப் பள்ளிகளிலே படித்த மாணவர்களுடைய தொகை 18.3: 1978—79 ஆம் ஆண்டிலே படித்த மாணவர்களுடைய தொகை 17·97 இதைப் பார்க்கிற போது குறைவாக இருக்கிறது, ஆகவே பள்ளிக்கூடங்களிலே மாணவர்கள் வர வரக் குறைந்துகொண்டே போகிறார்களோ அல்லது பெற்றோர்கள் தங்களுடைய குழந்தைகளை பள்ளிக்கு அனுப்புவதில் அக்கறை காட்டவில்லையோ என்ற அச்சத்தை ஐயத்தை இங்கே தெரிவித்திருப்பது மட்டுமல்ல, வெளி யேயும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இங்கே நான் ஒரு கருத்தைத் தெரிவிப்பதன் மூலமாக இந்த மன்றத்தின் மூலமாக உங்க ளுக்கும் வெளியில் இருக்கின்றவர்களுக்கும் விளக்கிட விரும்பு கிறேன். 1977—78 ஆம் ஆண்டிலே பத்தாம் வகுப்பு எஸ்.எஸ். எல்.சி. என்று ஒன்று இருந்தது. அதனுடைய தொடர்ச்சி யாக 11-வது வகுப்பு எஸ்.எஸ்.எல்.சி. என்று ஒன்று இருந்தது. இப்போது அந்த 11-வது வகுப்பு எஸ்.எஸ்.எல்.சி. கிடையாது. 10-வது வகுப்பு எஸ்.எஸ்.எல்.சி. தான் தற்போது இருக்கிறது, 8, 9, 10 ஆகிய மூன்று வகுப்பு மாணவர்களின் தொகையை எடுத்து ஒப்பிட்டுப் பார்த்தால்தான் வளர்ச்சி ஏற்பட்டு இருக் கிறதா அல்லது வளர்ச்சி குன்றியிருக்கிறதா என்பதைப் புரிந்து கொள்ளமுடியும். 11-வது வகுப்பு எஸ்.எஸ்.எல்.சி. படித்துத் தேர்வு எழுதிய மாணவர்கள் தொகை ஏறத்தாழ இரண்டு லட்சம் என்று வைத்துக் கொண் டால் 10-வது வகுப்பு எஸ்.எஸ்.எல்.சி. படித்த மாணவர்களின் தொகை ஏறத்தாழ 15 லட்சத்திற்கு மேல் தான் இருக்க முடியும். 11வது வகுப்பையும் சேர்த்து அந்தக் கணக்கைக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் 11-வது வகுப்பை கழித்து விட்டு—அதிலே 1.15 லட்சம்—அதை கழித்துவிட்டுப் பார்க்க வேண்டும். 10-வது வகுப்பு எஸ்.எஸ்.எல்.சி. படித்த மாண வர்களின் எண்ணிக்கை 16.62லட்சம் வருகிறது 15 லட்சத் திற்கும் 16 லட்சத்திற்கும் ஒப்பிட்டுப் பார்க்கிறபோது பத்தாம் வகுப்பு வரை படித்த மாணவர்களின் எண்ணிக்கை

[திரு. செ. அரங்கநாயகம்] [1979 மார்ச் 29

வளர்ந்து இருக்கிறது. அதிகமான மாணவர்கள் வந்திருக்கிறார்கள். டிராப் அவுட் குறைந்திருக்கிறது என்பதைத் தெள்ளத் தெளிவாகப் புரிந்துகொள்ளமுடியும்.

அந்த அடிப்படையில் மாண்புமிகு பேராசிரியர் அவர்களுக்கு இந்த விளக்கத்தை நான் தருவது அவர்களுக்குத் திருப்தி அளிக்கும் என்று நான் கருதுகிறேன்.

அதற்கடுத்தபடியாக பல்வேறு கருத்துக்களைப் பற்றி இங்கே சொல்லியிருக்கிறார்கள். ஹையர் செகண்டரி வகுப்புகளைப் பற்றி நிறைய கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். புகார்களைச் சொல்லியிருக்கிறார்கள். குறைகளை எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். அவைகள் ஒவ்வொன்றுக்கும் தனித்தனியாக பதில் சொல்வதற்கான நேரம் இங்கே இல்லை. அப்படிப்பட்ட நிலைமைகள் சபையிலே ஏற்பட்டு விட்டதற்காக வருத்தப்பட்டாலும்கூட நான் பொதுவாகச் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

பி.யூ.சி. வகுப்பை நீங்கள் ஹையர் செகண்டரியாகச் சொல்லி' உயர்நிலைப் பள்ளிக்குக் கொண்டு போய் இருக்கிறீர்கள். ஒரு இலட்சத்து 15 ஆயிரம் பேர் படிக்கிறார்கள். அதிலே 24,000 பேர்கள் தொழிற் கல்வி படிக்கிறார்கள்,, மீதியுள்ள ஏறத்தாழ 90,000 பேர்களுக்காக இவ்வளவு கோடி ரூபாய் செலவில், இவ்வளவு கோடி ரூபாய் நஷ்டத்தில் இப்பொழுது அரசு இந்த முயற்சிகளை ஏற்றுக்கொள்ளவேண்டுமா என்ற கேள்வியை மதிப்பிற்குரிய பேராசிரியர் அவர்கள் சொன்னார்கள். அந்தக் கருத்தை ஒரு சில மாண்புமிகு உறுப்பினர்களும் கொண்டிருக்கலாம் என்று கருதுகிறேன். அதற்கு நான் தர விரும்புகின்ற ஒரு விளக்கம் பி.யூ.சி. வகுப்பில் படிக்கின்ற அந்த மாணவர்களின் நிலை என்ன? 1963—64-ஆம் ஆண்டிலிருந்து அந்த நிலைமை இருக்கிறது. அப்படி பி.யூ.சி. படித்த மாணவர்களின் நிலை யாருக்கும் புரியாத இரகசியம் இல்லை. எஸ்.எஸ்.எல்.சி. படித்துப் பாஸாகியிருப்பார்கள், அவர்கள் பி.யூ.சி.யில் சேர்ந்து இருப்பார்கள். எஸ.எஸ்.எல்.சி. யில் தமிழில் படித்திருப்பார்கள். பி.யூ.சி.யில் ஆங்கிலத்தில் படித்திருப்பார்கள். இன்னும் இதிலே இருக்கின்ற மோசமான நிலைமை என்னவென்றால், சரித்திரம் போன்ற புத்தகங்களை எடுத்துப் பார்த்தால் எஸ்.எஸ்.எல்.சி.யிலே தமிழிலே எதைப் படித்திருக்கிறார்களோ அதையேதான் ஆங்கிலத்தில் படித்திருப்பார்கள். ஆனால் இன்றைக்குக் கிராமத்திலே போய் பார்த்தால் பல மாணவர்களைச் சந்திக்கலாம். எது வரையில் படித்திருக்கிறீர்கள் என்று அவர்களைப் பார்த்துக் கேட்டால் பொதுவாக ஊருக்கு இரண்டு பேராவது இருப்பார்கள், நான் பி.யூ.சி.யில் பெயில் என்று இப்படிச் சொல்கிற மாணவர்களை சந்திக்காத கிராமங்களைத் தமிழ்நாட்டிலே பார்க்க முடியாது. ஒருவேளை பி.யூ.சி. வகுப்பு இல்லை என்றாலும்கூட அந்த மாண

வனைக் கேட்கின்ற நேரத்தில், நான் எஸ்.எஸ்.எல்.சி. பாஸ் செய்திருக்கிறேன் என்று நெஞ்சை நிமிர்த்திக் கூறுகின்ற இளைஞர்களை, எதிர்காலத்திலே வெற்றிக்கு மேல் வெற்றி குவக்கின்ற இளைஞர்களைப் பார்த்திருக்கலாம். ஆனால் பி.யூ.சி. என்ற ஒரு வகுப்பை வைத்துவிட்டு, அவர்கள் தமிழிலே படித்ததை ஆங்கிலத்திலே சொல்லித் தந்து, அவர்கள் ஏற்கனவே வெற்றி பெற்ற விஷயத்திலேயே தோல்வியடையச் செய்து, தலை கவிழ்ந்து நடக்கின்ற மோசமான நிலையை ஆயிரக்கணக்கான இளைஞர்களுக்கு உருவாக்கிய படிப்புதான் பி.யூ.சி. என்ற ஒரு படிப்பு.

திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, குறுக்கிடுவதற்கு மன்னிக்க வேண்டும். எஸ்.எஸ்.எல்.சி. பாஸ் ஆனவர்கள்தான் பி.யூ.சி.யில் பெயில் ஆகிறார்களே தவிர, பி.யூ.சி.யில் பெயில் ஆனவர்கள் எஸ்.எஸ்.எல்.சி. யில் பெயில் ஆனவர்களாக இருக்க முடியாது. ஆகவே, அவன் எஸ்.எஸ்.எல்.சி. பாஸ் ஆனவன் என்று நெஞ்சை நிமிர்த்திச் சொல்லிக் கொள்ள முடியும். ஆகவே, எஸ்.எஸ்.எல்.சி. என்று எடுத்துக்கொண்டாலும் கூட இரண்டு இலட்சத்து எட்டாயிரம் பேர் அல்லது இரண்டு இலட்சத்துப் பத்தாயிரம் பேர் பரீட்சைக்குச் செல்கிறார்கள் என்றாலும் ஒரு இலட்சத்து எழாயிரம் பேர் பாஸாகிறார்கள், ஒரு இலட்சத்து சொச்சம் பேர் பெயில் பெயில் என்று சொல்கிறார்கள். எனவே அது வேறு விஷயம். இங்கேயுள்ள பிரச்னைகளிலே எந்த அளவிற்குக் கல்வியிலே மாணவர்களுக்குக் கிடைக்க வேண்டிய பலன் கிடைக்கிறது என்பதை வேறொரு வகையிலே தான் ஆராய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, நோயை இப்பொழுது சொல்லிக்கொண்டிருக்கிறேனே தவிர, அதற்கான மருந்தைப் பற்றி இப்பொழுதுதான் நான் சொல்ல ஆரம்பிக்கிறேன். 1 இலட்சத்து 15,000 பேர் இன்றையதினம் சேர்ந்திருக்கிறார்கள். பி.யூ.சி.யிலே சேர்கின்ற மாணவர்களின் வயது என்ன, அவர்கள் பருவம் என்ன என்ற விஷயத்தில் கல்வித் துறையைச் சேர்ந்த நிபுணர்கள் அதை "அடலசண்ட் பீரியட்" என்று சொல்கிறார்கள். அவர்களுக்கு எந்த முறையில் சொல்லித் தர வேண்டுமென்று ஆராய்கின்றபொழுது, கல்வி நிபுணர்களின் கருத்து, பயிற்சி பெற்ற ஆசிரியர்கள்தான் அவர்களுக்குச் சொல்லித் தர வேண்டுமே தவிர டீச்சிங் பயிற்சி பெறாதவர்கள், அவர்கள் எம்.ஏ. பட்டதாரிகளாக இருந்தாலும் சரி, எம்.எஸ்.சி. பட்டதாரிகளாக இருந்தாலும் சரி, அல்லது வேறு சிறந்த அறிஞர்களாக இருந்தாலும் சரி, அவர்கள் லெக்சர் செய்வதால் மட்டும் மாணவர்களுக்குச் சரியான வளர்ச்சியைத் தராது. ஆகவேதான் இந்தப் பிரிவுக் கல்வியை உயர்நிலைப் பள்ளிகளிலேயே தர வேண்டும், அதிலும் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள்தான் தர வேண்டுமென்ற கருத்தின் அடிப்படைதான் இந்த மாறுதல் கொண்டு வரப்பட்டதற்கான காரணம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னும் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன். இத்தனை வயதுள்ள மாணவர்கள் உட்கார்ந்திருக்கக் கூடிய நேரத்தில், 40 பேர், 30 பேர் உட்கார்ந்திருக்கக் கூடிய வகுப்பு அறைகளிலேதான் நல்லமுறையிலே அவர்களுக்கு அறிவு வளர்ச்சியை முழுவதும் தர முடியுமே தவிர 100 பேர் உட்கார்ந்திருக்கக்கூடிய இடத்தில் சொற்பொழிவு ஆற்றுவதன் மூலம் இளம் பருவ மாணவர்களுக்கு நல்ல முறையில் கல்வியைக் கற்றுத் தர முடியாது என்பது கல்வி நிபுணர்களால் சொல்லப்படும் கருத்தாகும். அந்தக் கருத்தின் அடிப்படையில்தான் அந்த வகுப்புகள் பள்ளிகளுக்குச் செல்ல வேண்டுமென்று கருதினோம. பிரீ-யூனிவர்சிட்டி என்று சொல்ல ஆரம்பித்ததே, என்றைக்கிருந்தாலும் அது போய்த் தீர வேண்டும். போய்த் தீர வேண்டுமென்பது கல்வி நிபுணர்களின் கருத்து. அது போயிருப்பதாலே மகிழ்ச்சி கொள்ளலாமே தவிர, அதிலே தவறு என்று நினைத்தால் அவர்களுடைய கருத்துக்களை மறுக்கிறோமா என்பதுதான் ஐயமாக இருக்கின்றது.

[பிற்பகல் 12-10]

நான் இன்னும் தெளிவாகச் சொல்ல வேண்டுமானால், நாம் சமுதாயத்திலே சில நீதிகளைத் தர விரும்புகிறோம். மாண்புமிகு பேராசிரியராக இருந்தாலும், அல்லது இங்கே இருக்கிற மதிப்பிற்குரிய உறுப்பினர்களாக இருந்தாலும் ஒரு குறைபாட்டை கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். நாம் கல்வியை எந்த அளவு இலவசமாகத் தந்தாலும், எந்த அளவு சலுகைகளைத் தந்தாலும், இன்ஜினீயரிங் கல்லூரி அட்மிஷனை எடுத்துக்கொண்டாலும், அல்லது மெடிக்கல் காலேஜ் அட்மிஷனை எடுத்துக்கொண்டாலும், அல்லது எம்.ஏ., எம்.எஸ்.சி. போன்ற பட்ட மேல்படிப்புகளுக்கான அட்மிஷன்களை எடுத்துக்கொண்டாலும், நாம் தாழ்த்தப்பட்டவர்கள், பிற்படுத்தப்பட்டவர்களுக்கு என்று வழங்குகிற அந்தச் சலுகைகள் கூட, அந்தச் சமுதாயங்களிலே மேல்தட்டிலே இருக்கிற, வளர்ந்திருக்கிற, பரம்பரை, பரம்பரையாக இருக்கிறவர்களுக்குத்தான் போய்ச் சேருகிறதே தவிர, கிராமங்களிலே இருக்கிற தாழ்த்தப்பட்டவர்களுக்கும், கிராமங்களிலே இருக்கிற பிற்பட்டவர்களுக்கும் போய்ச் சேரவில்லை என்பதை நாம் இன்னமும் மறைத்துப் பயனில்லை. இன்றைக்கு இந்தக் கல்வி, அத்தகைய கிராமங்களில் இருக்கிறவர்களுக்குத் துணையாக இருக்கிறது என்பதை நாம் நிரூபிப்போமானால், அதற்காக நிச்சயமாக இந்த மன்றத்திலே இருக்கிற அத்தனை உறுப்பினர்களும் நல்ல ஆதரவினைத் தருவார்கள் என்று நான் நம்புகிறேன். பி.யூ.சிக்கு 80,000-க்கு மேற்பட்ட இடங்களை நாம் தந்தாலும், ஏறக்குறைய 70,000 பேர் தான் படிக்கிறார்கள். கல்லூரிப் படிப்புக் கவர்ச்சி மங்கி வருகிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கு என்ன காரணம்? கல்லூரிகளில் பயிலும் மாணவர்களின் நிலை என்ன என்பது மக்களுக்குத் தெரியும். இன்றைக்கு பி.யூ.சி.யை அங்கேயிருந்து எடுத்துக்கொண்டதன் மூலமாக, இரண்டு வருஷப் படிப்பு கற்றுக்கொடுப்பதாகத்தான் மக்கள் நம்பு

கிறார்களே தவிர, 70,000, 75,000 பேர்கள் படிக்கின்ற படிப்பை இன்றைக்கு 1,15,000 பேர்கள் படிக்கிறார்கள் என்றால், அதற்குக் காரணம் 188 கல்லூரிகளாக இருந்த நிலைமையை மாற்றி கிராமங்களுக்கும் போய்ச்சேரவேண்டுமென்ற நிலையில், 900-க்கு மேற்பட்ட உயர்நிலைப் பள்ளிகளிலே இந்த வகுப்புகளை ஆரம்பித்ததுதான்; அரசு செய்த காரியம்தான் இது. அதன் காரணமாக, இத்திட்டம் நிறைவேறியது என்பதை நான் அழுத்தந் திருத்தமாகச் சொல்ல வரும்புகிறேன். அப்படி 35,000 பேர்கள் அதிகமாகச் சேர்ந்திருப்பார்களானால், அதிகமாக வந்திருப்பார்களானால், அவர்கள் வேறு யாரும் அல்ல; 15 மைல், 20 மைல் போய் கல்லூரியில் படிக்காதவர்கள், அல்லது கல்லூரிச் செலவை, ஏற்றுக்கொள்ள முடியாத சாதாரண மக்கள், ஏழை மக்கள், மிகவும் தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த மக்கள், பின்தங்கிய மக்கள், இப்படிப்பட்ட சமுதாயக் கீழ்தட்டிலே இருக்கக்கூடியவர்கள்—யாருக்காக, பாடுபட வேண்டுமென்று திராவிட இயக்கத்தை வலுவுள்ள இயக்கமாக ஆக்கியிருக்கிறோமோ—மற்ற உறுப்பினர்களுக்கும் அதில் ஆர்வம் இருக்கிறதென்று கருதுகிறேன்—அவர்களுக்காகத்தான் இந்த திட்டம். 35,000 மாணவர்கள் இந்நிலையில் அதிகமாக சேர்ந்திருக்கிறார்களென்றால் அது சாதாரண விஷயம் அல்ல. இன்றைக்கு அவர்கள் சேர்ந்திருக்கிறார்கள் என்பது மட்டுமல்ல, 11 வது வகுப்பில் படிக்கின்ற இந்த மாணவர்கள் அடுத்த ஆண்டு 12 வது வகுப்பிலும் சேர்ந்து படிக்கப்போகிறார்கள்.

பி.யூ.சி.யிலே முக்கால் பங்கு மாணவர்கள் ஆங்கில மீடியத்தில் படித்தார்கள். ஆங்கில மீடியத்தில், பி.யூ.சி. வகுப்புகளை 188 கல்லூரிகளிலே நடத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், அதை மாற்றி, 912 பள்ளிகளிலே, தொழிற் கல்வியுடன் சேர்த்து சொல்லித் தரப்படுகிறது. பெரும்பான்மையான மாணவர்கள் தமிழிலே படிக்கிறார்கள். சாதாரண குடும்பத்திலே வாழ்கிற மாணவன் அல்லது, கிராமத்திலே வாழ்கிற மாணவனுக்கு, இன்ஜினீயரிங் கல்லூரியிலும், மெடிகல் கல்லூரியிலும் அவரவருக்கேற்ற வகையில், இடம் கிடைக்கவில்லையென்றால், அதற்குக் காரணம், ஆங்கில மீடியம்தான். ஏனென்றால், அதுதான் அவருக்கு தடையாக இருக்கிறது, அவருக்கு குறுக்கே இருந்தது இன்றைக்கு தமிழ் மீடியம் வைத்து, பரீட்சை நடத்தும்போது நிச்சயமாக, 10 மார்க்காவது, ஆங்கில மீடியத்தில் படிக்கின்ற மாணவன் வாங்கியதைவிட அதிகமாக வாங்கி, இன்ஜினியரிங், மெடிக்கல் போன்ற வகுப்புகளில் படிக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. அத்தகைய சமுதாய மாறுதலை அடுத்த ஆண்டு பார்க்கலாம். இந்தக் கல்வித் திட்டத்தின் மூலமாக அரசு பெரும்பான்மையான மக்களுக்கு வழங்கியிருக்கிற நீதியை, உங்களாலே தெளிவாக அறிந்துகொள்ளும் வாய்ப்பு இன்னும் ஓராண்டுகாலத்திலே கிடைக்க இருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

[திரு. செ. அரங்கநாயகம்] [1979 மார்ச் 29

தொழில் கல்வி என்று வருகிறபோது வேலைக்கு உத்தரவாதமும் தரவில்லை, படித்துவிட்டு வேலைக்குப் போய்த்தான் தீரவேண்டும் என்று கட்டாயப்படுத்தப்படவும் இல்லை. நான் சென்ற ஆண்டே சொல்லியிருக்கிறேன். ஹையர் செகன்டரி வகுப்பில், அந்தத் தொழில் கல்வி என்பது டெர்மினல் கோர்ஸ் அல்ல. டெர்மினல் கோர்ஸாகவும் இருக்கும். பிரபரேடரி கோர்ஸாகவும் இருக்கும். இரண்டு வகையிலும் நாம் அவர்களுக்கு அந்த உரிமையைத் தந்து இருக்கிறோம். இதற்குக் காரணத்தை எங்கேயும் தேடி அலைய வேண்டாம். நாம் இதை சமுதாயப் பிரச்னையாகப் பார்க்கிறோம். இதுவரையில் இந்த நாட்டு மக்களுக்கு தரப்பட்ட கல்வியின் தரத்தை சிந்தித்துப் பார்க்கிறோம். மதிப்பிற்குரிய இந்தியப் பிரதமர் மொரார்ஜி தேசாய் கேட்ட ஒரே ஒரு கேள்வி இதுதான். படித்ததற்குப் பின்னால் அவன் நிலைமை என்னவென்றால் அவனுக்கு எந்த வேலயும் கிடைக்கவில்லை என்று சொல்லிக் கொண்டு குடும்பத்திற்கு பாரமாக, சமுதாயத்திற்கு பாரமாக இருக்கின்றனர். ஒருவன் குடும்பத்திற்கு பாரமாக இல்லாமல், உதவிகரமாக இருப்பதற்காகத்தான் இப்படிப்பட்ட திட்டங்கள் கொண்டு வரப்படுகின்றன. கல்வித் துறையில் இந்த குறைபாடு எவ்வளவு காலமாக இருந்து வருகிறது என்பது எல்லோருக்கும் தெரியும். நாங்கள் வந்த பிறகு ஏற்பட்ட குறைபாடு அல்ல. பல்லாண்டு காலமாக இருந்து வருவது இந்தக் கேள்வி. இந்தக் குறைவைப் போக்க நல்ல எண்ணத்தோடும், உண்மை உணர்வோடும் எடுத்துக்கொண்ட நடவடிக்கைதான், அதன் விளைவுதான் ஹையர் செகன்டரி கல்வி. இன்று எஸ்.எஸ்.எல்.சி. பரீட்சை எழுதுபவர்கள் 180,000 அல்லது அதற்கு மேல் என்று சொன்னால், அதிலே 50,000 பேர் பட்டப்படிப்பிற்குச் சென்றாலும்கூட, மீதி 1 இலட்சத்திற்கு மேல் இருப்பவர்கள் பாஸ் செய்தாலும், அல்லது தோல்வியுற்றாலும், அவர்கள் எந்த வேலைக்கும் தயாரா இல்லை. அவர்கள் 'எஜுகேடட் பட் அன் எம்பிளாயபிள்' என்கிற வகையில் சமுதாயத்திற்கு பாரமாக இயங்கி வருகிறார்கள். அவர்கள் படித்து இருக்கிறார்கள். ஆனால் வேலைக்கு போக முடியாமல் இருக்கிறார்கள். அந்த நிலையில் இலட்சத்திற்கு மேற்பட்டவர்கள் இருக்கிறார்கள் என்று சொன்னால் எதிர் காலத்தில் சமுதாயம் தாங்கமுடியாது. ஆகவேதான் அதைச் சமூதாயப் பிரச்னையாகக் கருதி, அந்த நிலையை மாற்றுவதுதான் கல்வித் துறையின் இப்போதைய நோக்கம்.

1979 மார்ச் 29]

திரு. கோ. இளங்கோவன் : தலைவர் அவர்களே, ப்ளஸ் 2 கல்வி பற்றி பாரதப் பிரதமர் என்ன கருத்து கொண்டு இருக்கிறார் என்பதை அமைச்சர் அவர்கள் விளக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இந்தக் குழப்பமான நிலையை நான் சில பேரிடத்தில் கவனித்தேன். பாரதப் பிரதமர் அவர்கள் 8 ப்ளஸ் 4 ப்ளஸ் என்று சொல்கிறார்கள். இந்த 4 ப்ளஸ் என்பது என்ன ? அரசியல் அமைப்புச் சட்டத்தின்படி 8-ம் வகுப்பு வரை கட்டாயக் கல்வி கொடுக்க வேண்டும் என்று இருக்கிறது. அதைத்தான் பாரதப் பிரதமர் அவர்கள் வலியுறுத்திக்கொண்டு இருக்கிறார்கள். அந்தக் கருத்து இந்த அரசுக்கு ஏற்புடைய கருத்துத்தான். நாம் கட்டாயக் கல்வி 5-ம் வகுப்பு வரை என்று தற்போது வைத்து இருக்கிறோம். அதையே கட்டாயப்படுத்த முடியாத நிலையில் இருக்கிறது. பெற்றோர்களின் ஒத்துழைப்பு இல்லாமல் அதை நிறைவேற்ற முடியாது. பல்வேறு மாநிலங்களில் 8-வது வகுப்பு வரைதான் இலவசக் கல்வி வைத்து இருக்கிறார்கள். அந்த அடிப்படையில் அவர்கள் சொல்கிறார்கள். இலவசக் கல்வி என்பது கட்டாயக் கல்வியாக இருக்க வேண்டும் என்று அவர்கள் சொல்கிறார்கள். ஆகவே, அவர் சொல்வது ஒன்றும் முரணானது அல்ல. நாம் எதைச் செய்து கொண்டு இருக்கிறோமோ அதைத்தான் அவர் சொல்கிறார். தமிழ்நாட்டில் நாம் பி.யூ.சி. வரையில் இலவசக் கல்வி கொடுத்து இருக்கிறோம். எல்லா மாநிலங்களிலும் அந்த நிலை இல்லை. எல்லா மாநிலங்களிலும் அந்தமாதிரி சட்டம் கொண்டு வரவேண்டும் என்று மசோதா கொண்டு வந்து இருக்கிறார்கள். ஆகவே அதிலே முரண்பாடு இல்லை, நிறைய உடன்பாடுதான் இருக்கிறது என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

தொழில் கல்வியை அவர்கள் தரவேண்டும் என்று சொல்லவே இல்லை. மாணவர்கள் மேலே படிக்க முடியவில்லை என்று சொல்கிற நேரத்தில், எனக்கு ஒன்றுமே தெரியவில்லை என்ற நிலையை மாற்றி, எனக்கு ஏதாவது ஒரு தொழில் தெரியும் என்ற நம்பிக்கை அவர்கள் மனதில் வரவேண்டும், அவர்கள் சமுதாயத்திற்கு பயன்படும் முறையில் நம்பிக்கையை உருவாக்க வேண்டும் என்ற அடிப்படையில் நாங்கள் கொண்டு வந்து இருக்கிறோம். 24,000 என்பது சாதாரண எண்ணிக்கையாக இருந்தாலும் கூட இந்திய அளவில் அதை ஒப்பிட்டுப் பார்க்கிறபோது, மற்ற எல்லா மாநிலங்களிலும் உள்ளதைச் சேர்த்துப் பார்த்தாலும் இந்த அளவிற்கு இல்லை. தமிழ்நாட்டில் தொழில் கல்வி நல்ல முறையில் வளர்ந்து இருக்கிறது, வளர வேண்டும், வளர்ந்து பயன்தரும் என்பதில் நாம் அனைவரும் நம்பிக்கை கொண்டு எல்லோரும் சேர்ந்து முழு ஒத்துழைப்பையும் முயற்சியையும் தரவேண்டும். அதற்கு மாண்புமிகு உறுப்பினர்கள் நல்ல ஆதரவு தரவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. செ. அரங்கநாயகம் [1979 மார்ச் 29

[பிற்பகல் 12-20]

ஆகவே, உயர் செகண்டரி பள்ளிக் கல்வியைக் கொண்டு வந்து, தமிழ் சமுதாயத்தில் ஏற்படக்கூடிய பல்வேறு மாறுதல்களை, நாம் எதை விரும்புகிறோமோ அதை நிறைவேற்றக்கூடிய நம்பிக்கையை இந்த நேரத்தில் கூறுவதின்மூலம் மேலும் உங்களுடைய ஒத்துழைப்பை, நல்லாதரவை அதற்குத் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு பல்வேறு பிரச்னைகள் இங்கே எழுப்பப்பட்ட போதிலும் அதற்கு அரசு எடுத்திருக்கிற முடிவுகள் அல்லது அறிவிப்புகள் சிலவற்றை இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.

மேல்நிலைப் பள்ளிகளுக்கு வகுப்பறை, ஆய்வுக்கூட வசதிகள் ரூ. 6·40 கோடி அளவில் செய்து கொடுக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

அரசுப் பள்ளிகளில் அநேகமாக வருகிற கல்வி ஆண்டு தொடக்கத்திற்குள் இந்தக் கட்டடங்கள் கட்டி முடிக்கப்படும்.

இந்தப் பள்ளிகளுக்கு அறிவியல் தளவாடங்களும் இரண்டு கோடி ரூபாய் மதிப்பில் அளிக்கப்படும். இதற்காகத் தனி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தனியார் மற்றும் நகராட்சி மேல்நிலைப் பள்ளிகளுக்கு வகுப்பறை, ஆய்வுக்கூடம் முதலியவற்றிற்காக 40 விழுக்காடு அளவில் அரசு மானியமாக 1·75 கோடி ரூபாய் வழங்கப்படும்.

மேலும் எல்லா மேல்நிலைப் பள்ளிகளுக்கும் நூலகப் புத்தகங்கள் 37 இலட்சம் ரூபாய் அளவில் அளிக்கப்படும்.

அரசு உயர்நிலைப் பள்ளிகளில் உள்ள கட்டட வசதிகள், நூலக வசதிகள், ஆய்வுக் கூட வசதிகள் ஆகியவைபற்றி விரிவான கணக்கு எடுக்கப்படும். இதனடிப்படையில் வசதிகள் மிகக் குறைவாக உள்ள பள்ளிகளுக்கு உடனடியாக வசதிகள் செய்து தரவும் படிப்படியாக மற்ற எல்லாப் பள்ளிகளுக்கும் எல்லா வசதிகளும் கிடைக்குமாறு திட்டங்கள் வகுக்கவும் இயலும்.

பல உயர்நிலைப் பள்ளிகளில் கட்டடங்கள் இல்லை என்பதை நாங்கள் மறுக்கவில்லை. ஆனால், கட்டடங்கள் இல்லை என்பதை மறுக்காத அதே நேரத்தில் கடந்த காலத்தில் இருந்துவந்த நடைமுறைகளை அரசு ஆராய்ந்து பார்த்ததில் ஒரு கட்டடம் கூட இல்லாத பள்ளிகளும் தொடர்ந்து

1979 மார்ச் 29] [திரு. செ. அரங்கநாயகம்]

இருந்து கொண்டிருக்கிறது. அதற்குக் காரணம் நாம் அந்தப் பிரச்சனையை நியாயமான ரீதியில் அணுகவில்லை என்ற குறைபாடுதான். ஆகவே, இந்த அரசு எந்தவிதமான வேறுபாடும் காட்டாமல் பிரச்சனைகளை நியாயமான ரீதியில் அணுகி, ஒரு கட்டடம் கூட இல்லாத பள்ளிகளுக்கு முதல் வாய்ப்புத் தரும். அதன்பின் வசதிகள் குறைவாக இருக்கும் பள்ளிகளுக்கு உடனடியாக வசதிகள் செய்துதரும். பின்னர் படிப்படியாக எல்லாப் பள்ளிகளுக்கும் எல்லா வசதிகளும் கிடைக்கும் வகையில் திட்டம் வகுக்கும்.

நிரந்தர கட்டிடம் ஏதும் இல்லாத உயர்நிலைப் பள்ளிகளுக்கு உடனடியாக வரும் ஆண்டில் ஒரு நிரந்தர கட்டட மேனும் கட்டித் தரும் திட்டம் செயல் படுத்தப்படும்.

உள்ளூரில் கிடைக்கும் வசதிகள், கட்டடப் பொருட்களையும் பயன்படுத்துவதற்கு முக்கியத்துவம் அளிக்கப்படும்.

கிராமங்களில் பணி புரியும் ஆசிரியர்களுக்கு ஆங்காங்கே குடி இருக்க வசதிகள் செய்யும் வகையில் கிராமப்புற வீட்டு வசதித் திட்டங்களின் கீழ் கடன் வழங்க சிறப்பான முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

ஊராட்சி ஒன்றியங்கள், கிராமப்புற வீட்டு வசதிக்காக செலவிடப்படும் தொகைகளும் வரும் ஆண்டில் அதிகப்படுத்தப் படும்.

நடுநிலைப் பள்ளிகளில் உள்ள தலைமை ஆசிரியர்கள் பணி இடம் நிரந்தரமாகக் காலி ஏற்படும்போது அந்தப் பணியிடங்கள் கீழ்க்கண்ட வகையில் நிரப்பப்படும்.

(1) குறிப்பிட்ட நடு நிலைப்பள்ளி அல்லது அந்தப் பள்ளியை நடத்தும் நிர்வாகத்தில் உள்ள மற்ற பள்ளிகள் இவற்றில் பயிற்சி பெற்ற பட்டதாரி ஆசிரியர்களோ அல்லது முதல் நிலைத் தமிழ் ஆசிரியர்களோ இருந்தால் அவர்களில் பணி மூப்பு உடையவரை இந்தப் பள்ளியில் தலைமை ஆசிரியராக நியமித்து அவருக்கு பட்டதாரி ஆசிரியர் ஊதியம் வழங்கப்படும். (ஆரவாரம்).

(2) பயிற்சி பெற்ற பட்டதாரி ஆசிரியர்களோ, அல்லது முதல் நிலை தமிழ் ஆசிரியர்களோ நடுநிலைப் பள்ளி தலைமை ஆசிரியராக பணி புரிந்த அவர் இடைநிலை ஆசிரியர் ஊதியம் தற்போது பெற்று வந்தால் அவர்கள் அனைவருக்கும் 1—9—79 முதல் பட்டதாரி ஆசிரியர் ஊதியம் வழங்கப்படும் (ஆரவாரம்). இந்த முறையில் தற்போது தலைமை ஆசிரியராக இருப்பவர்கள் இவ்வாறு வருங்காலத்தில் பயிற்சி பெற்ற பட்டதாரி ஆசிரியராகவோ, முதல் நிலை தமிழ் ஆசிரியராகவோ தங்கள் தகுதி

தகு

யை உயர்த்திக் கொள்ளும்பொழுது ஆண்டுதோறும் செப்டம்பர் மாதம் முதல் தேதி இவ்வாறு அவர்களின் பதவி பட்டதாரி ஆசிரியர் நிலைக்கு உயர்த்தப்படும்.

(3) நடுநிலைப் பள்ளியிலோ அல்லது அந்தப் பள்ளியின் நிர்வாகத்தின் கீழோ பயிற்சி பெற்ற பட்டதாரி ஆசிரியர் அல்லது முதல் நிலை தமிழ் ஆசிரியர் அங்கு பணியில் இல்லாதபோது காலி ஆகும் நடுநிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் பணி இடத்தை முதல் நிலை தமிழ் ஆசிரியர்களைக் கொண்டு நிரப்பி அவருக்கு பட்டதாரி ஆசிரியர் ஊதியம் வழங்கப்படும்.

கடந்த பல ஆண்டுகளாக தமிழாசிரியர்கள் தங்களுக்கு பதவி உயர்வு தரவேண்டுமென்று கோரிக்கை வைத்து வருகிறார்கள். கடந்த பல்லாண்டு காலமாக அது ஒப்புக் கொள்ளப்படவில்லை. ஆசிரியர் பெருமக்கள் அந்தக் கோரிக்கையை வலியுறுத்தி வருகின்றனர். இந்த நிலையில் உயர் தொடக்கப் பள்ளி தலைமை ஆசிரியராக தமிழாசிரியர் வரலாம். வரவேண்டும் என்ற விருப்பத்தை இந்த முடிவின் மூலம் இந்த அரசு இன்றையதினம் அறிவிக்கிறது.

இந்த நேரத்தில் தமிழாசிரியர்களுக்கு ஒன்றைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன். உங்களுக்கு இந்தப் பொறுப்பைத் தருவதன் மூலம் உங்கள் கட்டுப்பாட்டில் படிக்கின்ற மாணவர்கள் ஒழுக்கம், நன்னடைத்தையில் சிறந்து, தமிழ் பண்பாடு மிக்கவர்களாக, இனப்பற்று மிக்கவராக, மொழிப்பற்று மிக்கவராக எதிர்காலத்தில் அவர்கள் உயர்நிலைப்பள்ளிக்கு வந்தாலும் கல்லூரிக்கு வந்தாலும் சிறந்த மாணவர்களாக இருக்கக்கூடிய வகையில் அந்த மாணவர்கள் உங்களிடம் பயிற்சிப் பெறுவார்கள், நல்ல கல்வி பெறுவார்கள் என்ற நம்பிக்கையை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொண்டு, இந்த அறிவிப்பைத் தெரிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சியடைகின்றேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக பள்ளி சாராக் கல்வி வருகிற ஆண்டில் இருந்து முறையாக பள்ளிக்குச் சென்று படிக்காத இளைஞர்களின் நன்மைக்காக 8வது வகுப்பு நிலையில் பள்ளி இறுதிப் பொதுத் தேர்வு நடத்தப்படும். தேர்வு நடக்கும் மாதத்தில் முதல் தேதியன்று 14வது வயது முடிந்தவர்கள் இத்தேர்வு எழுதலாம். அவ்வாறு 14-வது வயது முடிந்தவர்கள் முறையான பள்ளிகளில் கீழ் வகுப்புகளுள் எதிலாவது படித்துக் கொண்டிருந்தாலும் அவர்கள் விரும்பினால் அவர்களும் இத்தேர்வு எழுதலாம். இப்பொதுத் தேர்வு 1979 டிசம்பர் மாதம் முதல் நடைபெறும். இச்சலுகையினால் சமுதாயத்தின் நலிந்த பிரிவினர் பள்ளி சாராக் கல்வி வசதிகளின் முழுப் பயன் எய்த இத்தேர்வு உதவும்.

1979 மார்ச் 29] [திரு. செ. அரங்கநாயகம்]

இன்றைக்கு நாம் கட்டாயமாகக் கல்வியைச் சொல்லித் தர வேண்டுமென்று சொன்னாலும் பல்வேறு பொருளாதார காரணங்களினால் பள்ளிக்கு வந்து பள்ளிக் கல்வியை முறைப்படி படிக்க முடியாத நிலையில் இருக்கின்றவர்கள் இதனைப் பயன் படுத்திக்கொண்டு நல்ல வாய்ப்புக்களை இதன் மூலமாகப் பெறுவ தற்குரிய வழியினை நாம் இதன் மூலமாகத் தருகிறோம்.

அடுத்து பாட நூல் நிறுவனத்தைப் பொறுத்தவரையில் பள்ளிப் பாட நூல்கள் தயாரிப்பதில் தவறுகள் ஏதும் நிகழா வண்ணம் பார்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பாடப் புத்தகங்கள் எழுதுகின்ற குழுக்களில் எந்த வகுப்பிற் காக எழுதப்படுகிறதோ, அந்த வகுப்பிற்கு பாடம் நடத்தும் சிறந்த ஆசிரியர் இடம் பெறுவர். தமிழ், ஆங்கிலம், வரலாறு போன்ற புத்தகங்கள் எழுதும் குழுக்களில் சிறுபான்மை வகுப்பி னரையும் சேர்த்துக் கொள்ளப்படும். இங்கே பாடப் புத்தகங் களிலே சில குறைபாடுகள் இருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் கள் அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தார்கள். பள்ளிப் பாட நூல் புத்தகங்கள் இவ்வாண்டு தவக்கம் இல்லாமலும் தடங்கல் இல்லாமலும் எல்லா மாணவர்களுக்கும் உரிய காலத்தில் கிடைக் கும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மலிவு விலைக் காகிதத்தால் செய்யப்பட்ட நோட்டுப் புத்தகங்கள் நல்ல முறை யில் மாணவர்களுக்கு கிடைக்கும் வண்ணம் தற்போதுள்ள முறை யினை மாற்றி பாடநூல் நிறுவனத்தின் மூலம் கிடைக்கச் செய் வது பற்றிய குறிப்பொன்று அரசின் கவனத்தில் உள்ளது.

இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் போன்றவர் கள் பாட நூல் நிறுவனம் வெளியிட்ட பாடப் புத்தகங்களில் இஸ்லாமிய சமுதாயத்தைப் பற்றிய சில பாடங்கள் இடம் பெற் றது பற்றிய குறிப்பைச் சொன்னார்கள். நான் அவர்கள் சொன்ன கருத்தை ஏற்றுக் கொண்டு அதற்கேற்றபடி சில மாற்றங்கள் செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. இருந்தாலும் நபி கள் நாயகத்தைப் பற்றி மாணவர்கள் தெரிந்து கொள்ள வேண் டியது அவசியம் என்ற காரணத்தால் அந்தப் பாடங்கள் இடம் பெற வேண்டும். அந்தமாதிரிப் பாடங்களை அமைக்கின்ற போது அதற்கான வகுப்பைச் சார்ந்த ஆசிரியர்கள் பெரிதும் இடம் பெறுவதில்லை என்ற மிகப் பெரிய குறைபாடு இன்றைய தினம் இருந்துகொண்டிருக்கின்றது. ஆகவே அப்படிப்பட்ட பாடங்களை அமைக்கின்றபோது அந்தந்த வகுப்புக்களைச் சேர்ந்த ஆசிரியர்களைச் சேர்த்துக்கொள்வது என்று அரசு முடிவெடுத்து இனி இப்படிப்பட்ட பிரச்சினைகள் வராமல் பார்த்துக்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, கல்லூரிக் கல்வியைப் பொறுத்தவரையில் ஆசிரியர் களுடைய பிரச்சினை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. 1979—80 முதல் புகுமுக வகுப்பு நீக்கப்படு வதால் கல்லூரி ஆசிரியர் எவரும் பாதிக்கப்படாதபடி அரசு நட வடிக்கை எடுத்து இருக்கிறது.

[திரு. செ. அரங்கநாயகம்] [1979 மார்ச் 29

கல்லூரி ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாதோர்க்குச் சலுகைகள் வழங்கி பிறப்பித்துள்ள ஆணைகளின் விவரம் வருமாறு:

தனியார் கல்லூரிகளில், முறை பிறழ்ந்து வேலை நீக்கம் செய்யப்பட்ட ஆசிரியர்களை, நிர்வாகம் கல்வித் துறையின் ஆணைக்கு ஏற்ப திரும்ப பணியிலமர்த்தாவிட்டால், சம்பந்தப்பட்டவர்களின் இசைவுடன் அந்த ஆசிரியரை அவருடைய பணி பதவியோடு வேறொரு கல்லூரிக்கு மாற்ற கல்லூரிக் கல்வி இயக்குநருக்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது.

கல்லூரிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் 1–4–1977 முதல் நகர ஈட்டுப்படி, வீட்டு வாடகைப்படி, ஆகியவைகளை மூன்றாம் ஊதியக்குழு விகிதத்தில் பெறுவதற்கு ஆணை வெளியிடப்பட்டுள்ளது. அதே சமயத்தில் பழய விகிதங்கள் அவர்களுக்கு அனுகூலமாயிருக்கும் பட்சத்தில் தொடர்ந்து அந்த விகிதங்களைப் பெறவும் அவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கல்லூரிக் கல்வித் துறையைச் சார்ந்த பிற துறைகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு பல்கலைக் கழக மானியக் குழு ஊதிய விகிதங்கள் அளிக்கப்பட்டுள்ளன.

1975–76 முதல் தமிழ்க் கல்லூரிகளில் புலவர் படிப்பிற்குப் பதிலாக பி.லிட். பட்ட வகுப்புகள் துவக்கப்பட்டுள்ளன. இந்தப் பட்டப் படிப்பையும் மற்றும் இதற்குத் தேவையான கூடுதல் ஆசிரியர்களையும் அங்கீகரித்து மானியம் அளிக்க அரசு முடிவெடுத்துள்ளது.

தனியார் கல்லூரிகளில் ஐந்தாண்டு பணி நிறைவெய்திய சிற்றேவலர்கள் அந்தந்த மாவட்ட ஆட்சியர் நிர்ணயித்துள்ள ஊதிய விகிதங்களுக்குப் பதிலாக, கடைநிலை ஊழியருக்குச் சமமான ஊதிய விகிதங்களை 1—1—1979 முதல் பெற ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இதனால் விடுப்பு, ஓய்வூதியம், குடும்ப நல நிதி போன்ற வசதிகளை அவர்கள் பெறுவார்கள்.

[பிற்பகல் 12–30].

1979–80-ல் கோயம்புத்தூரில் ஒன்றும் திருச்சிராப்பள்ளியில் ஒன்றுமாக ஆக இரண்டு சட்டக் கல்லூரிகள் துவங்க ஏற்பாடு செய்யப்படுகிறது. சட்டப் படிப்பில் முதுகலைப் பட்டப் படிப்பு மதுரை சட்டக் கல்லூரியில் வருகிற ஆண்டிலிருந்து துவங்கப் படும். இந்த ஆண்டு சட்டக் கல்லூரியில் மாணவர்களின் சேர்க்கையின் எண்ணிக்கை குறைவானதற்குக் காரணம், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே ஒரு சட்டக் கல்லூரி துவக்கப்பட்டிருக்கிறது. இப்போது படித்து வெளியேறுகின்ற மாணவர்களுக்கு போதிய வேலைவாய்ப்பு இல்லை என்ற அடிப்படையில், நிறைய பேர்கள் நாம் உற்பத்தி செய்து கொண்டிருக்கிறோம். மாறாக, நாட்டின் தேவைக்கேற்ப

1979 மார்ச் 29] [திரு. செ. அரங்கநாயகம்]

கல்வியின் தரத்தை உயர்த்தி, எண்ணிக்கை குறைக்கப்பட்டிருக்கிறது. இன்றைக்கு கோயம்புத்தூரிலும், திருச்சியிலும் சட்டக் கல்லூரி துவங்கும் என்றால், இங்கே வந்து படிக்க முடியாதவர்கள் அங்கே படிப்பதற்கு அது வாய்ப்பு தரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, தன் விருப்ப ஓய்வு; 20 ஆண்டு பணி முடித்தவர்கள் தாங்கள் விரும்பினால் ஓய்வூதியத்துடன் பணியிலிருந்து ஓய்வு பெற்றுக் கொள்ளலாம் என்ற அரசு ஊழியர்களுக்குத் தரப்பட்ட சலுகை தனியார் மற்றும் உள்ளாட்சி மன்றப் பள்ளிகள், கல்லூரிகள் போன்றவற்றில் பணியாற்றும் ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர் அல்லாத பணியாளர்களுக்கும் பொருந்துமென தெளிவாக்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

அதேபோல், முதியோர் கல்வி. மைய அரசு பண உதவியுடன் வரும் ஆண்டில் 2,800 கிராமப்புற எழுத்தறிவிப்பு நிலையங்கள் செயல்படத் தொடங்கும். மேலும், 800 நிலையங்கள் தொடங்க மைய அரசின் அனுமதி எதிர்பார்க்கப்படுகிறது. அதேபோல் தனியார் நிறுவனங்களால் சுமார் 1,300 எழுத்தறிவிப்பு மையங்களும், தேசியப் பணிப் பிரிவிலுள்ள கல்லூரி மாணவர்களால் சுமார் 1,000 எழுத்தறிவிப்பு மையங்களும், நேரு இளைஞர் மையத்தால் சுமார் 600 எழுத்தறிவ்ப்பு மையங்களும் தொடங்கப் பெறும். இதை மைய அரசும் உணர்ந்திருக்கிறது. மாநில அரசும் உணர்ந்திருக்கிறது. எனவே இதன் மூலம் பல்வேறு திட்டங்களை முழுமையாக வெற்றி பெறச் செய்ய முடியும் என்ற நம்பிக்கையின் அடிப்படையிலே தான் இன்றைக்கு நாம் இந்தத் திட்டத்தை தொடங்குவதற்கு முன்வந்திருக்கிறோம்.

அடுத்து, தொழில் நுட்பக் கல்வி: பொறியியல் கல்லூரி விரிவுரையாளர்களுக்கும், கலைக் கல்லூரி பேராசிரியர்களுக்கும் அனுமதிக்கப்பட்டுள்ளதைப் போல ரூ. 700—40—1,100—50—1,300—ஈ.பி.—50—1,600 என்ற சம்பள விகிதத்தில் ரூ. 1,100 தொடக்க அடிப்படைச் சம்பளமாக 1974-ம் ஆண்டு ஜனவரித் திங்கள் 1-ம் நாளில் நிர்ணயிக்கப்பட்டு பணப் பயன் 1977-ம் ஆண்டு ஜனவரித் திங்கள் 1-ம் நாள் முதல் கொடுக்கப்படும். இதைப்பற்றி பேராசிரியர் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

அடுத்து, தமிழ் வளர்ச்சி; விதி விலக்களித்த இனங்களைத் தவிர, மற்ற இனங்களுக்கு அரசு அலுவலகங்களில் தமிழையே கையாள வேண்டும் என்பது அரசின் கொள்கை ஆகும். இதனைச் செயல்படுத்த சுணக்கம் காட்டும் அதிகாரிகள் மீது தக்க ஒழுங்கு நடவடிக்கை எடுக்க அரசு தயங்காது. இந்த தமிழை ஆட்சி மொழியாக்குவதிலே யாருக்கும் மாறுபாடான கருத்து இருக்காது.

டெல்லி மாநாட்டைப் பற்றி மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்த மாநாட்டிலே அதிகாரி கலந்து கொண்டார்கள். அங்கே சில சிபார்சுகளைச் செய்திருக்கிறார்கள். அந்த சிபார்சுகளை மாநில அரசு ஏற்றுக்கொள்ளலாம்; அல்லது ஏற்றுக்கொள்ளாமலும் இருக்கலாம். ஆனால், நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில் தமிழ் ஆட்சி மொழியாவதற்கு மாநில அரசுதான் முடிவெடுக்கும்; அதன்படி தான் செயல்படும் என்ற உறுதியினை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து தொல்பொருள் ஆய்வு; ஏற்பளித்த நான்கு மாவட்ட தொல் பொருள் ஆய்வு அலுவலர்கள் மூலம் தொல் பொருள் ஆராய்ச்சித் துறை இதுகாறும் 200-க்கும் மேற்பட்ட பண்டைய ஓலைச்சுவடிகளை சேமித்துள்ளது. இவற்றை சுவடிகள் வைத்துள்ளவர்கள் இலவசமாக கொடுத்துள்ளனர். பலர் கொடுக்கவும் முன்வருகின்றனர். பொருள் கொடுத்து வாங்கவும் அரசு அனுமதி அளித்துள்ளது. சேமித்துள்ள சுவடிகளில் பல சித்த மருத்துவச் சுவடிகளாகும். 18-ம் நூற்றாண்டில் வாழ்ந்த தளவாய் முதலியார் குடும்பத்தினர் திருநெல்வேலி பகுதியில் கட்டிடங்கள் எழுப்பி கலைத் தொண்டு புரிந்ததைக் குறிக்கும் ஓலைச்சுவடி ஒன்றும், 18-ம் நூற்றாண்டு "கப்பல் இலக்கியம்" ஒன்றும் இவ்வாறு புதிதாகக் கிடைத்தவையாகும். இன்னும் பல இடங்களில் பண்டைய ஓலைச்சுவடிகள் இருப்பது பற்றி செய்திகள் கிடைத்துள்ளன. மேலும் மேலும் சேமிக்கும்போது இதுவரை கண்டிராத சுவடிகள் கிடைக்கக் கூடும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது.

இத்துறை இதுகாறும் பாண்டியர், பல்லவர், சோழர் காலத்தைச் சார்ந்த 130-க்கும் மேற்பட்ட சிலைகளை சேமித்துள்ளது. இதுபோல் 100-க்கும் மேற்பட்ட சிலைகளைக் கண்டு அவற்றை எடுத்துப் பாதுகாக்க பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதனை இன்னும் விரிவுபடுத்துவதற்காக மேலும் 5 மாவட்டங்களில் மாவட்ட தொல் பொருள் ஆய்வு அலுவலர்களை நியமிக்க அரசு முடிவெடுத்துள்ளது.

தமிழ்ப் பண்பாட்டு மையம்: உலக நாகரீகத்திற்கு தமிழர் நாகரீகம் முன்னோடியாக அமைந்து தன் பெரும் பங்கையும் பணியையும் ஆற்றியுள்ளது. தமிழர் பண்பாட்டின் பல்வேறு சிறப்பு கூறுகளை வெளிநாட்டினரும், உள்நாட்டினரும் அறிந்து கொள்ளும் வகையில் செயல்பட தமிழ் பண்பாட்டு மையம் தோற்றி வைக்கப்பட்டுள்ளது. தமிழர் வாழ்வில் ஏறத்தாழ ஈராயிரம் ஆண்டுகள் வாழ்க்கை மரபில் கையாளப் பெற்று வரும் கருவிகள், இசை, நாட்டிய, நாடகத்துறை செய்திகள், வீர விளையாட்டுகள் முதலியவற்றை சித்தரிக்கும் நூல்கள், ஏடுகள், பண்டங்கள், போன்றவற்றை திரட்டி வெளிநாட்டவரும் கண்டு மகிழும் வண்ணம் நூலகம், கலை அரங்கம்

காட்சிக் கூடங்கள் முதலியவை ஏற்படுத்தப்படும். இம் முயற்சியில் சில அரிய நூல்களும், சுவடிகளும், ஏடுகளும், அருங்கலைப் பொருள்களும் தற்பொழுது திரட்டி வைக்கப்பட்டுள்ளன. தமிழ்ப் பண்பாட்டினை பாமரரும் புரிந்து கொள்ளும் வண்ணம் இலக்கியப் பாடல்கள் கொண்ட இசைத் தட்டுகள் வெளியிடவுள்ளது. மேலும் நாட்டுப் பாடல்கள் தொகுப்பு நூல்களை வெளியிடவும் திரைப்படத்துறை வாயிலாக தமிழர் பண்பாட்டை காணவும் வகை செய்யப்பட்டு வருகிறது. இம் மையத்தின் தொடக்க விழா அண்மையில் நடக்கவிருக்கிறது.

நூலகங்கள் : தகுந்த நூலக கட்டிடங்கள் உள்ள இடங்கள் போக சென்னை நகரில் உள்ள 150 வட்டங்களிலும் நூலகக் கட்டிடங்கள் நல்ல முறையில் அதற்கென தனியாக கட்டப்படும். இப்போது பல நூலகங்களும் வீடுகளிலும் அலுவலகங்களிலும் இருப்பதை மாற்றி தனியாக நூலகமாக இயங்குகின்ற அளவில் தனியாக வரைபடம் தயாரித்து, நூலகம் எப்படி இருக்க வேண்டும் என்ற முறையின் அடிப்படையில் சென்னை நகரில் 150 வட்டங்களிலும் மாவட்ட நூலக நிறுவனத்தில் பணம் இருக்கின்ற அளவின் அடிப்படையில் அவற்றை பயன்படுத்தி வந்திருக்கின்ற முறையைப்போல்—இதற்கும் பயன்படுத்தி— 150 வட்டங்களிலும் நூலகக் கட்டிடங்கள் கட்டப்படும்.

அதோடு சேலம் நகரில், மாவட்ட மைய நூலகத்திற்கு நவீன வசதிகள் கொண்ட ரூபாய் 5 இலட்சம் மதிப்புள்ள கட்டிடம் கட்டப்படும்.

கல்லூரிக் கல்வி : தனியார் கல்லூரிகளில், கடைநிலை ஊழியர் தவிர மற்ற ஆசிரியரல்லாதோருக்கு முழு ஊதியத்துடன் 18 மாத மருத்துவ விடுப்பு வெகு விரைவில் வழங்க அரசு ஆணையிடும். அதேபோன்று கடை நிலை ஊழியர் மற்றும் அதற்குச் சமமான பணியிலிருப்போருக்கு—காவல்காரர், தோட்டக்காரர் போன்ற நபர்களுக்கு—6 மாத கால மருத்துவ விடுப்பு முழு ஊதியத்துடன் வழங்கவும், ஒப்புதல் அளிக்கவும் முடிவாகியுள்ளது என்கின்ற இந்த அறிவிப்புகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இறுதியாக பேராசிரியர் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். கல்வி மாநிலப்பட்டியலில் இருக்க வேண்டுமென்று சொன்னார்கள். இந்த அரசும் அதற்கு உடன்பாடுதான் என்பதைத்தான் நாங்களும் தெரிவித்து வந்திருக்கின்றோம், மத்திய அரசும் இதற்கு உடன்பாடுதான். ஆனால், ஏன் இது மாநிலப் பட்டியலில் சேர்க்கப்படவில்லை, லோக் சபையில் மக்கள் சபையில் இதற்கான தீர்மானம் கொண்டுவந்து ராஜ்ய சபாவுக்கு கொண்டு செல்லுகின்ற நேரத்தில் இதற்கு போதிய ஆதரவு இல்லாததின் காரணமாக மறுபடியும் கல்வி பொதுப்பட்டியலில் இருக்க வேண்டிய நிலைமை இன்னும் இருந்துவருகிறது. இன்னும் இரண்டு மூன்று

ஆண்டுகளில் உறுப்பினர்களுடைய கருத்தில் மாறுதல் ஏற்படுமானால் அந்த நேரத்தில் கல்வி மாநிலப் பட்டியலில் வரும். அதற்கான முயற்சியில் மாநில அரசும் மைய அரசும் ஈடுபடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அப்படியிருந்தால்தான் பல்வேறு பிரதேச தேவைகளையும் நாம் நிறைவேற்ற முடியும். கல்வி மாநிலப் பட்டியலில் இருக்க வேண்டும் என்ற கருத்தை இந்த அரசு ஏற்றுக்கொள்கிறது, இந்த மாமன்றமும் ஏற்றுக்கொள்கிறது என்று நம்புகிறேன். அதற்காக நாம் எடுக்கின்ற முயற்சி வெற்றிபெறும் என்பதையும் தெரிவித்துக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது குறுக்கிட்டு கேட்கலாம் என்று நினைத்திருந்தேன். அதாவது இடைநிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்கள் நியமனம் பற்றி குறிப்பிட்டார்கள். உயர்நிலைப்பள்ளிகள், இதற்கு மேல் உள்ள மேல்நிலை உயர்நிலைப் பள்ளிகளாக ஆக்கப்பட்டிருக்கின்ற பள்ளிகளில் தலைமை ஆசிரியர்களாகப் பணியாற்றுகின்ற தலைமை ஆசிரியர்களுக்கும் இடைநிலை பள்ளிகளிலுள்ள தலைமை ஆசிரியர்களுக்கு அளிக்கப்பட்டிருப்பது போல் ஊதியமும், அந்தஸ்தும் அவர்களுக்கும் நிர்ணயித்து கொடுக்கப்பட்டிருக்கிறதா? இல்லையென்றால் அதற்கு என்ன செய்யப் போகிறார்கள்? மேல்நிலைப்பள்ளி என்று வருவதால் ஏராளமான பொறுப்புகள் வருகின்றன என்பது அமைச்சர் அவர்களுக்கும் தெரியும், ஆகவே இவர்களுக்கு துணையாக உதவி தலைமை ஆசிரியர்கள் நியமிக்கும் உத்தேசம் உண்டா? மேலும் கடைசியாக குறிப்பிட்டது, மத்திய அரசாங்கத்தின் கல்வி அமைச்சர் அவர்கள் தெரிவித்த கருத்து, கல்வி கன்கரன்ட் லிஸ்டில் இருக்கவேண்டும் என்று பேசியிருக்கிறார்கள் என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? இப்படிப்பட்ட நிலைமையிருப்பதால் மாநில அரசு எச்சரிக்கையாக இருக்கவேண்டும், இது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா?

[பிற்பகல் 12–40.]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, மத்திய கல்வி அமைச்சர் அப்படிக் கருதவில்லை. அவர்கள் தான் மசோதாவைக் கொண்டு வந்தார்கள். 45-வது திருத்த மசோதா ராஜ்ய சபாவிலே ஏற்றுக்கொள்ளப்படாததன் காரணமாகத்தான் இந்த நிலை. மைய அரசிடமும், மாநில அரசிடமும் இப்படிப்பட்ட பட்டியல் இருக்கவேண்டுமென்ற கருத்தொற்றுமை இருக்கிறது. தலைமை ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், சாதாரணமாக உயர்நிலைப்பள்ளிகளில் தலைமை ஆசிரியர்களாக வரவேண்டுமானால் பி. டி. படித்து, 5 ஆண்டுகள் பணியில் இருக்க வேண்டுமென்ற ஒரு

முறை வைத்திருக்கிறோம். அதேபோல், மேல்நிலைப் பள்ளி களிலே தலைமை ஆசிரியர்களாக வருவதற்கு 2 ஆண்டுகள் அப்படி இருக்க வேண்டுமென்ற ஒரு தகுதி வைத்திருக்கிறோம். இன்றைக்கு மட்டுமல்ல, நிரந்தரமாகவே அப்படி இருக்கிறது. எனவே, இந்த 2 ஆண்டுகள் தகுதிகள் இன்னும் ஏற்பட வில்லை. அந்தத் தகுதி ஏற்படுகின்றபோது, அவர்களுக்கு அந்தச் சம்பளம் கொடுக்கப்படும். மேலும், ஒன்றை நான் விளக்க விரும்புகிறேன்.........

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் அதிக நேரத்தை எடுத்துக் கொள்ளவில்லை. அமைச்சர் அவர்களை இரண்டே கேள்வி களுக்கு விளக்கம் தருமாறு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். (1) சட்டக் கல்லூரி அட்மிஷன் சம்மந்தமானது. சட்டக் கல்லூரிக்கு மாணவர்கள் தேர்ந்தெடுப்பதற்காக ஒரு குழு நியமிக்கப்பட்டு, தகுதி அடிப்படையிலே செலக்ட் செய்யப்பட்டு, மெயின் லிஸ்ட், வெயிட்டிங் லிஸ்ட் என்றெல்லாம் இருக்கிறது, இப்படி இருக்கும்போது. இதையெல்லாம் மீறி கொல்லைப்புறம் வழியாக 9 பேர்கள் சட்டக் கல்லூரியிலே இடம் பெற்றிருக்கிறார் கள். இத்தகைய ஒழுங்கீனமான முறைக்கு இப்படி நடந்துகொண் டதற்கு யார் காரணம் என்பதை தெரிந்துகொள்ள விரும்பு கிறேன். (2) சட்டக் கல்லூரி சம்மந்தமானது. சட்டக் கல்லூரியிலே இருக்கக்கூடிய முதல்வருக்கு, அதாவது டைரக்டர் ஆப் லீகல் ஸ்டடீஸ்க்கு பி.ஏ. வாக நியமிக்கப்படுவதற்கு சில விதி முறைகள் வகுத்திருக்கிறார்கள். டிகிரி இருக்கவேண்டும்; அல்லது பி.டி. படித்திருக்க வேண்டும்; எஜுகேஷன் சர்வீ சிலே இருக்கவேண்டும்; அக்கவுண்ட் டெஸ்ட் பார் சப்பாடி னேட் ஆபீசர்ஸ் பாஸ் செய்திருக்க வேண்டும் என்றெல்லாம் இருக்கிறது. ஆனால், இந்த பி.ஏ. போஸ்டுக்கு 5 பேர்கள் விண்ணப்பம் செய்திருக்கிறார்கள். ஒருவர் ஓம்; அடுத்து ராமலிங்கம், சுந்தர் சிங், இன்னும் கலைவாணன் என்றெல்லாம் இதிலே ஓம் என்பவர் பீ.ஏ., பீ.எல்., பாஸ் செய்திருக்கிறார். அவருக்கு அந்தத் தகுதியிருக்கிறது. ஆனால், இந்தத் தகுதியையெல்லாம் விட்டுவிட்டு, செகரடேரியட்டில் இருக்கும் செக்ஷன் ஆபீசர் ஒருவரை அதாவது ஈ. கே. கலைவாணன் என்பவரைப் போட்டிருக்கிறார்கள். இது எப்படி நடந்தது?*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : * என்று சொல்கிறீர்கள். அதை அனுமதிக்க முடியாது. சபைக் குறிப்பேட்டிலே இருந்து நீக்கிவிடும்படி உத்தரவிடுகிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பீ.ஏ., டு லா காலேஜ் அதாவது டைரக்டர் ஆப் லீகல் ஸ்டடீஸ் பற்றி எனக்கு வந்துள்ள

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. அ. ரகுமான்கான்] [1979 மார்ச் 29

தகவல்களைச் சொல்கிறேன். இதிலே சர்வீஸ் கமிஷன் இப்படி செகரட்டேரியட் செக்ஷன் ஆபீசரை பீ.ஏ. வாகப் போடக்கூடாது என்று எழுதியிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் முதலில் சொல்லியதையே தான் சொல்லுகிறீர்கள். அப்படிப் பேசவேண்டியதில்லை. * என்று தாங்கள் யாரைச் சொல்லு கிறீர்கள்?

திரு அ. ரகுமான்கான்: *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: குற்றச் சாட்டுகளாகச் சொல்வதாக இருந்தால், தாங்கள் முதலிலேயே எழுதிக் கொடுத்துவிட்டுச் சொல்ல வேண்டும். அப்போது தான், அந்தக் குற்றச்சாட்டுகளுக்கு பதில் சொல்ல முடியும். தயவுசெய்து என் அனுமதி இல்லாமல் இப்படிப் பேசுவதற்கு நான் அனுமதிக்க முடியாது. உட்காருங்கள். திடீரென்று குற்றச்சாட்டுக்களைச் சொன்னால், எப்படி அமைச்சர் விளக்கம் சொல்ல முடியும்.

திரு. அ. ரகுமான்கான்: இப்படி ஊழல் நடந்திருக்கிறது என்று சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அனுமதி யில்லாமல் பேசுகிறீர்கள். தயவுசெய்து உட்காருங்கள். * சம் பந்தமாக சொன்னவைகளை சபைக் குறிப்பிலே இருந்து நீக்கும்படி உத்தர விடுகிறேன். பத்திரிக்கைகளிலும் வரக்கூடாது.

மாண்புமிகு திரு, செ. அரங்கநாயகம்: தலைவர் அவர் களே, ஒழுங்கான குற்றச்சாட்டுகளாக இருந்து, என் கவனத்திற்குக் கொண்டு வந்தால், முறையாக விசாரணை செய்து நடவடிக்கை எடுக்கப்படும். யாரும் விதி நியதிகளுக்குப் புறம்பாக நியமிக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

THIRU A. RAHMAN KHAN ; I request the Hon. Deputy Speaker to allow me to speak. The Hon. Minister is misleading the House. I raise a matter of privilege. I am raising a privilege matter.

* மாண்புமிகு பேரவை துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

1979 மார்ச் 29]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பிரிவிலேஜ் என்றால் எழுதிக் கொடுங்கள். இப்போது உட்காருங்கள்.

THIRU A. RAHMAN KHAN : Then O.K.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுவாக இந்த சட்ட மன்றத்தில் சில மரபுகள் இருக்கின்றன. சில பிரச்சினைகள் எழுப்பப்படுகின்றபோது, அமைச்சர்கள் தங்களிடம் இருக்கின்ற தகவல்களைத் தருகிறார்கள். அமைச்சர்கள் தருகின்ற பதிலை ஏற்றுக்கொள்வதுதான் மரபு. ஒவ்வொரு பதிலுக்கும், அது சரியில்லை, இது சரியில்லை, ஆகவே உரிமைப் பிரச்னை என்று சொன்னால், மன்றத்தை எப்படி நடத்துவது? நீங்கள் தான் இதற்கு பதில் சொல்ல வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உரிமைப் பிரச்சினை என்று சொன்னவுடனே உரிமைப் பிரச்சினையாகி விடாது. கான்பிளிக்டிங் வியூஸ் இருந்தால் ஏதாவது தவறாக இருக்குமானால் எழுதிக் கொடுத்த பிறகு அதிலே உரிமைப் பிரச்சினை இருக்கிறதா இல்லையா என்பதைப் பார்த்து பின்னால் நிச்சயமாக அறிவிக்கப்படும்.

திரு. க. அன்பழகன் : அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கும் போது பள்ளிகளிலே அரசு உதவி பெற்று பணியாற்றுகிற கன்டின் ஜென்ட் ஸ்டாபுக்கு ஆறு மாத காலம் விடுமுறை அளிப்பது பற்றியும் அந்த அடிப்படையில் ஊதியம் பெற உரிமை அளிப்பது பற்றியும் தெரிவித்தார்கள். அவர்கள் மாதம் 18 ரூபாய் மட்டும் சம்பளம் பெற்று 1,500 பேர் வேலை பார்ப்பதாகக் கேள்விப்பட்டேன். வெறும் 18 ரூபாய் என்றால் அதை மாற்ற வேண்டும். அதைப் பற்றிப் பரிசீலித்திருக்கிறார்களா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இங்கே தெரிவித்தது தவிர வேறு ஏதாவது இருக்குமானால் நிச்சயமாகப் பரிசீலிக்கிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன் : கல்வியில் அக்கறை கொள்ள வேண்டியவர்கள் மாணவர்கள். கல்லூரிக் கல்வியைப் பொறுத்தவரை பல்கலைக் கழகத்திலுள்ள சிண்டிகேட், செனட் ஆகியவற்றில் மாணவர்கள் அங்கம் வகிக்க வழி வகை செய்ய வேண்டுமென்று கோரிக்கை கொடுத்திருக்கிறார்கள். அதை ஒத்துக் கொள்ள வேண்டுமென்று வேண்டுகிறேன்.

மேல்நிலைக் கல்விக் கூடத்தில் அசிஸ்டெண்ட் ஹெட்மாஸ்டர்கள் நியமிக்கப்பட வேண்டும். மாநிலக் கல்விக் குழு எந்த அடிப்படையில் பணியாற்றிக் கொண்டிருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிக்க வேண்டும்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாநிலக் கல்வி ஆலோசனைக் குழு என்று ஒன்று போடப்பட்டு அதிலே எல்லாக் கட்சித் தலைவர்களையும் போட்டிருக்கிறார்கள். பொதுவாகக் கல்வி போன்ற பிரச்சினைகளில் இங்கு நீண்ட நேரம் விளக்கமாகப் பேச முடியாத சூழ்நிலை ஏற்படுகிற காரணத்தால் அவற்றைப் பற்றித் தெளிவாகக் கருத்துக்களை எடுத்துக் கூறி எடுக்கப்படுகிற முடிவுகளுக்கு எல்லோரும் ஆதரவு தந்து ஒத்துழைப்புத் தர வேண்டுமென்ற முறையில் அமைக்கப்பட்டிருக்கிறது. அது சிறப்பாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன யோசனைகள் நிச்சயமாக கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. கோ. இளங்கோவன்: பாலிடெக்னிக் ஆசிரியர்கள் கலைக் கல்லூரி ஆசிரியர்களைப் போல் ஊதியம் பெற்று வந்தார்கள். இப்போது ஏற்றத்தாழ்வு இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அதைக் களைய அரசு முன் வருமா? தமிழிசை ஆராய்ச்சிப் பிரிவு ஒன்றை தமிழகத்தில் தொடங்க வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்தேன். அதற்கு அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் யோசனைகளைக் கவனத்தில் எடுத்துக் கொள்கிறேன்.

திருவாளர்கள் கோ. இளங்கோவன், ரெ. வீ. சவுந்திரராஜன், கு. ரமணி, ஜே. ஜேம்ஸ், சேலம் மு. ஆறுமுகம் ஆகியோரின் வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெற்றுக் கொள்ளப் பெற்றன.

திரு. செ. சிவசாமி: அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றதாகக் கருதப்பெற்றது.

1979 மார்ச் 29]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

'' மானியக் கோரிக்கை எண் 17—கல்வி என்ற தலைப்பின் கீழ் ரூ. 208,53,13,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

(ஆ) கோரிக்கை எண் 20—வேளாண்மை.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிந்துரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்,

மானியக் கோரிக்கை எண். 20—வேளாண்மை என்ற தலைப்பின்கீழ், ரூ. 44,04,65,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும் ''.

[பிற்பகல் 12—50]

திரு. சு. பாலன் : தலைவர் அவர்களே, விவசாயக் குடும்பத்தில் பட்டம் பெற்ற படித்த மாணவர்களை வெளிநாடு செல்ல சர்க்கார் செலவில் உதவி செய்வது பற்றி விவாதிக்க—

'' மானியக் கோரிக்கை எண் 20—வேளாண்மை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 44,04,65,000—ல் ரூ. 100 குறைக்க வேண்டும் '' என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. ரெ. வீ. சவுந்திரராஜன் : தலைவர் அவர்களே, நெல் விலை அதிகரிக்கவும், பணப்பயிர்களுக்குக் கட்டுப்படியான விலைகளை நிர்ணயிக்கவும் ஆவன செய்யவேண்டுமென்பது பற்றி விவாதிக்க —

மானியக் கோரிக்கை எண் 20— வேளாண்மை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 44,04,65,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்'' என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. வி. கே. கோதண்டராமன் : தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் உற்பத்தி செய்யும் உணவுப் பொருளில் 25 சதவீதம் உற்பத்தி செய்யும் வட ஆற்காடு மாவட்டத்தில் பாசன வசதி செய்யாததால், விவசாயம் பாதிக்கப்பட்டு வருவதைப்பற்றி விவாதிக்க —

'' மானியக்கோரிக்கை எண் 20—வேளாண்மை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 44,04,65,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்'' என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

THIRU J. JAMES : Sir, to dicuss the necessity for starting Agricultural College at Udayagiriam in Kanyakumari District, I move—

"'That the allotment of Rs. 44,04,65,000 under Demand No. 20 Agriculture be reduced by Rs. 100".

திரு. செ. சிவசாமி இருக்கையில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் முன்மொழியப்பெறவில்லை.

திரு. சேலம் மு. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க—

'மானியக் கோரிக்கை எண் 20—வேளாண்மை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 44,04,65,000—இல் ரூ. 100 குறைக்க வேண்டும்'' என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

THIRU P. CHANDRAN: Sir, to discusss the need to establish Agricultural demonstration field in taluk level, I move—

"that the allotment of Rs. 44,04,65,000 under Demand No. 20 Agriculture be reduced by Rs. 100."

கோரிக்கை எண் 36—பாசனம்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிந்துரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :

'மானியக் கோரிக்கை எண் 36—பாசனம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 22,56,83,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்''.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவர் அவர்களே, 100 ஏக்கருக்குக் கீழ் பாசனமுள்ள ஏரிகளின் வரத்துக் கால்வாய்களையும் அரசு மான்யத்திலேயே அக்கால்வாய்களை செப்பனிட நிதி ஒதுக்கீடு செய்யக் கோரி விவாதிக்க—

'' மானியக் கோரிக்கை எண் 36—பாசனம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 22,56,83,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும் '' என்ற வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

திரு. சி. பழனிமுத்து : தலைவர் அவர்களே, பெத்த நாயக்கன் பாளையம் ஒன்றியத்திலுள்ள உமையாள்புரம், ஆரிய பாளையம் ஆகிய ஏரிகளுக்கு வஷ்முட்ட நதியிலிருந்து புதிய நீர்ப்பாசன கால்வாய் வெட்டிக் கொடுப்பது பற்றி விவாதிக்க—

'' மானியக் கோரிக்கை எண் 36—பாசனம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 22,56,83,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும் '' என்ற வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

1979 மார்ச் 29]

திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு : தலைவர் அவர்களே, கோவை தாலுக்கா, கானப்பட்டி கிராமத்தில், குட்டைக்குத் தண்ணீர் வந்து சேர தடுப்பு அணையை விரிவு படுத்தி, வாய்க்காலை பெரிதாக்கிப் போதிய தண்ணீர் குளத்திற்கு வர நடவடிக்கை எடுப்பது பற்றி விவாதிக்க.—

'' மானியக் கோரிக்கை எண் 36—பாசனம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 22,56,83,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும் '' என்ற வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

திரு. அ. சுவாமிதாஸ் : தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் மாம்பழத் துறை அணையை பெரிய அணையாகக் கட்டுவதற்கு அரசு திட்டமிடாதது குறித்து விவாதிக்க—

'' மாயனிக் கோரிக்கை எண் 36—பாசனம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 22,56,83000–இல் ரூ. 100 குறைக்க வேண்டும் '' என்ற வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

திரு. சிவசாமி அவர்கள் இருக்கையில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் முன்மொழியப்பெறவில்லை.

திரு. சேலம் மு. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க—

'' மானியக் கோரிக்கை எண் 36—பாசனம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 22,56,83,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும் '' என்ற வெட்டுத் தீர்மானததை முன் மொழிகிறேன்.

THIRU P. CHANDRAN : Sir to discuss the need to conduct special repairs to Panchayat Union tanks in flood affected areas. I move—

"That the allotment of Rs. 22,56,83,000 under Demand 36—Irrigation be reduced by Rs. 100/"-

கோரிக்கை எண். 50—வேளாண்மை குறித்த மூலதனச் செலவு.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிந்துரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

''மானியக் கோரிக்கை எண். 50—வேளாண்மை குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 11,12,11,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்,, .

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவர் அவர்களே, விவசாயிகளின் ஒன்பது அம்சக் கோரிக்கையைப்பற்றி விவாதிக்க—

'மானியக் கோரிக்கை எண். 50 —வேளாண்மை குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 11,12,11,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்' என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. ரெ. வீ. சவுந்திரராஜன் : தலைவர் அவர்களே, தென்னை, வாழை, கரும்பு, பழத்தோட்டம் ஆகியவைகளின் ஆராய்ச்சிப் பண்ணைகள் அதிகப்படுத்தவும், பெருக்கவுமான விஷயங்கள் குறித்து விவாதிக்க—

''மானியக் கோரிக்கை எண் 50—வேளாண்மை குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 11,12,11,000-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்' என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. சி. கோவிந்தராசன் : தலைவர் அவர்களே, கடலூர் வட்டம் சென்னப்பநாயக்கன் பாளையத்திலுள்ள ஏரியை வெட்டி ஆழப்படுத்திப் பாசனத்திற்கு ஏற்பாடு செய்வது பற்றி விவாதிக்க—

'மானியக் கோரிக்கை எண் 50—வேளாண்மை குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 11,12,11,000-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்' என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. பொ. விஜயராகவன் : தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க—

'மானியக் கோரிக்கை எண் 50—வேளாண்மை குறித்த மூல தனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 11,12,11,000-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்' என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. செ. சிவசாமி அவர்கள் இருக்கையில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் முன்மொழியப்பெறவில்லை.

திரு. சேலம் மு. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க—

'மானியக்கோரிக்கை எண். 50—வேளாண்மை குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 11,12,11,000-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்' என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

1979 மார்ச் 29]

கோரிக்கை எண். 52—பாசனம் குறித்த மூலதனச் செலவு.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிந்துரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

'மானியக்கோரிக்கை எண் 52—பாசனம் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 31,46,20,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்'.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, சிறுபாசன ஏரிகளுக்கு மழை நீரைக் கொண்டு செல்லும் எல்லாவரத்துக் கால்வாய்களையும் மேம்படுத்த வேண்டும், புதுப்பிக்கவேண்டும் என்பதை வலியுறுத்த—

'மானியக் கோரிக்கை எண் 52—பாசனம் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 31,46,20,000- ல் ரூ. 100 குறைக்கவேண்டும்' என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. சி. பழனிமுத்து : தலைவர் அவர்களே, தொடர்ந்து வறட்சி நிலவி வரும் ஆத்தூர் தாலூகாவில் நீர் பாசனப் பெருந் திட்டம் (Master Plan) ஒன்றை செயல்படுத்தாமல் தாமதிப்பது பற்றி விவாதிக்க—

'மானியக் கோரிக்கை எண் 52—பாசனம் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 31,46,20,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்' என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

THIRU J. JAMES : Sir, to discuss the necessity to execute the Neyyar left bank extension channel scheme in Kanyakumari District to serve both for drinking water purpose and irrigation purpose in the Villages of Arunana, Chitharal, Villamkode, Thickurichy etc., I move—

'That the allotment of Rs. 31,46,20,000 under Demand No. 52. Capital Outlay on Irrigation be reduced by Rs. 100/—

திரு. சேலம் மு. ஆறுமுகம் : தலைவரவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண் 52—பாசனம் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 31,46,20,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் அவைமுன் விவாதத்திற்கு வைக்கப்படுகின்றன. மாண்புமிகு அமைச்சரவர்கள்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கைகளின் பேரில் நான் ஆற்ற வேண்டிய உரை * அச்சிட்டு அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு உறுப்பினர்கள் அவர்களுக்கும் அவை வழங்கப்பட்டிருக்கின்றன. அதனை நான் படித்ததாக அவைக் குறிப்பில் ஏற்றுக்கொண்டு* மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய மேலான கருத்துக்களைச் சொன்னால் அவைகளையெல்லாம் ஏற்கத் தயாராக இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, வேளாண்மைத் துறை மானியத்தைப்பற்றி விவாதிக்கிறபொழுது அநேகமாக எல்லோருக்கும் பசியெடுக்கிற நேரம். விவசாயப் பெருமக்களே இன்றைக்குப் பசியோடு இருக்கிற நேரத்திலே தான் இந்த வாதத்தை நான் தொடங்கி வைக்க விரும்புகிறேன். ஏனென்று சொன்னால், விவசாயத்திலே வேளாண்மைத்துறையும், பாசனத்துறையும் இணைந்து நடக்கிற விவாதம் இந்த நிதிநிலை அறிக்கையின் கீழ் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. ஏற்கனவே வேளாண்மைத்துறை தனியாகவும், பாசனத் துறை தனியாகவும் வாதிக்கப்பட்டிருக்கிறது என்பதை நீங்கள் அறிவீர்கள்.

வேளாண்மைத் துறையைப் பற்றி எடுத்துக்கொண்டால், அதற்காக ஒதுக்கப்பட்டிருக்கும் பணம், வரவு-செலவுத் திட்டத்திலே கடந்த ஆண்டு ஒதுக்கிய தொகையோடு ஒப்பிட்டுப் பார்த்தால் பெரிய அளவில் வேறுபாடு இல்லை என்பதை அமைச்சரவர்களும் அறிவார்கள். இந்த அவையும் அறியும் என்பதை உங்களுக்கு எடுத்துகாட்ட விரும்புகிறேன். உழவு முக்கியமானது என்று பேசாத அரசியல் கட்சிகள் இல்லை. இருப்பினும் கூட வேளாண்மைத் துறைக்குப் போதிய நிதி ஒதுக்கப்படவில்லை என்பதை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

குற்றச்சாட்டு என்று வாயால் சொல்வது மட்டுமல்ல, நடைமுறையிலே பெரிய அளவிற்கு ஒதுக்கப்படவில்லை என்பது இவர்களுடைய வரவு-செலவுத் திட்டத்தைப் பார்த்தாலே தெரியும். போன ஆண்டு 52 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது, இன்றைக்கு 55 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இப்படி 3 கோடி ரூபாய் அதிகமாக ஒதுக்கப்பட்டிருக்கிறது. வரவு-செலவுத் திட்டம் ஏறக்குறைய 849 கோடி ரூபாய்.

அதுபோல நீர்பாசனத்தை எடுத்துக்கொண்டாலும் கூட, 3 கோடி, 4 கோடி ரூபாய்தான் அதிகமாக ஆக்கியிருக்கிறார்களே தவிர பெரிய அளவில் நீர்பாசனத்திற்காக ஒதுக்கவில்லை. இப்பொழுது ஒதுக்கப்பட்டிருக்கின்ற தொகையைக் கடந்த ஆண்டு

[*608 – 672ம் பக்கங்களில் இணைப்பு I, II ஆக அச்சிடப் பெற்றுள்ளது].

நிதிநிலையோடு ஒப்பிட்டால் 2 கோடி 3 கோடி ரூபாய்தான் அதிகமாக இருக்கிறதே தவிர, அதிகமான அளவிற்கு இந்த ஆண்டு விவசாயத் துறைக்கு ஒதுக்கப்படவில்லை என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் குற்றச்சாட்டாகச் சொல்ல விரும்புகிறேன்.

ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், உங்களுக்குத் தெரியும், விவசாயிகள் அதிகமானவர்கள், கொள்கைக், குறிப்பில், விளக்கக் குறிப்பில் சொல்லும்போது தமிழ்நாடு விவசாயப் பொருளாதாரத்தையே நம்பி இருக்கிறது என்ற கருத்து சொல்லப்படுகிறது. அவ்வாறு விவசாயப் பொருளாதாரத்தையே நம்பியிருக்கின்ற தமிழ்நாட்டிற்கு இந்த விவசாயத் துறைக்கு அதிகமான பணத்தைக் கொடுக்காததற்கான காரணங்கள் என்னவென்பதை அமைச்சரவர்கள் கட்டாயமாகப் பதிலில் சொல்ல வேண்டும். உழவின் சிறப்பு பற்றி நாம் மேடைகளிலே பேசுகிறோம். வள்ளுவனாக இருக்கலாம். கம்பனாக இருக்கலாம், ஆனால் உழவுத் தொழில் இல்லாவிட்டால் ஒன்றுமே நடக்காது என்பது நாம் எல்லோரும் ஏற்றுக்கொள்ளும் உண்மையாகும். அப்படியானால் இதைச் சீரமைக்க, இதை ஒழுங்குபடுத்த ஏன் மேலும் பணத்தை ஒதுக்க முடியவில்லை என்ற காரணத்தைப் பதில் சொல்லும்பொழுது சொல்லுங்கள்.

இருந்தாலும்கூட, இன்றைக்குப் பிரதானமாக நான்கு அம்சங்களைக் கொண்டு வர வேண்டும். இந்த நாட்டின் விவசாயத்திற்கு நீர்ப் பாசனத்திற்குப் பிரதான முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்ற காரணத்தால் பாசனத்தையும் வேளாண்மையோடு சேர்த்திருக்கிறார்கள். அப்படிச் சேர்த்துக் கொண்டதற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் பாசனத்திற்காக ஒதுக்கப்பட்ட தொகை தமிழ்நாட்டிலே எந்த அளவிறகுச் செலவழிக்கப்படுகிறது, எந்த அளவிற்கு எங்கெங்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதைப் பார்க்கவேண்டும். காவிரி நீர்ப் பிரச்னை சம்பந்தமாக இதில் இப்பொழுது நான் பேச விரும்பவில்லை. தனியாக அதைப்பற்றி வாதித்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் பின் தங்கிய பகுதிகளுக்கு, தண்ணீர் இல்லாத இடங்களுக்கு என்ன முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது. போன ஆண்டு பேசியதற்குப் பதிலாக, இந்த ஆண்டு கீழ் ஊற்றுக்களை, நீர் ஊற்றுக்களைக் கண்டு பிடிக்க அதிக நிதி ஒதுக்காதது மட்டுமல்ல, இராமநாதபுரம் மாவட்டம் போன்ற இடங்களில் போன ஆண்டு 400 கிணறுகள் கொண்டு வர வேண்டுமென்று சொல்லப்பட்டது. இப்பொழுது 100 என்றுதான் அங்கே குறிப்பிடப்பட்டிருக்கிறது.

[பிற்பகல் 1—00]

ஆகவே. விவசாயத் துறையிலே நீர்ப்பாசனம் முக்கியத்துவம் வாய்ந்தது என்று சொன்னால் நீர்ப்பாசனத்திற்கு இந்த அரசு எடுத்திருக்கக்கூடிய முயற்சி இருக்கிறதே அது மிகக் குறைவானது. அதற்கு வேண்டிய நிதி இதிலே இல்லையென்பதை எங்கள் கட்சியின் சார்பாக நான் கூறிக்கொள்கிறேன்.

நீர்ப்பாசனத்தைப் பற்றி பல்வேறு குறிப்புகள் இருந்தாலும் எங்களது புதுக்கோட்டை மாவட்டம் இராமநாதபுரம் மாவட்டம் சம்பந்தமாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். தஞ்சாவூரிலே தண்ணீர் வருகிறது. அந்தத் தண்ணீருக்காக, காவிரிக்காக, போராடுகிறோம். ஆனால், புதுக்கோட்டை, இராமநாதபுரம் மாவட்டங்களிலே, தமிழ் நாட்டிலே மொத்தமாக எடுத்துக் . கொண்டால், குளங்கள், ஏரிகள் அதிகம். அந்தக் குளங்கள், ஏரிகள் இவைகளையெல்லாம் நிரந்தரமாக ஆழப்படுத்துகிற முறை யில்லாமல், அதாவது கல்வெர்ட் கட்டி, மண் போடுவது, தண்ணீர் வீணாகப் போகாமல், அப்படி என்ன ஏற்பாடுகள் செய்திருக்கிறீர்கள் என்று கேட்கிறேன். ஆண்டுதோறும் கண்மாய்கள் வெட்டுகிறோம், குளங்களை ஆழப்படுத்துகிறோம் என்ற பெயரில், ஏராளமான கண்மாய்களைத் திரும்பவும் வெட்டக் கொடுத்து, மீண்டும், மீண்டும், கான்ட்ராக்ட் கொடுத்து, அரசாங்கப் பணம் செலவழிகிறதே தவிர, அவைகளை நிரந்தரமாக ஆழப்படுத்த என்ன திட்டங்கள் இருக்கின்றன என்பதை நான் கேட்க விரும்புகிறேன்.

அது மாத்திரமல்ல, முதுகுளத்தூர் தாலுக்காவிலே, 100 கிணறுகள் தோண்டப்படும் என்று சொல்லப்படுகிறதே தவிர, குளங்கள் அதிகம் இருக்கிற காரணத்தால் நீரூற்றுகள் அதிகம் அதனால், அங்கே, தண்ணீர் தேங்குகிறது. தண்ணீர் தேங்குகிற இடத்தில் குழாய் கிணறுகள் வெட்டினால்தான் தண்ணீர் கிடைக்கும். விஞ்ஞான ரீதியாகப் பார்த்தாலும் அதுதான் சரி. எங்கே தண்ணீர் தேங்குகிறதோ அந்த இடங்களிலே குழாய்க் கிணறுகளை அதிகப்படுத்துவதற்குப் பதிலாக, விஞ்ஞான ரீதியிலே செய்வதற்குப் பதிலாக, வேறு இடங்களிலே அதிகமாக்கியிருக்கிறீர்கள். ஆக, கிணறுகள் தோண்டப்படும் என்று திட்டம் இடுவதிலே கூட, ஒரு விஞ்ஞானப் பார்வை கிடையாது. எங்கே நீர்த்தேக்கம் இருக்கிறதோ, அங்கே குளங்கள் வெட்டும் முறையை ஏற்படுத்த வேண்டும். அந்த ஊனத்தை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

[மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை]

தண்ணீருக்கு, பாசனத்திற்குத் தேவையான தண்ணீருக்கு உத்தரவாதத்தை ஏற்படுத்தாமல் நிச்சயமாக நாம் விவசாயத்திலே பெரிய மாற்றத்தை ஏற்படுத்த முடியாது, தற்பொழுது தண்ணீர் இருக்கிறது, நெல் அதிகம் விளைந்திருக்கிறது என்பதிலே நீங்கள் மகிழ்ச்சி அடையலாம், அமைச்சர் நிச்சயம் ஒன்றைக் கவனத்தில் கொள்ள வேண்டும். நீங்கள் ஆட்சிக்கு .வந்ததிலிருந்து வெள்ளமும் புயலும் வந்தாலும் கூட, மழை பெய்தது சேதாரம் இருந்தாலும், கூட, தண்ணீருக்கு உத்தரவாதம் இருந்தது, ஆகவே, இப்பொழுதுள்ள விளைச்சல், இயற்கையாகப் பெய்த மழையால் தானே தவிர, உங்களுடைய நீர்ப்பாசனத் திட்டத்தால் அல்ல என்பதைப் புரிந்துகொண்டால் தான் நல்லது. கடுமையான வறட்சி வந்தபொழுது நீர்ப்பாசனத்திற்கு திட்டம் இல்லாத நிலையில் கடந்த ஆட்சிக்காலம் தொல்லைக்கு ஆளானது, 3 ஆண்டுக்காலம்

REPORTING SECTION

நெல் விலை உயர்ந்தது என்பது உங்களுக்குத் தெரியும். புயல் வெள்ளம், மழை ஓரளவு சிரமத்தைக் கொடுத்தாலும், தெளிவாக தண்ணீர் கிடைத்தது. ஆகவே, இரண்டு ஆண்டுக்கால அனுபவத்தை வைத்துக் கொண்டு, நீர்ப்பாசன முக்கியத்துவத்தைக் குறைப்பீர்களானால், எதிர் காலத்தில், நிச்சயமாக உணவுப் பற்றாக் குறையால், அரிசி விலை உயர்வால், அரசுக்கு எவ்வளவு சிரமம் ஏற்படும் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன். அரசுகள் அதனால்தான் மாறியிருக்கின்றன என்பது கடந்த கால வரலாறுகள். அது, பக்தவத்சலம் காலமாக இருக்கலாம், கருணாநிதி காலமாக இருக்கலாம், நீர் எங்கே யெல்லாம் இருக்கிறதோ அதை வெளிக் கொண்டு வரக் கூடிய முறையிலே அரசு முயற்சிக்க வேண்டுமென வற்புறுத்துகிறேன்.

நீர்ப்பாசனத்திற்கு அடுத்த முக்கியமான நிகழ்ச்சி, உற்பத்தி பண்ணுகிற விவசாயப் பொருளுக்கு விலை இல்லை. அமைச்சரவர்கள் உண்ணாவிரதம் இருக்கிறேன் என்று சொன்னார்கள். தமிழ்நாட்டு மக்களுடைய யதார்த்தமான நிலையைப் புரிந்து கொண்டு தான் சொன்னார்கள், ஆனால், சொன்னதோடு இருக்கக் கூடாது. இன்றைக்கு தஞ்சாவூர் ஜில்லாவிலே தண்ணீர் வருகிறது, நான் கொஞ்சம் வேறுபடுத்திப் பார்ப்பதாக நீங்கள் நினைக்கக்கூடாது. அதிலேகூட, புது சச்சரவைக் கிளப்பிக் கொண்டிருக்கிறார்கள், நிலத்திற்கு உச்ச வரம்பு போல், ஏன் தண்ணீருக்கு உச்ச வரம்பு இருக்கக்கூடாது. 3 போகத்திற்குத் தண்ணீர் கொடுக்கிறீர்களே தஞ்சாவூரில், ஒரு போகத்திற்குத் தண்ணீர் கொடுங்கள் இராமநாதபுரத்திற்கு என்று கேட்பதாக நீங்கள் கருதக் கூடாது. ஏனென்றால், நிலங்களுக்கு உச்ச வரம்புபோல், ஒரு போகத்திற்கே உத்தரவாதம் இல்லாதபொழுது மூன்று போகத்திற்கு உத்தரவாதம் அளிக்கப்படுகிறது என்ற ஒரு கருத்து வருகிறது. ஏன் இதை ஞாபகப்படுத்துகிறேன் என்றால், தண்ணீருக்கு உத்தரவாதம் இல்லையென்றால், தண்ணீரை இறைத்து, விளைவிக்கிறோம். அதனால், உற்பத்திச் செலவு அதிகம் ஆகிறது. ஆனால், நெல் விலை நிர்ணயிக்கிறபொழுது, ஒரே விலைதான். நீர்ப்பாசனத்திற்கும் உத்தரவாதம் கிடையாது, செலவும் அதிகம் விலையும் ஒரே விலைதான். ஆகவே, புஞ்செய் பிரதேசங்களில், வறட்சியான மாவட்டங்களில் விளையும் நெல்லுக்கு இந்த அரசாங்கம் கூடக் கொஞ்சம் விலை கொடுக்க ஏன் இந்த பட்ஜெட்டிலே நிதி ஒதுக்கக்கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.

இது ஒரு யதார்த்த உண்மை. கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும், தைரியமாக ஒதுக்க வேண்டும். அப்படி ஒதுக்கி விட்டால் உற்பத்தி பண்டங்கள் நியாய விலை பெற்றால், நிச்சயமாக உற்பத்தி பெருகும். அவன் ஊக்கம் பெற முடியும். இல்லையென்றால், உற்பத்தி குறையும், அவன் மனம் உடைவான். தமிழ் நாட்டில் உணவு நெருக்கடி வர காரணமாக இருக்கும்.

[திரு. கூத்தக்குடி ச. சண்முகம்] [1979 மார்ச் 29

ஆகவே, உற்பத்திச் செலவுக்கேற்ற வகையில் விலை நிர்ணயம் செய்ய வேண்டும் என்பதை சாதாரணப் பிரச்னையாகக் கருதாமல், இந்த உணவு விலையை பிரதான பிரச்னையாகக் கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கடனைப் பற்றிச் சொன்னார்கள். நான் இங்கே திருப்பித் திருப்பி அது குறித்துப் பேசியிருக்கிறேன். ஒரு பழைய பாட்டை சொல்வேன், ஒரு விவசாயி பாடினான். "ஆவின மழை பொழிய, இல்லம் வீழ, அகத்தடியாள் மெய்நோக, அடிமைசாக, மாயீரம் காயும் முன் விதை கொண்டு ஓட, வழியில் கடன்காரன் மறித்து நிற்க . ." ஒரு விவசாயியின் குடும்பத்தின் நிலை பற்றி ஒரு பழைய புலவன் சொல்கிறான், மாடு கன்றுக்குட்டி போடுகிறது, மழை பொழிகிறது, வீடு இடிந்து விழுகிறது, மனைவி பிரவச வேதனைப்படுகிறாள், உழுகிறவன் செத்துப்போகிறான் , ஈரம் காயாத விதை நெல்லை விவசாயி எடுத்துக் கொண்டு போகிறான். அதைப் பிடுங்கிக் கொண்டு போகிறான் கடன்காரன் ; இது தான் ஒரு விவசாயக் குடும்பத்தின் நிலை. அப்படியானால் தமிழ் நாட்டில் ஒரு விவசாயியின் குடும்பம் எந்த அளவிற்கு சீரழிந்து போய் இருக்கிறது என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும். அவன் சீரழிந்ததற்குக் காரணம் என்ன, கடன். கடன் பளு தாங்க முடியவில்லை. அதனால் தான் கம்பன் சொன்னான், கடன் பட்டார் நெஞ்சம் போல் கலங்கினான் இலங்கை வேந்தன் என்று. அவன் மனம் உடைந்தது என்று சொல்லவில்லை, நெஞ்சம் உடைந்தது என்று சொன்னான். கடன் பட்ட விவசாயிகளின் பொருளாதாரம் நெஞ்சத்தை உடைத்துக் கொண்டு இருக்கிறது. ஆகவே, இந்த அரசாங்கம் அந்த விவசாயிகள் கடன்களை அடைக்க நிவாரணம் அளிக்கும் வகையில் ஏன் ஒரு 50 கோடியை ஒதுக்கித் தரக் கூடாது. ஏன் அந்தத் துணிச்சல் உங்களுக்கு இல்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மத்திய அரசின் மீதும் ரிசர்வ் வங்கியின் மீதும் குறை சொல்கிறீர்கள், குற்றம் சாட்டுகிறீர்கள். அதை எதிர்த்துப் போராட்டங்கள் நடத்துங்கள், எங்களுக்கு ஆட்சேபணை இல்லை. ஆனால் அதே நேரத்தில் தமிழ் நாட்டில் அந்த விவசாயிகளின் கடன் பளுவைக் குறைக்க இந்த பட்ஜெட்டில் 5 சதம் மானியம் கொடுக்கிறோம் வட்டி செலுத்துவதற்கு என்று ஏன் சொல்லவில்லை. அப்படிப்பட்ட நிலைமைகளை நாம் ஆராய்ந்து செய்யவில்லை என்று சொன்னால், விவசாயப் பொருளாதாரத்தை நாம் மேம்படுத்துவது என்று சொல்வது கற்பனை தான் என்பதை நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன். (மணியடிக்கப்பட்டது).

இரண்டொரு விஷயங்களைச் சொல்லி நான் முடித்து விடுகிறேன். அதிக நேரம் எடுத்துக்கொள்ள மாட்டேன். ஊருக்குப் போகவேண்டியிருக்கிறது.

1979 மார்ச் 29] [திரு. கூத்தக்குடி ச. சண்முகம்]

கடன் பிரச்னை, விலை பிரச்னை மட்டும் இல்லாமல், நிர்வாக சம்பந்தமான சில பிரச்னைகளையும் நான் சொல்லிவிட்டுப் போகலாம் என்று நினைக்கிறேன். நிர்வாகத்தில் பார்க்கிறபோது புதிதாக கண்காணிப்பாளர்கள் என்று 25 பேர் போட்டு இருக்கிறீர்கள். ஏற்கனவே, ஊராட்சி ஒன்றியங்களில் இருக்கும் விவசாய அதிகாரிகள் என்ன வேலை செய்கிறார்கள். நான் அப்படிச் சொன்னால் அவர்கள் மீது குற்றம் சாட்டுவதாக கருதக் கூடாது. அவர்கள் வேலை பெரும்பகுதி நேரம் செய்வது இல்லை. அவர்கள் பெறும் சம்பளம் ஒய்வூதியம் என்ற அளவில் தான் வாங்கிக் கொள்கிறார்கள். பெருவாரியான பேர்—பீல்டுமேன்கள்—நிலங்களைக் பார்க்கவருகிறார்கள் என்று சொல்ல முடியாது. மேலும் புதிதாக கண்காணிப்பாளர்களைப் போட்டால் அவர்களுக்கு முழு நேர வேலை இருக்குமா என்பது சந்தேகம். 8 மணி நேரம் அவர்களுக்கு வேலை என்றால் அவர்கள் அலுவலகத்தில் உட்கார்ந்து கொண்டு வேலை பார்ப்பது என்பது அல்ல. அவர்கள் விவசாயிகளுக்கு அறிவுரைகள் ஆலோசனைகள் வழங்கத் தான் வைத்து இருக்கிறோம். இதையெல்லாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

நீர்பாசனம் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். இப்பொழுது இரண்டு சீப் இன்ஜினீர் போஸ்ட் காலியாக இருக்கிறது. 23 எக்சிகியூட்டிவ் இன்ஜினீர் போஸ்ட் காலியாக இருக்கிறது. நீங்கள் எவ்வளவு வேகமாகச் செயலாற்றுகிறீர்கள் என்பதை இதைப் பார்த்தால் தெரிகிறது. அவர்களேயும் கூட லஞ்சம் இல்லாமல் நடந்து கொள்ளும்படி வைந்தால் நல்லது. அவர்களுக்கு முறையாக பதவி உயர்வு கொடுத்து, சம்பளம் அதிகமாகக் கொடுத்தால் இந்த நிலை குறையும். இந்தியா பூராவும் எடுத்துப் பார்த்தால் தமிழ்நாட்டில் தான் இளநிலைப் பொறியாளர்கள், உதவிப் பொறியாளர்கள் சம்பள விகிதாச்சாரம் நம்முடைய தமிழ் நாட்டில் தான் கடைக்கோடியில் இருக்கிறது. அவர்கள் பணம் போதாமல் கான்டிராக்டரிடம் கடன் வாங்கிக் கொள்கிறார்கள். ஆகவே, அவர்களுக்குச் சம்பளத்தை அதிகப்படுத்திக் கொடுத்தால் அவர்கள் மேலும் வேலையைத் திருப்திகரமாகச் செய்ய முடியும், இது சம்பந்தமாக நிச்சயமாக முதலமைச்சரைக் கலந்து கொண்டு ஒரு நல்ல முடிவு எடுக்க வேண்டும். வரக்கூடிய வரவு-செலவு திட்டத்திலாவது இதைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பூச்சி மருந்துகள், உரம் வினியோக சம்பந்தமாக நான் சொல்ல விரும்புவது, ஒரு பூச்சியையும் கொல்ல சக்தி அற்ற மருந்தைத் தான் இப்போது வினியோகிக்கிறார்கள். பல ஆண்டு காலமாக மிகப் பெரிய பொறுப்புகளில் உள்ளவர்களோடு ஒப்பந்தம் செய்து கொண்டு பூச்சிகளைக் கொல்லாத மருந்தை ஒப்பந்தக்காரர்களிடருந்து நேராக வாங்கியிருக்கிறார்கள்.

[திரு. கூத்தக்குடி ச. சண்முகம்] [1979 மாகச் 29

[பிற்பகல் 1-10.]

விவசாயிகள் பொருளாதாரத்தை முன்னுக்கு கொண்டுவர வேண்டுமென்றால் இந்த மாதிரியான முறைகேடுகளைப் போக்கி நிதிநிலை அறிக்கையிலேயே பணம் ஒதுக்கி, கடனை ரத்து செய்து, நிரந்தரமான வருமானத்திற்கு உத்தரவாதம் செய்து, விவசாய உற்பத்தியைப் பெருக்கி அதற்கு நியாயமான விலை கிடைக்கச் செய்து, நிர்வாகத்தை ஒழுங்குப்படுத்தி, நிர்வாக இயந்திரத்தை முடுக்கி விட்டால்தான் அவர்கள் வாழ்க்கையில் மேம்பாடு காண முடியும்.

இன்னொரு முக்கியமான பிரச்சனை என்னவென்றால் அதிகாரிகள் கொடுக்கின்ற புள்ளி விவரங்கள். என்னுடைய மாவட்டத்தைப்பற்றி போன கூட்டத்திலேயே நான் குறிப்பிட்டேன். 2,500 ஹெக்டேரில் எலி ஒழிப்பு. அதேமாதிரி வயல் விழா. வயல் விழா என்றால் என்ன என்று கேட்டேன். விளக்கம் சொன்னார்கள். மக்களை அங்கே கூட்டிக் கொண்டு வந்து காட்டுவதற்கு வயல் விழாவாம். ஆட்களை அழைத்து வந்து வயலைக் காட்டுவது ஒரு விழாவா ? வயல் விழா, எலி ஒழிப்பு இந்த மாதிரி நிகழ்ச்சி எல்லாம் வேண்டாம் என்று சொல்லி, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

*திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு தலைவரவர்களே, அவை முன்னுள்ள வேளாண்மை மற்றும் நீர்ப்பாசன மானியக் கோரிக்கைகளை ஒட்டி எனது மாயூரம் தொகுதி சம்பந்தப்பட்ட சில விவரங்களை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்கு இந்த உரையின் மூலமாக எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாயூரம் தொகுதி சம்பந்தப்பட்டவரையில் நீர்பாசனத்தைக் கொடுப்பது காவிரி. அதனுடைய உப நதிகள் விக்கிரமன் ஆறு, மன்னியாறு, பழவாறு. வெள்ளக்காலங்களில் காவிரியை அடைத்து உபநதியான விக்கிரமன் ஆற்றில் மட்டும் திறந்துவிடப் படுவதனால் பெருவெள்ளம் ஏற்படுகிறது, காவிரி, விக்கிரமன், இரண்டையுமே திறந்து விட வேண்டுகிறேன். அதனால் பல இடையூறுகள் ஏற்படுகின்றன. காவிரி வெள்ளம் பூராவும் உப நதியில் புகுந்து, பல இடங்களில் உடைப்பு ஏற்பட்டு, வெள்ளத்தால் சூழப்படுகிறது. ஆகவே, இந்த வெள்ளப் பெருக்கை தடுக்க காவிரி, விக்கிரமன் ஆறு இரண்டையும் திறந்துவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாயூரத்திற்குக் கிழக்கே செம்பனார்கோயில், புஞ்சை கடாரங் கொண்டான், மேலையூர், பூம்புகார் பகுதிகளில் ஓடும் காவிரியை ஆழப்படுத்தி, கரைகளை வலுப்படுத்தினால் உட்பகுதிகளில் தண்ணீர் புகுந்து, வெள்ளப் பெருக்கு ஏற்படாமலிருக்க, வெள்ளம் வடிந்து செல்ல ஏதுவாக இருக்கும். அதற்கு வழிவகை காண வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

காவிரிபூம்பட்டினம் என்று பெயர் வைத்ததே காவிரி கடலோடு கலக்கும் காரணத்தால்தான். ஆனால் இப்போது காவிரி கடலோடு கலப்பதில்லை. மாண்புமிகு அமைச்சரவர் களும் அதைப் பார்த்திருக்கக்கூடும். பூம்புகார் என்று மறுபடியும் பெயரிட்டு அழைத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் முன்னைப்போல காவிரி கடலோடு கலப்பதில்லை. ஆகவே, காவிரியை ஆழப்படுத்தி, கரைகளை வலுப்படுத்தி, முன்போலவே அதை கடலோடு கலக்கும்படி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி காலத்தில் எங்கள் பகுதியிலே இருக்கிற ஆறு, அது பழவாறு—அமைச்சரவர்கள் தயவு செய்து கூர்ந்து கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கி றேன். அந்த பழவாறு கரையே இல்லாத ஆறாக இருந்தது. என்னுடைய கவனம் சரியாக இருந்தால் 75 இலட்சம் அல்லது 80 இலட்சம் ரூபாய் செலவிட்டு, அந்த ஆற்றுக்கு கரைகளை அமைத்தது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி. பிறகு கழக ஆட்சி கலைக்கப்பட்டது. கலைக்கப்பட்ட பிறகு, இந்த ஆட்சி வருவதற்கு முன்னாலிருந்து ஏறத்தாழ 3 ஆண்டுக் காலம்வரை அந்தப் பழவாறு கரை பராமரிக்கப்படாதவாறு இருந்து, வெள்ளம் பெருவாரியாக ஏற்பட்டு, சுற்றுவட்டார கிராம மக்கள், குறிப்பாக நஞ்சை, புஞ்சை நிலங்கள் எல்லாம் பாதிக்கப்பட்டன, மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதைச் சுட்டிக்காட்டுகின்ற நேரத் தில் நிவர்த்தி செய்வதற்கு அமைச்சரவர்கள் முன்வருவார்கள் முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாயூரம் பகுதியில் பழவாற்றின் கரையை பலப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டேன். மழைக் காலங்களில் பாபநாசம், கும்பகோணம், குற்றாலம், மாயூரம் போன்ற பகுதி களிலுள்ள தண்ணீர் எல்லாம் பழவாற்றில் வந்து சேர்ந்து, பழவாறு வெள்ளப் பெருக்கெடுத்து ஓடுகிறது. ஏற்கெனவே பழவாற்றிலும் தண்ணீர் அதிகமாக வருவதால், அப்போது பல மடங்கு அதிகமாகி, பழவாற்றின் பலகீனமான கரைகள் மாயூரம் பகுதியில் இருப்பதால் அங்கே வெள்ளம் புகுந்து கிராமங்கள் எல்லாம் வெள்ளத்தால் சூழப்படுகின்றன. அந்தக் கிராமங்களின் பெயர்களைச் சொல்ல நேரம் இல்லை. வேண்டுமானால் அமைச்சரவர்களிடம் தனியாக எழுதித் தருகிறேன்.

அண்மையிலே கூட மாயூரத்தைச் சார்ந்த நமச்சிவாயபுரம் என்ற பகுதியில் பல இடங்களில் உடைப்பு ஏற்பட்டிருக்கிறது. அந்த உடைப்பு ஏற்பட்ட நேரம் இரவு நேரம். அப்போது ஏதோ ஒரு பெரிய வெடி குண்டு வெடித்ததுபோல் அந்த வட்டார முழுவதுமே அதிர்ச்சி அடையக்கூடிய அளவுக்கு பெரிய சத்தம் கேட்டிருக்கிறது. அந்த வட்டாரத்தில் ஏறத்தாழ 5, 6 மைல்கள் எங்கு நோக்கினும் தண்ணீர்தான் என்ற நிலையில்

[திரு. என். கிட்டப்பா] [1979 மார்ச் 29

அங்கே இருந்த நஞ்சை, புஞ்சை நிலங்கள் குடிசைகள் எல்லாம் மூழ்கக்கூடிய அளவுக்கு நிலைமை ஏற்பட்டது. ஆகவே இதனை சுட்டிக்காட்டி பழவாற்றின் கரையைப் பலப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை மீண்டும் மீண்டும் நான் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னொன்று, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் ஒரு திட்டம் எங்களது தொகுதிக்கு உருவாக்கினார்கள். அதாவது சேத்தூர் வாய்க்கால் சீரமைப்புத் திட்டம் என்ற பெயரில் ஒரு 6, 7 இலட்ச ரூபாய் செலவில் தயாரிக்கப்பட்டது அந்தத் திட்டம். இந்தத் திட்டம் செயல்பட்டுக் கொண்டிருந்த நேரத்தில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி கலைக்கப்பட்டது. அவ்வாறு கலைக்கப்பட்டதற்குப் பிறகும்கூட பல முறை அங்கே உள்ள குறைபாடுகள் பற்றி முறையீடுகள் வைக்கப்பட்டன. ஒருமுறை நமது மாண்புமிகு மதிப்பிற்குரிய முதல்வர், புரட்சித் தலைவரை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையிலே அங்கே உள்ள விவசாயிகளுடன் சந்தித்து, என் முன்னிலையில் அங்கே உள்ள குறைபாடுகளைச் சுட்டிக்காட்டி நிவர்த்தி செய்ய வேண்டும் என்று வேண்டுகோள் விடப்பட்டது. ஆனால் இன்றைய தினம் வரையில் அந்த நியாயமான கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டனவா என்று கேட்டால் நிறைவேற்றப்படவில்லை. அதிலே உள்ள கோரிக்கைகள் பெரும்பாலும் நிறைவேற்றப்பட முடியாத திட்டங்கள் அல்ல. ஆகவே அந்தத் திட்டங்களை நிறைவேற்றித் தரவேண்டும் என்று அந்தத் தொகுதி விவசாயப் பெருங்குடி மக்களின் சார்பாக நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தப் பழவாற்றிலே வெள்ளத்தால் பாதிப்பு ஏற்படுவதை எடுத்துச் சொல்லி அரசாங்கத்துக்கு ஒரு யோசனை சொல்லக் கூடிய அளவுக்கு நான் உள்ளவன் அல்ல. ஆனால் ஒரு நிலையைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். பழவாற்றின் ஒரு பகுதியில் தேனூர் என்ற இடத்தில் ரெகுலேட்டர் மூலமாக உப்பனாற்றின் வழியாக வடிய விடுகிறார்கள். அந்தத் தண்ணீர் திருமுல்லை வாசலில் வங்கக் கடலிலே கலக்கிறது. பழவாற்றின் அத்தனை தண்ணீரையும் உப்பனாற்றால் கொள்ள முடியவில்லை. அதனால் உப்பனாற்றில் உடைப்பு எடுத்துக்கொண்டு சீர்காழியின் பல பகுதிகளையும் வெள்ளத்தில் ஆழ்த்துகிறது. ஆதலால் சித்தமல்லி, வண்ணார் உடைப்பு—நான் ஒரு இனத்தின் பெயரைச் சொல்ல விரும்பாவிட்டாலும் சொல்லி ஆக வேண்டிய நிலை இருப்பதால் சொல்கிறேன்—ஆகவே தேனூர் அணைக்கட்டிலிருந்து பழவாற்றின் ஒருபகுதி வெள்ளத்தை வண்ணார் உடைப்பு மதகு வழியாக, கொள்ளிடத்தில் வடியும் வாய்க்கால் வைக்க அதிகாரிகளைக் கொண்டு ஆராய்ந்து நிறைவேற்றித் தர வேண்டும் என்று நான் தாழ்மையோடு கேட்டுக் கொள்கிறேன்.

1979 மார்ச 29] [திரு. என். கிட்டப்பா

பழவாற்றிலே பிரியும் A. 2 கோவிந்த காவிரி வாய்க்காலில் பழவாற்றின் வெள்ளத் தண்ணீரும், இடையில் கோவிந்த காவிரி வாய்க்காலில் விழும் தண்ணீரும் கோவிந்த காவிரி சேத்தூர் வழியாக வந்து சேத்தூர் வாய்க் காலை ஒட்டி வரும்போது அங்கே பல ரெகுலேட்டர்கள் கட்டப்பட்டிருப்பதால் தண்ணீர் தேங்கி அந்தத் தண்ணீர் சேத்தூர், பருத்திக்குடி, உடையூர் சேத்தூர்வேடு, கண்ணையாகுடி, போன்ற இடங்களுக்கு வருகிறது. ஆகவே கோவிந்தக்காவிரியின் கரைகளை பல இடங்களில் கரைகளை உயர்த்தி அகலப்படுத்தி அமைக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

சேத்தூர் ஏ 24 என்ற இடத்தில் 6 கிலோ மீட்டரிலிருந்து 9 கிலோ மீட்டர்வரை கல்வெர்ட்டை அகலப்படுத்தி அதைக் கொண்டத்தூர் வண்ணியாற்றில் வடித்துவிடச் செய்யலாம். இதனை இந்தக் கோடையிலேகூட செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்து ஏ 24 சேத்தூர் வாய்க்காலில் கிலோ மீட்டர் 0/0லிருந்து கிலோமீட்டர் 6/0வரை மீண்டும் அகலப்படுத்தி அதன் கரைகளை உயர்த்தி பலப்படுத்திக் கொடுக்க வேண்டுமாறு நான் என்னுடைய கோரிக்கையை இங்கே வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[பிற்பகல் 1-20]

இத்தகைய கோரிக்கைகளை நீர்ப்பாசன பொறியாளரிடமும், கும்பகோணத்தில் கோட்டாட்சிப்பொறியாளரிடமும் நேரடியாகவும், மனுக்கள் மூலமாகவும் பலதடவை எடுத்துச் சொல்லியிருக்கிறேன். அவர்களைக் கேட்டால், அந்தத் துறையைக் கேட்க வேண்டும் என்று சொல்கிறார்கள். அந்தத் துறையைக் கேட்டால் இந்தத் துறையைக் கேட்க வேண்டும் என்று சொல்கிறார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதிலே தீவிர கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அங்கே சேத்தூர் வாய்க்கால் புறம்போக்கில் ஒரு ஆக்கிரமிப்பு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதுவும் தனியார் ஆக்கிரமிப்பு. அவர் ஆளுங்கட்சியைச் சார்ந்தவர் அல்ல, எதிர்க் கட்சியைச் சார்ந்தவர் அல்ல. ஒரு காலத்தில் மாயூரம் தாலூகா ஆபீசில் பணி புரிந்தவர். அவர் ஆற்றுப் புறம்போக்கு நிலம் என்று சொல்லி ஆர்.எஸ். 413/2, 413/3, 239/1 ஆகிய புலங்களை தன் பெயரிலோ அல்லது தனக்கு வேண்டியவர்கள் பெயரிலோ தனது செல்வாக்கைப் பயன்படுத்தி அடமானம் செய்து கொண்டிருக்கிறார்கள். அந்த அடமானங்களை உடனடியாக நீக்க வேண்டும். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் அது நிறுத்தப்பட்டது. நெருக்கடி காலத்தைப் பயன்படுத்திக் கொண்டு அந்த ஆற்றுப் புறம்போக்கு நிலங்களை அந்தப் பெரிய மனிதர் மீண்டும் ஆக்கிரமித்துக் கொண்டு ஆர்ஜிதம் செய்து விட்டார். அதனால் வாய்க்காலின் வேலை தடைபடுவதால் அந்த அடமானங்களை ரத்து செய்ய வேண்டுகிறேன்.

[திரு. என். கிட்டப்பா] [1979 மார்ச் 29

அந்த வாய்க்கால் பயன்பெறத் தக்க அளவிற்கு அதன் கரைகள் பலப்படுத்தப்பட வேண்டும் என்று எடுத்துச் சொல்லியிருக்கிறேன் மாயூரம் நகரப் பகுதியில் காவிரி ஓடிக்கொண்டிருக்கிறது. இதைப் பற்றி சென்ற தடவை இதே அவையில் நான் குறிப்பிட்டேன். காவிரி ஆற்றின் இரு கரைகளையும் பலப்படுத்த வேண்டும் என்று பல தடவை சொல்லியிருக்கிறேன். இதைச் செய்யாததனால் வெள்ளம் ஏற்படும்போது பாதிக்கப்படுகிறது. இவன் ஒரு வண்டிக்காரன் மகன் என்று ஆளுங்கட்சிகாரர்களுக்கும், மற்றவர்களுக்கும் நையாண்டியாக இருக்கலாம். தேர்தல் காலத்தில் கூட வண்டிக்காரன் மகன் வோட்டு கேட்கிறான் என்று கூட சொல்லப்பட்டது. என் தந்தை வண்டிக்காரர்தான். அவர் இப்போது இல்லை. அந்தத் தொழிலாளர்கள் என்னைச் சார்ந்தவர்கள்தான். அவர்கள் ஆற்றில் மணல் எடுக்கிறபோது தங்கள் வண்டியை காவிரி ஆற்றின் கரைகளின் மீது ஓட்டிச்செல்வதால், அதந்தக் கரைகளைக் குறைத்து விடுவார்கள். இதைப்பற்றி அமைச்சர்களுக்குத் தெரியும். அந்தப் பகுதிக்கு அமைச்சர்கள் அடிக்கடி வருகிறார்கள். அங்கே ஆளுங் கட்சியைச் சேர்ந்த நண்பர்களைக் கேட்டால் சொல்வார்கள். இதை அரசு உடனடியாகப் பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். (மணி அடிக்கப்பட்டது.)
முடித்துக் கொள்கிறேன். காவிரி ஆற்றின் கரையைப் பலப்படுத்துவதற்கு ரிவெட்மென்ட், சிமெண்ட் லையனிங் எல்லாம் போட்டுத் தர ஆவன செய்ய வேண்டும் என்று சொல்கிறார்கள். அந்த டெக்னிக்கல் வார்த்தைகள் எல்லாம் எனக்குத் தெரியாது. அந்தக் கரைகளையெல்லாம் உடனடியாகப் பலப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த வரையில், வேளாண்மை பல்கலைக்கழகம், கல்லூரி வேண்டும் என்று கோரிக்கைகள் நீண்ட நாட்களாக இருக்கின்றன. தஞ்சை மாவட்டத்திற்கு அதிக நிதி ஒதுக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறோம். நான் சொல்வதற்குக் காரணம் எங்கள் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் இரண்டு பேர்கள் அமைச்சர்களாக இருக்கிறார்கள். சுறுசுறுப்பாகப் பேசிக் கொண்டிருக்கிற அண்ணன் தொழிலாளர் அமைச்சர் கூட தஞ்சை மாவட்டத்தைச் சார்ந்தவர் என்று சொல்லிக் கொள்வதிலே பெருமை அடைவார்கள். வருவாய்த் துறை அமைச்சர் எஸ்.டி.எஸ். அவர்கள் தஞ்சை மாவட்டத்தைச் சார்ந்தவர். அவர் எவ்வளவு உயர்ந்தவர் என்பதில் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த நாங்கள் பெருமைப் படுகிறோம். தஞ்சை மாவட்டம் என்று விட்டுவிடாமல் அந்த மாவட்டத்திற்குத் தேவையான நிதி ஒதுக்கி அதிக கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மழையாலும் வெள்ளத்தாலும் அடிக்கடி பாதிக்கப்படுகின்ற தஞ்சைவட்டத்திலேனும் பயிர் பாதுகாப்புத் திட்டத்தை அதாவது கிராப் இன்ஷுரன்ஸ் திட்டத்தை அது நமது தமிழக அரசின்

அதிகாரத்திற்கு உட்பட்டதா, அல்லது மத்திய அரசின் அதிகாரத்திற்கு உட்பட்டதா — என்பது எனக்குத் தெரியாது. அது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் திட்டத்தில் — இன்ஷூரன்ஸ் திட்டத்தைப்பற்றி சொல்லியிருந்ததாக கேள்விப்பட்டேன். ஆகவே, அந்த முறையை அமல் நடத்திப் பார்க்கவேண்டும். அடிக்கடி தஞ்சை மாவட்டம், ஒவ்வொரு ஆண்டும் பாதிக்கப்படுகிறது. விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள். எனவே எந்த முறையிலேனும் இந்தத்திட்டத்தைக் கொண்டு வருவதற்கு — பக்கத்திலுள்ள அரிசனநலத்துறை அமைச்சர் அவர்கள் உதவி புரிவார்கள் என்று நம்புகிறேன். இந்த வகையில் எப்படியாவது அதை அமல் நடத்துவதற்கு முயற்சி எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இதில் பேசுவதற்கு வாய்ப்புத் தந்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியை கூறி விடை பெறுகிறேன். வணக்கம்.

திரு. தி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறைக்கும் நீர்ப்பாசனத் துறைக்கும் கொண்டு வரப்பட்டிருக்கின்ற மான்யத்தின் மீது என்னுடைய சில கருத்துக்களை சொல்ல விரும்புகிறேன். ஒரு நாட்டின் வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் பொருளாதார முன்னேற்றத்திற்கும் அடிப்படையாக அமைவது விவசாயம், இந்த விவசாயம் முன்னேறுவதற்கு அடிப்படை தேவை நீர்ப் பாசனம். உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர் என்று சொல்வதற்கு ஒப்பவும், நீரின்றி அமையாது உலகம் என்பதற்கொப்பவும், நீர்ப்பாசனத் துறைக்கும் வேளாண்மைத் துறைக்கும், முக்கியத்துவம் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். நீர்ப்பாசனமும், வேளாண்மையும் ஒன்று என்றிருப்பதால், ஒரே அமைச்சரிடம் இதை புரட்சித் தலைவர் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். இதை பொறுப்பேற்றுக்கொண்டது முதல் நமது அமைச்சர் அவர்கள், வேளாண்மைத்துறையில் செலுத்திவந்த தனிகவனத்தின் மூலமாக ஆண்டிலுடுக்காண்டு உற்பத்தித்திறன் வளர்ந்து கொண்டு வருகிறது 1976—77-ல் 53 லட்சம் டன்னாக இருந்தது, 1977—78-ல் நமது உற்பத்தி 62 லட்சம் டன்னாகவும், அதைபோல் 1978—79-ல் 64 லட்சம் டன்னாகவும் உயர்ந்தது, 1978—79-வது ஆண் 65 லட்சம் டன் உயரும் என்று எதிர்ப்பார்க்கிறோம். இதே போல் இந்தத் துறையில், பிற பயிர்வகைகள் எண்ணெய் வித்துக்கள், கரும்பு, பருத்தி போன்றவை எல்லாவற்றிலும் ஆண்டு தோறும் உற்பத்தி பெருகிகொண்டே போயிருக்கிறது. தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் 70 சதவீத மக்கள் விவசாயத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். உழைப்பை மட்டுமே மூல தனமாகக் கொண்டு பல இன்னல்களுக்கிடையில் வேளாண்மைத் துறையில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள். உழவன் கணக்குப் பார்த்தால் உழக்கு நெல் மிஞ்சாது என்று சொல்வார்கள். அதை போன்று பல்வேறு இழப்புகளையும் ஏற்றுக்கொண்டு விவசாயிகள் நல்ல காரியங்கள் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆனாலும் விவசாயிகளுடைய வாழ்க்கைத்தரம் இன்னும் உயரவில்லை.

[திரு. தி. அன்பழகன்] [1979 மார்ச் 29

விவசாயி உற்பத்தி செய்கின்ற பொருளுக்கு போதிய விலை கிடைப்பதில்லை. மேலும் விவசாயிகளுக்குத் தேவைப்படும், கருவிகள், விவசாயிகளுக்குத் தேவைப்படும் சாமான்களின் விலை எல்லாம் உயர்ந்து காணப்படுகிறது. அதே நேரத்தில் விவசாயப் பொருளுக்கு விலை குறைவாகத்தான் கிடைக்கிறது. ஆகவே விவசாய உற்பத்திப் பொருட்கள் அனைத்துக்கும் கூடுதலான விலை கிடைப்பதற்கு ஆவன செய்யவேண்டும். மேலும் விவசாயிகளுக்குத் தேவைப்படும் விதை, உரம், பூச்சிமருந்துகள், விவசாயக் கருவிகள் இவைகளை எல்லாம் விவசாயிகள் குறைந்த விலையில் வாங்கிக்கொள்வதற்கு சிறிதளவு மானியம் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பயிர்பாதுகாப்பு இன்ஷூரன்ஸ் திட்டத்தை மத்திய அரசின் அனுமதியோடும், மத்திய அரசின் உதவியோடும் கொண்டு வர வேண்டும். மேலும் வறட்சி, புயல், வெள்ளம் காரணமாக பாதிக்கப்பட்ட நிலங்களுக்கு எல்லாம் இருக்கின்ற நிலவரியை தள்ளுபடி செய்வதற்கும், விவசாயிகளுக்குத் தேவையான பூச்சி மருந்துகள், கருவிகள், பேன்றவை வாங்குவதற்கும், மானியம் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

வேளாண்மையைப் பொறுத்தவரையில், வேளாண்மையைப் பெருக்குகின்ற வகையில் விற்பனை விளைபொருட்கள் கூடம், கரும்பு சாலைகள் திட்டம் இவைகள் ஏற்படுத்தவேண்டும். ஒருங்கிணைந்த கிராமவேலைத் திட்டம், சிறு விவசாயிகள் மேம்பாட்டுத்திட்டம், இவைகளை எல்லாம் நல்ல முறையில் செயல்படுத்த வேண்டும்.

நீர்ப்பாசனத்தைப் பொறுத்தவரையில், விவசாய மக்களை க்குவிப்பதற்குத் தகுந்த முறையில் பல திட்டங்கள் அமைந்திருக்கின்றன. இந்த அரசு 1979–80 ஆம் ஆண்டில் பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களுக்காக 22·12 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறது. இந்த அளவுக்கு சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களுக்
ாக 2·50 கோடி ரூபாயை தூர் எடுப்பதற்காகவும் சிறிய ீர்ப்பாசனங்கள் சீரமைப்புத் திட்டத்திற்காகவும் 25 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறது. இந்த ஆண்டு 24 சிறப்பு நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டிருக்கிறது, இந்த நேரத்தில் வேண்டுகோளாக, இந்த அரசின் நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்களுக்கு ஒரு கருத்தைச் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

[பிற்பகல் 1–30]

ஐந்து லட்சம் ரூபாய்க்கு கூடுதலான செலவில் இதனை நிறைவேற்ற வேண்டும் என்கிற சிறுபாசனம் பற்றிய விவரம் அறிக்கை 1-ல் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதிலே வட ஆற்காடு மாவட்டத்திலே, ஒரு திட்டம் மட்டும் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது.

வட ஆற்காடு மாவட்டத்தைப் பொறுத்த மட்டில், பாசன வசதிகள் எதுவும் இன்றி இருக்கக் கூடிய ஒரு பெரிய மாவட்டம். எனவே, இதற்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன் (மணியடிக்கப் பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் மீண்டும் நாளை தொடர்ந்து நடைபெறும்.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை காலை 9-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-31 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

(6) பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

* 128. 1978 ஆம் ஆண்டிற்கான பூம்புகார் கப்பல் போக்கு வரத்துக் கழகத்தின் 4-வது ஆண்டு அறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-எ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

† 101. 1978-79 ஆம் வருட நீர்ப்பாசனம் மீதான மானியக் கோரிக்கையின் மீது நடைபெற்ற விவாதத்தின்போது சட்டப் பேரவை /மேலவை உறுப்பினர்கள் அளித்த ஆலோசனைகளின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் விவர அறிக்கை (தமிழ், ஆங்கிலம்).

*. தமிழ் நாடு சட்ட மன்றப் பேரவை விதிகளின் 21 (5) விதியில் கண்ட வரம்பு நிபந்தனையை ஒட்டி சட்டமன்ற நூலகத்தில் வைக்கப்பெற்றுள்ளது.

† 1979 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 26 ஆம் நாள் அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப்பெற்றது.

இணைப்பு I.

594-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

1979-80 ஆம் ஆண்டு வேளாண்மை குறித்த கொள்கை விளக்கம்,

வேளாண்மைத் துறையின் பங்கு :

வேளாண்மை எனும் தொழில், தமிழகத்தில் தொடர்ந்து முதலிடம் வகித்து வருகிறது. மாநில வருவாயின் ஏற்ற இறக்கம் மேற்படி தொழிலின் உற்பத்தியைத்தான் பெரிதும் நம்பி இருக்கிறது. அந்த வகையில் இத்துறையின் பணி மகத்தானது. நடைமுறைச் சிக்கல்களைச் சரியாகப் புரிந்துகொண்டு, அதற்கான விரிவாக்கப் பணிகளில் ஈடுபட்டு உற்பத்தியைப் பெருக்குவதில் இத்துறை தன் தலையாய பணியைச் செய்திருக்கிறது. உழவுத் தொழிலுக்கு கொண்டு வரக்கூடிய புதிய நிலங்களின் பரப்பளவு அதிகரிக்கப்பட்டு தரிசு நிலங்களின் பரப்பளவு குறைக்கப்பட்டு வருகின்றது. எனவே இருக்கும் நிலங்களில், எப்படி அதிக மகசூல் கொண்டுவருவது என்பதே, இப்போதைய பரிகாரமாய் இருக்கிறது. அந்த வகையில் உயர் விளைச்சல் தரும் இரகங்களை பயிரிடுதல், தரமான விதைகள், உரம், பூச்சி மருந்துகள் இவற்றை சரியாகப் பயன்படுத்துதல் போன்றவை மேற்கொள்ளத்தக்கன. இதைத் தவிர மாநிலத்தின் பல்வேறு வேளாண் பருவ பகுதிகளுக்கு ஏற்ப, இருக்கும் நிலம், நீர் ஆகியவற்றை சிக்கனமாகவும், இலாபகரமாகவும் பயன்படுத்த, கட்டுக்கோப்பு சாகுபடி முறைகளை வழி வகுப்பதற்கான பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவது குறிப்பிடத்தக்க அம்சமாகும். வேளாண்மைப் பல்கலைக் கழகங்களில் கண்டுபிடிக்கப்பட்ட ஆராய்ச்சி முடிவுகளின் பயன்களை உழவர் பெருமக்களுக்கு உரிய முறையில் எடுத்துச்சொல்லி ஏற்றுக்கொள்ள வைக்கும் பணியையும் இத்துறை செய்து வருகிறது. அதோடு ஆங்காங்கே உள்ள ஆராய்ச்சி நிலையங்கள், அனுசரணை ஆராய்ச்சி முடிவுகள் இவற்றின் உதவி கொண்டு, பலதரப்பட்ட வேளாண்மை பிரச்சினைகளை தீர்ப்பதில் மகத்தான சாதனையை ஏற்படுத்தியிருக்கிறது என்றால் மிகையாகாது. வேளாண்மையில் மானாவாரி சாகுபடி அபிவிருத்திக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகின்றது. மழை நீரை சேகரித்தல், நிலத்திருத்தம், நிலவளத்தை அபிவிருத்தி செய்தல், கலப்பு மற்றும் பலபயிர் சாகுபடி, கசிவுநீர் குட்டைகள் மற்றும் சமுதாயக் கிணறுகள் அமைத்தல் ஆகிய திட்டங்களை செயல்படுத்துவதன் மூலம் தனிப்பட்ட விவசாயி மற்றும் வேளாண் சமுதாயத்தை எதிர்நோக்கி உள்ள பல பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடிகிறது.

1979 மார்ச் 29]

1978-79 ஆம் ஆண்டின் சாதனை.

பருவ நிலை :

தென்மேற்கு பருவமழையின் அளவு வழக்கமான அளவைக் கொண்டிருந்தாலும், பெரிய நீர்த்தேக்கங்களின் நீர்ப்பிடிப்பு பகுதிகள் நீங்கலான மற்ற பகுதிகளில் கடந்த இரு ஆண்டுகளைப் போலவே இவ்வாண்டிலும் மிகவும் தாமதித்துப் பெய்துள்ளது. காலத்தே மழையின்மை காரணமாக இப்பருவ மழையைக் கொண்டு பயிரிடப்படும் பெரும் பரப்புகள் பாதிக்கப்பட்டன. செப்டம்பர் மாதத்தில் மட்டும்தான் அதிக அளவு மழை பெய்தது. இதன் விளைவாக நெல், மானாவாரி சிறுதானியம், பயிறுவகைகள், பருத்தி, வேர்க்கடலை பயிரிடும் பரப்பு பெருமளவு குறைந்தது. 0.50 இலட்சம் ஹெக்டேர் பரப்பளவில் நெல்லும், 1.00 இலட்சம் ஹெக்டேர் பரப்பளவில் மானாவாரி சிறுதானியமும், 0.17 இலட்சம் ஹெக்டேர் பரப்பளவில் பயறுவகைகளும், 0.40 இலட்சம் ஹெக்டேர் பரப்பளவில் பருத்தியும், 0.55 இலட்சம் ஹெக்டேர் பரப்பளவில் வேர்க்கடலையும் சாகுபடிக்கு கொண்டுவர இயலாமல் போயிற்று. இதனையடுத்து வடகிழக்குப் பருவமழை இம்மாநிலத்தில் பெருமளவு மழையையும் வெள்ளத்தையும் கொண்டு வந்தது எனினும் சென்ற ஆண்டினைப்போல் அவ்வளவு கடுமையாக இல்லை.

1977-78 ஆம் ஆண்டில் வந்த புயல் மற்றும் வெள்ளத்தால் ஏற்பட்ட அழிவை கவனத்தில் கொண்டு, இந்த ஆண்டின் வடகிழக்கு பருவ மழையின் நிலைமை தொடர்ந்து கண்காணித்து வரப்பட்டது. புயல் மற்றும் வெள்ளம் ஏற்படின், அதற்கென உடன் நடவடிக்கை எடுக்க முன்கூட்டியே திட்டமும் தயாரிக்கப் பட்டிருந்தது. இந்த ஆண்டில் வடகிழக்கு பருவ காற்றால் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் அதிக மழை பெய்தது. அதன் விளைவாக நெல், வாழை, வெற்றிலை, உருளைக்கிழங்கு மற்றும் காய்கறிகள் ஆகியவற்றுக்கு சேதம் ஏற்பட்டது. இம்மாநிலத்தில் 1978 ஆம் ஆண்டில் நவம்பர், டிசம்பர் திங்களில் மூன்று தடவை அதிக மழை பெய்ததன் விளைவாக பெருமளவு வெள்ளம் ஏற்பட்டது. எனினும், பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு உடன் எடுக்கப் பட்ட மீட்பு நடவடிக்கைகளால் அப்பயிர்களுக்கு ஏற்பட்ட கடுமையான சேதமும், உற்பத்தியில் ஏற்படவிருந்த பெருமளவு இழப்பும் தவிர்க்கப்பட்டன. முந்திய ஆண்டில் மேற்கொண்டதுபோல கீழ்க்காணும் நிவாரண நடவடிக்கைகளை அரசு அறிவித்தது. மேலும், இந்த இழப்பினை மட்டுப் படுத்துவதற்கு இயல்பான ஒவ்வொரு நடவடிக்கையையும் அரசு மேற்கொண்டது.

1. தாளடி, சம்பா பயிர் செய்வதற்காக சிறு விவசாயிகளுக்கும் குத்தகைதாரர்களுக்கும் இலவசமாக நெல் விதை வழங்குதல்.

2. தாளடி பயிருக்கான உரங்களுக்காகும் செலவிலும், சம்பா பயிர் மேலுரத்திற்கான தழைச்சத்து உரங்களுக்காகும் செலவிலும் 25 சதவிகித உதவித் தொகை சிறு விவசாயிகளுக்கும் குத்தகைதாரர்களுக்கும் வழங்குதல்.

[1979 மார்ச் 29

3. வாழை, கரும்பு ஆகியவற்றை மீண்டும் புதுப்பிக்க சிறு விவசாயி களுக்கும், குத்தகைதாரர்களுக்கும் ஊக்க உதவித் தொகை என்ற வகையில் ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 100 மானியத் தொகையை வழங்குதல்.

4. வெற்றிலைக் கொடிக்காலை மீண்டும் புதுப்பிக்க சிறு விவசாயி களுக்கும், குத்தகைதாரர்களுக்கும், ஊக்க உதவித் தொகை என்ற வகையில் ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 500 உதவித் தொகை வழங்குதல்.

5. பாதிக்கப்பட்ட தென்னை மரங்களுக்குப் பதிலாக புதிய தென்னங் கன்றுகள் வளர்ப்பதற்காக சிறு விவசாயிகளுக்கு இலவசமாக தென்னங் கன்றுகளை வழங்குதல்.

6. ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 250, தனி நபர் ஒருவருக்கு ரூ. 1,000 என்ற உச்ச வரம்புக்கு உட்பட்டு உருளைக்கிழங்கு விதைகள் 25 சதவிகித மானிய விலையில் வழங்குதல்.

7. காய்கறி விதைகளை இலவசமாக வழங்குதல்.

8. மண்மேடிட்ட நிலங்களையும், கிணறுகளையும் சிறு விவசாயிகளுக்கும் குத்தகைதாரர்களுக்கும் இலவசமாகவும், மற்ற விவசாயிகளுக்கு 50 சதவிகித மானிய செலவில் ரூபாய் ஆயிரம் உச்சவரம்பிற்கு உட்பட்டு வேளாண்துறை மூலம் சீர்திருத்தம் செய்து தருதல்.

முதல் பருவத்தில் ஏற்பட்ட உற்பத்திக் குறைவு மற்றும் வெள்ளத்தால் ஏற்பட்ட உற்பத்தி இழப்புகளை ஈடுசெய்ய ஏரிகளிலும், கிணறுகளிலும் உள்ள நீர் வசதிகளைக் கொண்டு கடந்த ஆண்டைப் போலவே கோடையில் பயிரிடு வதற்கான பெரிய அளவில் திட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. இக் குறிப்பிடத்தக்க முயற்சியின் வாயிலாக உற்பத்தித்திறன் அதிகம் பெறத்தக்க நவரைப்பருவத்தில் குறைந்த வயதுடைய நெல் மற்றும் அதிக நீர் தேவை யில்லாத பயிர்களை சாகுபடி செய்வதன் மூலம், 1978-79 ஆம் ஆண்டின் உற்பத்தியின் அளவை பெருமளவிற்கு உயர்த்த முடியும். 1977-78 ஆம் ஆண்டில் 0.60 இலட்சம் ஹெக்டேர் பரப்பில் நெல் பயிரையும், 0.40 இலட்சம் ஹெக்டேர் பரப்பில் சிறுதானியமும், 1.20 இலட்சம் ஹெக்டேர் பரப்பில் வேர்க்கடலையும் பயிரிட திட்டமிடப்பட்டது. எனினும், 1.00 இலட்சம் ஹெக்டேர் பரப்பில் நெல்லும், 0.41 இலட்சம் ஹெக்டேர் பரப்பில் சிறுதானியமும், 1.55 இலட்சம் ஹெக்டேர் பரப்பில் வேர்க்கடலையும் பயிரிடப்பட்டது. 1978-79 ஆம் ஆண்டில் கீழ்க்காணும் உற்பத்தியை எய்த 0.40 இலட்சம் ஹெக்டேர் கூடுதலான பரப்பில் நெல்லும், 0.32 இலட்சம் ஹெக்டேர் கூடுதலான பரப்பில் சிறு தானியமும், 0.10 இலட்சம் ஹெக்டேர் கூடுதலான பரப்பில் பயறுவகைகளும்,

1979 மார்ச் 29]

0.35 இலட்சம் ஹெக்டேர் கூடுதலான பரப்பில் வேர்க்கடலையும், 0.05 இலட்சம் ஹெக்டேர் கூடுதலான பரப்பில் எள்ளும், 0.42 இலட்சம் ஹெக்டேர் கூடுதலான பரப்பில் பருத்தியும் சாகுபடிக்கு கொண்டு வர திட்டமிடப்பட்டது :—

அரிசி	..	64.00	இலட்சம் டன்கள்
சிறு தானியங்கள்	..	20.00	,,
பயறு வகைகள்	..	3.25	,,
எண்ணெய் வித்துக்கள்	..	14.07	,,
கரும்பு (வெல்லம்)	..	19.50	,,
பருத்தி	..	3.75	இலட்சம் பேல்கள்

மேலும், கீழ் பவானி நீர்த் தேக்கத்திலுள்ள சாதகமான நீர் வசதியைப் பயன்படுத்தி, கோபி, ஈரோடு கோட்டங்களில் 32,000 ஹெக்டேர் பரப்பளவில் எள் சாகுபடிக்கான ஒரு சிறப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. இவ் வகையில் சாதாரணமாக இப்பருவத்தில் தரிசாக இருந்த நிலங்களை சாகுபடிக்கு கொண்டுவரப்பட்டது.

1978-79 ஆம் ஆண்டில் எண்ணெய் வித்துக்களின் உற்பத்தி திட்டமிட்ட அளவான 15.70 இலட்சம் டன்னிற்கு எதிராக 14.07 இலட்சம் டன்களாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. பருவ ஆரம்ப காலத்தில் மழையின்மையாலும் மற்றும் தென்மேற்கு பருவமழை தாமதித்து பெய்ததினாலும் மானாவாரிப் பட்டத்தில் சாகுபடிப் பரப்பு குறைந்ததுடன் உற்பத்திக் குறைவும் ஏற்பட்டது. அம்மாதிரியே பருத்தியின் உற்பத்தி திட்டமிட்ட அளவான 4.25 இலட்சம் பேல்களுக்கு எதிராக 3.75 இலட்சம் பேல்களாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. தென்மேற்கு பருவ மழை பொய்த்ததின் காரணமாக சாகுபடி பரப்பு குறைந்ததுடன் புயல் மற்றும் மழையினால் பருத்தியின் பின்பருவத்தில் பூக்கள் உதிர்ந்து சேதமடைந்ததினால் ஏற்பட்ட குறைவான உற்பத்தியே இதற்குக் காரணமாகும்.

1979-80 ஆம் ஆண்டுக்கான குறிக்கோள்களும் மேற்கொள்ளவிருக்கும் திட்டங்களும்.

கடந்த ஆண்டுகளின் செயல் முறை, சாதனைகளைக் கருத்திற்கொண்டும் தற்போதுள்ள நிலையினையும் வருங்காலத் தேவையினையும் கருத்திற் கொண்டும், 1979-80 ஆம் ஆண்டில் உணவு தானியங்கள் உற்பத்தி 88.73 இலட்சம் டன் என்ற அளவிலும், வர்த்தகப் பயிறுகள் உற்பத்தி 36.45 இலட்சம் டன் என்ற அளவிலும் கீழ்க்கண்டவாறு நிர்ணயிக்கப்பட்டுள்ளது :—

			குறியீடு.
அரிசி		65.00	இலட்சம் டன்கள்
சிறு தானியங்கள்	..	20.15	,,
பயறு வகைகள்	..	3.58	,,
எண்ணெய் வித்துக்கள்	..	16.03	,,
கரும்பு (வெல்லம்)	..	19.67	,,
பருத்தி		4.40	இலட்சம் பேல்கள்

கடந்த சில ஆண்டுகளில் அரிசி, சிறுதானிய உற்பத்தியைப் பெருக்குவதில் பெருமளவு முன்னேற்றத்தை நாம் எய்துள்ளோம். சாதகமற்ற பருவ நிலையைக் கொண்டிருந்த ஆண்டுகளிலும் அரிசி மற்றும் சிறுதானியத்தில் தன்னிறைவை அடைந்துள்ளோம். குறிப்பிட்ட பரப்பில் உற்பத்தியை அதிகப் படுத்துவதன் மூலம் மிகுதிப் பரப்பை தொழிற்சாலைகளுக்குத் தேவையான மூலப் பொருட்களை வழங்கக்கூடிய பிற பயிர்களை சாகுபடி செய்வதற்கு ஏற்ப திட்டமிடப்பட்டுள்ளது.

வரும் ஆண்டில், அரிசி உற்பத்தி 64.00 இலட்சம் டன்னில் இருந்து 65.00 இலட்சம் டன்னிற்கு அதிகரிக்கப்படும். இது உற்பத்தித் திறனை அதிகரிப்பதன் மூலம் அடையப் பெறும் அதே சமயம் தற்பொழுது நெல் சாகுபடியாகும் 27.00 இலட்சம் ஹெக்டேர் பரப்பில் இருந்து 26.50 இலட்சம் ஹெக்டேர் பரப்பிற்கு குறைக்கப்பட்டு அதன் மூலம் உபரியாகும் 50,000 ஹெக்டேர் பரப்பு, வேர்க்கடலை, பருத்தி சாகுபடிக்கு ஒதுக்கப்படும். இதன் மூலம் தேவைக்கும் உற்பத்திக்கும் உள்ள இடைவெளி குறைக்கப்படும்.

நெல் மற்றும் சிறுதானியங்கள்.

புதிய அமோக விளைச்சல் இரகங்களையும் வீரிய ஒட்டு இரகங்களையும் புகுத்துவதின் மூலமும், அவற்றை புதிய பரப்புகளில் பயிரிடுவதின் மூலமும், அரிசியில் கடந்த ஆண்டின் உற்பத்தி அளவைவிட ஒரு இலட்சம் டன் உயர்த்தவும், சிறு தானியத்தில் 0.15 இலட்சம் டன் கூடுதலான உற்பத்தியை பெறவும் திட்டமிடப்பட்டுள்ளது.

1978-79-ல் 22.40 இலட்சம் ஹெக்டேர் பரப்பில் பயிர் செய்யப்பட்டிருந்த அமோக விளைச்சல் தரும் நெல் இரகங்களின் பரப்பு 22.80 இலட்சம் ஹெக்டேர் பரப்புக்கு அதிகரிக்கப்படும். அதில் ஓரளவு புஞ்சைப் பகுதிகள் அடங்குகின்றன. அதுபோலவே சிறு தானியத்தில் 1978-79 ஆம் ஆண்டில் 5.60 இலட்சம் ஹெக்டேராக இருந்த பரப்பு, 1979-80 ஆம் ஆண்டில் 6.25 இலட்சம் ஹெக்டேர் அளவு சாகுபடிக்கு கொண்டு வரப்படும். நடப்பு ஆண்டில் ஜனவரி 1979 வரையில் 21.87 இலட்சம் ஹெக்டேர் பரப்பில் நெல்லும், 4.48 இலட்சம் ஹெக்டேர் பரப்பளவில் சிறுதானியமும் சாகுபடிக்கு கொண்டு வரப்பட்டது. நடப்பு ஆண்டு இறுதிக்குள் இத்திட்டத்தின்கீழ் திட்டமிடப்பட்டுள்ள மீதமுள்ள பரப்பும் சாகுபடிக்கு கொண்டுவரப்படும். தமிழ்நாடு வேளாண்மைத் துறை மேற்கொண்ட ஆராய்ச்சி அடிப்படையில், நெல் பயிர் சாகுபடி செலவைக் குறைத்து அதன் உற்பத்தித் திறனைப் பெருக்க குறைந்த செலவுள்ள அதிக திறன் வாய்ந்த தொழில் நுட்ப திட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டது. இடுபொருட்களின் அளவை குறைத்தல், அவற்றின் திறனை அதிகப்படுத்தல்,

1979 மார்ச் 29]

உற்பத்தியை அதிகப்படுத்தவல்ல குறைந்த விலையுள்ள புதிய இடுபொருட்கள் ஆகியவற்றை கையாளுவதின் மூலம் இதனை சாதிக்க முடியும். இப்புதிய தொழில் நுட்பம் பின்வரும் அம்சங்களைக் கொண்டுள்ளது :

1. வீரிய நாற்றுக்களை உற்பத்தி செய்தல்.

2. "பாய்" நாற்றங்காலை உபயோகப்படுத்துதல்.

3. "நீல பச்சை பாசி"யைக் கொண்டு உரமிடுதல்.

4. சிங் சல்பேட் இடுதல்.

5. உரங்களை பயிருக்கு அருகாமையில் இடுதல்.

6. பூச்சி மருந்து குருணைகளை பயிருக்கு அருகாமையில் இடுதல்.

இத்திட்டம், வரும் ஆண்டில் தீவிரப்படுத்தப்படும்.

நெற்பயிரில் வேருக்கு அருகாமையில் உரங்கள் மற்றும் பூச்சி மருந்துகளை இடுவதற்கான உற்பத்தி செலவை குறைக்கவல்ல "கிரானியூல் அப்ளிகேட்டர்" என்ற கருவியை நடப்பு ஆண்டில் இத்துறை உருவாக்கியுள்ளது. இதனால் சிக்கனமாகவும் அதே சமயம் திறனை குறைக்காமலும் உரங்களையும், பூச்சி மருந்துகளையும் பயன்படுத்த முடியும். இக்கருவியின் விலை சுமார் ரூ. 50 ஆகும். ஒரு எக்கரில் செய்ய வேண்டிய பணிகளை 5 மணி நேரங்களில் இது முடித்திடும். 1979-80 ஆம் ஆண்டில் இக்கருவிகளை அதிக அளவில் தயாரித்து விவசாயிகளுக்கு விநியோகம் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. அமோக விளைச்சல் திட்டத்தை மேம்படுத்த தரமுள்ள வித்துக்களை விநியோகம் செய்வதை இத்துறை மேற்கொண்டுள்ளது. ஜனவரி 1979 வரையில் 8,160 டன் நெல், 217 டன் சிறுதானியம் மற்றும் 426 டன் வீரிய ஒட்டுரக சிறுதானிய விதைகள் விநியோகம் செய்யப்பட்டுள்ளன. திட்டமிட்ட அளவினை எய்த இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1979-80 ஆம் ஆண்டில் விவசாயிகளுக்கு இத்துறை கீழ்க்கண்ட அளவில் சான்றிதழ் பெற்ற விதைகளை வழங்க திட்டமிட்டுள்ளது :—

	டன்கள்.
நெல்	9,500
கம்பு	275
சோளம்	480
மக்காச் சோளம்	160
கேழ்வரகு	175
மொத்தம் ..	10,590

மக்காச் சோளத்தின் விலையில் ஏற்படும் ஏற்றத் தாழ்வுகளால் இதன் பரப்பை அதிகமாக்கும் சாத்தியக்கூறு குறைவாக இருக்கிறது. எனவே இதா வீரிய ஒட்டு இரக சிறுதானியங்கள் குறிப்பாக வீரிய ஒட்டு இரக கம்பின் பரப்பை அதிகமாக்கி அதன் உற்பத்தியை அதிகமாக்குவதன் மூலம் சிறுதானிய உற்பத்திக் குறியீட்டை அடைவதில் இத்துறை முழு கவனத்தையும் செலுத்தி வருகிறது.

கடந்த ஆண்டில் திட்டமிட்ட 20,000 ஹெக்டேர் பரப்பிற்கு எதிராக வரும் ஆண்டில் 11,000 ஹெக்டேர் பரப்பிற்கு மக்காச் சோள விதைகளை விநியோகம் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இதனை ஈடு செய்யும் வகையில் 1979-80 ஆம் ஆண்டில் கூடுதலாக 50,000 ஹெக்டேர் சாகுபடி செய்வதற்கு ஏற்ப 125 டன் வீரிய ஒட்டு இரக கம்பு விதைகள் கூடுதலாக விநியோகம் செய்யப்படும்.

பயறு வகைகள்.

11.00 இலட்சம் ஹெக்டேரில் தற்பொழுது பயிரிடப்படும் பயறு வகைகளின் பரப்பளவு 1979-80 ஆம் ஆண்டில் 11.60 இலட்சம் ஹெக்டேர் பரப்பளவுக்கு உயர்த்தப்படும். பயறு வகைகளை தனிப் பயிராகவும் கலப்புப் பயிராகவும் மற்றும் நெல் தரிசுகளில் பயிரிடுவதன் மூலமும் இக்கூடுதல் பரப்பளவிற்கு உயர்த்த திட்டமிடப்பட்டுள்ளது.

தரமான விதைகள், சமச்சீர் உரங்கள், நுண்ணுயிர் கலவை இடுதல் மற்றும் பயிர்ப்பாதுகாப்பு முறைகளை அனுசரித்தல் போன்ற மேம்படுத்தப்பட்ட உற்பத்தி தொழில் நுட்பங்களை, 1,000 எண்ணிக்கை கொண்ட ஒரு ஏக்கர் செயல் விளக்க தளைகளில் பின்பற்றப்படும். நடப்பு ஆண்டில் ஜனவரி 1979 வரையில் 446 எண்ணிக்கை கொண்ட ஒரு ஏக்கர் செயல் விளக்கத் தளைகள் அமைக்கப்பட்டுள்ளன. இவ்வாண்டு, புதிதாக வெளியிடப்பட்ட இரகங்கள் பெருமளவில் சாகுபடி செய்வதற்கு ஏற்ப வழி வகைகள் மேற்கொள்ளப்படும். 10,000 ஹெக்டேரில் டை அமோனியம் பால்பேட் தெளிக்கும் பணியும் 40,000 ஹெக்டேர்களில் ஒட்டு மொத்த மருந்து தூவும் பணியையும் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கான செலவிற்கான மானியம் ஹெக்டேர் ஒன்றுக்கு முறையே ரூ. 10-ம், ரூ. 7.50-ம் வழங்கப்படும். 85,000 ஹெக்டேருக்கு தேவையான நுண்ணுயிர் கலவையை விநியோகிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் ஜனவரி 1979 வரையில் 41,610 ஹெக்டேருக்கு நுண்ணுயிர் கலவை விநியோகம் செய்யப்பட்டுள்ளது. 5,000 ஹெக்டேர்களில் தழைச் சத்து மற்றும் மணிச்சத்து உரங்களை அடிப்படையாக இடுவதற்கு ஊக்கப் படுத்தப்படும். 10 சதவிகித பரப்பிற்கு தரமான பயறுவகை விதைகளை விவசாயிகளுக்கு கிடைக்க வகை செய்யப்படும். சுமார் 2,400 டன் பயறு விதைகள் விநியோகம் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

1979 மார்ச் 29]

மத்திய அரசின் உதவியுடன் நடைபெறும் திட்டத்தின் கீழ் ஹெக்டேர் ஒன்றுக்கு இடுபொருட்களுக்காக ரூ. 275 மானியத்தில் 1,500 ஹெக்டேரில் பெருவிளக்கத் தளைகள் அமைத்திட திட்டமிடப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் ஜனவரி 1979 வரையில் 709 ஹெக்டேரில் பெருவிளக்கத் தளைகள் அமைக்கப்பட்டு உள்ளன. பயிர்ப் பாதுகாப்பு மருந்துகள் 13,333 ஹெக்டேருக்கு 25 சதவிகித மானிய விலையில் ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ. 15-க்கு மேற்படாமல் வழங்கப்படும். 100 பயிர்ப் பாதுகாப்புக் கருவிகள் 50 சதவிகித மானிய விலையில் அதிகபட்சம் ரூ. 500-க்கு மேற்படாமல் வழங்கப்படும். இத் திட்டத்தின்கீழ் ஜனவரி 1979 வரையில் 67 மருந்து தெளிப்பான்கள் விநியோகம் செய்யப்பட்டுள்ளன.

எண்ணெய் வித்துக்கள்.

உணவுக்குப் பயன்படும் எண்ணெயின் தேவை நாளுக்கு நாள் அதிகரிப்பதைப் பூர்த்தி செய்யும் வகையில், எண்ணெய் வித்துக்களின் உற்பத்தியை 14.07 இலட்சம் டன்னிலிருந்து 16.03 இலட்சம் டன்னிற்கு உயர்த்த திட்டமிடப்பட்டுள்ளது. எண்ணெய் வித்துக்கள் பயிரிடும் பரப்பையும், 13.37 இலட்சம் ஹெக்டேரிலிருந்து 14.57 இலட்சம் ஹெக்டேருக்கு அதிகரிக்கப்படும். இக்கூடுதல் பரப்பு, அதிக அளவு உற்பத்தித் திறன் பெறும் வகையில் இறவையாக பயிரிடுவதன்மூலம் மேற்கொள்ளப்படும் நுண்ணூட்டச் சத்துக்கள் மற்றும் ஜிப்சம் இடுதல் போன்ற புதிய தொழில் நுட்ப திறன்களை தீவிரப்படுத்தி உற்பத்தித் திறன் அதிகரிக்கப்படும். இந்த ஆண்டில் பல்வேறு தாங்களில் 1,000 டன்கள் நுண்ணூட்டச் சத்துக்களும் 12,000 டன்கள் ஜிப்சமும் விநியோகம் செய்யப்படும். பெருமளவில் சாகுபடி செய்வதற்கேற்ப வேர்க்கடலையில் டி.எம்.வி. 7, டி.எம்.வி. 9, மற்றும் டி.எம்.வி. 10, எள்ளில் டி.எம்.வி. 3 மற்றும் டி.எம்.வி. 4, சூரியகாந்தியில் கோ. 2 போன்ற திருந்திய விதை இரகங்கள் வழங்க வழிவகைகள் மேற்கொள்ளப்படும். திருந்திய விதை இரகங்கள் விநியோகம் செய்யும் திட்டத்தின்கீழ் 3,915 டன் வேர்க்கடலை விதைகள், 34 டன் எள் விதைகள், 13 டன் ஆமணக்கு விதைகள், மற்றும் 416 டன் சூரிய காந்தி விதைகள் ஜனவரி 1979 முடிய விநியோகம் செய்யப்பட்டுள்ளன. நடப்பு ஆண்டிற்குள்ளாக திட்டப்படி மீதமுள்ள விதைகளும் விநியோகம் செய்யப்படும். 1979-80 ஆம் ஆண்டில் பின்வரும் அளவுள்ள மேம்படுத்தப்பட்ட விதைகளும் இத்துறையின் மூலம் விநியோகம் செய்யப்படும்:—

வேர்க்கடலை	4,510 டன்கள்
எள்	50 டன்கள்
ஆமணக்கு	22·5 டன்கள்
சூரியகாந்தி	900 டன்கள்

[1979 மார்ச் 29

தென்னை பயிரிடப்படும் பரப்பு மற்றும் அதன் உற்பத்தி திறனை அதிகப் படுத்தும் பணியும் தீவிரப்படுத்தப்படும். இந்த ஆண்டில் மொத்தம் 116 கோடி தேங்காய்கள் உற்பத்தி செய்யும் வகையில் கூடுதலாக 6,000 ஹெக்டேர் பரப்பளவு தென்னை வளர்ப்பின்கீழ் கொண்டு வரப்படும். ஒவ்வொரு ஆண்டும், இத்துறை 12 இலட்சம் தென்னங்கன்றுகளை விநியோகம் செய்து வருகிறது. ஜனவரி 1979 முடிய 12.44 இலட்சம் தென்னங்கன்றுகள் விநியோகம் செய்யப்பட்டுள்ளன. 1979-80-ஆம் ஆண்டில் இதனை 13 இலட்சம் கன்றுகளாக உயர்த்த திட்டமிடப்பட்டுள்ளது.

இத்துறையால் ஆண்டொன்றுக்கு 30,000 நெட்டை குட்டை இரக தென்னங் கன்றுகள் விநியோகிக்கப்படுகின்றன. நெட்டை குட்டை, ஒட்டு ரக தென்னங் கன்றுகளின் பெருகிவரும் தேவையை பூர்த்தி செய்யும் வகையில், தஞ்சாவூர் மாவட்டத்தில் பட்டுக்கோட்டைப் பகுதியில் ஒரு இலட்சம் நெட்டை குட்டை, ஓட்டுரக தென்னங்கன்றுகளை உற்பத்தி செய்யும் திட்டம் ஒன்று 1978-79 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டது. 1979-80 ஆம் ஆண்டில் 10,000 கன்றுகளும் பின்வரும் ஆண்டுகளில் ஒரு இலட்சம் கன்றுகளும் இத்திட்டத்தின் மூலம் உற்பத்தி செய்து விநியோகிக்கப்படும்.

கடந்த ஆண்டில் திட்டமிட்டபடி பாசன வசதிகள் மற்றும் இதர சாதன வசதிகளை அளித்ததின் மூலம் மண்டலப் பண்ணைகள் மற்றும் தென்னை நாற்றங்கால்கள் அபிவிருத்தி செய்யப்பட்டன.

கடந்த ஆண்டில் திட்டமிட்டபடி தீவிர தென்னை அபிவிருத்தி திட்டம் கன்னியாகுமரி மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களுக்கு நீட்டிக்கப்பட்டது. மேலும் ஒரு மையம் வறட்சி சார்புப் பகுதித் திட்டத்தின்கீழ் இராமநாதபுரம் மாவட்டத்தில் அமைக்கப்பட்டது.

பருத்தி.

நடப்பு ஆண்டில் பருத்தி பயிரிடும் பரப்பு 2.90 இலட்சம் ஹெக்டேராகவும் அதன் உற்பத்தி 3.75 இலட்சம் பேல்களாகவும் இருக்கும் என எதிர்பார்க்கப் படுகிறது. 1979-80 ஆம் ஆண்டில் 3.50 இலட்சம் ஹெக்டேர் பரப்பில் 4.40 இலட்சம் பேல்கள் பருத்தி உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

மேற்சொன்ன இலக்கை அடைய () தரமான விதைகள் உபயோகித்தல், (i) சமச்சீர் உரமிடல், (ii) பயிர்பாதுகாப்பு முறைகளைக் கடைப்பிடித்தல் மற்றும் () மேம்படுத்தப்பட்ட உழவியல் முறைகளை அனுசரித்தல் ஆகியவற்றை பருத்தி பயிரிடப்படும் முழுப் பரப்பிலும் மேற்கொள்ளப்படும்.

1979 மார்ச் 29]

உற்பத்தியை அதிகரிக்க குறைந்த செலவுள்ள அதிக திறன் வாய்ந்த தொழில் நுட்பங்களைக் குறிப்பாக ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகள் பெருமளவில் பரப்பப்படும். பாசனப் பகுதியில் 50 சதவிகிதம் மற்றும் மானாவாரியில் 30 சதவிகிதம் பரப்புள்ள பருத்திக்கு இத்துறை மூலம் தரமுள்ள விதைகள் விநியோகம் செய்யப்படும்.

தீவிர பருத்தி அபிவிருத்தி திட்டத்தின்கீழ் பருத்தி பயிரிடப்படும் பரப்பு 1.74 இலட்சம் ஹெக்டேரில் இருந்து 1.75 இலட்சம் ஹெக்டேர் பரப்புக்கு அதிகரிக்கப்படும். 1.75 இலட்சம் ஹெக்டேர் திட்ட இலக்கிற்கு எதிராக நடப்பு ஆண்டில் ஜனவரி 1979 முடிய, 1.27 இலட்சம் ஹெக்டேர் இத்திட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டிற்குள்ளாக இத்திட்டத்திற்கான இலக்கு முழுவதும் நிறைவு செய்யப்படும். இத்திட்டம் செயல்படும் எழு மையங்களில், திருநெல்வேலி, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் மானாவாரிப் பகுதிகளில் 80,000 ஹெக்டேரிலும், கோயம்புத்தூர் மாவட்டத்தில் பாசனப் பகுதிகளில் 95,000 ஹெக்டேரிலும் ஆக மொத்தம் 1,75,000 ஹெக்டேரில் 1979-80 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்படும்.

24,500 ஹெக்டேரில் ஒருங்கிணைந்த பயிர்ப்பாதுகாப்பு முறைகள் மேற்கொள்ளப்படும். பருத்தி சாகுபடியாளர்களுக்கு 25 சதவிகித மானிய விலையில் 350 விசைத் தெளிப்பான்கள் வழங்கப்படும். 1977-78 ஆம் ஆண்டில், கோவை மற்றும் மதுரை மாவட்டங்களில் பருத்தி சாகுபடியாகும் நிலங்களில், "புரோடினியா" புழு தாக்குதலினால் ஏற்பட்டிருந்த அச்சநிலை, இத்துறையால் மேற்கொள்ளப்பட்ட முறையான பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகள் மூலம் கட்டுப்படுத்தப்பட்டது. இவ்வகை முயற்சிகளை இத்துறை மேற்கொண்டதன் பயனால் நடப்பு ஆண்டில் ஒருசில இடங்களில் மட்டுமே பூச்சி தாக்குதல் காணப்பட்டது.

2,850 ஹெக்டேரில் 100 சதவிகித மானியத்துடன் செயல் விளக்கத் திடல்கள் அமைக்கப்படும்.

சேலம், திருச்சி, மதுரை, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் 1,05,300 ஹெக்டேர் பரப்பில் ஒருங்கிணைந்த பருத்தி அபிவிருத்தித் திட்டம் செயல்படுத்தப்படும். நடப்பு ஆண்டில் ஜனவரி 1979 முடிய பின்வரும் திட்டங்கள் ஒவ்வொன்றுக்கும் திட்ட இலக்கான 1.05 இலட்சம் ஹெக்டேருக்கு எதிராக, 0.825 இலட்சம் ஹெக்டேரில் திருந்திய விதைகள், 0.755 இலட்சம் ஹெக்டேரில் பயிர்ப் பாதுகாப்பு முறைகள், 0.783 இலட்சம் ஹெக்டேரில் உரமிடல் மற்றும் 0.783 இலட்சம் ஹெக்டேரில் உழவியல் முறைகளும் மேற்கொள்ளப்பட்டன. திட்டப்படி இவ்வாண்டு இறுதிக்குள் மீதமுள்ள பரப்பிலும் இத்திட்டங்கள் மேற்கொள்ளப்படும். இத்திட்டத்தின்கீழ், பருத்தி சாகுபடியாளர்களுக்கு 25 சதவிகித மானிய விலையில் 175 விசைத் தெளிப்பான்கள் வழங்கப்படும்.

TRUTH ALONE TRIUMPHS

விவசாயிகளின் நிலங்களில் 800 ஹெக்டேரில் 100 சதவிகித மானியத்துடன் செயல் விளக்கத் தளைகள் அமைக்கப்படும். 10,500 ஹெக்டேரில் ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு முறைகள் மேற்கொள்ளப்படும்.

திருப்பூர், மணப்பாறை மற்றும் கோவில்பட்டி பகுதிகளில் 7,250 ஹெக்டேரில் விதைப் பண்ணைகள் அமைத்து, 1979-80 ஆம் ஆண்டில் 23,500 குவிண்டால் விதைகள் உற்பத்தி செய்யப் படவிருக்கிறது. 1978-79-ல் 23,000 குவிண்டால் விதைகள் உற்பத்தி செய்யப்பட்டன.

கோயம்புத்தூர் மற்றும் மதுரை மாவட்டங்களில் 150 ஹெக்டேர் பரப்பளவிற்கு விவசாயிகளின் நிலங்களில் விதைப் பண்ணைகள் அமைத்து, 250 குவிண்டால் சான்றிதழ்பெற்ற வரலட்சுமி பருத்தி விதைகள் உற்பத்தி செய்யப்படவிருக்கிறது.

தஞ்சை மாவட்டத்திலுள்ள நீர் வசதியையும், பருத்தி பயிரிடுவதற்குள்ள வாய்ப்பினையும் கருத்தில் கொண்டு நடப்பு ஆண்டில் கோடை பருவத்தில் 20,000 ஹெக்டேர் பரப்பில் பருத்தி பயிரிடுவதற்கென ஒரு தனி கோடைத் திட்டம் செயல்படுத்தப்பட்டது.

கரும்பு.

1978-79 ஆம் ஆண்டில் வெல்லத்திற்கான உற்பத்தி இலக்கு 14.30 இலட்சம் டன் என நிர்ணயிக்கப்பட்டது. ஆனால் நடப்பு ஆண்டில், அமோக விளைச்சல் இரகங்களை உபயோகித்தல், மேம்படுத்தப்பட்ட பயிர் உற்பத்தி நுணுக்கங்களைப் பின்பற்றுதல், மற்றும் ஒருங்கிணைந்த பயிர்ப்பாதுகாப்பு முறைகளை அனுசரித்தல் ஆகியவற்றின் மூலம் 19.50 இலட்சம் டன் அளவு வெல்லம் உற்பத்தியாகும் என தற்போது எதிர்பார்க்கப்படுகிறது. சாகுபடியாகும் பரப்பை அதிகப்படுத்தாமல் உற்பத்தித் திறனை உயர்த்துவதின் மூலம் இந்தத் திட்ட இலக்கு அடையப்பெறும்.

1979-80 ஆம் ஆண்டில் கரும்பு சாகுபடி 1.45 இலட்சம் ஹெக்டேர் பரப்பளவில் நிலைப்படுத்தப்பட்டு வெல்ல உற்பத்தி 19.67 இலட்சம் டன்களுக்கு உயர்த்தப்படும். தரமான விதைக் கரணைகளை அபிவிருத்தி செய்து விநியோகம் செய்வதின் மூலமும் மற்றும் திருந்திய பயிர் உற்பத்திக்கான தொழில் நுட்பங்களை பின்பற்றுவதின் மூலமும் கரும்பு சாகுபடியாகும் பரப்பு அனைத்தையும் அமோக விளைச்சல் இரகங்களின் கீழ் கொண்டு வருவதன் மூலம் இக் குறியீட்டை அடைய திட்டமிடப்பட்டுள்ளது.

1979 மார்ச் 29]

தோட்டக்கலை :

தோட்டக்கலை நடவடிக்கைகளை தீவிரப்படுத்தி பழம் மற்றும் காய்கறி உற்பத்தியை அதிகப்படுத்த தோட்டக்கலைத் துறை ஒன்று தனியே அமைக்கப்படும்.

பலதரப்பட்ட பழவகைகளான மா, நார்த்தை, சப்போட்டா, அன்னாசி மற்றும் பலா போன்றவைகளை உற்பத்தி செய்து, மலைவாழ் பகுதி மக்களுக்கு புதிய வருவாய் மற்றும் வேலை வாய்ப்பை அதிகரிக்கும் நோக்கத்துடன், சின்னக் கல்ராயன் மலைப் பகுதிகளில் சுமார் ரூ. 52.56 இலட்சம் மதிப்பில் 419.67 ஹெக்டேர் பரப்பளவில் ஒரு பெரிய பழத் தோட்டத்தை நடப்பு ஆண்டில் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. தரிசு நிலங்கள் மற்றும் விறகிற்காக உள்ள காட்டுப் பகுதிகளை மாற்றி, மேம்படுத்தப்பட்ட உற்பத்தி நுணுக்கங்களை விளக்கிக் காட்டுவதற்கும், தரமுள்ள கன்றுகளை வழங்குவதற்கேற்றதுமான ஒரு மாதிரிப் பழப்பண்ணையை அமைப்பதே இதன் குறிக்கோளாகும். புதுக்கோட்டை மாவட்டம் வள்ளத்ராயன் கோட்டையில் எற்கனவே தொடங்கப்பட்ட பெரிய பழத்தோட்டத்தில் 404.08 ஹெக்டேரில் பழக்கன்றுகள் நடுதல் பணி நடப்பு ஆண்டில் முடிவு பெறும். இவ்விரு பழத் தோட்டங்கள் மூலம் ஆண்டு முழுவதும் 600 விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும். 1977 ஆம் ஆண்டு வட ஆற்காடு மாவட்டம் "நவ்லாக்" என்னுமிடத்திலும், திருச்சி மாவட்டம் முதலைப் பட்டியிலும் ஆரம்பிக்கப்பட்ட சிறப்பு வாழைத்தோட்டங்கள் 1978-79 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படும். இத்தோட்டங்கள் மூலம் நோய் தாக்காத ரோபஸ்டா வாழைக்கன்றுகள் விவசாயிகளுக்கு வழங்கப்படும்.

மாநிலத்தில் பல்வேறு மலைப் பகுதிகளில் தற்போது செயல்படுத்தப்பட்டு வரும் மலைவாழ் மக்களுக்கான ஒருங்கிணைந்த அபிவிருத்தித் திட்டத்தை மாற்றி அமைத்து, ஒரு குடும்ப அடிப்படையில், அதாவது அருகாமையில் உள்ள கிராமங்களை இணைத்து தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பகுதிகளில் 1,000 குடும்பங்களை ஒரு தொகுதியாக அமைத்து செயல்படத் திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வாறு செயல்படுத்துவதால் மலைவாழ் மக்களின் பொருளாதார நிலை அபிவிருத்தி அடைவதோடு அதிக வேலை வாய்ப்பிற்கும் ஏதுவாகிறது.

மேற்கு மலைத் தொடர்ச்சி அபிவிருத்தி திட்டத்தின் கீழ், வாழையில் தோன்றும் "முடிக்கொத்து" நோயை அழித்தல், மந்தாரின் ஆரஞ்சுப்பழ வகையினை அபிவிருத்தி செய்தல் மற்றும் சீரான வெப்ப நிலைக்குக் குறைவாக உள்ள பகுதிகளில் பயிராகும் பழவகைகள் மற்றும் நறுமணப்பொருட்கள் உற்பத்தி செய்யும் திட்டங்கள் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

[1979 மார்ச் 26

வாழையில் தோன்றும் "முடிக்கொத்து" நோயைக் கட்டுப் படுத்த பூச்சி மருந்துகள் 50 சதவிகித விலையில் ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 90-க்கு மேற்படாமல் வழங்குவதோடல்லாமல் பாதிக்கப்பட்ட கன்றுகளை அகற்றுவதற்கு கன்று ஒன்றுக்கு 50 காசுகள் விதம் உயர்ந்த பட்சம் ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 25 மானியமாக சாகுபடியாளர்களுக்கு வழங்கும் திட்டத்தை ஒரு புது முயற்சியாக 1978-79 ஆம் ஆண்டு செயல்படுத்தப்பட்டுள்ளது.

மலைப்பகுதி அபிவிருத்தித் திட்டம் மற்றும் திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களில் சீரான வெப்ப நிலைக்குக் குறைவாக உள்ள பகுதிகளில் செயல்படுத்தப்படும் பழ வகைகள் மற்றும் நறுமணப்பொருட்கள் உற்பத்தி செய்யும் திட்டத்தின் கீழ் செடிகள், உரங்கள் மற்றும் பூச்சி மருந்துகள் போன்ற இடு பொருள்களை 50 சதவிகித மானிய விலையில் தொடர்ந்து அளிக்கப்படும். இவ்விரண்டு திட்டங்களின் கீழ் முறையே 2,000 ஹெக்டேர் பரப்பிற்கும் 800 ஹெக்டேர் பரப்பிற்கும் மானியம் அளிக்கப்படும்.

புகையிலை.

மாநிலத்தில் 10,000 ஹெக்டேர் பரப்பில் புகையிலை பயிராகிறது. கோவை, மதுரை, சேலம் மற்றும் தருமபுரி மாவட்டங்களில் பெருமளவு பரப்பில் புகையிலை சாகுபடி செய்யப்படுகிறது. தருமபுரி மாவட்டத்தில் "வர்ஜீனியா" புகையிலையின் சாகுபடிப் பரப்பை உயர்த்துவதற்கான சாத்தியக் கூறினை கருத்தில் கொண்டு தருமபுரி மாவட்டத்தில் 1978-79 ஆம் ஆண்டு மத்திய அரசு உதவியுடன் "வர்ஜீனியா" புகையிலை அபிவிருத்தித் திட்டம் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இடுபொருட்கள் வழங்குதல்.

விவசாயிகளுக்கு விதைகள், உரங்கள் மற்றும் பூச்சி மருந்துகளை காலத்தே தேவையான அளவிற்கு வழங்குவதற்குத் தீவிர நடவடிக்கைகள் எடுக்கப் பட்டுள்ளன. தரமுள்ள இடுபொருட்களை வழங்குவதற்காக தரக் கட்டுப்பாடு முறைகளும் தீவிரப்படுத்தப்பட்டன.

விதையும் விதைப் பொருட்களும்.

சாகுபடியாகும் நெல் மற்றும் சோளம் பயிரிடும் பரப்பில் 7 சதவிகிதத்திற்கும், கேழ்வரகு பயிரிடும் பரப்பில் 15 சதவிகிதத்திற்கும் மற்றும் வீரிய ஒட்டு ரக சிறு தானியங்களான சோளம், கம்பு, மக்காச்சோளம் பயிரிடும் பரப்பில் 80

1979 மார்ச் 29]

சதவிகிதத்திற்கும் சான்றிதழ் பெற்ற விதைகளை 48 அரசு விதைப் பண்ணைகளிலும் 6 விதை உற்பத்தி மையங்களிலும் உற்பத்தி செய்து வழங்க இத்துறை திட்டமிட்டுள்ளது.

மேற்கூறிய கொள்கையை அடிப்படையாகக் கொண்டு 9,500 டன் நெல் விதைகள், 175 டன் கேழ்வரகு விதைகள், 350 டன் வீரிய ஒட்டு ரக சோள விதைகள், 130 டன் ரக சோள விதைகள், 275 டன் வீரிய ஒட்டு ரக கம்பு விதைகள் மற்றும் 160 டன் வீரிய ஒட்டு ரக மக்காச்சோள விதைகள் இத்துறையின் மூலம் உற்பத்தி செய்யப்பட்டு விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படும்.

நடப்பு ஆண்டில் வெளியிடப்பட்ட புதிய இரகங்களைப் பெருக்கம் செய்து பெரும் பரப்பில் சாகுபடி செய்வதற்கு ஏற்ப வழங்கப்படும்.

1978-79 ஆம் ஆண்டில் 1,700 டன் பயறு வகை விதைகள் உற்பத்தி செய்து விநியோகம் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. பயறு வகை விதைகளின் அதிகப்படியான தேவையை பூர்த்தி செய்ய பயறு வகை விதை மையங்கள் ஐந்து 1978-79 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டன. இந்நிலையங்கள் 1979-80 ஆம் ஆண்டு வழங்குவதற்காக 2,400 டன் பயறு வகை விதைகளை உற்பத்தி செய்யும். 1979-80 ஆம் ஆண்டில் 5,482 டன் எண்ணெய் வித்து விதைகளை அரசு விதைப் பண்ணைகள் மற்றும் விதை உற்பத்தி மையங்கள் மூலம் உற்பத்தி செய்து வழங்கப்படும்.

இத்துறையால், பராமரிக்கப்பட்டு வரும் 10 மாதிரிப்பழ தோட்டங்களிலும் 23 தென்னை நாற்றங்கால்களிலும், 1978-79 ஆம் ஆண்டில் 8 இலட்சம் பழ மரக்கன்றுகளும், 12 இலட்சம் தென்னங்கன்றுகளும் உற்பத்தி செய்யப்பட்டன. 1979-80 ஆம் ஆண்டில் 10 இலட்சம் பழமரக் கன்றுகளும் மற்றும் 13 இலட்சம் தென்னங்கன்றுகளும் உற்பத்தி செய்யப்படும்.

கடந்த ஆண்டில் திட்டமிட்டப்படி வேளாண்மை இயக்குநரின் மேற்பார்வையின்கீழ் தனியே இயங்கும் விதைச் சான்றிதழ் நிறுவனம் ஒன்று அமைக்கப்பட்டது. அதனை முற்றிலும் தனித் தன்மை பெற்ற ஒரு அமைப்பாக ஆக்கி, விதை உற்பத்திச் சான்றளிப்புத்துறை ஒன்றை அமைக்க அரசு முடிவு செய்துள்ளது. 1978-79-ல் விதைச் சான்றிதழின் கீழ் கொண்டு வரப்பட்ட 12,000 ஹெக்டேர் பரப்புக்கு எதிராக 1979-80-ல் 12,800 ஹெக்டேர் பரப்பில் கொண்டு வரப்படும். நடப்பு ஆண்டில் ஜனவரி 1979 முடிய 8,126 ஹெக்டேர் பரப்பளவில் இத்திட்டம் மேற்கொள்ளப்பட்டது. நடப்பு ஆண்டிற்குள்ளாக மீதமுள்ள பரப்பிலும் இத்திட்டம் மேற்கொள்ளப்படும். விதைகளைச்

சேமித்து வைக்க இத்துறையால் எட்டு மத்திய விதைக் கிடங்குகள் கட்டப்பட்டுள்ளன. மேலும் இரண்டு விதைக் கிடங்குகள் கட்டப்பட்டு வருகின்றன. இவைகள் 1979 ஆம் ஆண்டின் மத்தியில் கட்டி முடிக்கப்பெறும்.

இயற்கை மற்றும் இரசாயன உரங்கள்.

அரசு மற்றும் தனியார் துறை மூலம் உர விநியோகம் தொடர்ந்து மேற்கொள்ளப்படும். 1977-78 ஆம் ஆண்டில் உர விநியோகத்திற்கென 12,000 சில்லறை விற்பனை நிலையங்கள் செயல்பட்டன. கூடுதலாக 500 விற்பனை நிலையங்கள் 1978-79 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. உர விநியோகம் செய்வதற்கென 12,500 தனியார் மற்றும் கூட்டுறவுத் துறையைச் சார்ந்த விற்பனை நிலையங்கள் தொடர்ந்து பராமரிக்கப்படும்.

1977-78 ஆம் ஆண்டில் உர விநியோகம் எப்போதுமே கண்டிராத அளவிற்கு அதிகரித்துள்ளது. 1978-79 ஆம் ஆண்டில் 3.00 இலட்சம் டன் தழைச்சத்து, 0.80 இலட்சம் டன் மணிச்சத்து மற்றும் 0.80 இலட்சம் டன் சாம்பல் சத்துள்ள இரசாயன உரங்கள் விநியோகிக்க திட்டமிடப்பட்டுள்ளது. ஜனவரி 1979 வரை 2.52 இலட்சம் டன் தழைச்சத்து, 0.74 இலட்சம் டன் மணிச்சத்து மற்றும் 0.84 இலட்சம் டன் சாம்பல் சத்துள்ள உரங்கள் விநியோகம் செய்யப்பட்டுள்ளன. நடப்பு ஆண்டிற்குள்ளாக இத்திட்டத்திற்கான குறியீடு முழுவதும் எய்தப்பெறும். 1979-80 ஆம் ஆண்டில் இவ்வுர விநியோகம் 3.40 இலட்சம் டன் தழைச்சத்து, 0.90 இலட்சம் டன் மணிச்சத்து மற்றும் 0.90 இலட்சம் டன் சாம்பல் சத்துள்ள உரங்களை விநியோகிக்கும் அளவிற்கு உர விநியோகத்தை அதிகரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

ஆண்டு தோறும் 1,000 டன் பசுந்தாள் உர விதைகளை விநியோகம் செய்வதன் மூலம் இயற்கை உரத்தின் உபயோகம் அதிகரிக்கப்படும். நடப்பு ஆண்டில் ஜனவரி 1979 முடிய இத்திட்டத்தின் கீழ் 963 டன் பசுந்தாள் உர விதைகள் விநியோகம் செய்யப்பட்டுள்ளன. வெளி மண்டலத்திலுள்ள தழைச்சத்தை பயனுள்ள வகையில் நிலை நிறுத்தக் கூடிய பசுந்தாள் உரம் மற்றும் பயறு வகை பயிர்களின் விதைகளுடன் கலந்து விதைப்பதற்கேற்ற 3.5 இலட்சம் நுண்ணுயிர் கலவைப் பொட்டலங்கள் விநியோகம் செய்யப்படும். பெரிய ஊராட்சிகளால் உள்ளூர் உரம் மற்றும் கழிவு உரம் உற்பத்தி செய்வதற்கான உதவிகள் தொடர்ந்து வழங்கப்படும். நீலப் பச்சைப் பாசியைத் தயாரித்து உபயோகிப்பது மற்றும் நுண் ஊட்டச் சத்துக்களை இடுதல் போன்ற பணிகள் 1979-80 ஆம் ஆண்டில் தீவிரப்படுத்தப்படும்.

பயிர்ப் பாதுகாப்பு.

மத்திய அரசு உதவியுடன் 1978-79 ஆம் ஆண்டில் குறிப்பிட்ட பகுதிகளில் நெல்லில் தோன்றும் தண்டுப்புழுவைக் கட்டுப்படுத்தும் பொருட்டு 40,000 ஹெக்டேர் பரப்பளவில் ஒட்டுமொத்த மருந்து தெளிப்பு மேற்கொள்ளப்பட்

1979 மார்ச் 29]

டுள்ளது. வேளாண்மைத் துறையின் மூலம் மருந்து தெளிப்பு வேலைகள் மேற்கொள்ளப்பட்டு, பூச்சி மருந்தின் கிரயம் மற்றும் தெளிப்பதற்கான செலவுகளில் மத்திய அரசு அளிக்கும் மானியம் ஒரு ஹெக்டேருக்கு ரூ. 7.50 போக மீதமுள்ள தொகையை நில வரியுடன் சேர்த்து வசூலிக்கப்படும். நெற்பயிரில் தோன்றும் புகையானை கட்டுப்படுத்த மத்திய அரசு 20,000 ஹெக்டேர்களில் இத்திட்டத்தினை மேற்கொள்ள அனுமதி அளித்துள்ளது. பூச்சி மருந்தின் விலையில் 50 சதவிகிதமும், மருந்து தெளிப்பதற்கான செலவில் ஒரு ஹெக்டேருக்கு ரூ. 7.50 விதமும் மத்திய அரசின் மானியமாகவும், பூச்சி மருந்தின் விலையில் 16-2/3 சதவிகிதம் மாநில அரசின் மானியமாகவும் இத்திட்டத்தின்கீழ் வழங்கப்படுகிறது. ஜனவரி 1979 முடிய 17,300 ஹெக்டேர் பரப்பளவில் இத்திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டிற்குள்ளாக மீதமுள்ள பரப்புகளில் இத்திட்டம் மேற்கொள்ளப்படும்.

1979-80 ஆம் ஆண்டிலும் மத்திய அரசின் உதவியுடன் 40,000 ஹெக்டேர் பரப்பளவில் நெல்லுக்கு ஒட்டுமொத்த மருந்து தெளிப்பும், 20,000 ஹெக்டேர் பரப்பளவில் புகையான் தாக்குதலை கட்டுப்படுத்தும் பணியும் செயல்படுத்தப்படும்.

விவசாயிகளுக்கு வாடகைக்கு விடுவதற்கு போதுமான பயிர்ப் பாதுகாப்புக் கருவிகள் இத்துறையிடம் உள்ளன. பயிர்ப் பாதுகாப்புக் கருவிகளைப் பழுதுபார்த்து நல்ல நிலையில் விவசாயிகளுக்கு வாடகைக்கு விடும் வகையில் பழுது பார்க்கும் ஏழு நடமாடும் பழுது பார்க்கும் நிலையங்களும், தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள பயிர்ப் பாதுகாப்புப் படையும் தொடர்ந்து செயல்படும். தற்போதுள்ள கருவிகளின் எண்ணிக்கையை அதிகரிக்கவும், பழுது பார்க்க முடியாத நிலையிலுள்ள தெளிப்பான்களுக்குப் பதிலாக புதியனவற்றைப் பயன்படுத்தவும் 1979-80 ஆம் ஆண்டில் மேலும் 1,000 விசைத் தெளிப்பான்கள் வாங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

ஆராய்ச்சிப் பணிகள்.

நல்ல பயிர் இரகங்கள் மற்றும் பயிர் பராமரிப்பு நுணுக்கங்களை உருவாக்கும் வகையில் வேளாண்மைத்துறை மற்றும் வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் கீழ் பல ஆராய்ச்சி நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. கடந்த ஆண்டில் வெளியிடப்பட்ட 16 புதிய இரகங்களைப் பெருக்கி அவற்றின் விதைகளை விவசாயிகளுக்கு வழங்கி அதிக பரப்பளவில் சாகுபடி செய்ய வழிவகைகள் செய்யப்பட்டன. நடப்பு ஆண்டில் இத்துறையின் பல்வேறு ஆராய்ச்சி நிலையங்களால் கண்டுபிடிக்கப்பட்டுள்ள ஆறு புதிய நெல் இரகங்கள், மூன்று சிறு தானிய இரகங்கள், இரண்டு பயறு வகைகளின் இரகங்கள் மற்றும் ஒரு எண்ணெய் வித்து இரகம் வெளியிடப்பட்டுள்ளன. இந்த இரகங்களின் சிறப்புக் குணங்கள் பின்வருமாறு :—

1. ஆடுதுறை 33 (ஏடிடீ 33) :

இது உயரமான மற்றும் அதிக அளவு வைக்கோல் தரவல்லது பாக்டீரியல் இலைக்கருகல் நோயை ஓரளவு தாங்கக் கூடியது. திருநெல்வேலி, கன்னியா குமரி மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களுக்கு ஏப்ரல்—ஜூன் விதைப்பிற்கு மிகவும் ஏற்றது. வயது 110 நாட்கள்.

2. ஆடுதுறை 34 (ஏடிடீ 34) :

தஞ்சாவூர், திருச்சி, புதுக்கோட்டை, திருநெல்வேலி மற்றும் கன்னியா குமரி மாவட்டங்களுக்கு மே—ஜூலை விதைப்பிற்கு மிகவும் ஏற்றது. ஓரளவு குட்டையானதும், இலைப்புழு, புகையான், தத்துப்பூச்சிகள் மற்றும் பாக்டீரியல் இலைக் கருகல் நோயை ஓரளவு தாங்கக் கூடியதுமானது. வயது 107 நாட்கள்.

3. ஆடுதுறை 35 (ஏடிடீ 35) :

இது ஓரளவு உயரமான இரகம்; 130 முதல் 135 நாட்கள் வரை வயது டையது. தமிழ்நாட்டின் எல்லாப் பகுதிகளுக்கும் ஜூன்—ஜூலை மற்றும் அக்டோபர்—நவம்பர் திங்களில் விதைப்பதற்கு ஏற்றது. இலைப்புழு, இலை மற்றும் தொண்டைப் பகுதியை தாக்கும் குலை நோய், இலைக் கருகல் நோய் மற்றும் கருஞ் சிவப்பு புள்ளி நோய்களை ஓரளவு தாங்கக்கூடியது. உவர்த் தன்மையைத் தாங்கக் கூடியது. நீண்ட சன்னமான, அரிசியுடையது. சமையலுக்கு ஏற்ற தரமுடையது. இது அய்.ஆர். 20-அய்க் காட்டிலும் அதிக அளவு வைக்கோல் தரக் கூடியதுமாகும்.

4. அய்.ஆர். 34 :

தமிழ்நாட்டில் செப்டம்பர்—அக்டோபர் திங்களில் விதைப்பிற்கு ஏற்றது. அய்.ஆர். 20-அய்க் காட்டிலும் ஓரளவு உயரமானதும், பெரும்பான்மையான பூச்சிகள் மற்றும் நோய்களைத் தாங்கக் கூடியதும் ஆகும். வயது 130 முதல் 135 நாட்கள்.

5. என்.எல்.ஆர். 9672 :

இது ஆந்திர மாநிலத்தில் இருந்துவந்த இரகமாகும். ஒரு போக சம்பா நிலங்களுக்கு ஆகஸ்டு மாத விதைப்பிற்கு ஏற்றது. மகசூல் மற்றும் தரத்தில் கோ. 25 இரகத்தைவிட சிறந்ததாகும். இதன் வயது 160 முதல் 170 நாட்கள்.

1979 மார்ச் 29]

6. அம்பாசமுத்திரம்-15 (ஏ.எஸ்.டி. 15):

ஓரளவு குட்டையானதும், நேரானதும், 120 நாட்கள் வரை வயதுடையது மாகும். செப்டம்பர்- அக்டோபர் மற்றும் ஏப்ரல்-ஜுலை காலங்களில் விதைப் பிற்கு ஏற்றது. அதிக விளைச்சல் தரக்கூடியதும், அய்.ஆர். 20, பொன்னி, மற்றும் ஜி. இ. பி. 24-அய்க் காட்டிலும் மிகவும் சன்னமானதும், பெரும் பான்மையான நோய்களைத் தாங்கக் கூடியதுமாகும்.

7. கோவில்பட்டி-7 (கே. 7) கேழ்வரகு:

100 நாட்கள் வயதுடையதும், கோ. 7 மற்றும் கோ. 10 இரகங்களைக் காட்டிலும் அதிக மகசூல் தரவல்லதும் ஆகும். மானாவாரி சாகுபடிக்கு ஏற்றது. மானாவாரியில் 25 சதம் அதிக மகசூலைத் தந்துள்ளது. சூரிய வெளிச்சத்தால் பாதிக்கப்படாதது. வருடம் பூராவும் விதைப்பதற்கு ஏற்ற இரகம்.

8. கோவில்பட்டி-1 (கே. 1) சாமை:

85 முதல் 90 நாட்கள வயதுடையது. பெரும்பான்மையான பூச்சிகள், நோய்கள் மற்றும் வறட்சி நிலையைத் தாங்கக் கூடியது. சேமித்து வைக்க வும் மற்றும் சமையலுக்கு ஏற்றதும் நல்ல சுவையுடையதுமாகும்.

9. கோவில்பட்டி-1 (கே. 1) வரகு:

கோ. 2 இரகத்தை விட 81 சதம் அதிக மகசூல் தரவல்லது. இதன் வயது 100 நாட்கள். பொதுவாக பூச்சி நோய்களைத் தாங்கும் தன்மையுடையது.

10. திண்டிவனம்-1 (டி.எம்.வி. 1) உளுந்து:

தமிழ்நாட்டில் எல்லா பகுதிகளுக்கும் ஏற்றது. அமோக விளைச்சல் தரக் கூடியதும், ஒரே நேரத்தில் அறுவடைக்கு வரக் கூடியதும், மஞ்சள் இலை நோயைத் தாங்கக் கூடியதுமாகும்.

11. ஆடுதுறை-2 (ஏ.டி.டீ. 2) உளுந்து:

நெல் அறுவடை செய்யப்பட்ட தரிசு நிலங்களில் பயிரிட ஏற்றது. எடிடீ. 31-அய்க் காட்டிலும் அதிகளவு புரத சத்துக்கொண்டது. அளவில் பெருத்து இருக்கும். வைரஸ், முடிச்சி நோய் மற்றும் சாம்பல் நோய்களை ஓரளவு தாங்கக் கூடியது.

12. திண்டிவனம்-6 (டி.எம்.வி. 6) எள்:

இது தனிவழித் தேர்வில் தெரிந்தெடுக்கப்பட்ட இரகமாகும். சேலம், தருமபுரி, கோயம்புத்தூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களுக்கு கோடை கால விதைப்பிற்கு மிகவும் ஏற்றது. எண்ணெய் சத்து 54.2 சதவிதம் உடையது. வயது 85 நாட்கள்.

உகந்த பயிர் மற்றும் சாகுபடி முறை, மண்ணின் வளம் பற்றிய பராமரிப்பு, மானாவரி சாகுபடி முறை மற்றும் ஒருங்கிணைந்த பயிர்ப்பாதுகாப்பு முறைகளை உருவாக்குதல் ஆகிய பணிகள் தொடர்ந்து நடைபெறும்.

பல்வேறு பயிர்களுக்கு நுண்ணூட்டச் சத்துக்களைத் தர வல்ல இடுபொருட்கள் இத்துறையால் முறைப்படுத்தப்பட்டு, புதுக்கோட்டை மாவட்டம் குடுமியான்மலையில் ஆண்டுக்கு 1,200 டன் நுண்ணூட்டக் கலவைகளைத் தரவல்ல இடுபொருட்களை உற்பத்தி செய்யும் திறன் கொண்ட தொழிற்சாலை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

எல்லா விவசாயிகளும் தங்களுடைய நிலத்திலேயே தழைச் சத்தை அளிக்கும் நீலப் பச்சை பாசியைப் பெருமளவில் உற்பத்தி செய்து கொள்ளும் அளவிற்கு எளிதான முறைகள் உருவாக்கப்பட்டுள்ளன. நீலப் பச்சைப் பாசியை இடுவதின் மூலம் ஒரு ஹெக்டேருக்கு 25 கிலோ தழைச் சத்தை மிச்சப்படுத்தலாம். இதன் உற்பத்தி மற்றும் உபயோகம் 1979—80-ல் தீவிரப் படுத்தப்படும்.

வெளி மண்டலத்திலுள்ள தழைச் சத்தை கிரகித்து அதன் மூலம் மண்ணை வளப்படுத்தவல்ல "அசோலா" என்ற தண்ணீரில் காணப்படும் பாசியை உபயோகிக்கும் முறை பற்றிய ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இம்முறை அதிக நம்பிக்கை அளிக்கக்கூடியதாக இருக்கிறது.

நூற்புழுக்களைக் கட்டுப்படுத்துவதற்கான பணிகளைத் தீவிரப்படுத்துவதற்கு திருச்சியைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு ஆய்வுக் கூடமும், கன்னியாகுமரி மாவட்டத்தில் தென்னை வாடல் நோயைக் கட்டுப்படுத்தும் பணிக்கு ஒரு ஆய்வுக்கூடமாக, இரண்டு ஆய்வுக்கூடங்கள் நடப்பு ஆண்டில் அமைக்கப்பட்டுள்ளன. வரும் ஆண்டில் செங்கல்பட்டு மற்றும் வட ஆற்காடு மாவட்டங்களில் காணப்படும் நூற் புழுக்களைக் கட்டுப்படுத்தும் ஆய்வுப் பணிக்கென மற்றுமொரு ஆய்வுக்கூடத்தைக் காஞ்சிபுரத்தில் அமைக்கக் கருதப்பட்டுள்ளது. இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடியில் பலபயிர் ஆராய்ச்சி நிலையம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

பருத்தி, சிறு தானியங்கள், பயறு வகைகள் மற்றும் காய்கறிகள் பற்றிய பல்வேறு ஆய்வுப் பணிகளை தீவிரப்படுத்த தருமபுரி மாவட்டம் ஓசூரில் பல பயிர்செயல் விளக்க மையம் ஒன்றும் தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டிலுள்ள பலதரப்பட்ட மண்வகைகளை வகைப்படுத்தி, அந்த மண் வகைகள் காணப்படும் இடங்களைக் காட்டும் நிலப்படம் தயாரிக்கும்

1979 மார்ச் 29]

பொருட்டு அவற்றை ஆய்வு செய்யும் பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. இப் பணியினை விரைவு படுத்த வேலூர் மற்றும் பாளையங்கோட்டையில் கூடுதலான இரண்டு மண்வள ஆய்வுப் பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளன.

திருநெல்வேலி மாவட்டம் கோவில்பட்டியில் மேலும் ஒரு உரப் பரிசோதனை நிலையம் நடப்பு ஆண்டில் அமைக்கப்பட்டுள்ளது.

பயிற்சித் திட்டம்:

நடப்பு ஆண்டில் உதகமண்டலம், இராமநாதபுரம், சேலம் ஆகிய இடங் களில் மேலும் மூன்று உழவர் பயிற்சி நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இத்துடன் ஒரு மாவட்டத்திற்கு ஒரு உழவர் பயிற்சி நிலையம் அமைப்பது என்ற திட்டம் நிறைவேற்றப்பட்டது. 1979-80 ஆம் ஆண்டில் சுமார் 30,000 விவசாயிகளுக்கு இந்த நிலையங்களில் பயிற்சி அளிக்கப்படும். மாநிலத்தில் தற்போதுள்ள 13 விவசாயப் பள்ளிகளில் ஆண்டொன்றுக்கு 390 இளைஞர் களுக்குப் பயிற்சி அளிக்கும் பணி தொடர்ந்து நடைபெறும்.

கடந்த ஆண்டில் திட்டமிட்டபடி விவசாயப் பள்ளிகளுக்கான கட்டிடங்கள் கட்டும் பணி நடைபெறுகிறது.

மானாவாரி சாகுபடி:

பொருளாதாரத்தில் பின்தங்கிய பெரும்பான்மையான கிராம மக்களின் வளர்ச்சிக்கு மானாவாரி சாகுபடியில் கவனம் செலுத்துவது அவசியமாகும். நவீன தொழில் நுட்பங்களின் உதவியுடன் பல்வேறு மானாவாரி சாகுபடி முறைகளைப் பரப்புவதன் மூலம் தீவிர சாகுபடியை அதிகரிக்க வாய்ப்புகள் உள்ளன. இப்பகுதிகளில் போதுமான அளவு விரிவாக்க முயற்சிகள், வளர்ச்சிப் பணிகள் மற்றும் அதற்குத் தேவையான அடிப்படைச் சாதனங்களை உருவாக்குவதன் மூலம் உற்பத்திப் பெருக்கத்தின் குறிக்கோளை விரைந்து சாதிக்க முடியும். இவைகளைக் கருத்தில் கொண்டு, இப்பகுதிகளை மேம் பாடு செய்யப் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

பல்நோக்கு கருவி ஒன்று இப்பகுதிகளில் உபயோகப்படுத்த இத்துறையால் உருவாக்கப்பட்டுள்ளது. உழவிற்குப் பயன்படுத்தப்படும் மாடுகளைப் பொறுத்து நாளொன்றுக்கு 4 முதல் 5 ஏக்கர் வரை உழவு வேலைகள் செய்யக் கூடிய இக்கருவியை ஏழை மக்களின் டிராக்டர் எனச் சொல்லலாம். விதைப்பதற்கும் உரத்தைப் பயிர்களுக்கு அருகாமையில் இடுவதற்கும் பயிர்

இடைச் சாகுபடி செய்யவும் இக்கருவியை உபயோகிக்கலாம். இக் கருவியின் விலை சுமார் ரூ. 500 ஆகும். 1979-80 ஆம் ஆண்டில் பெருமளவில் இக்கருவிகளை வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

நடப்பு ஆண்டில் மானாவாரிப் பகுதிகளில் நீர்ப் பிடிப்புப் பகுதிகளைத் தெரிந்தெடுத்து அவற்றில் ஒவ்வொன்றும் 400 ஹெக்டேர் பரப்பளவு கொண்ட செயல்விளக்கப் பாத்திகள் அமைக்கப்பட்டன. இவ்வாண்டில் மாவட்டத்திற்கு ஒன்று முதல் இரண்டு செயல்விளக்கப் பாத்திகள் இவ்வகையில் அமைக்கப்பட்டுள்ளன. பல்வேறு மானாவாரி சாகுபடி முறைகளைப் பரப்பும் வகையில் இவ்வகைச் செயல்விளக்கப் பாத்திகளை அதிக அளவில் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. மழைத் தண்ணீரை பண்ணைக் குட்டைகளில் தேக்கி வைத்து மீண்டும் பயன்படுத்துவதற்கான பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பகுதி மேம்பாடு :

பின்தங்கிய பகுதிகள் மற்றும் மலைவாழ் மக்களின் பொருளாதார நிலையை மேம்படுத்தும் பொருட்டு செயல்படுத்தப்படும் சிறப்புத் திட்டங்கள் தொடர்ந்து நடைபெறும். ஜெர்மானியக் குடியரசிடம் இருந்து கிடைக்கப் பெற்ற உதவிப் பொருட்களை விற்பனை செய்ததின் மூலம் கூடுதலாக கிடைக்கப் பெற்ற ஒரு கோடி ரூபாய் மாநில நிதியில் சேர்க்கப்பட்டு நீலகிரி மாவட்டத்திலுள்ள மலைவாழ் மக்கள், சிறு விவசாயிகள், மிகச் சிறு விவசாயிகளின் நலனுக்கென புதிய திட்டங்கள் செயல்படுத்துவதற்குப் பயன் படுத்தப்படும்.

வேளாண்மைப் பொறியியல் :

இத்துறையின் பொறியியல் பிரிவு நில மேம்பாடு, சிறுபாசனம், மண் நீர்ப்பாதுகாப்பு ஆகிய பணிகள் போன்றவற்றை மேற்கொள்கிறது. இத்துறையிடம் 177 டிராக்டர்களும், 152 புல்டோசர்களும் மற்றும் 815 பலதரப்பட்ட துளைக் கருவிகளும் உள்ளன.

நில அபிவிருத்தி :

1979—80 ஆம் ஆண்டில் டிராக்டர்களையும், புல்டோசர்களையும் கொண்டு 2,50,000 மணி நேரம் வேலை செய்து 7,000 ஹெக்டேர் பரப்பளவில் நிலத்தைச் சமன்படுத்தவும் 22,500 ஹெக்டேர் பரப்பளவை உழுவதற்கும் திட்டமிடப் பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் ஜனவரி 1979 முடிய நிலத்தை சமன்படுத்தும் பணி 1.280 இலட்சம் மணி நேரங்களில் செயல்பட்டு 5,043 ஹெக்டேர் பரப் பளவில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 0.605 இலட்சம் மணி நேரங்களில் நிலத்தை உழும் பணி 15,090 ஹெக்டேர் பரப்பளவில் மேற்கொள்ளப் பட்டுள்ளது. மீதமுள்ள இவைகளுக்கான குறியீடு முழுவதும் இவ்வாண்டு இறுதிக்குள் முடிக்கப்படும்.

[1979 மார்ச் 29]

சிறு பாசனம் :

குழாய்க் கிணறுகள், மணற்பாங்கான பகுதியில் வடிமுனைக் குழாய்க் கிணறுகள், ஆழ்குழாய்க் கிணறுகள் அமைத்தும் கிணற்றில் துளையிடுதல், தற்போதுள்ள கிணறுகளை ஆழப்படுத்துதலின் மூலம் நிலத்தடி நீரை வெளிக் கொணர்வது சிறு பாசனத் திட்டத்தின் முக்கிய பணியாகும். நிலத்தடி நீர் மற்றும் மேல் ஓடும் நீரின் தற்போதைய திறனை அதிகப்படுத்தும் பொருட்டு ஆய்வுகள் மேற்கொள்ள ஒரு திட்டத்தையும் இத்துறை செயல்படுத்தவிருக் கிறது. இதற்காகவே, நடப்பாண்டில் இப்பிரிவு நிறுவப்பட்டுள்ளது.

1978—79 ஆம் ஆண்டில் 4,200 குழாய்க் கிணறுகளை அமைக்க திட்ட மிடப்பட்டுள்ளது. ஜனவரி 1979 முடிய 3,715 குழாய்க் கிணறுகள் அமைக் கப்பட்டுள்ளன. 2,300 கிணறுகள் ஆழப்படுத்த திட்டமிடப்பட்டு 1,245 கிணறுகள் ஜனவரி 1972 வரை ஆழப்படுத்தப்பட்டுள்ளன. மேலும், 2,000 கிணறுகளில் துளையிடும் பணியைச் செய்யத் திட்டமிடப்பட்டு ஜனவரி 1979 முடிய 2,196 கிணறுகளில் துளையிடும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. பாசனத்திற்குக் கூடுதலான பரப்பைக் கொணர்வதற்கும் மற்றும் பாசன வசதியை அதிகப்படுத்துவதற்கும் 1979-80 ஆம் ஆண்டில் 4,300 குழாய்க் கிணறுகள், 2,500 வடிமுனைக் குழாய்க் கிணறுகள் அமைப்பதுடன் தற்போ துள்ள 2,700 கிணறுகளை ஆழப்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் 1979-80 ஆம் ஆண்டில் தற்போதைய நீர்த் திறனை அதிகப்படுத்த 2,200 கிணறுகளில் துளைகள் இடவும் திட்டமிடப்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த கிராம மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், சமுதாயக் கிணறு களைத் தோண்டும் பணி மேற்கொள்ளப்படுகிறது. 1978-79 ஆம் ஆண்டில் தஞ்சாவூர் மாவட்டத்தில், 150 சமுதாயக் கிணறுகளைத் தோண்டத் திட்ட மிடப்பட்டு, ஜனவரி 1979 வரை 59 கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன. 1979-80 ஆம் ஆண்டில் இத்திட்டம் பெருமளவில் செயல்படுத்தப்படும்.

மண்வளப் பாதுகாப்பு :

மண்வளப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் 1978—79-ல் கொண்டுவரப்பட்ட மொத்தப் பரப்பான 55,820 ஹெக்டேரிலிருந்து 1979-80 ஆம் ஆண்டில் 60,000 ஹெக்டேராக அதிகரிக்கப்படும். 1979 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் முடிய 40,491 ஹெக்டேர் பரப்பளவில் இத்திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டிற்குள்ளாகத் திட்டப்படி மீதமுள்ள பரப்பளவுகளில் இத்திட்டம் மேற்கொள்ளப்படும்.

1977–78 ஆம் ஆண்டில், ஒன்பது மாவட்டங்களில் 5,700 ஹெக்டேர் பரப்பளவில், விவசாய நிலங்கள் மண்மேடிட்டதனால், பெருமளவில் பாதிக்கப் பட்டது. இத்துறையில் உள்ள ஆட்கள் மற்றும் இயந்திர பலங்களை

ஒன்று திரட்டி சீர்திருத்தப் பணிகள் போர்க்கால நடவடிக்கைபோன்று தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு எப்போதும் கண்டிராத அளவில் குறைந்த காலத்தில் முடிக்கப்பட்டன. 1978 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 31 ஆம் நாள் வரை ரூ. 94 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

1978 ஆம் ஆண்டு நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் ஏற்பட்ட வெள்ளத்தினால் நடப்பு ஆண்டிலும் இம்மாதிரியே ஒன்பது மாவட்டங்களில் 2,500 ஹெக்டேர் பரப்பு பாதிக்கப்பட்டன. சீர்திருத்தப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு, அதிவேகத்துடன் நடைபெறுகிறது. 1979 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் தேதிக்குள் இப்பரப்பு முழுவதிலும் நிலச் சீர்திருத்தப்பணிகள் முடிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. 1979 ஆம் ஆண்டு ஜனவரி வரை ரூ. 21.00 இலட்சம் செலவில் 1,720 ஹெக்டேர் பரப்பளவில் நிலச் சீர்திருத்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சிறு விவசாயிகள் மற்றும் மிகச் சிறு விவசாயிகளுக்கு 100 சத மானியத்திலும் இதர விவசாயிகளுக்கு 50 சத மானியத்துடன் ஏக்கர் ஒன்றுக்கு அதிக அளவு ரூ. 1,000-க்கு மேற்படாமல் சீர்திருத்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

ஆயக் கட்டுப் பகுதி மேம்பாடும் நீர்பிடிப்புப் பராமரிப்பும் :

ஆண்டொன்றுக்கு 4,000 ஹெக்டேர் என்ற அளவில் தஞ்சாவூர் மாவட்டத்தில் நீர்பராமரிப்புப் பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அவ்வாறே சாத்தனூர் அணைக்கட்டுத் திட்டப் பகுதியில் ஆண்டொன்றுக்கு 400 ஹெக்டேர் என்ற அளவில் இப்பணியினை மேற்கொள்ள திட்டமிடப்பட்டிருக்கிறது. 1979 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் முடிய தஞ்சாவூர் மாவட்டத்தில் 3,891 ஹெக்டேர் பரப்பும் மற்றும் சாத்தனூர் திட்டப் பகுதியில் 401 ஹெக்டேர் பரப்பும் இத்திட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வட ஆற்காடு மாவட்டத்தில் மண் அரிப்பினால் ஏற்பட்ட பள்ளத்தாக்குப் பகுதிகளில் ஆண்டொன்றுக்கு 200 ஹெக்டேர் என்ற அளவில் சீர்திருத்தப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. 1979 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் முடிய 102 ஹெக்டேர் பரப்பளவில் இத்திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. தென் ஆற்காடு மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள இதுபோன்ற பள்ளத்தாக்குப் பகுதிகளைச் சீர்திருத்தம் செய்யும் பொருட்டு 1979-80 ஆம் ஆண்டில் கூடுதலான ஒரு பிரிவு அமைக்கப்படவிருக்கிறது.

மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த கம்பம் பள்ளத்தாக்கு மற்றும் திருநெல்வேலி மாவட்டத்தில் மணல் காற்று வீசுவதால் பாதிக்கப்படும் பகுதிகளில் மணல்காற்று தடுப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. 1979 ஆம் ஆண்டு

1979 மார்ச் 29]

ஜனவரித் திங்கள் முடிய 86 கிலோ மீட்டர் தூரத்திற்கு மணல் காற்றுத் தடுப்புக்கான வேலி மரங்களை நடும் பணி மேற்கொள்ளப்பட்டதன் மூலம் திருநெல்வேலி மாவட்டத்தில் 1,692 ஹெக்டேர் பரப்பும் மதுரை மாவட்டத்தில் 4,079 ஹெக்டேர் பரப்பும் பயனடைந்துள்ளன. 1979-80 ஆம் ஆண்டில் இவ்விரண்டு இடங்களிலும் 6,000 ஹெக்டேர் பரப்பளவில் இப்பணி மேற்கொள்ளப்படும்.

1979-80 ஆம் ஆண்டிற்கான புதிய திட்டங்கள் :

நடப்பு ஆண்டில் தற்போது செயல்படுத்தப்படும் திட்டங்களுடன், 1979-80 ஆம் ஆண்டில் பின்வரும் புதிய திட்டங்களைச் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

விதைப் பெருக்கமும் விதைச் சான்றிதழும் :

விதை உற்பத்தியில் தரக் கட்டுப்பாட்டினை தீவிரமாக அமுல்படுத்தி விவசாயிகளுக்குத் தரமான விதைகள் விநியோகம் செய்வதற்கேற்ப, 1979-80 ஆம் ஆண்டில் தனியே ஒரு விதைச் சான்றிதழ் இயக்கம் நிறுவப்படும்.

திருவாரூரிலும், கள்ளக்குறிச்சியிலும் உள்ள விதைச் சுத்திகரிக்கும் நிலையங்களில் பணிபுரியும் அலுவலர்களுக்குக் குடியிருப்பு வீடுகள் கட்டுவதற்கும், மதுரை மாவட்டம் சோழவந்தானில் உள்ள விதைச் சுத்திகரிப்பு நிலையத்தில் ஒரு கிடங்கு கட்டுவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

மாவட்டங்களில் உள்ள மத்திய விதைக் கிடங்குகளைக் கவனித்துக் கொள்ள 10 உதவியாளர்கள் அமர்த்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

பயறு வகை அபிவிருத்தி :

புரதச் சத்தினை முக்கியமாக அளிக்கவல்ல பயறுவகைகள் நம் மாநிலத்தின் தேவைக்குக் குறைவாக உற்பத்தியாவதால், வட மாநிலங்களிலிருந்து பெருமளவிற்கு இறக்குமதி செய்யப்படுகிறது. இதைத் தவிர்க்கவும், மாநிலத்தின் பயறு வகைகளின் உற்பத்தியை அதிகப்படுத்துவதற்கும், பயறு வகைகளின் தற்போதைய பரப்பான 11.00 இலட்சம் ஹெக்டேரிலிருந்து 1979-80 ஆம் ஆண்டில் 11.60 இலட்சம் ஹெக்டேர் அளவுக்கு உயர்த்தப்பட்டு, 3.58 இலட்சம் டன் அளவு உற்பத்தி அடையப் பெறும். இத்திட்டத்திற்கு ஆதாரவாக, பெரும் பரப்பளவில் பயறு வகைகளின் உற்பத்திக்கான தன்மைகளை விளக்கவும், பூச்சி மருந்துகள் மற்றும் பயிர்ப்பாதுகாப்பு சாதனங்களை மானிய விலையில் வழங்கவும் இரண்டு பயறுவகைப் பயிர்கள் முன்னோடி செயல் விளக்கத் திட்டங்களை சேலம் மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களில் செயல்படுத்தப்

படும். மேற்கூறிய இரண்டு திட்டங்களை செயல்படுத்துவதின் மூலம் பயறு வகைகளில் 2,836 டன்கள் கூடுதல் உற்பத்தி பெற முடியும் என எதிர்பார்க்கப் படுகிறது.

வணிகப் பயிர்கள் :

கோயம்புத்தூர் மாவட்டம் வடகரையில் உள்ள மண்டலப் பண்ணையிலும் செங்கல்பட்டு மாவட்டம் புட்லூரில் உள்ள கரு விதை உற்பத்திக்கான விதைப் பண்ணையிலும் அப்பண்ணைகளின் திறனை அபிவிருத்தி செய்ய நீரினைச் சிக்கனமாகப் பயன்படுத்த நீர் தெளிக்கும் கருவிகள் நிறுவப்படும். வட ஆற்காடு மாவட்டம் "நவ்லாக்கில்" உள்ள தென்னை விதைப் பண்ணையில் ஒரு கிடங்கும், தென்னை நாற்றங்கால்களில் அலுவலர்கள் குடியிருக்க வீடுகளும் கட்டப்படும். அலுவலர்கள் குடியிருப்புகள் படிப்படியாகக் கட்டப் படும். இந்த ஆண்டில் இரண்டு இடங்களில் அதாவது தென் ஆற்காடு மாவட்டம் காகுப்பத்திலும், செங்கல்பட்டு மாவட்டம் மாதவரத்திலும் அமைந்துள்ள தென்னை நாற்றங்கால்களில் அலுவலர் குடியிருப்புகள் கட்டப் படும்.

வேளாண்மைக் கல்வி :

5 விவசாயப் பள்ளிகளுக்கு நிரந்தரக் கட்டிடங்களும், 4 விவசாயப் பள்ளிகளுக்குக் கூடுதல் இட வசதியும் செய்து தரப்படும்.

விவசாய ஆராய்ச்சி :

பயிர்களை ஆய்வு செய்யவும், பயிர்கட்குச் சேதம் விளைவிக்கும் உயிரினங் களுக்கு எதிரிகளைக் கண்டுபிடிக்கவும், அந்த ஆய்வுகளையும் கண்டு பிடிப்புகளையும் பயிர்களைத் தாக்கும் பூச்சிகளைக் கட்டுப்படுத்தப் பயன் படுத்துவதோடு, ஒட்டுயிர்கள் மற்றும் உயிரினக் கொல்லிகளுக்கான மூல நுண்மத் தொகுதிகளைப் பராமரிக்கும் வகையில் கிருஷ்ணகிரியில் ஓர் உயிரியல் கட்டுப்பாடு ஆய்வுக் கூடம் (Biological Control Laboratory) அமைக்கப்படும்.

வேளாண் பருவ நிலைக்கு ஏற்றவாறு அமோக விளைச்சல் இரகங்களையும் அதற்கேற்ற சாகுபடி முறைகளையும் உருவாக்கும் குறிக்கோளுடன் தர்ம புரியில் ஒரு அனுசரணை செயல் விளக்க மையம் அமைக்கப்படும்.

நூற்புழுவினால் தாக்கப்பட்ட பகுதிகளை அறியவும், அவற்றினால் பாதிக் கப்படும் பகுதிகளைக் கண்டு வரையறுக்கவும் மற்றும் தடுப்பு முறைகளைக் கையாண்டு இழப்பினைக் குறைக்கவும் விவசாயிகளுக்குத் தேவையான உதவி அளிக்கும் வகையில் வட ஆற்காடு மற்றும் செங்கற்பட்டு மாவட்டங்களில் பயிர்களைத் தாக்கும் நூற்புழு பற்றிய ஆய்வு செய்யும் திட்டம் ஒன்று மேற்கொள்ளப்படும்.

பயிர்கள், பூச்சி, பூஞ்சாள நோய்களால் தாக்கப்படுவதை விவசாயிகளுக்கு முன் கூட்டியே அறிவித்து அவைகளைக் கட்டுப்படுத்துவதற்கு உதவும் வகையிலும், மற்றும் பகுதி வாரியாகவும், பயிர் வாரியாகவும், பயிர்ப் பாது காப்பை அனுசரிக்கும் முறைகளை உருவாக்கவும், பயிர்ப் பாதுகாப்பு ஆராய்ச்சியையும் பயிர்ப் பாதுகாப்பு நடவடிக்கைகளையும் இணைந்து செயல் படுத்தும் ஒரு திட்டம் மேற்கொள்ளப்படும்.

விரிவாக்கப் பணிக்குத் தேவையான அடிப்படை ஆராய்ச்சிக்கும் இரகங்களை ஆராயவும், ஆராய்ச்சி முடிவுகளைச் சோதனை செய்வதற்கும் ஏற்ற வசதிகளைப் பெருக்குவதற்கு, கோவில்பட்டியிலுள்ள பருத்தி மற்றும் சிறு தானிய ஆராய்ச்சி நிலையத்திற்குக் கூடுதலான சாதனங்கள் வழங்கப் படும்.

புதுக்கோட்டை மாவட்டம் குடுமியான் மலையில் அலுவலர் குடியிருப்புகள் கட்டப்படும்.

பகுதி மேம்பாடு :

விவசாயிகளுடன் இருக்கும் தொடர்பினைத் தீவிரமாக்கவும் மேலும் பயனளிக்கத் தக்க வகையில் விவசாயத் திட்டங்களைச் செயல்படுத்தவும் தற்போது பெரிய அளவில் உள்ள விவசாயக் கோட்டங்களைப் பிரித்து, சேலம் மாவட்டத்தில் சங்கரியிலும், மேட்டூரிலும், தர்மபுரி மாவட்டத்தில் தர்ம புரியிலும், இராமநாதபுரம் மாவட்டத்தில் தேவகோட்டையிலும், கன்னியாகுமரி மாவட்டத்தில் கன்னியாகுமரியிலும் ஐந்து புதிய விவசாயக் கோட்டங்கள் அமைக்கப்படும்.

விரிவாக்கப் பணிகளை மேம்படுத்துவதற்கு நன்கு பயிற்சியளிக்கப்பட்ட வல்லுநர்களைப் புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ள மண்டலங்களுக்கு அமர்த்தப் படுவதோடு தகவல் பிரிவும் மேம்படுத்தப்படும்.

இராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூரில் உள்ள வாய்ப்பினைக் கருத்தில் கொண்டு உற்பத்தியையும், உற்பத்தித் திறனையும், அதிகமாக்கவும அப்பகுதி கிராம மக்களின் வருவாயைக் கூட்டுவதுடன் மிகச் சிறு விவசாயி களுக்கும், நிலமில்லாத தொழிலாளர்களுக்கும் வேலை வாய்ப்பினைத் தரும் பொருட்டும் ஒரு பகுதி அபிவிருத்தித் திட்டத்தை மேற்கொள்ளுவது எனக் கொள்கையளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

வேளாண்மைப் பொறியியல் :

இயந்திரங்களின் உபயோகத்தை அதிகப்படுத்தி, வேளாண்மைக்கு அதிக அளவு பயன்படும் வகையில் டிராக்டர்களுக்கு இயந்திரக் கலப்பையும், இணைப்புச் சாதனங்களும் வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

[1979 மார்ச் 29

சிறுபாசனம் :

நிலத்தடி நீரைக் குறிப்பாக வண்டல்மண் பகுதிகளில் இருந்து வெளிக் கொணர்வதற்கு சுழல்வகைத் துளையிடும் கருவிகள் எண்ணிக்கை அதிகரிக்கப் படும். சுமார் ரூ. 10 இலட்சம் பெறுமானமுள்ள ஒரு புதிய சுழல்வகைத் துளையிடும் கருவியை வாங்குவதைவிட ரூ. 2.5 இலட்சம் செலவில் தற்போதுள்ள "பர்குஷன்" துளையிடும் கருவியை மாற்றி சுழல்வகைத் துளையிடும் கருவியாக்குவதால் ரூ. 7.5 இலட்சம் மீதப்படுவதுடன் இயந்திரங் களை நல்ல முறையில் பயன்படுத்தவும் முடியும்.

இயந்திரங்களை நல்ல நிலையில் பாதுகாக்கும் வகையில் மூடிய கொட்ட கைகள் படிப்படியாகக் கட்டப்படும். இதற்காக நடப்பு ஆண்டில் விழுப்புரத்தில் ஒன்றும், மன்னார்குடியில் ஒன்றுமாக இரண்டு மூடிய கொட்டகைகள் கட்டப்படும்.

மண்வளப் பாதுகாப்பு :

தென் ஆற்காடு மாவட்டத்தில் மண் அரிப்பினால் ஏற்பட்டுள்ள பள்ளத் தாக்குப் பகுதிகளில் உற்பத்திக்கேற்ற நிலம் குறைவதைத் தடுக்கும் பொருட்டு இவ்வாறு பாதிக்கப்பட்ட நிலங்களைச் சீர்திருத்தும் திட்டம் மேற்கொள்ளப் படும்.

நிர்வாகம் :

மாவட்ட விவசாய அலுவலகங்களில் 15 கூடுதல் கண்காணிப்பாளர்களை அமர்த்துவதன் மூலம் அலுவலகங்களில் நிர்வாக அமைப்பு மேம்படுத்தப்படும். அம்மாதிரியே தனிக்கைக் கோப்புகள் மீது நடவடிக்கை எடுக்கும்பொருட்டு, தெரிந்தெடுக்கப்பட்ட தலைமை அலுவலகங்களில் 25 உதவியாளர்கள் அமர்த்தப்படுவார்கள்.

1979-80 ஆம் ஆண்டுக்கான பெரிய அளவிலான திட்டங்களும் வேளாண்மைத் துறையின் எதிர்கால நடவடிக்கைகளும்.

தோட்டக் கலை இயக்கம் :

தோட்டக் கலையை அபிவிருத்தி செய்ய பெருமளவு வாய்ப்புகள் உள்ளன அவை பெரிய பழத் தோட்டங்களை அமைப்பதோடல்லாமல் தற்போதுள்ள சாகுபடி முறைகளை திருத்தி அமைப்பதற்கான விரிவாக்கப் பணிகளைக் குறிப்பாக சேலம், தருமபுரி, மதுரை, திருச்சிராப்பள்ளி மற்றும் மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகளில் மேற்கொள்ளுதலும் ஆகும். புதிய இரகங் களைப் புகுத்துவதற்கான வாய்ப்புகளும் உள்ளன. வரும் ஆண்டுகளில் தோட்டக் கலைப் பிரிவிற்கு அதிகக் கவனம் மற்றும் முக்கியத்துவத்தைத்

தருவதற்கும் மேற்கூறிய பணியினைச் சீரான முறையில் செயல்படுத்தவும் நன்கு பயிற்சி பெற்றுள்ள அலுவலர்கள் மற்றும் இதர சாதனங்களைக் கொண்டு தோட்டக் கலை இயக்ககம் ஒன்று அமைக்கப்படும்.

விதைச் சான்றிதழ் இயக்ககம் :

வேளாண்மையில் எந்த அமோக விளைச்சல் இரகங்களுக்கும் முதன்மை யானது, தரமுள்ள வித்துக்களே என்று ஏற்கனவே உணர்ந்திருப்பதற்கு ஏற்றவாறு, தரமுள்ள வித்துக்களை உற்பத்தி செய்வதில் விரிவாக்கத் திட்டங்களையும் உற்பத்தித் திறனின் உயர்வையும் கவனத்தில் கொள்ள வேண்டியது அவசியமாகிறது. தற்போதுள்ள விதைச் சான்றிதழ் நிறுவனத்தை விரிவுபடுத்துவதோடல்லாமல், தரமுள்ள வித்துக்களை உற்பத்தி செய்வதைத் தொடர்ந்து கண்காணிக்கவும் விவசாயிகள் பயன்பெறும் வகையில் வேளாண் துறையின் நடவடிக்கைகள் மற்றும் ஆக்கச் சார்பான திறனாய்வுகளை மேற்கொள்ளவும் விதைச் சான்றிதழ் நிறுவனத்திற்கு ஒரு தனித்தன்மையை வழங்குவதென்பது சில காலமாகப் பரிசீலனையில் இருந்து வந்துள்ளது. ஆகவே, தனியே அலுவலர்களைக் கொண்ட தனி விதைச் சான்றிதழ் இயக்ககம் ஒன்றை அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

பயறு வகைத் திட்டம் :

கிராமப் பகுதிகளுக்கு அதிக அளவு செலவு செய்யும் வகையிலும் பின் தங்கிய மக்கள் பெருமளவிற்குப் பயன் பெறவும் வேலை வாய்ப்பு வசதிகளை அதிகப்படுத்தவும், பயறு வகை உற்பத்தித் திட்டம் ஒன்று செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின் மூலம் 2,836 டன் அளவிற்குப் பயறு வகைகள் உற்பத்தியைப் பெருக்க முடியும். இத்திட்டம் சேலம் மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களில் பெரும் பரப்பில் பயறு வகைகளின் உற்பத்திக்கான தன்மைகளை விளக்கும் வகையில் அமையும். ஒவ்வொரு விவசாயியையும் சந்திப்பது, இடு பொருட் களைத் தேவையான நேரத்தில் வழங்குவது, தொழில் நுணுக்கங்களைப் பரப்புவது, காலத்தில் பயிர்ப் பாதுகாப்பு முறைகளை அனுசரிப்பது, அறுவடை நுணுக்கங்களைப் பின்பற்றுவது, மற்றும் நல்ல முறையில் விற்ப னைக்கு வழி வகை செய்வது ஆகிய முறைகள் இத்திட்டத்தில் மேற் கொள்ளப்படும்.

650 ஹெக்டேர் பரப்பில் பெருவிளக்கப் பண்ணைகள் அமைத்தல், 10,000 ஹெக்டேர் பரப்பிற்கு 25 சதவிகித மானிய விலையில் பூச்சி மருந்துகளை விநியோகம் செய்தல், 50 சதவிகித மானிய விலையில் 150 பயிர்ப் பாதுகாப்புக் கருவிகளை விநியோகித்தல் மற்றும் தேவையான அளவு உரம், பூச்சி மருந்து ஆகியவற்றை விநியோகித்தல் ஆகியவை இத்திட்டத்தின் செயல் முறை களாகும். சுமார் 11,600 விவசாயிகள் இத்திட்டத்தின் மூலம் பயன் பெறுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

அனுசரணை ஆராய்ச்சி மற்றும் செயல்விளக்க மையம் :

பல ஆண்டு காலமாக ஆராய்ச்சி முடிவுகளை விவசாயிகளிடையே பரப்புவதற்கான அனுசரணை ஆராய்ச்சித் தளைகளை அமைப்பதை இத்துறை செயல்படுத்தி வருகிறது. வரும் ஆண்டுகளில் உழவியல் முறைகளில் பாசனத்தையும் நெருங்கிய தொடர்புடையதாக்கிச் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. நமது மாநிலத்தில் மேல் ஓடும் நீரைப் பயன்படுத்துவதில் முழுமை நிலையை அடைந்துள்ளோம். வரும் ஆண்டுகளில் வறட்சி சார்பு மாவட்டங்களில் மட்டுமே மேல் ஓடும் நீரின் வாய்ப்பை பயன்படுத்த வசதிகள் உள்ளன. இதைக்கருதி தருமபுரி மாவட்டத்திற்குச் சமீபத்தில் பம்பார், சின்னாறு, கேள்வரப்பள்ளி மற்றும் தும்பலஹள்ளி ஆகிய இடங்களில் அணைகள் கட்டுவதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. தருமபுரி மாவட்டத்தில் மேற்கூறிய அணைகளால் பயன்பெறும் பகுதிகளுக்கு வரும் ஆண்டில் முன்கூட்டியே திட்டமிடுவதற்கும், அனுசரணை ஆராய்ச்சி மற்றும் செயல் விளக்கத்திற்குக் கவனமும், கூடுதல் முயற்சியும் தேவை. இதனைக் கருத்தில் கொண்டு தருமபுரி மாவட்டத்தில் சுமார் ரூ. 1.76 இலட்சம் மதிப்பீட்டில் அனுசரணை ஆராய்ச்சி மற்றும் செயல் விளக்கத்திற்கான திட்டம் ஒன்று மேற்கொள்ளப்படவிருக்கிறது. இவ்வகை செயல் விளக்கம் மற்றும் விரிவாக்கப் பயிற்சிகள் மூலம் எடுக்கப்படும் முன்நடவடிக்கை காரணமாக இம்மாநிலத்தில் அரிதாகவும், மிகுந்த செலவிலும் கிடைக்கும் தண்ணீரை நல்ல முறையில் பயன்படுத்தவும் வரும் ஆண்டுகளில் விவசாயிகள் பயன்பெறவும் வழிவகைகள் மேற்கொள்ளப்படும்.

குறைந்த செலவில் அதிகத் திறன் வாய்ந்த தொழில் நுட்பங்கள் :

சிறு விவசாயிகள் மற்றும் மிகச் சிறு விவசாயிகளுக்கு சாகுபடிச் செலவை அதிகப்படுத்தாமல் உற்பத்தித் திறனை உயர்த்தவல்ல குறைந்த செலவுள்ள உற்பத்தி நுணுக்கங்கள் உள்ள நவீன சாகுபடி முறைகளை விரிவாக்கக் கல்வி மூலம் அளிப்பதற்கேற்ற வகையில் உற்பத்தி செலவைக் குறைக்கும் கருவிகளாக நஞ்சைக்கு "கிராவிடர் அப்ளிகேட்டர்" மற்றும் மானவாரி சாகுபடிக்குப் பல நோக்குக் கருவிகளை அதிக அளவில் பிரபலப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இக்கருவிகளை 25 சதவிகிதம் மற்றும் 33 சதவிகிதம் மானியத்தில் சிறு விவசாயிகள் அபிவிருத்தித் திட்டம், ஒருங்கிணைந்த கிராம அபிவிருத்தித் திட்டம் மற்றும் வறட்சி சார்பு பகுதித் திட்டத்தின்கீழ் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. நீலப்பச்சைப் பாசியை அதிக அளவில் பயன்படுத்தி, வெளி மண்டலத்தில் உள்ள நைட்ரஜன் தழைச்சத்தைக் கிரகிக்கும் வகையில் கூடுதல் திட்டங்களும் இத்துறையின் எதிர்கால நடவடிக்கைகளாக இருக்கும்.

"கிராவிடர் அப்ளிகேட்டரை" சரியான முறைப்படி பயன்படுத்தி, இடு பொருட்களை நெற்பயிரின் வேருக்கு அருகாமையில் முறைப்படி இடுவதால் உரத்தில் 50 சதமும் பூச்சி மருந்தில் 75 சதமும் மிச்சமாகிறது. வரும்

ஆண்டுகளில் விவசாயிகளுக்கு இது ஒரு அரிய வாய்ப்பாகும். மானாவாரி சாகுபடிக்கான பலநோக்கு கருவியால் உழுவது, பாத்திகள் அமைப்பது இடை உழவு மற்றும் விதைக்கும் பணிகளை எளிதாக்குவதல்லாமல் பழைய கருவியைக் காட்டிலும் அதிக பரப்பில் பணிகளைச் செய்யக்கூடியதாகவும், பலஜோடி உழவு மாடுகள் செய்யும் பணியை ஒரு ஜோடி உழவு மாடுகளைக் கொண்டு செய்யக்கூடியதாகவும், நல்ல முறையில் விதைகள் விதைப்பது மற்றும் உரமிடல் போன்ற பணிகளைக் காலத்தே செய்வதன் மூலம் விளைச்சலை அதிகரிக்கக் கூடியதாகவும் விளங்குகிறது.

நீர்ப்பிடிப்புப் பகுதிப் பராமரிப்பு :

மாநிலத்தில் பெரும்பகுதி மானாவாரிப் புஞ்சை நிலங்களாக இருக்கின்றன. அவற்றைச் சார்ந்துள்ள விவசாயிகள் மிகவும் பின்தங்கிய நிலையில் இருக்கிறார்கள். இவ்வாறாக எல்லா மண்வளப்பாதுகாப்பு மற்றும் நீர்ப் பராமரிப்பு முறைகளும், நீர்ப்பிடிப்புப் பராமரிப்பு மற்றும் 400 ஹெக்டேர் ஒருங்கிணைந்த தளைகளும் மட்டுமின்றி, ஆராய்ச்சி நிலையங்களில் வெற்றி கரமாக சோதனை செய்யப்பட்ட புதிய முறையான அகலமுள்ள பாத்தி மற்றும் வாய்க்கால் முறையை (வயல் வரப்பு கொண்ட "இக்ரிசாட்" முறைக்குத் திருந்திய முறை) இராமநாதபுரம்—திருநெல்வேலி பகுதிகளில் உள்ள தேவியார் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் படிப்படியாகப் பெருமளவில் செயல் படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

வேளாண் விளை பொருட்கள் விற்பனை :

தமிழகத்தில் புதிதாக 14—10—1977-ல் தொடங்கப்பட்ட வேளாண்மை விளை பொருள் விற்பனைத் துறை ஏற்பட்டதன் நோக்கம், விற்பனைக் குழுக்களின் பணியில் விரைவும், விழிப்பும், ஏற்படுத்துவதோடு விவசாயிகள் விளைவிக்கும் பொருட்களுக்கு நிலையான விலை கிடைக்கச் செய்து பொருளாதார ரீதியில் அவர்களின் நிலையை உயர்த்துவதற்காகவும் ஆகும். கடந்த ஓராண்டு காலத்திலே அதன் பணியினை ஆராய்கின்ற பொழுது விவசாயிகள் பெரும்பாலான தேவைகளைப் பூர்த்தி செய்துள்ளது என்பது அதனுடைய முன்னேற்றத்தில் இருந்து தெரிய வந்துள்ளது.

தமிழகத்தில் ஏற்படுத்தக்கூடிய வாய்ப்புள்ள 15 மாவட்ட விற்பனைக் குழுக்களில், 1977 ஆம் ஆண்டிற்கு முன்பு 31 மாவட்டங்களில்தான் மாவட்ட விற்பனைக் குழுக்கள் இயங்கி வந்தன. வேளாண்மை விற்பனைத் துறை ஏற்பட்டதன் பின்பு, செயலற்று இருந்த சேலம் விற்பனைக் குழு விழிப் புணர்ச்சி பெற்று 16 இடங்களில் ஒழுங்குமுறைக் கூடங்கள் திறக்கவும் விளைப் பொருட்களை அறிவிக்கவும் தொடங்கியுள்ளது. புதுக்கோட்டை மாவட்டத்தில் பல ஒழுங்குமுறைக் கூடங்களைத் திறக்கவும் அதன்வாயிலாக அம் மாவட்ட உழவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யவும் 14—3—1979 அன்று அம் மாவட்டத்தில் மற்றுமொரு விற்பனைக் குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

நீலகிரி, சென்னை மாவட்டங்களில் விற்பனைக் குழுக்கள் ஏற்படுத்தவும், சென்னை மாநகரத்தில் காய்கறிகளுக்கும், கனி வகைகளுக்கும் தனியாக இறுதி முனை விற்பனைக்கூடம் திறக்கும் திட்டமும் அரசின் ஆய்வில் உள்ளது.

மாவட்ட விற்பனைக் குழுக்களின் முன்னாள் தலைவர்களும், உறுப்பினர்களும் முறையாகச் செயல்படாததாலும் உழவர்களுக்கு உறுதுணையாகப் பணியாற்றாததாலும் அவர்களை அவசர ஆணை மூலம் பதவியில் இருந்து நீக்கி, அந்த இடத்தில் தனி அலுவலர்கள் நியமிக்கப்பட்டு நிர்வாகத்திலும், திட்டங்களிலும் எதிர்பார்த்த முன்னேற்றம் காண வாய்ப்பளிக்கப்பட்டது. அந்த அவசர ஆணையும் சட்ட சபையில் நிறைவேற்றப்பட்டு சட்டமாக அமுலாக்கப்பட்டுள்ளது.

ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள்.—1977 ஆம் ஆண்டிற்கு முன் 11 மாவட்ட விற்பனைக் குழுக்களின் நிர்வாகத்தில் 140 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் இயங்கி வந்தன. இப்பொழுது கோயம்புத்தூர், மதுரை, தருமபுரி செங்கல்பட்டு, வட ஆற்காடு, திருச்சி ஆகிய மாவட்டங்களில் மேலும் 35 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் திறக்கப்பட்டுள்ளன. வருகின்ற 1979-80 ஆம் ஆண்டிலேயே கூடுதலாக 25 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களை, சேலம், புதுக்கோட்டை, செங்கல்பட்டு மாவட்டங்களில் திறக்கவும் 16 கிலோ மீட்டர் சுற்றளவுக்கு ஒரு ஒழுங்குமுறைக் கூடம் அமைய வேண்டும் என்ற அரசின் கொள்கைப்படியும் திட்டமிடப்பட்டுள்ளது. இதுவே விவசாயிகள் தங்கள் விளை பொருட்களை எளிதாக விற்கச் செய்யும் ஏற்பாடாகும். விவசாயிகளின் தேவையை அறிந்து எங்கெல்லாம் துணை விற்பனைக் கூடங்கள் திறக்க முடியுமோ அங்கெல்லாம் துணை விற்பனைக் கூடங்கள் ஏற்படுத்தப்பட்டன. அவ்வகையில் 1978-79-ல் மட்டும் 22 துணை விற்பனைக் கூடங்கள் திறக்கப் பட்டுள்ளன.

எதிர்கால முன்னேற்றத்திற்கு வேண்டிய திட்டங்களும் அதில் அடங்கியுள்ள விற்பனைக்கான வசதிகளும்.

நிலங்கள்.—ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் ஏற்படுத்தியதன் நோக்கமே சொந்தக் கட்டிடங்களில் பணியாற்ற வேண்டும் என்பதாகும். கடந்த 1977-ம் ஆண்டு வரையிலும், 52 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களே சொந்த இடங்களைப் பெற்று கட்டிட வசதிகளோடு நன்முறையில் பணியாற்றி வந்தன.

[1978 மார்ச் 29]

1977-78 ஆம் ஆண்டில் மட்டும் 38 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்குச் சொந்த இடங்கள் வாங்கப்பட்டு கட்டுமானப் பணிகளான ஏலம் நடத்துவதற்கான கொட்டகையும், உலர்த்துவதற்கான களமும், உழவர் ஓய்வுக் குடிலும், பணப்பட்டுவாடா இடமும், குடிநீரும் பெரும்பாலான இடங்களில் முடிந்துள்ளன.

இந்த ஆண்டு குறைந்தது 30 இடங்களிலாவது 4 ஹெக்டேருக்குக் குறையாமல் நிலம் வாங்கிச் செயல்படத் தீவிர நடவடிக்கை எடுக்க அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

உலக வங்கியின் உதவி :—

இந்தத் துறை ஏற்பட்டதற்குப் பிறகு எடுத்துக் கொண்ட மிகவும் முக்கியமான நிர்வாகப் பணியாதெனில் தமிழகத்தில் 220 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் கட்டுமானப் பணிகளுக்கான உலக வங்கியின் கடனுதவி நாடி ரூ. 70.20 கோடிக்குச் சிறந்த திட்டம் தீட்டியுள்ளதாகும்.

பின்வரும் வசதிகளைச் செய்ய வேண்டி இத் திட்டத்தில் கீழ்க்கண்ட இனங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. அவையாவன:—

1. விளைப்பொருட்களை விரைவாக விற்பனை நிலையங்களுக்கு கொண்டுவரப் பெறும் சாக்கு வண்டிகள் வாங்குவது.

2. அருகிலுள்ள விற்பனைக் கூடங்களுக்கு விரைவாக விளை பொருளை ஏற்றிச் செல்ல செப்பனிடப்பட்ட இணைப்புச் சாலைகளை அமைத்தல்.

3. விவசாயிகள், வியாபாரிகளின் விளைப் பொருட்களை, சேமிப்புக் கிடங்குகள் மூலம் சேமிக்க கட்டிடப் பணிகள் மேற்கொள்வது இதனால் விவசாயி குறைந்த விலைக்கு அவசரப்பட்டு விற்காமல் இருப்பில் வைத்து நிலை உயர்ந்த காலத்தில் அதிக விலைக்கு விற்பது.

4. வங்கி வசதிகள் செய்வதால் விவசாயிகள் சேமிப்புப் பழக்கத்தை மேற்கொள்ளவும், அதிகமான பணத்தை வீட்டிற்கு எடுத்துச் செல்வதில் அபாயம் நீங்குவதும், வியாபாரிகள் வேண்டிய பணததை எளிதாகப் பெறுவதம் அடங்கும்.

5. நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் தங்கள் கிளைகளை ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்களில் திறப்பதால் விளை பொருட்களை விற்குமுன் அடகு வைத்து அதிக பட்சமாக 4 சத வீதமும் முன்பணம் உடனடியாகப் பெற வசதி வாய்ப்பு அளிப்பது.

6. தொலை பேசித் தொடர்பும், அஞ்சலகமும், ஏற்படுத்துவதால் விளை பொருள் விற்பனை நிலவரம் அறிந்து உயர்ந்த விலை கோரும் வாய்ப்பும், வியாபாரிகள் குறைந்த காலத்தில் தொடர்பு கொண்டு, வேண்டிய பணம் பெறுதலும்.

7. உழவர்கள் தங்க ஓய்விடம்.

8. குடிநீர் வசதிகள்.

9. விளைப் பொருட்களைச் செய்முறைப்படுத்தும் பிரிவு.

10. தங்கும் அறைகள்.

11. கால்நடைகளுக்குக் கொட்டகையும் நீர்த்தொட்டியும் கட்டுதல்.

12. மின்னொளி வசதியும், விற்பனைக் கூட சாலையும்.

எதிர்காலத் திட்டங்கள் :

சென்னை மாநகராட்சிப் பகுதியில் இறுதி முறை விற்பனைக்கூடம் ஏற்படுத்தி, விற்க வரும் உழவர்களுக்கு உயர்ந்த விலையும், வியாபாரத்தைப் பெருக்கி நல்ல லாபம் அடையவும், நுகர்வோர் தரமான பண்டங்களை அடையும் வாய்ப்பினை ஏற்படுத்தும் செயற்குறிப்புகள் ஏற்கனவே உள்ளன. இதே போன்று தமிழகத்தில் கோவை, திருச்சி, மதுரை, காஞ்சிபுரம், வேலூர் போன்ற பெரிய நகரங்களில் காய்கறி விற்பனைக் கூடங்கள் அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. தமிழக வேளாண் தொழில் கழகம், தனது வேளாண்மை மூலப்பொருள்களைக் கொண்டு தொழில் தொடங்க வாய்ப்புள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் எல்லாம் வேளாண்மைத் தொழில் மனைத் தொகுதி (Agrocomplex) தொடங்கத் திட்டமிட்டுள்ளது. இதனால் உற்பத்தியாளர்கள் தங்கள் பொருளுக்கு உயர்ந்த விலை கிடைக்க வாய்ப்பு இருக்கிறது.

சிறப்புச் சாதனைகள் :

தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் தஞ்சை, வட ஆர்க்காடு மாவட்ட ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் மூலம் குறுவை நெல்லைக் கொள்முதல் செய்தது. இதனால் விவசாயிகள் குறைந்த விலைக்கு விற்காமல் விழிப்புற்றனர். அதுபோல் தஞ்சை மாவட்டம் நஞ்சை காம்புகளில் விளைந்த கோடைப் பருத்தி அனைத்தும் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் மூலம் விற்கப்பட்டது. அதே போன்று வருகின்ற ஆண்டிலும் தஞ்சாவூர் மாவட்டத்தில் விளையும் கச்சாப் பருத்தி முழுவதையும ஒழுங்கு முறை விற்பனைக்கூடம் மூலம் விற்று விவசாயிகள் நல்ல விலை பெறுவதோடு, ஏற்றக் குறைவான கொள்முதலில் வியாபாரிகளின் இரக்கமற்ற பிடியினின்றும் காப்பாற்றப்படுவார்கள். 1978-79 ஆம் ஆண்டில் உடுமலைப்பேட்டை ஒழுங்கு முறை விற்பனைக்கூடத்தில் தமிழக வேளாண் தொழில் கழகம் ஒரு வேளாண் தொழில் மனைத் தொகுதியை நிறுவியுள்ளது.

1979 மார்ச் 29.

அக்மார்க் தரம் பிரித்தல் :

இத்திட்டத்தின் கீழ் தாவர எண்ணெய், வெண்ணெய், நெய், தேன் உணவுத் தானியங்கள் தரம் பிரிக்கப்படுகின்றன. நுகர்வோரை அடையும் முன்பே தரம் பிரிக்கப்படுவதால் நல்ல தூய்மைத் தன்மையும், தரமும் உறுதியாக்கப் படுகிறது. அக்மார்க் முத்திரையிடப்பட்ட பொருட்கள் விற்பதில் வியாபாரிகளுக்கு நல்ல விலை கிடைக்கும்.

தமிழகத்தில் 1977 ஆம் ஆண்டிற்கு முன்பு 13 அக்மார்க் ஆய்வுக் கூடங்கள் இருந்தன. இவற்றில் தரத்திற்கும், தூய்மைக்கும் பொருட்களை ஆய்வு செய்து அவை நுகர்வோருக்கு அனுப்பப்படுகின்றன. 1977 ஆம் ஆண்டில் திருச்சியிலும், பண்ணுருட்டியிலும் சேர்த்து இரண்டு அக்மார்க் ஆய்வுக் கூடங்கள் திறக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு 45 கிலோ மீட்டர் சுற்றளவுக்கு ஒன்று வீதம் தமிழகத்தில் 60 அக்மார்க் ஆய்வுக் கூடங்கள் திறக்க திட்டமிடப்பட்டுள்ளது. அவற்றில் முதற்படியாக இவ்வாண்டு 5 இடங்களில் ஆய்வுக் கூடங்கள் ரூ. 5 இலட்சம் முதலீட்டில் திறக்கப்படும்.

அதிக அளவில் வியாபாரிகள் அக்மார்க் முத்திரையிடப்பட்ட விளை பொருட்களை விற்க விரும்புவதால் மதுரை, ஈரோடு நகரங்களில் உள்ள அக்மார்க் நிலையங்களால் அனைவருக்கும் தரம் பிரித்துக் கொடுக்க முடியவில்லை. ஆகையால் ரூபாய் ஒரு இலட்சம் செலவில் அவைகளில் கூடுதல் பணியாளரையும், சாதனங்களையும் ஏற்படுத்தி வலுப்படுத்தவும், 1979-80 ஆம் ஆண்டில் நிறைவேற்றத் திட்டமிடப்பட்டுள்ளது.

இப்பொழுது இயங்கும் அக்மார்க் ஆய்வுக் கூடங்கள் வாடகை இடங்களில் உள்ளன. இவைகளில் போதிய வசதியும் இல்லை. இவற்றின் வருமானத்தில் பெரும் பகுதி வாடகைக்கே செலவிட வேண்டியுள்ளது. ஆகையால் மதுரை, ஈரோடு ஆய்வுக் கூடங்கள் ஒவ்வொன்றுக்கும் ரூபாய் ஒரு இலட்சம் செலவில் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளன. ஏனையவை படிப்படியாக எடுத்துக் கொள்ளப்படும்.

வாணிப முறை தரம் பிரித்தல் :

இதனுடைய நோக்கம், உற்பத்தி செய்யும் ஒவ்வொரு விவசாயியும் தன் பொருளின் தரம் அறிந்து ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் அதிக விலைக்கு விற்பதற்காகும். விவசாயிகள் முன்கூட்டியே தரம் அறிவதால் அதிக விலை கிடைக்க ஆர்வம் கொள்கிறார்கள்.

இப்பொழுது தமிழகமெங்கும் 50 ஒழுங்குமுறைக் கூடங்களில் பயிற்சி பெற்ற தரம் பிரிப்பாளரும், அதற்கான சாதனங்களும் உள்ளன. வருகின்ற ஆண்டில் ரூ. 20 இலட்சம் செலவில் 35 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில்

வாணிப முறையில் தரம் பிரிக்கும் வாய்ப்புகள் ஏற்படுத்தப்படவிருக்கின்றன. ஏனைய எல்லா ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களிலும் வாணிப முறையில் தரம் பிரிக்கும் வாய்ப்புகள் படிப்படியாக மேற்கொள்ளப்படும். வேர்க்கடலையும் எள்ளும் இங்கு தரம் பிரிக்கப்படுகின்றன.

பருத்தி தரம் பிரித்தல் :

இத் திட்டத்தின் நோக்கம், பருத்தி விற்கும் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களிலும், உற்பத்தியாகும் இடங்களிலும் தரம் பிரித்துக் காண்பித்து விவசாயிகளுக்குத் தகுந்த விலை கிடைக்கச் செய்வதோடு, போட்டி விலைக்குத் தங்கள் பொருளை அங்காடியில் விற்கும் எண்ணமும் செயலும் தோற்றுவிக்கப்படுகின்றன.

இப்பொழுது தமிழகத்தில் 9 இடங்களில் பருத்தி தரம் பிரிக்கும் நிலையங்கள் உள்ளன. இவற்றில் 6 நிலையங்கள் மட்டும், ஒவ்வொன்றும் மத்திய அரசின் ஆண்டு மானியமாக ரூ. 50,000 பெற்று இயங்குகின்றன.

மத்திய அரசுச் சார்புத் திட்டத்தின்கீழ், மற்றுமொரு பருத்தி தரம் பிரிக்கும் நிலையம் ரூ. 50,000 மானியத்தில் சத்யமங்கலத்தில் திறக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இன்றைய சூழ்நிலையில், இந்திய பருத்திக் கழகம் அதற்கு வேண்டிய பருத்தியை ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களின் மூலம் கொள்முதல் செய்ய முற்பட்டுள்ளதால், அதிகப்படியான பருத்தி தரம் பிரிக்கும் நிலையங்கள் ஏற்படுத்துவது பற்றி ஆய்வு செய்ய வேண்டியுள்ளது.

கரும்புச்சாலை அபிவிருத்தித் திட்டம்.

சர்க்கரை ஆலைப்பகுதிகளில் கரும்பை உடனடியாக ஆலைக்கு எடுத்துச் செல்லும் பொருட்டு பழைய சாலைகளைச் செப்பனிடவும் புதிய சாலைகள் அமைக்கவும் கரும்புச் சாலை அபிவிருத்தித் திட்டம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. மேற்படி திட்டத்தின்கீழ் மூன்று ஆண்டுகளில் அடைந்த முன்னேற்றத்தின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

ஆண்டு.	செலவு (ரு. இலட்சத்தில்)	புதிய சாலை அமைத்தல் (கி. மீ)	சரளைக் கல் பரப்புதல் (கி. மீ)
(1)	(2)	(3)	(4)
1976–77 ..	75.00	31.51	72.28
1977–78 ..	104.58	41.27	51.20
1978–79 .. (up to December 1978)	52.50	60.87	39.49

1979 மார்ச் 29]

தார் போடுதல். (கி.மீ)	சிறு மதகுகள் (எண்ணிக்கை)	பாலங்கள். (எண்ணிக்கை	தரைப் பாலங்கள் (எண்ணிக்கை)
(5)	(6)	(7)	(8)
58.64	85	16	5
52.83	56	97	3
24.58	97	8	5

மேற்படி திட்டத்துக்கு 1979-80 ஆம் ஆண்டில் ரூ. 150 இலட்சங்கள் ஒதுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. பழைய சாலைகளைப் பராமரிப்பதற்காக ரூ. 15 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எஞ்சிய தொகை புதிய சாலைகள் அமைக்கும் பணியை மேற்கொள்வதற்காகவும், எஞ்சிய பணிகளை மேற்கொள்வதற்காகவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த கிராமப்புற வளர்ச்சித் திட்டம்.

ஒங்கிணைந்த கிராமப்புற வளர்ச்சித் திட்டம் என்ற ஒரு புதிய திட்டத்தினை 1978-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் மத்திய அரசு நடைமுறைக்குக் கொண்டு வந்தது. சிறு உழவர்கள் ஓரளவு நிலம் வைத்துள்ள உழவர்கள், சிறு குத்தகைதாரர்கள், விவசாயத் தொழிலாளர்கள், கிராமப்புற கைவினைஞர்கள் மற்றும் அரிசனங்கள், பழங்குடியினர் அடங்கிய நாட்டிலே நலிந்த நிலையிலுள்ள ஏழை எளியவர்களுக்கு வேலை வாய்ப்பு வசதிகளைக் கொடுக்கவும், அவர்கள் வாழ்விலே போதிய முன்னேற்றம் பெறவும் குறிப்பிட்ட வட்டாரங்களில் செயல்படுத்தப்படுவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

தமிழ்நாட்டில் 161 வட்டாரங்களில் இத்திட்டத்தினை செயல்படுத்த இந்திய அரசு முன்வந்துள்ளது. இந்த 161 வட்டாரங்களில், 30 வட்டாரங்கள் வறட்சிக்குட்பட்ட பகுதிகள் திட்டம் செயல்படும் இடங்களிலும், 100 வட்டாரங்கள் சிறு உழவர்கள் மேம்பாட்டுத் திட்டம் செயல்படும் இடங்களிலும், எஞ்சிய 31 வட்டாரங்கள் மேற்கூறிய தனித்திட்டங்கள் செயல்படாத இடங்களிலும் அமைந்தவையாகும்.

உழவர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் தெரிந்தெடுக்கப்பட்ட 100 வளர்ச்சி வட்டாரங்களுக்கு ஒவ்வொரு வட்டாரத்துக்கும் ரூ. 5 இலட்சம் வீதமும், வறட்சிக்குட்பட்ட பகுதிகள் திட்டத்தின் கீழ் தெரிந்தெடுக்கப்பட்ட 30 வளர்ச்சி வட்டாரங்களுக்கு ஒவ்வொரு வட்டாரத்துக்கும் ரூ. 4 இலட்சம் வீதமும் எஞ்சிய தனித்திட்டங்கள் செயல்படாத இடங்களில் 31 வளர்ச்சி வட்டாரங்களுக்கு ஒவ்வொரு வளர்ச்சி வட்டாரத்துக்கும் ரூ. 2 இலட்சம் வீதமும்

மானியமாக மத்திய அரசு வழங்கும், வறட்சிக்குட்பட்ட பகுதிகள் திட்டம் செயல்படும் இடங்களில் தெரிந்தெடுக்கப்பட்ட 30 வளர்ச்சி வட்டாரங்களுக்கு மட்டும் ரூ. 1 இலட்சம் விதம் மாநில அரசு வழங்கும் ஏனைய வளர்ச்சி வட்டாரங்களுக்கு மாநில அரசு மானியம் எதும் வழங்காது. தலைமைச் செயலகத்திலுள்ள வேளாண்மைத்துறை இந்தத் திட்டத்தினைச் செயல் படுத்த நேரடிப் பொறுப்பேற்றுள்ளது. மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சி யாளர்கள் சம்பந்தப்பட்ட தொழில் நுட்ப அலுவலர்களின் உதவியுடன் இத்திட்டத்திற்குப் பொறுப்பு வகிப்பர். வட்டார அளவில் வட்டார வளர்ச்சி அலுவலரும் அவரது பணியாளர்களும் இத்திட்டத்தினைச் செயல்படுத்தப் பொறுப்பை எற்பர்.

இந்திய அரசு கருத்துத் தெரிவித்ததை ஒட்டி மாநில அளவிலான ஒருங் கிணைப்புக் குழு ஒன்று தலைமைச் செயலாளரைத் தலைவராகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு சம்பந்தப்பட்ட வளர்ச்சித் துறைகள், வட்டாரத் திட்டங்களை, மாநில அளவிலும், மாவட்ட அளவிலும், வளர்ச்சி வட்டார அளவிலும் உருவாக்குவதற்கும் செயலாக்குவதற்குமான ஒருங் கிணைந்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு வழி வகுக்கும்.

சிறு உழவர் மேம்பாட்டு அமைப்பு.

சிறு உழவர்கள், குறைந்த அளவு நிலம் உள்ள உழவர்களின் உற்பத்தித் திறனை மேம்படுத்துவதே இந்த அமைப்புகளின் நோக்கமாகும். உயர் விளைச்சல் இரகங்களைப் பயிரிடுதல், திருந்திய சாகுபடி முறைகளைக் கையாளுதல், தகுந்த உரமிடுதல், பல பயிர் சாகுபடி ஆகிய முறைகளைச் சிறு விவசாயிகள் கடைப்பிடிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. அத் துடன், கூடுமான இடங்களில் பாசன வசதிகளை மேம்படுத்துவதற்கும் இம் முயற்சிகள் வகை செய்கின்றன. கடன் உதவித் தொகை மூலம் இடுபொருட் கள், விவசாயக் கருவிகள் வழங்குவதற்குத் தேவையான உதவிகளுக்கு வகை செய்யப்படுகிறது. கால்நடைகள் வாங்க, அவற்றை முறையாக வளர்க்க, அடிப்படை வசதிகளை எற்படுத்த, மருத்துவ வசதி அளிக்க, பொருட்களை விற்பனை செய்ய ஏற்பாடுகள் செய்து கொடுப்பதின் மூலம் பாற்பண்ணை போன்ற உப தொழில்கள் அமைக்க இத்திட்டத்தில் வகை செய்யப்படுகிறது. சென்னை, இராமநாதபுரம் மற்றும் தருமபுரி மாவட்டங்கள் நீங்கலாக மற்ற மாவட்டங்களில் இந்த அமைப்புகள் செயல்பட்டு வருகின்றன. இத்திட்டம் மத்திய அரசின் முழு உதவி பெறும் மத்தியத் துறைத் திட்டமாகும். கூட்டுறவு வங்கிகள் மூலமாகவும், நாட்டுடமையாக்கப்பட்ட வங்கிகள் மூல மாகவும் கடன்களைப் பெற எற்பாடுகள் செய்யப்பட்டு உள்ளன.

இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்குத் தேவையான விரிவாக்கப் பணி யாளர்களுக்கு மாநில அரசு வகை செய்கிறது. 1978-79 ஆம் ஆண்டு ஒவ்வொரு மாவட்டத்துக்கும் மத்திய அரசினால் ஒதுக்கப்பட்ட தொகை,

1979 மார்ச் 29]

வழங்கப்பட்ட தொகை மற்றும் செலவழிக்கப்பட்ட தொகை பற்றிய விபரங்கள் கீழ்வருமாறு :—

மாவட்டம்.	மத்திய அரசினரால் 1978–79 க்கும் ஒதுக்கப் பட்ட தொகை.	மத்திய அரசினரால் வழங்கப் பட்டது (சென்ற ஆண்டு மிகுதி உட்பட)	1978–79 ல் செலவழிக் கப்பட்டது (31–12–1978 முடிய)
	(ரூபாய் இலட்சத்தில்).		
(1)	(2)	(3)	(4)
1 மதுரை ..	.. 34.60	19.12	15.68
2 திருநெல்வேலி	.. 30.70	23.80	15.25
3 தென் ஆற்காடு	.. 34.37	18.54	18.49
4 வட ஆற்காடு	.. 43.78	26.07	25.60
5 சேலம் ..	.. 38.18	20.43	18.43
6 செங்கல்பட்டு	.. 37.00	19.83	15.15
7 தஞ்சாவூர் ..	.. 50.00	27.34	26.83
8 திருச்சிராப்பள்ளி	.. 40.00	19.50	12.44
9 புதுக்கோட்டை	.. 40.00	20.26	12.65
10 கோயம்பத்தூர்	.. 36.25	22.85	22.34
11 நீலகிரி	.. 31.25	16.96	16.57
12 கன்னியாகுமரி	.. 24.82	12.99	12.65
மொத்தம்	.. 440.95	247.69	212.08

இராமநாதபுரம் மற்றும் தருமபுரி மாவட்டங்களில் வறட்சிப்பாங்கான பகுதிகள் திட்டம்.

இத்திட்டம் இராமநாதபுரம் மற்றும் தருமபுரி மாவட்டங்களில் செயல் படுத்தப்பட்டு வருகிறது. பல்வேறு திட்டங்களை மேற்கொள்வதன் மூலம், வெகு காலமாக வறட்சிக்குட்பட்ட பகுதிகளை மேம்படுத்துவதும், பொது மக்களில் முக்கியமாக ஏழை எளிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி வறட்சித் தாக்குதலினால் இவர்களுக்கு ஏற்படும் நலிவை ஓரளவு குறைப் பதும் இத்திட்டத்தின் நோக்கமாகும்.

இது மத்திய துறைத் திட்டமாகும். இத்திட்டத்திற்கான செலவை மத்திய அரசும், மாநில அரசும் சமமாகப் பகிர்ந்துகொள்ளும். ஐந்தாவது திட்ட கால முழுவதற்கும் இராமநாதபுரம், தருமபுரி ஆகிய இரு மாவட்டங்களுக்கு மத்திய அரசு தனது பங்காக ரூ. 692.625 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்ய ஒப்புதல் அளித்துள்ளது. ஆகவே, ஐந்தாவது திட்ட காலமாகிய 1974-75 முதல் 1978-79 வரை மாநில அரசின் பங்கையும் சேர்த்து மொத்தத் திட்ட செலவின் அளவு 1,385.250 இலட்சம் ஆகும். 1978-79 ஆம் ஆண்டிற்கு இராமநாதபுரம் மாவட்டத்திற்கு ரூ. 122.865 இலட்சமும் தருமபுரி மாவட்டத்திற்கு ரூ. 209.20 இலட்சமும் வழங்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மேலும், ரூ. 10.75 இலட்சத்திற்கு தருமபுரி மாவட்டத்திற்கு ஏற்கெனவே அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டம் 1979-80 ஆம் ஆண்டிலும் தொடரப்படுகிறது. மத்திய அரசின் கட்டளைக்கேற்ப இராமநாதபுரம், தருமபுரி ஆகிய இரு மாவட்டங்களுக்கு 1979-80 ஆம் ஆண்டிற்கு ரூ. 464 இலட்சத்திற்கு வரவு-செலவு திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வறட்சிப்பாங்கான பகுதிகள் திட்டத்தின்கீழ் தருமபுரி மாவட்டம் கிருஷ்ணகிரியில் ரூ. 175 இலட்சம் செலவில் ஒரு பால் பவுடர் தொழிற்சாலையை நிறுவும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது. மத்திய அரசின் ஒப்புதல் இத்திட்டத்துக்குப் பெறப்பட்டுள்ளது.

வேளாண்மை மறுநிதி மற்றும் மேம்பாட்டுக் கழகத் திட்டங்கள்.

பம்பாயிலுள்ள வேளாண்மை மறு நிதி மேம்பாட்டுக் கழகத்தின் நிதியுதவியால் அரசு சில வேளாண்மைத் திட்டங்களைச் செயலாற்றி வருகிறது.

இத்திட்டத்தின் நிதித் தேவையில் 75 விழுக்காட்டை இக் கழகமும், 25 விழுக்காட்டை மத்திய, மாநில அரசுகளும் சமமாக ஏற்கும், மத்திய அரசின் பங்கைத் துவக்கத்தில் நிலவள வங்கி அளித்துவிட்டு அதை முறையான இடைவெளிக் காலத்தில் மத்திய அரசிடமிருந்து திரும்பப் பெறுகிறது. எல்லாத் திட்டங்களும், தமிழ்நாடு மாநில நிலவள வங்கியின் மூலம் கூட்டுறவுப் பதிவாளரால் செயற்படுத்தப்படுகின்றன.

1978-79 ஆம் ஆண்டில் வேளாண்மை மறுநிதிக் கழகத்தின் உதவிபெறும் கீழ்க்கண்ட திட்டங்கள் அரசினரால் ஒப்புதல் அளிக்கப் பெற்றுள்ளது :—

திருநெல்வேலி மாவட்டத்தில் திருச்செந்தூர், சாத்தான் குளம், உடன்குடி ஊராட்சி ஒன்றியங்களில் ரூபாய் 15-25 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் 202.35 ஹெக்டேர் நிலப் பரப்பில் செயல்படுத்த, தென்னை வளர்ப்புத் திட்டப்பணி ஒன்றுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

1979 மார்ச் 29]

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி வட்டத்தில் ரூபாய் 7.35 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் 101.17 ஹெக்டேர் நிலப்பரப்பில் செயற்படுத்த தென்னை வளர்ப்புத் திட்டப் பணி ஒன்றுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

இராமநாதபுரம் மாவட்டத்தில் இராமநாதபுரம், திருப்பத்தூர், சிவகங்கை மற்றும் திருவில்லிபுத்தூர் வட்டங்களில் ரூபாய் 27.84 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் 364.23 ஹெக்டேர் நிலப்பரப்பில் செயற்படுத்த தென்னை வளர்ப்புத் திட்டப் பணி ஒன்றுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

மதுரை மாவட்டத்தில், ரூபாய் 36.12 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் பாலாறு, பொறந்தலாறு, மருதநதி, குடகனாறு பாசனத்திட்டம் பகுதிகளிலுள்ள 2,023.50 ஹெக்டேர் நிலங்களைச் சீர்திருத்தம் செய்வதற்கான திட்டப் பணிக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

தருமபுரி மாவட்டம், பர்கூர் பிர்க்காவில், ரூபாய் 15.84 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் 202.35 ஹெக்டேர் நில பரப்பில் தென்னந்தோப்பு உருவாக்கத் திட்டப்பணி ஒன்றுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

தஞ்சாவூர், புதுக்கோட்டை மாவட்டங்களில் பட்டுக்கோட்டை, திருத்துறைப் பூண்டி, அறந்தாங்கி, பேராவூரணி, மதுக்கூர், வேதாரண்யம், முத்துப்பேட்டை, ஆவுடையார்கோயில் வட்டாரங்களில் ரூபாய் 21.01 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் 364.23 ஹெக்டேர் நிலப்பரப்பில் தென்னந்தோப்பு உருவாக்கும் திட்டப்பணி ஒன்றுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

வேளாண்மை மறுநிதி மேம்பாட்டுக் கழகத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்டு ரூ. 1,242.62 இலட்சங்கள் நிதி ஒதுக்கீட்டில் 36 சிறு பாசனம் அல்லாத திட்டங்களான தென்னை அபிவிருத்தி, ரப்பர் பயிரிடுதல், கோகோ பயிரிடுதல், திராட்சை பயிரிடுதல், தேயிலைத் தோட்டங்கள் வளர்த்தல், இலவங்கம், காப்பி முதலியவற்றைப் பயிர்செய்தல் ஆகியவை செயல்படுத்தப்பட்டு வருகின்றன. ரூ. 765.22 இலட்சங்கள் நிதி ஒதுக்கீட்டின்கீழ் பல நிலைகளில் திட்ட உருவாக்கத்திலுள்ள 34 சிறு பாசனத்திட்டம் அல்லாத திட்டங்கள் 1979-80-ல் வேளாண்மை மறுநிதி மேம்பாட்டுக் கழகத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்ட பின்னர் செயல்படுத்தப்படும்.

1979-80-ல் வேளாண்மை மறுநிதி மேம்பாட்டுக் கழகத்தின் உதவியுடன் சிறுபாசனம் அல்லாத திட்டங்களின்கீழ் நீண்ட காலக்கடன் வழங்குவதற்காக ரூபாய் 5 கோடி செலவில் திட்டம் வகுக்கலாம் என்று தீர்மானம் செய்யப்பட்டுள்ளது.

[1979 மார்ச் 29

கழிவு நீர் உபயோகத் திட்டம்.

நகராட்சிகளிலும் மற்றும் பேரூராட்சிகளிலும் உள்ள கழிவுநீரை உரத்திற்காகப் பயன்படுத்துவது நகர கம்போஸ்ட் உரத் திட்டத்தின் ஓர் பகுதியாகும். இத்திட்டத்தில் வடிகால் முறையை மாற்றியமைத்தல் அல்லது வடிகால்கள் கட்டுதல், கழிவு நீரைச் சேகரித்துக் கழிவுநீர்ப்பண்ணையில் பாசனத்திற்கு உபயோகப்படுத்துதல் ஆகியவை அடங்கும். தற்போது 22 உள்ளாட்சி மன்றங்கள் கழிவு நீர்ப்பண்ணைகளை நடத்தி வருகின்றன.

1977 ஆம் ஆண்டில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினுடைய "கழிவு நீர் உபயோகத் திட்டத்தை 10 உள்ளாட்சி மன்றங்களில் ரூபாய் 1,32,18,950 செலவில் செயல்படுத்த மாநில அரசு நிர்வாக அங்கீகாரம் அளித்துள்ளது. இதில் மைய அரசு மானியமாக ரூ. 43,62,253.50 (மூலதனச் செலவில் 33 சதவிகிதம்) அளித்துள்ளது. மானியத்தில் முதல் பகுதியாக ரூ. 14,54,081-ஐ உள்ளாட்சி மன்றங்களுக்கு அளிப்பதற்காக மைய அரசு வழங்கியுள்ளது. மேற்கண்ட மானியத்தை 10 உள்ளாட்சி மன்றங்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

நடப்பு ஆண்டில் (1978-79) மேற்சொன்ன திட்டத்தின் கீழ் மத்திய அரசு கீழ்க்கண்டவாறு மானியம் வழங்கியுள்ளது :—

2வது தவணை	ரூ.	7,88,000.00
3வது தவணை	ரூ.	2,91,744.47
4வது தவணை	ரூ.	7,79,465.61
5வது தவணை	ரூ.	8,09,664.24
மொத்தம் ..	ரூ.	26,68,874.32

மத்திய அரசு வழங்கிய மேற்கூறிய மொத்த மானியத் தொகையைப் பத்து உள்ளாட்சி மன்றங்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

பின்வரும் அறிக்கையில், உள்ளாட்சி மன்றங்கள் நிர்வகிக்கும் கழிவு நீர்ப் பண்ணைகளில் மொத்தப்பரப்பளவு, பயன் பெறும் மொத்தப்பரப்பளவு, உற்பத்தியான தீவனப் பயிரின் மொத்த அளவு (டன்னில்), நகராட்சிகள் பெறும் வருவாய் முதலியவை குறிப்பிடப்பட்டுள்ளன :—

1. உள்ளாட்சி மன்றங்கள் நிர்வகிக்கும் கழிவு நீர் பண்ணைகளின் மொத்தப் பரப்பளவு.	1,265.09	ஹெக்டேர்
2. பயன்பெறும் மொத்தப் பரப்பளவு.	603.3	ஹெக்டேர்

1979 மார்ச் 29]

3. பயிராகும் தீவனப்பயிரின் மொத்த அளவு.	1976-77	79,451 டன்கள்
	1977-78	84,337 டன்கள்
4. நகராட்சிகள் பெறும் வருவாய்	1976-77	ரூ. 29.93.248
	1977-78	ரூ. 34,29,925
5. நகராட்சிகளின் ஆய்வாளர் கட்டுப்பாட்டிலுள்ள நகராட்சிகலும் நகரியங்களும் மொத்தம் உற்பத்தி செய்த கலவை எருவின் அளவு.	1976-77	3.38 இலட்சம் டன்கள்.
	1977-78	3.58 இலட்சம் டன்கள்.

தமிழ்நாடு வேளாண் தொழிற் கழகம்.

தமிழ்நாடு வேளாண் தொழிற் கழகம் 1966-ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இக்கழகத்தின் முக்கிய நோக்கங்கள் :—

1. வேளாண்மை, கால்நடைப் பராமரிப்பு, மீன்வளம், கோழி வளர்ப்பு போன்றவை நவீன முறையில் வளர்ச்சி பெற உதவும் வகையில் அவை சார்ந்த தொழில்களை ஊக்குவித்தல்.

2. உணவுப் பண்டங்களைப் பதப்படுத்தும் தொழில்களை ஊக்குவித்தல்.

இந் நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 400 இலட்சம் இதுவரை ரூ. 330 இலட்சம் மதிப்புள்ள பங்குகள் வெளியிடப்பட்டு, அதற்குரிய தொகை மத்திய மாநில அரசினால் சம அளவில் செலுத்தப்பட்டுள்ளது.

1977-78 ஆம் ஆண்டு வரை இக்கழகம் வருமான வரி கணக்கிடுவதற்குமுன் ரூ. 73.11 இலட்சம் லாபம் அடைந்துள்ளது. இக்கழகத்தின் மொத்த வணிகத் தொகை படிப்படியாக உயர்ந்து வருகிறது. அது 1976-77-ல் ரூ. 109.77 இலட்சமாகவும் 1977-78-ல் ரூ. 245.95 இலட்சமாகவும் இருந்தது. முதன் முதலில் தவணைக் கொள்முதல் திட்டம் மற்றும் இயந்திரங்களை வாடகைக்கு விடும் பணிகளையும் கொண்டதாகத் துவங்கப்பட்ட இக்கழகம் தற்போது குறிப்பிடத்தக்க வேறுபல துறைகளிலும் தனது பணியைப் பலநிறப் படுத்தியுள்ளது. 1978-79 ஆம் ஆண்டுக்கான குறிப்பிடத்தக்க விபரங்கள் :—

போச்சம்பள்ளியில் சூரியகாந்தி எண்ணெய் ஆலைத்தொகுதி ஆரம்பம் :—

இத்திட்டத்தின் மொத்த மூலதனம் ரூ. 56 இலட்சம். இவ்வாலை நாள் ஒன்றுக்கு 50 டன் எண்ணெய் வித்துக்களைப் பிழிந்தெடுக்கும். இத்துடன்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைக்கப்பட்டுள்ள சுத்திகரிப்புப் பகுதி நாள் ஒன்றுக்கு 20 டன்கள் உற்பத்தி திறனும், கரைத்து எண்ணெய் எடுக்கும் ஆலை நாள் ஒன்றுக்கு 50 டன்கள் உற்பத்தித் திறனும் கொண்டவைகளாகும்.

சுத்திகரிக்கப்பட்ட சூரியகாந்தி எண்ணெய் (சனோலா) மற்றும் சுத்திகரிக்கப் பட்ட கடலை எண்ணெய் (கடோலா) விற்பனையும் எண்ணெய் எடுக்கப் பட்ட பிண்ணாக்கு ஏற்றுமதியும்.

எண்ணெய் விற்பனையில் பெருமளவில் இக்கழகம் இறங்குவதற்கு முன்னோடியாகவும் சூரியகாந்தி எண்ணெயை மக்கள் ஏற்றுக் கொள்வதற்கு ஒரு வித்திடும் திட்டமாகவும் இக்கழகம் சுத்திகரிக்கப்பட்ட சூரியகாந்தி எண்ணெயை சனோலா என்ற விற்பனைப் பெயரில் விற்பனை செய்யத் தொடங்கியது. சனோலா என்ற விற்பனைப் பெயர் அங்காடியில் மிக நல்ல இடத்தைப் பிடித்துள்ளது. கடந்த 18 மாத காலத்தில், நாடு முழுவதற்கு மான சூரியகாந்தி எண்ணெய் விற்பனையின் மதிப்பீடான 16,000 டன்களில் 2,000 டன்களுக்கும் அதிகமாக சனோலா விற்பனை யாகியுள்ளது.

இக்கழகம் சுத்திகரிக்கப்பட்ட கடலை எண்ணெய்யை 'கடோலா' என்ற விற்பனைப் பெயரில் விற்பனை செய்து வருகிறது. இந்த விற்பனைப் பெயர் அங்காடியில் மிக நல்ல இடத்தைப் பிடித்துள்ளது.

இதில் கிடைக்கும் கடலைப் பிண்ணாக்கு இக்கழகத்தின் கரைத்து எண்ணெய் எடுக்கும் ஆலையில் பயன்படுத்தப்படுகிறது. இவ்வாலையில் உற்பத்தி செய்யப்பட்ட 800 டன்கள் கடலைப் பிண்ணாக்கு ஏற்றுமதி செய் யப்பட்டிருக்கிறது.

சூரியகாந்திக்கு ஆதரவு விலை.—இம்மாநிலத்தில் சூரியகாந்தி பயிரிடும் பரப்பளவை அதிகரிக்கும் பொருட்டு, விவசாயிகளுக்கு ஊக்கமளிக்கும் வகை யில் சூரியகாந்தி விதையைக் கிலோ ஒன்றுக்கு ரூ. 2.25 ஆக அளிக்க இக்கழகம் முன்வந்துள்ளது.

பூச்சிக் கொல்லி மருந்துத் திட்டம்.—1972-ல் முதன் முதலில் இக்கழகம் விவசாயிகளின் பேராதரவு பெற்ற பூச்சிக் கொல்லி மருந்துகள் தயாரித்தலை மேற்கொண்டது. தனிப்பட்ட உற்பத்தியாளர் பிரிவுகளின் உதவியைப் பயன் படுத்தி அவைகள் தயாரிக்கப்பட்டன. ரூ. 9.79 இலட்சம் மூலதனச் செலவில் இக்கழகம் தனதுக்குச் சொந்தமாக ஒரு தொழிற்சாலையை அம்பத்தூரில் ஏற்படுத்தியுள்ளது. இத்தொழிற்சாலை 1976 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் உற்பத்தியைத் தொடங்கியது. பெருகி வரும் தேவைக்காக 1978 ஆம் ஆண்டில் ரூ. 4 இலட்சம் செலவில் மற்றுமொரு ஆலை நிறுவப்பட்டுள்ளது. இக்கழகத்தால் தயாரிக்கப்படும் பூச்சிக் கொல்லி மருந்துகள், இக்கழகத்தின்

1979 மார்ச் 29]

மண்டல விற்பனைக் கூடங்கள் மற்றும் வியாபாரிகள் மூலமாக அல்லது வேளாண்மைத் துறைக்கு விற்கப்பட்டு அத்துறையினரின் விற்பனைக் கூடங்கள் வழியாக விவசாயிகளுக்கு விற்கப்படுகின்றன. 1978—79 மற்றும் 1979—80 ஆம் ஆண்டுகளில் கீழ்க்காணும் அளவு மருந்துகளை விற்பனை செய்யத் திட்டமிடப் பட்டுள்ளது :—

	1978-79	மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்)	1979-80	மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்)
1 பி. எச். சி. தூள் 10 சதவிகிதம்.	7,270 டன்	59.59	10,000 டன்	82.00
2 மாலதியான் ஈசி 50 சதவிகிதம்.	2,550 லிட்டர்	0.66	2,000 லிட்டர்	0.52
3 டி.டி.டி. 5 சதவிகிதம் தூள்.	210 டன்	1.53	2,000 டன்	12.00

1978-79 மற்றும் 1979-80 ஆம் ஆண்டுகளில் முறையே ரூ. 26.82 இலட்சம் மற்றும் 35.82 இலட்சம் அளவிற்கு இந்துஸ்தான் பூச்சிக் கொல்லி நிறுவனத்தின் தயாரிப்புக்களான என்டோசல்பான், பி.எச்.சி. 50 சதவிகிதம், டி.டி.டி. 50 சதவிகிதம் மற்றும் டி.டி.டி. 25 சதவிகிதம் மருந்துகளையும் விற்பனை செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

கூட்டு முயற்சியில் பூச்சிக்கொல்லி மருந்துக்குத் தேவையான மூலப் பொருள் தயாரித்தல்.—இக்கழகம் தென் மண்டலத்திலுள்ள பிற மாநில வேளாண் தொழிற் கழகங்களுடனும், டில்லியிலுள்ள இந்துஸ்தான் இன்செக்டிசைட்ஸ் என்கிற மத்திய அரசு நிறுவனத்துடனும் கூட்டு முயற்சியாக "பி எச். சி." மூலப் பொருள், "கார் பரைல்" மூலப்பொருள் போன்றவற்றைத் தயாரிக்கத் திட்டமிட்டிருக்கிறது. இம்முயற்சியின் பயனாக இக்கழகத்தின் பூச்சிக்கொல்லி மருந்து தயாரிக்கும் பணிகளுக்கு அதிக அளவு கச்சாப்பொருட்கள் கிடைக்கும்.

மீன்பிடி வலைத் திட்டம்.—ரூ. 30 இலட்சம் முதலீட்டில் நைலானிலிருந்தும், பாலிதீனிலிருந்தும் மீன்பிடி வலை தயாரிக்க நிறுவப்பட்ட ஆலை, ஆகஸ்டு 1976-ல் வணிக ரீதியாக உற்பத்தியைத் துவக்கியது. தேவையைக் கருதி மெல்லிழை நைலான் மீன்பிடி வலைகளைத் தயாரிப்பதற்காக ரூ. 10 இலட்சம் செலவில் மற்றுமொரு இயந்திரம் இறக்குமதி செய்யப்பட்டு 1978 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டுள்ளது.

மீன்பிடிவலைகளைத் தயாரிக்கும் பிரிவின் தயாரிப்புத் திறனை விரிவு படுத்தும் வகையில் கூடுதல் இயந்திரங்களை ஜப்பானிலிருந்து இறக்குமதி செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு ஒரு பிரிவும் 1979-80 ஆம் ஆண்டில் மற்றுமொரு பிரிவும் இறக்குமதி செய்யப்படும்.

இந்த ஆலை 1978—79, 1979—80 ஆகிய ஆண்டுகளில் முறையே ரூ. 20.95 இலட்சம், மற்றும் ரூ. 29.64 இலட்சம் மதிப்புள்ள 14 டன்கள் மற்றும் 20 டன்கள் வலைகளை தயாரிக்கும்.

வேளாண் தொழில்களுக்காக மாவட்டத்தைத் தெரிந்தெடுத்தல்.—அரசின் விருப்பத்திற்கிணங்க இக்கழகத்திற்குள்ளேயே உள்ள மனித சக்தி ஆதாரங்களைக் கொண்டு அமைக்கப்படுகிற செய்தி மற்றும் ஆலோசனைப் பிரிவின் மூலம் மாவட்டத் தொழில் மையங்களுடன் செயல்முறை உறவு கொள்ளும் திட்டமொன்றைத் துவக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இக்கழகம், இந்திய முதலீடு மையம், ஒரு தேசியமயமாக்கப்பட்ட வங்கி, மாவட்டத் தொழில் மையங்கள் மற்றும் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் சேர்ந்து தெரிந்தெடுக்கப்பட்ட ஒரு மாவட்டத்தில் உள்ள வேளாண் தொழில்கள் வளங்களைப் பற்றி ஆய்வு நடத்தவும் கருதப்பட்டுள்ளது. அதன் முடிவாக ஏறத்தாழ 10 வேளாண் திட்டங்களுக்கு திட்ட அறிக்கைகள் தயாரித்துத் திறமையுள்ள தொழில் முனைவர்களுக்குக் (entrepreneurs) கொடுக்கப்படும். பின்பு, இத்திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு அவர்களுக்கு உதவிகள் செய்யப்படும்.

வேளாண் தொழில் மனைத் தொகுதி, உடுமலைப்பேட்டை.—உடுமலைப் பேட்டையில் உள்ள வேளாண் தொழில் மனைத் தொகுதி புதிய கருத்தில் அமையப் பெற்றதாகும். இந்தத் தொழில் மனைத் தொகுதியில் விவசாயிகளுக்கு அவர்களுடைய விளைப் பொருட்களை உடனடியாக விற்பனை செய்வதற்கு உதவி செய்வதற்காக, ஒழுங்குபடுத்தப்பட்ட விற்பனைக் கூடத்திற்குத் துணையாக வேளாண்மை சம்பந்தப்பட்ட செய்முறை வசதிகள் செய்யப்பட்டுள்ளன. இந்த ஏற்பாடுகள் இடைத் தரகர்களை நீக்கி விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைக்கச் செய்யும்.

தமிழ்நாடு வேளாண்மைப் பொறியியல் பணிக் கூட்டுறவு இணையம்.

தமிழ்நாடு வேளாண்மைப் பொறியல் பணிக் கூட்டுறவு இணையம் (என் கோபட்) 1972 ஆம் ஆண்டு பிப்ரவரி 3 ஆம் நாள் ஒரு மாநில கூட்டுறவுச் சங்கமாகப் பதிவு செய்யப்பட்டு, 1972 ஆம் ஆண்டு பிப்ரவரி 23 ஆம் நாள் துவக்கப்பட்டது ஆகும். இவ்விணையத்தின் முதன்மையான நோக்கங்களாவன :—

1. மாவட்ட மற்றும் வட்டார அளவில் நிறுவப்பட்டிருக்கும் சங்கங்கள் மையங்களின் பல்வேறு தரப்பட்ட விவசாயப் பணிகளை ஒருங்கிணைத்து மேம்பாடுசெய்வதும், இச்சங்கங்களின் பணிகளை மேற்பார்வை செய்தலும்.

2. இந்நிறுவனத்தின்கீழ், மேற்கண்ட சங்கங்களுக்கு தொழில் நுட்ப ஆலோசனை கூறுதல், இதற்கான தொழில் நுட்ப ஆலோசனைக் குழு நிறுவுதல், மற்றும் இச்சங்கங்களில் பணிபுரியும் அலுவலர்களுக்கு போதிய பயிற்சி அளிக்க ஏற்பாடு செய்தல்.

1979 மார்ச் 29]

3. மேற்கூறப்பட்ட வேளாண்மைப் பணி மையங்கள் மூலமாக விவசாயி களுக்குத் தேவையான உரம், பூச்சி மருந்து முதலிய பொருட்களை விநியோகம் செய்யும் பொருட்டு, அரசு கூட்டுறவுத் துறை நிறுவனங்கள், மற்றும் தனியார் துறை நிறுவனங்களின் முகவராகச் செயல்படுவதும் ஆகும்.

இந்நிறுவனத்தின் அங்கிகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூபாய் ஒரு கோடி ஆகும். இன்று வரை 325 உறுப்பினர்கள் எடுத்துள்ள பங்கு மூலதனம் ரூபாய் 28.31 இலட்சம் ஆகும்.

என்கோபட் என்று அழைக்கப்படும் மாநில அளவிலான இந்த இணையத்தைச் சார்ந்த வட்டார வேளாண்மைப் பொறியியல் மற்றும் சேவை கூட்டுறவு மையங்கள் வேலையின்றி இருக்கும் தொழில் நுட்பப் பட்டதாரிகளுக்கு நல்லதொரு வேலை வாய்ப்பு அளிக்கும் நோக்கத்தோடு நிறுவப்பட்டவை ஆகும். மேலும், விவசாயிகள் இயந்திர மயமான விவசாயப் பணிகளை மேற்கொள்வதும் இம்மையங்கள் நிறுவப்பட்டதன் மற்றொரு நோக்கம் ஆகும். இத்திட்டத் துவக்கத்தில் சுமார் 300 வட்டார அளவிலான சங்கங்கள் நிறுவப்பட வேண்டும் என்று இருந்த போதிலும், இச்சங்கங்கள் செயல்பட சில இடங்களில் போதிய வளமையின்மை காரணமாக அரசு 220 வட்டார அளவிலான மையங்களை மட்டுமே அங்கிகரித்தது. பின்னர் இந்த அமைப்பு ஐந்து லட்சம் பேருக்கு வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் இணைக்கப்பட்டு, இதன் விளைவாக ஒவ்வொரு மையத்திற்கும் அதன் பணிகளை செவ்வனே செய்வதற்கு ஏதுவாக ரூபாய் ஐம்பதாயிரம் நிதி உதவியாக வழங்கப்பட்டது. இவையின்றி மாநிலத்தில் 12 மாவட்ட அளவிலான கூட்டுறவு வேளாண்மைப் பணிச் சங்கங்கள், தேசிய கூட்டுறவு மேம்பாட்டுக் கழகத்தின் நிதி உதவியுடன் நிறுவப்பட்டுள்ளன. இம்மாவட்ட அளவிலான சங்கங்களின் முக்கிய நோக்கம் விவசாயிகளுக்கு டிராக்டர் மற்றும் விவசாய இயந்திரக் கருவிகளை வாடகைக்கு விடுகிறபணிகளை மேற்கொள்வதுடன், விவசாயிகள் மற்றும் நிறுவனங்களுக்குச் சொந்தமான டிராக்டர், விவசாய இயந்திரக் கருவிகள் முதலானவற்றை நன்முறையில் பழுது பார்க்கும் பணியை மேற்கொள்வதுமாகும். இவ்வாறாக இந்நிறுவனத்தின் மும்முனை அமைப்பு கீழ்க்கண்டவாறு ஆகும் :—

1. மாநில அளவில் "என்கோபெட்"
2. மாவட்ட அளவில் 12 கூட்டுறவு வேளாண்மைப் பணிச் சங்கங்கள்.
3. வட்டார அளவில் 220 வேளாண்மைப் பொறியியல் மற்றும் சேவைக் கூட்டுறவு மையங்கள்.

ஐந்து லட்சம் பேருக்கு வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் நிறுவப்பட்டுள்ள மேற்கூறிய 220 வட்டார அளவிலான சங்கங்களில், 781 தொழில் நுட்பப் பட்டதாரிகள் மற்றும் கல்வி அறிவு பெற்றவர்களுக்கு டிசம்பர் 1978 முடிய வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளன.

இந்த மையங்களின் 3 முதன்மையான நோக்கங்கள் கீழ்க்கண்டவை யாகும் :—

1. டிராக்டர்கள் மற்றும் விவசாய இயந்திரக் கருவிகளை விவசாயி களுக்கு வாடகைக்கு விடுதல்.

2. விவசாயத் தேவைகளான உரம், பூச்சி மருந்து, விதை போன்ற பொருட்களை விவசாயிகளுக்கு விநியோகம் செய்தல்.

3. விவசாயிகளின் நலன் பொருட்டு சிறிய விவசாயக் கருவிகளை உற்பத்தி செய்தல்.

மேற்கூறிய வட்டார அளவிலான மையங்களுக்கு டிராக்டர் மற்றும் விவ சாய இயந்திரக் கருவிகளை விவசாயிகளுக்கு வாடகைக்கு விட ஏதுவாகவும், மற்றும் பழுது பார்த்தல் பணியை மேற்கொள்ளவும், பாரத ஸ்டேட் பாங்கு ஒவ்வொரு மையத்திற்கும் இரண்டு இலட்சம் ரூபாய் வரை, ஆக மொத்தம் எல்லா மையங்களுக்கும் ரூபாய் ஆறு கோடி உச்சக் கட்ட கடனுதவியாக அளிக்க அரசு உத்திரவாதத்துடன் முன் வந்தது. இத்திட்டத்தின் கீழ், 186 வட்டார அளவிலான மையங்கள் சுமார் 207 லட்ச ரூபாய் வரை கடனுதவி யாக பாரத ஸ்டேட் பாங்கிடமிருந்து பெற்றுள்ளன. இந்த நிதியுதவியுடன் இந்த மையங்கள் 226 டிராக்டர்கள், 195 டிரெய்லர்கள், 149 ஆயில் என்ஜின் கள், 314 விசைத் தெளிப்பான்கள், 11 பாறை துளைக்கும் கருவிகள் (ராக் பிளாஸ்ட் யூனிட்கள்), 1 பவர் டில்லர் ஆகியவற்றைப் பெற்றுள்ளன. இவ் வியந்திரங்களின் மூலமாக இந்த மையங்கள் விவசாயிகளுக்கு, குறிப்பாக சிறு விவசாயிகளுக்கு, இயந்திர உழவுத் தொழிலைப் பொறுத்தமட்டில் தரமான பணிகளை ஆற்றி வருகின்றன. இயந்திர உழவுத் தொழிலின் மூலமாகக் கிடைக்கப்பட்ட வருவாய் 1975-76 ஆம் ஆண்டில் ரூ. 51,39,143-லிருந்து 1976-77-ல் ரூ. 49,83,018 என்று குறைந்த போதிலும் 1977-78 ஆம் ஆண்டு ரூ. 54,74,760 ஆக உயர்ந்துள்ளது. சராசரியாக ஒரு ஆண்டிற்கு இந்நிறுவனத்தின் ஒவ்வொரு டிராக்டரும் 1,000 மணிநேர அளவில் பயன் படுத்தப்பட்டுள்ளன. இந்த அளவு மாநிலத்தில் வேறு எந்தப் பொது நிறுவனத்தைக் காட்டிலும் அதிகமானதாகும். சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்ட நிறுவனங்கள், மற்றும் கிராம கூட்டுறவு நாணயச் சங்கங்களின் உதவியுடன் இந்த இயந்திர உழவுத் தொழிலை 1979-80 ஆம் ஆண்டில் அதிகரிக்க முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன.

விற்பனை நடவடிக்கைகள் :

டிராக்டர்கள் மற்றும் விவசாய இயந்திரக் கருவிகளின் விலையில் திடீர் உயர்வு கண்டதாலும், வங்கி நிதி உதவியின் மீது சுமத்தப்படும் அதிக வட்டி யின் காரணமாகவும், இந்த மையங்களின் வாடகைப் பணியின் மூலமாகக் கிடைக்கும் ஆதாயம் குறையலாயிற்று. மையங்களின் இழப்பு மேன்மேலும்

1979 மார்ச் 29]

அதிகரித்து வந்தது. இப்போக்கைத் தடுக்கும் வண்ணம் விவசாயத் தேவைகளான பூச்சி மருந்து, உரம், விதைகள் டீசல் எண்ணெய் வகைகள் இயந்திர உதிரிப் பொருட்கள் ஆகியவற்றின் விநியோகத்தை இம்மையங்களின் மூலம் விரிவுபடுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் நீரேற்றுப் பாசனக் கிணறுகள் தோண்டவும், பூச்சி மருந்து தெளிப்பு, தானியப் பாதுகாப்பு, உலோகக் குதிர்கள் உற்பத்தி செய்து விநியோகம் செய்தல், சாண எரிவாயுக் கலங்கள் (கோபார் கேஸ் பிளாண்ட்) நிறுவனம் செய்தல் போன்ற பணிகளை இம்மையங்களின் மூலம் மேற்கொள்ளுவதற்கு அரசும் உதவி செய்துள்ளது. இம்மையங்களின் பணிமுறைகளை ஒழுங்குபடுத்தவும், விவசாயிகளின் நலன் கருதி மையங்களின் பணிகளை விரிவுபடுத்தத் தகுந்த ஆலோசனைகள் கூறவும் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையின்கீழ், தொடர்புள்ள அதிகாரிகளை உறுப்பினர்களாகக் கொண்ட ஆலோசனைக் குழுக்களை ஒவ்வொரு மாவட்டத்திலும் அரசு அமைத்துள்ளது. இவ்வாறாக அரசுத் தரப்பிலிருந்தும் மாநில அளவிலான "என்கோ பெட்" உதவியுடனும் எடுக்கப்பட்ட முயற்சிகளின் விளைவாக மாவட்ட மற்றும் வட்டார அளவிலான வேளாண்மைப் பொறியியல் கூட்டுறவுப் பணிச் சங்கங்கள்/மையங்கள் மூலமாக விநியோக நடவடிக்கைகளின் அளவு ஒரு புதிய குறியீட்டை எட்டியுள்ளது. விநியோகம் செய்யப்பட்ட விவசாயத் தேவைகளின் மதிப்பு 1975-76-ல் ரூ. 1,07,32,769; 1976-77-ல் ரூ. 2,72,76,315 ஆகும். இது மேலும் 1977-78-ல் ரூ. 6,80,50,728 ஆக உயர்ந்துள்ளது. இது சாதாரண முன்னேற்றம் என்று சொல்வதற்கில்லை. இவ்வாறான முயற்சிகளின் விளைவாகப் பெருமிழப்பில் செயல்பட்டு வந்த பெருவாரியான மையங்கள் முன்பிருந்த நிதிநிலை நெருக்கடியிலிருந்து விடுபடும் நிலையில் இருக்கின்றன. செயல்படுத்தப்பட்ட 187 மையங்களில், சராசரியாக 90 மையங்கள் 1978-79 ஆம் ஆண்டில் ஆதாயத்தில் இயங்கி வந்துள்ளன. 12 மாவட்ட அளவிலான சங்கங்களில் சராசரியாக 9 சங்கங்கள் இதே காலத்தில் ஆதாயத்தில் இயங்கி வந்துள்ளன. இதன் காரணமாக 1979-80 ஆம் ஆண்டில் விவசாயப் பெருங்குடி மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வண்ணம் பூச்சி மருந்து, விவசாய இயந்திரக் கருவிகள், உதிரிப் பொருட்கள், எண்ணெய் வகைகள் மற்றும் இன்றியமையாத பொருட்களின் விநியோகத்தை மேலும் பெருமளவில் அதிகரிக்க உத்தேசிக்கப் பட்டுள்ளது. இச்சங்கங்கள் மையங்கள் மூலமாக விவசாயத் தேவைகளின் விநியோக மதிப்பு 1979-80 ஆம் ஆண்டில் ரூ. 15 கோடி இலக்கைத் தாண்டிவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த மையங்களின் முன்னிருக்கும் முதன்மை நோக்கங்களைப் பூர்த்தி செய்ய ஏதுவாக அரசு இம்மையங்களுக்கு ஊழியர்களின் சம்பள மானியமாக ரூ. 7,992 இலட்சம் 1977-78 ஆம் ஆண்டுக்கு வழங்கியுள்ளது. இம்மையங்களின் நிதி நிலையில் அபிவிருத்தி அடைய ஏதுவாக, அடுத்த ஆண்டுகளுக்கும் இதுபோன்ற ஊழியர் சம்பள மானிய உதவியை வழங்க அரசு உத்தேசித்துள்ளது.

[1979 மார்ச் 29

மத்திய அரசுத் திட்டத்தின்கீழ் தானிய சேமிப்பு உலோகக் குதிர்கள் உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு விநியோகம் செய்தல், விவசாயிகளுக்கு மின்சார மோட்டார், பம்பு செட்டுகள் ஆகியவற்றை வழங்குவதற்கு ஒருமுகப்படுத்துதல் போன்ற திட்டங்களை அரசு இந்த இணையத்தின் மூலமாகச் செயல்படுத்தி வருகிறது. தானிய சேமிப்பு திட்டத்தின்கீழ் விவசாயிகளுக்கு மலிவாகவும், விஞ்ஞான ரீதியிலுமான கண்டு பிடிக்கப்பட்டுள்ள தானிய சேமிப்பு உலோகக் குதிர்களை உற்பத்தி செய்து விநியோகம் செய்யும் பணியை இந்த இணையத்திடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது. மாநிலத்திலுள்ள சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்ட நிறுவனங்கள், சிறு விவசாயிகள் இந்த உலோக குதிர்களை வாங்குவதற்கு உதவியாக அங்கீகரிக்கப்பட்ட மானிய உதவி அளித்து வருகிறது. மத்திய கூட்டுறவு வங்கிகள் தானிய சேமிப்பு உலோகக் குதிர்கள் வாங்க விரும்பும் விவசாயிகளுக்குக் கடன் உதவி அளித்து வருகிறது. இந்த இணையம் தம்மைச் சார்ந்துள்ள மாவட்ட அளவிலான வேளாண்மைப் பொறியியல் பணிச்சங்கங்களின் மூலமாக 1976-77 ஆம் ஆண்டில் 2,295 குதிர்களையும், 1977-78 ஆம் ஆண்டில் 2,406 குதிர்களையும் உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு வழங்கியுள்ளது. 1978-79 ஆம் ஆண்டில் சனவரித் திங்கள் முடிய 2,000 உலோகக் குதிர்களை உற்பத்தி செய்து வழங்கியுள்ளது. இத்திட்டத்தின்கீழ், இவ்விணையம் ஆண்டுக்கு இரண்டாயிரம் குதிர்கள் என்ற மத்திய அரசுக் குறியீட்டைத் தாண்டிவிட்டது. இத்திட்டத்தின்கீழ் மத்திய அரசு மாநில அரசின் மூலமாக 1976-77 மற்றும் 1977-78-ல் முறையே ரூ. 8 இலட்சம், ரூ. 4 இலட்சம் வட்டியில்லாக் கடனாக நிதி உதவி வழங்கியுள்ளது. நடப்பு ஆண்டுக்கு (1978-79) இத்திட்டத்தை மேலும் விரிவுபடுத்த ரூ. 12 இலட்சம் வட்டியில்லாக் கடனாக நிதி உதவி வழங்கும். இத்திட்டம் நன்முறையில் செயல்படும் விதத்தைக் கண்டு உலக வங்கி தமிழ்நாட்டில் இத்திட்டத்தை மேலும், விரிவுபடுத்தக் குறிப்பாக சிறு விவசாயிகளின் நலன் கருதி அடுத்த சில ஆண்டுகளுக்கு நிதி உதவி வழங்க முன்வந்துள்ளது. இத்திட்டம் அமுலாக்கப்பெறின், இம்மாநிலம் முழுவதும் உள்ள எண்ணற்ற விவசாயிகள் பலன் அடைவார்கள்.

ஒருமுகப்படுத்தும் திட்டத்தின்கீழ் இவ்விணையத்திடம் டீசல் என்ஜின், மற்றும் மின்சார மோட்டார், பம்பு செட்டுகள் அதன் உபகரணங்கள் ஆகியவற்றுக்கு விலை நிர்ணயம் செய்தலும், மற்றும் தரமான என்ஜின்களை நிலவள வங்கிக் கடன்தாரர்களுக்கு வழங்குவதற்கான பொறுப்பும் ஒப்படைக்கப் பட்டன. கடந்த 1976-77, 1977-78 ஆம் ஆண்டுகளில் முறையே 2,262, 4.020 பம்புசெட்டுகள் வழங்குவதற்கான அனுப்புகை உத்தரவு கொடுக்கப்பட்டுள்ளது. மேலும், இவ்விரு ஆண்டுகளில் முறையே 213, 1,057 மின்சார மோட்டார் பம்பு செட்டுகள் வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டது. இவ்வாண்டில், இந்த பம்பு செட்டுகள் வாங்குவது ஓரளவு குறைந்திருப்பினும், ஒரு குறிப்பிடத் தகுந்த

1979 மார்ச் 29]

அளவு பம்பு செட்டுகள் இவ்விணையத்தின் மூலம் வழங்கப்படும் என எதிர் பார்க்கப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் விவசாயிகளுக்குக் குறைந்த, மற்றும் நிர்ணயிக்கப்பட்ட விலைகளில் தாமுள்ள பம்பு செட்டுகள் கிடைக்கப் பெறுவது உறுதி செய்யப்பட்டுள்ளது. மேலும், இத்திட்டத்தின்கீழ், இவ் விணையத்தைச் சார்ந்த வட்டார அளவிலான வேளாண்மைப் பொறியியல் மற்றும் சேவை சங்கங்களின் மூலம் இந்தப் பம்பு செட்டுகளுக்கு விற்பனை பின் பராமரிப்பை நல்ல முறையில் செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

இவ்விணையம் மேலும் ரூ. 3,77,626 மதிப்பிற்குக் குழாய்கள் அதன் உபகரணங்கள், மின் இயக்கிகள், ஸ்விட்சுகள், மற்றும் ரூ. 2,48,126 மதிப் பிற்குத் தஞ்சை மாவட்டத்தில் அனைத்து நாடுகள் வளர்ச்சி நிறுவனத் திட்டத்தின்கீழ் ஆழ்கிணறுகள், மற்றும் வடிநீர்க் குழாய்கள் அமைப்பதற்குக் குழாய்கள் விநியோகம் செய்துள்ளது. மீதமுள்ள இவ்வாண்டில் மேற்கொண்டு ரூபாய் இரண்டு இலட்சம் மதிப்புள்ள குழாய்களும் அதன் உபகரணங்களும், மற்றும் அனைத்து நாடுகள் வளர்ச்சி நிறுவனத் திட்டத்தின்கீழ் ரூபாய் இரண்டு இலட்சம் மதிப்புக்குக் குழாய்களும் வழங்கப்படும் என எதிர்பார்க்கப் படுகிறது. 1979-80 ஆம் ஆண்டில் ரூபாய் ஆறு இலட்சம் மதிப்பிற்கு இவ்வுபகரணங்கள் நிலவள வங்கிக் கடன்தாரர்களுக்கு வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதன் மூலம் ரூ. 60 ஆயிரம் வருமானம் இவ்விணை யத்திற்குக் கிடைக்கும். இதே ஆண்டில் 17 ஆயிரம் மீட்டர் அளவிற்கு 6 அங்குலம் (150 மில்லி மீட்டர்) குழாய்கள் தஞ்சை மாவட்டத்தில் சுகாதார கிணறுகள் அமைப்பதற்கு வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதன் மூலம் ரூ. 1.7 இலட்சம் வருமானம் கிடைக்க ஏதுவாகும். கடந்த ஆண்டில் இத் திட்டத்திற்கு வழங்கப்பட்ட குழாய்களின் அளவு 18 ஆயிரம் மீட்டர்கள் ஆகும்.

இவையன்றி, மேலும் இவ்விணையம் சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம், ஒருங்கிணைந்த கிராமப்புற வளர்ச்சித் திட்டத்தை சார்ந்த விவசாயி களுக்கும் மற்றும் அரசு துறை நிறுவனங்களுக்கும் தாமுள்ள விசைத் தெளிப்பான்களை நியாய விலையில் வழங்கி வருகிறது. இவ்வாண்டில் ஏறக் குறைய நான்காயிரம் விசைத் தெளிப்பான்கள் வழங்கப்படும் என எதிர் பார்க்கப்படுகிறது. அடுத்த ஆண்டில் சுமார் ஐயாயிரம் விசைத் தெளிப்பான்கள் விவசாயிகளின் மேம்பாட்டுக்காக வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்நட வடிக்கைகளின் மூலமாக இவ்விணையம் அதிக உணவு உற்பத்திக்கு நல்ல பல வழிவகைகள் செய்வதுடன் வேலையில்லா தொழில் நுட்பதாரர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கவும் வழிவகை செய்கிறது.

[1979 மார்ச் 29

தமிழ்நாடு அரசுப் பண்ணைக் கழகம்.

தமிழ்நாடு அரசுப் பண்ணைக் கழகம் 1974 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில், 1956 ஆம் ஆண்டின் இந்தியக் கம்பெனிகள் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டது. இதனுடைய முக்கிய நோக்கம்; மாநிலத்தில் சாகுபடி செய்யாமல் தரிசாகக் கிடக்கும் நிலங்களைச் சாகுபடிக்குக் கொண்டு வருவது ஆகும். மேலும் இலங்கை அகதிகளின் மறுவாழ்வுத் தொடர்பான திட்டங்களும் பின்னர் இக்கழகத்துடன் இணைக்கப்பட்டன.

முசரவாக்கம், நெய்வேலி, தியாகராஜபுரம், சக்கரமங்கலம், வெள்ளாளவிடுதி, திராப்பிடுங்கி, செல்லூர் ஆகிய இடங்களில் இக்கழகம் சாகுபடிப் பணிகளை மேற்கொண்டு பண்ணைகளை அமைத்துள்ளது. அதன் விபரம் வருமாறு :

		பரப்பு (ஹெக்டேரில்)
1	நெய்வேலி திட்டம் I	568.94
2	நெய்வேலி திட்டம் II	276.92
3	நெய்வேலி திட்டம் III	99.63
4	வெள்ளாள விடுதி	123.43
5	திராப்பிடுங்கி	39.52
6	தியாகராஜபுரம்	76.57
7	சக்கரமங்கலம்	38.06
8	கலூர் பிரிவு	43.85
9	முசரவாக்கம்	59.21
10	ரூபநாராயணநல்லூர்	8.09
11	செல்லூர்	108.97
	மொத்தம் ..	1,444.09

1978 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31-ம் நாள் வரை, 1,444.09 ஹெக்டேர் நிலங்கள் இக்கழகத்தால் சாகுபடிக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன. அதன் மூலம் ரூ. 38.99 இலட்சம் வருவாய் கிடைத்தது. ரூ. 35.096 இலட்சம் மதிப்புள்ள நிலை பயிர்களும் உள்ளன.

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகம்.

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகம் 1971-ம் ஆண்டு ஜூன் திங்கள் முதல் நாள் ஏற்படுத்தப்பட்டது. சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி, விலங்கு சார்ந்த அறிவியல் தொடர்பான ஆராய்ச்சி, பயிற்சி ஆகிய பிரிவுகள்

1979 மார்ச் 29]

இந்தப் பல்கலைக் கழகத்தின் முக்கியப் பிரிவுகளாக 1976-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 1 ஆம் நாளிலிருந்து மாற்றப்பட்டன. 1977-78 கல்வி ஆண்டிலிருந்து மீனளக் கல்லூரி ஒன்றும் தொடங்கப்பட்டது.

நமது மாநிலத்தின் பண்ணைத் துறையில் முன்னேற்றம் காணுவதற்கான தொழில் நுட்ப உத்திகளை உருவாக்குவதற்காக, தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகம் தொடர்ந்து இடைவிடாத முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. இம் முயற்சியில் ஆராய்ச்சி, கற்பித்தல், வளர்ச்சிக் கல்விப் பணிகள் ஆகியனவற்றின் ஒருங்கிணைப்புப் பல நோக்கு அணுகு முறையில் வலுப் படுத்தப்படும்.

கல்வி.—கோயம்புத்தூரில் வேளாண்மைப் பிரிவில் 1978-79 ஆம் ஆண்டில் விதைத் தொழில் நுட்பவியலிலும், வேளாண்மை வளர்ச்சியிலும் அடிப்படை அறிவியல் பயிர்க் கூறியியலிலும் மற்றும் கலைப் பிரிவிலும் புதிய பி.எச்.டி. பட்டத் திட்டங்கள் கொண்டுவரப்பட்டன. இவை தவிர, உடற்கூறு, இயல், கால்நடைப் பிறப்பு மரபு, வளர்ப்புக் கால்நடைச் சத்துணவு, பாற் பண்ணை அறிவியல் ஆகிய நான்கும் கால்நடைப் பிரிவில் தொடங்கப்பட்டுள்ளன. இதனுடன், புல்லின ஆராய்ச்சி நுண்ணியிரியல் ஆகிய பாடங்களில் புதிதாக பட்ட மேற்படிப்புகளும் கோயம்புத்தூரில் தொடங்கப்பட்டன.

1979-80-ம் ஆண்டில், கால்நடை மருத்துவ அறிவியலில், பி.எச்.டி. பட்டம் பெறக்கூடிய இரண்டு புதிய படிப்புகளைத் தொடங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும், புதிதாக வேளாண்மைத் தொழில் நிர்வாகத்தில் பட்ட மேற்படிப்பும் (எம்.எஸ்.சி.) தோட்டக்கலையில் நாற்றங்கால் வளர்ப்பு முறையில் குறுகிய காலப் படிப்பும் தொடங்கப்படும். தற்போது தூத்துக்குடியில் கற்பிக்கப் படுகின்ற இளநிலை அறிவியல் (மீனளம்) படிப்புக்குப் போதிய கல்வி ஆதரவு வழங்குவதற்காக புதிதாக ஐந்து துறைகள் அதாவது, மீன் உயிரியல், மீன் வளர்ப்பு, மீனளத் தொழில் நுட்பவியல், மீனளச் சூழல், மீனள வாயில்களும் பொருளாதாரமும் ஆகிய ஐந்து துறைகளை மீனளக் கல்வித் துறையில் ஏற்படுத்தப்படும்.

ஆராய்ச்சி.—1978-79 ஆம் ஆண்டில், வேளாண்மை, கால்நடை அறிவியல் களின் பல்வேறு பிரிவுகளின் கீழ் 1,162 ஆராய்ச்சி திட்டங்கள் நடைபெற்று வந்தன. விஞ்ஞானிகளின் இடைவிடா முயற்சிகளின் பலனாகப் புதிதாக 13 இனங்கள் தோற்றுவிக்கப்பட்டன. இதன் பலனாக, நமது மாநிலத்தில் கிலியூட்டி வந்த ஒரு கொடிய நோயான ஃபல்கோரிட் நோய் தாக்காத ஒருவகை நெல்லைப் பல்கலைக் கழகம் அறிமுகப்படுத்த முடிந்தது.

[1979 மார்ச் 29

1979-80 ஆம் ஆண்டில், பல்கலைக் கழகம் சுமார் 1,200 ஆராய்ச்சித் திட்டங்களைச் செயற்படுத்தக் கருதியுள்ளது. உழவர்கள், வளர்ச்சிப் பணியாளர்கள், இத்தொழிலை வாழ்க்கைத் தொழிலாகக் கொண்டவர்கள் ஆகியோரைக் கலந்தாலோசித்து இந்த ஆராய்ச்சித் திட்டங்கள் தெரிந்தெடுக்கப்படும்.

வேளாண்மை.—புன்செய்ச் சாகுபடியில் உள்ள பிரச்சினைகளையும், பாலாறு ஆற்றுப் படுகையின் சிறப்புத் தேவைகளையும் சமாளிப்பதற்காக, இராமநாதபுரம், வட ஆற்காடு மாவட்டங்களில் வட்டார ஆராய்ச்சி நிலையங்கள் அமைக்கப்படும். கோயம்புத்தூர் மாவட்டத்தில், திட்ட நோக்கிலான புன்செய் ஆராய்ச்சித் திட்டம் மேற்கொள்ளப்படும். விதைப் பொருட்களை உற்பத்தி செய்ய தீவிர முயற்சி எடுக்கப்படும். சாகுபடிச் செலவைக் குறைப்பதற்காக, ஒரு தொழில் நுட்ப அணுகு முறையில், குறைந்த செலவில் அதிக உற்பத்தி கிடைக்கக்கூடிய உத்திகளைக் கண்டு பிடிப்பதில் போதிய நாட்டம் செலுத்தப்படும். பயிர்ப் பூச்சிகளையும், நோய்களையும் கட்டுப் படுத்தப் புதிய எதிர் நுண்ம முறைகளைக் கண்டு பிடிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும். இலை நோய் அறிதல் ஆய்வுக் கூடம் ஒன்று அமைக்கப் படும்.

உயிர்த் தாதுக்கள் அடங்கிய இரசாயன உரமும் பாசித் தாவரங்களும்.

பாசித் தாவரங்கள், உயிர்த் தாதுக்கள் அடங்கிய இரசாயன உரங்கள் பற்றிய ஆய்வுகள் அவ்வப்போது நடத்தப்பட்டு வருகின்றன. அண்மையில், முதலமைச்சர் வெளிநாட்டுப் பயணம் சென்று திரும்பிய பின்னர் அவர் தெரிவித்த கருத்திற் கிணங்க, பின்வரும் வகைகளில் ஆய்வுகள் தீவிரமாக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தால் நடத்தப்பட்டு வருகின்றன :—

(அ) இரசாயன உரங்கள், பூச்சிக் கொல்லி மருந்துகள் முதலியவை போன்ற வேளாண்மை இடு பொருட்களின் செலவைக் குறைப்பதன் மூலம், சாகுபடிச் செலவைக் குறைப்பது.

(ஆ) "அசோல்லா" (நீர்ப்பாசிகள்) ஸ்பைரில்லம் (Spirillum) ஆகிய நீர்ப்பாசி வகைகள் போன்ற பல்வகையான நுண்ணுயிர்த் தாவரங்களைப் பயன்படுத்தி, நெற்பயிருக்கு நைட்ரஜன் உரச் சத்து இடுவதன் அளவை மிச்சப்படுத்தும் வகையில், அதற்கான வாய்ப்புக் கூறுகளை ஆராய்வது.

மேலும் பெரும்பாலான தானிய வகைகள், வணிகப் பயிர்கள் முதலியவற்றிற்கு இரசாயன உரமிடுவதை மிச்சப்படுத்தவும், அதனால் தமிழக விவசாயிகளுக்கு மிகுந்த பலன் ஏற்படுத்தவும்—"பேசிலஸ் போலிமிக்சா" (Bacillus Polymyxa) "அசோஸ்பிரில்லம்" (Azosprillum)

1979 மார்ச் 29]

"டெரிக்ஸியா" (Derixia) போன்ற உயிரணுச் சத்துக்கள கலந்த புதிய வகையான உரங்களைக் கண்டு பிடிக்க வேண்டிய அடிப்படையான செய்முறை ஆராய்ச்சிகள் நடத்துவது.

(இ) பயிர்களை அழிக்கும் பூச்சிகளுக்கு முள்ளால் முள்ளை எடுப்பது போல அப்பயிர் அழிப்பு பூச்சிகளுக்கு எதிரிகளான பூச்சிகளை உற்பத்தி செய்து, அப்பயிர் அழிப்பு பூச்சிகளின்மீது ஏவுவதால் பயிர்கள் வளர்ச்சி பாதிக்கப்படாமல் இருப்பதற்காக நுண்உயிர் வளர்ப்பு முறையின் மூலம் ஓர் ஆய்வுத் திட்டம் தயாரிக்கப்படுவது. உதாரணமாக பருத்தி/நிலக்கடலைப் பயிர்களில் பருத்தி உருண்டைப்புழு, "புரோடீனியா" பூச்சியினால் ஏற்படும் நோயைக் கட்டுப்படுத்த ஒட்டுயிருண்ணிகள், உயிர்க்கொல்லிகள், பயிர் நோயை உண்டு பண்ணும் கிருமிகள் இவற்றைக்கொண்டு ஆய்வுகள் நடத்துவது.

(ஈ) மிகவும் மலிவான செலவில் பெருமளவில் ஏரிகளிலும், குளங்களிலும் பயிரிடப்படக்கூடிய "ஆல்கா வகைப் பாசி" யிலிருந்து மிகவும் மலிவான புரதச் சத்துணவைத் தாராளமாகத் தயாரிப்பதற்கு "குளோரல்லா வல்காரிஸ்" என்னும் பச்சைப் பாசிகளைப் பயன்படுத்துவது குறித்தும் ஆராய்ச்சிப் பணி தொடர்ந்து நடத்துவது.

இதனை உணவு வகைகளில் கலந்து நாம் உட்கொள்ளத் தக்க வகையில் ஏற்றதாகச் செய்வதற்கும் ஆய்வுகள் நடத்துவது.

இந்தப் பாசியைக் கோழித் தீனிகளோடு தாமுள்ள விதாச்சாரத்தில் கலந்து பயன்படுத்துவதன் மூலம், இதுகாறும் பயன்படுத்தப்பட்டு வரும் கடலைப் பிண்ணாக்கின் அளவில் 50 சதவீதம் மிச்சப்படும் என்றும் நிரூபிக்கப்பட்டுள்ளது.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

கால்நடை மருத்துவம் :—

தலத்துக்குச் சென்று சிகிச்சை அளிக்கும் திட்டங்களை மேற்கொள்ளுதல், தலநிலைமைகளில் உறை விந்து குறித்து ஆராய்ச்சி மேற்கொள்வதற்காக செயற்கை முறைக் கருத்தரிப்பு இயல் ஊர்திப் பிரிவுகளின் எண்ணிக்கையை அதிகரித்தல், கால்நடைச் சத்துணவில் ஓாகத் தனிப் பிரிவை அமைத்தல், அபூர்வ கனிவள தொழில் நுட்பவியல் ஆகியவற்றில் அதிகக் கவனம் செலுத்தப்படும்.

வளர்ச்சிப் பணி :—

வளர்ச்சிப் பணி விஞ்ஞானிகள் அடங்கிய ஒரு குழுவைக் கொண்டு ஒவ்வொரு மாவட்டத்திலும் கருத்தரங்குகள் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. ஏனைய பிரச்சாரத் திட்டங்கள் தீவிரப்படுததப்படும்.

[1979 மார்ச் 29

1979—80 ஆம் ஆண்டில், வேளாண்மை, கால்நடை பராமரிப்பு, மீன்வளத்துக்காக கீழ்க்கண்ட தொகை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தால் செலவழிக்கப்படும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

		திட்டப் பணிகள்.	திட்டம் சாராதவை	மொத்தம்
	(1)	(2)	(3)	(4)
		(ரூபாய் இலட்சத்தில்)		
1. வேளாண்மை	..	70.47	206.00	276.47
2. கால்நடை மருத்துவம்		92.25	100.00	192.25
3. மீனளவியல்	..	28.00	..	28.0

இதைத் தவிர, இந்தப் பல்கலைக் கழகம், தன்னுடைய ஆராய்ச்சித் திட்டங்களுக்காக இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்திடமிருந்தும் ஏனைய இதுபோன்ற நிறுவன அமைப்புகளிடமிருந்தும், நிதி உதவியைப் பெற்று வருகிறது.

இணைப்பு II

[594 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

பாசனம் மீதான மானியக் கோரிக்கை.

1979-80.

மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே,

ஆளுநர் அவர்களின் பரிந்துரையின் பேரில் இவ்வாசுக்கு கோரிக்கை 36—பாசனம் என்பதன்கீழ் ரூ. 22,56,83,000-க்கு மேற்படாமலும், கோரிக்கை 52—பாசனம் மீதான மூலதனச் செலவு என்பதன்கீழ் ரூ. 31,46,20,000-க்கு மேற்படாமலும் தொகை வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

தற்போதுள்ள பாசன அமைப்புகளை விரிவாக்குவதற்கு ஏற்படும் செலவும், அவற்றை பராமரிப்பதற்கான வழக்கமான செலவும், வெள்ளம், புயல் காரணமாக ஏற்படும் செப்பனீட்டுச் செலவும், "கோரிக்கை 36—பாசனம்" என்பதன்கீழ் வழங்கப்படும் மானியத்திலிருந்து ஈடு செய்யப்படும்.

புதிய பாசனத் திட்டங்கள், தொழிற்சாலைகளுக்கு நிலத்தடி நீர் வழங்கும் திட்டங்கள் ஆகியவற்றின் செலவு "கோரிக்கை 52—பாசனம்" மீதான மூலதனச் செலவு என்பதன்கீழ் பெறும் மானியத்திலிருந்து ஈடு செய்யப்படும்.

பெரிய, நடுத்தர பாசனம் :—

2. பெரிய, நடுத்தரப் பாசன திட்டங்களுக்கு 1979—80-ல் 22.12 கோடி ரூபாய் ஒதுக்கப்படும்.

3. 1978-79-ல் இரண்டு பெரிய திட்டங்களான, பரம்பிக்குளம்—ஆளியாறு திட்டம் (கோயம்புத்தூர் மாவட்டம்) மற்றும் பெரியாறு—வைகை நவீனப்படுத்தும் திட்டம் (மதுரை மாவட்டம்) ஆகியவை நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

பரம்பிக்குளம்—ஆளியாறு திட்டத்தில், கீழ் நீராறு அணைகட்டும் பணியும், குடைவரை அமைக்கும் பணியும் தற்சமயம் நடைபெற்று வருகிறது. இவ்வேலைகள் 1979-ன் இறுதிக்குள் முடிவுறும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

மதுரை-இராமநாதபுரம் மாவட்டப் பகுதிகளுக்கு பயனளிக்கும் பெரியாறு-வைகை நவீனப்படுத்தும் திட்டம், ரூபாய் 41.04 கோடி மதிப்பீடு கொண்டது. இதற்கு உலக வங்கியின் உதவி கிடைக்கிறது. நவீனப்படுத்துதல் மூலமாக தற்போதுள்ள பெரியாறு—வைகை பாசன அமைப்பில் நீர் இழப்பு ஏற்படுவதை குறைக்க இத்திட்டம் உதவுகிறது. இவ்வாறு சேமிக்கப்பட்ட நீரை பயன்படுத்தி, 6,800 ஹெக்டேர்களுக்கு மேற்பட்ட நிலங்களுக்கு பாசன வசதிகளை நிலைப்படுத்துவதும், மழை நீர் மட்டும் பெறும் கண்மாய்களின்கீழ் உள்ள 16,000 ஹெக்டேர் பரப்பளவு நிலங்களுக்கு பாசன வசதி அளிப்பதும் இத்திட்டத்தின் குறிக்கோள். இத் திட்டத்தின்கீழ், எல்லா முக்கிய கால்வாய்களும், நீர்வரத்துக்கால்வாய்களும் 10 ஹெக்டேர் அளவு வரை சிமெண்ட் காங்கிரீட்டினால் பூசப்படும். நீரிழப்பைக் குறைப்பதற்காக, நீர் ஓட்டத்தைக் கட்டுப்படுத்தும் அமைப்புகள் புதிதாக கட்டப்படும் ; ஏற்கனவே உள்ள அமைப்புகள் மேம்படுத்தப்படும் அல்லது புதுப்பிக்கப்படும்.

4. மதுரை மாவட்டத்தில், பி. டி. ராஜன் கால்வாய் திட்டம், மருதா நதி அணைக்கட்டு திட்டம், மற்றும் பாலாறு-புரந்தலாறு திட்டம் ஆகியவை இவ்வாண்டில் நிறைவேற்றப்பட்டு பாசனத்திற்குத் திறந்துவிடப்பட்டுள்ளது.

5. சாத்தனூர் வலது கரை கால்வாய் திட்டம் (வட ஆற்காடு—தென்னாற்காடு), கேளவரபள்ளி திட்டம், மற்றும் பாம்பாறு திட்டம் (இரண்டும் தர்மபுரி மாவட்டத்தில்) ஆகியவை நிறைவேற்றப்பட்டு வருகின்றன. தஞ்சாவூர் கால்வாய்களை நவீனப்படுத்தும் திட்டமும் நிறைவேற்றப்பட்டு வருகின்றது.

6. தருமபுரி மாவட்டத்திலுள்ள வாணியார் நதியின் குறுக்கே 418 மில்லியன் கன அடியுள்ள நீர்தேக்கம் அமைப்பதற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டத்தின் நோக்கம் 8,550 எக்கர் புதிய புஞ்சை

ஆயக்கட்டுகளுக்கு பாசன வசதி அளிப்பதும், 1,852 ஏக்கர் நிலங்களுக்கு பாசன வசதியை நிலைபெற செய்வதும் ஆகும். இத்திட்டத்தின் மதிப்பீடு ரூ. 560 இலட்சங்கள் ஆகும்.

தர்மபுரி மாவட்டத்தில், தும்பளஹள்ளி கிராமத்திற்கு அருகில் புளப்பட்டி நதியின் குறுக்கே 131 மில்லியன் கனஅடியுள்ள நீர்தேக்கம் கட்டும் திட்டத்திற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டத்தின் நோக்கம் 2,184 எக்கர் புதிய புஞ்சை ஆயக்கட்டு நிலங்களுக்கு பாசன வசதி அளிப்பதும், 326 எக்கர் பரப்பளவுக்கு நிலையான பாசனவசதி செய்வதும், தவிர 96 எக்கர் நிலங்களை பாசனத்தில் இணைப்பதும் ஆகும். இத்திட்டத்தின் மதிப்பீடு ரூ. 112.70 லட்சங்கள் ஆகும்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் குல்லூர்சந்தை என்ற கிராமத்திற்கு அருகில் விருதுபட்டி ஓடையின் குறுக்கே ரூ 127 இலட்சம் செலவில், 127 மி. கன அடி கொள்ளளவு உள்ள ஒரு நீர்த்தேக்கம் கட்டுவதற்கான திட்டத்திற்கும், அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இந்நீர்த்தேக்கத்தில் ஒரு ஆண்டில் இரு முறை நீர் நிரம்பும். இதனால் 254 மி. கனஅடி நீர் கிடைக்கும். இந்நீர்த்தேக்கம் 2,556 எக்கர் நிலத்திற்கு ஒருபோக புன்செய் சாகுபடிக்கு பாசன வசதி அளிக்கும்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் வெம்பக்கோட்டை என்ற கிராமத்திற்கு அருகில் வைப்பாற்றின் குறுக்கே ரூ. 296 இலட்சம் செலவில், 898 மில்லியன் கனஅடி கொள்ளளவு உள்ள ஒரு நீர்த்தேக்கம் கட்டுவதற்கான திட்டத்திற்கும் அரசு ஒப்புதல் அளித்துள்ளது, 8,100 எக்கர் பரப்புள்ள புதிய, புஞ்சை ஆயக்கட்டிற்கு இந்நீர்த்தேக்கம் நீர்ப்பாசன வசதி அளிக்கும்.

1974-ம் ஆண்டு திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள குண்டாற்றின் நடுவே நீர்த்தேக்கம் அமைக்கும் திட்டத்திற்கு அரசு ஒப்புதல் அளித்தது. ஆயினும் சில நிர்வாகக் காரணங்களினால் இந்த திட்டத்தை செயல்படுத்த இயலவில்லை. 1978-ம் ஆண்டு நவம்பர் மாதத்தில், இத்திட்டத்தை ரூபாய் 82 லட்சம் மதிப்பீட்டில் நிறைவேற்ற, புதிய ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 25 மில்லியன் கனஅடி நீர்த்தேக்கம் ஏற்படுத்தப்படும். எற்கனவே உள்ள 1,122 எக்கர் ஆயக்கட்டுகளுக்கு நிலையான நீர்ப்பாசன வசதி அளிப்பதோடு, மேலும், 98 எக்கர் ஒரு போக விவசாயத்தை இரண்டு போகமாக மாற்ற, இத்திட்டம் வகை செய்யும்.

வாணியார் நீர்த்தேக்கத்திட்டம், தும்பளஹள்ளி நீர்த்தேக்க திட்டம், குள்ளூர் சந்தை திட்டம், வெம்பக்கோட்டை திட்டம் மற்றும் குண்டாறு நீர்த்தேக்கத் திட்டம் ஆகிய திட்டங்களை நிறைவேற்றுவதற்கான வேலைகள் 1979-80-ல் தொடங்கும்.

[1979 மார்ச் 29]

7. நீரார் தண்ணீரை மேல் நீரார் அணைக்கட்டிலிருந்து நல்லார் படுகைக்கு நேராக கொண்டு வர, நீராரிலிருந்து பரம்பிக்குளம்-ஆளியார் திட்டத்திலிருக்கும் திருமூர்த்தி தேக்கம் வரை 15 கிலோ மீட்டர் நீளத்திற்கு மலையைக் குடைந்து குடைவரை அமைந்து 8 டி. எம். சி. நீரைக் கொண்டு வரும் திட்டத்தை ஆய்வு செய்ய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

8. வெள்ளங்கள் ஏற்படும் காலத்தில், வைகை நதியில் வரும் உபரி தண்ணீரை வைகையிலிருந்து அருகிலுள்ள கிருதமால் நதிப்படுகைக்கு திருப்பும் திட்டத்தினை ஆராய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

சிறு பாசனம் :—

9. 1978-79-ல் ரூ. 2,50.42 இலட்சங்கள் சிறப்பு சிறு பாசனத் திட்டத்திற்காகவும், ரூ. 11.63 இலட்சங்கள் தூர் எடுத்தல் மற்றும் சீரமைக்கும் திட்டத்திற்காகவும் ஒதுக்கப்பட்டது. 1979-80-ம் ஆண்டிற்கு ரூ. 250 இலட்சங்கள் சிறப்பு சிறு பாசனத் திட்டத்திற்காகவும், ரூ. 25 இலட்சங்கள் தூர் எடுத்தல் மற்றும் சீரமைக்கும் திட்டத்திற்காகவும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. 1979-80-ல் நிறைவேற்றுவதற்கு எடுத்துக் கொள்ள வேண்டிய 24 சிறப்பு சிறு பாசனத் திட்டங்களுக்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

கடந்த பல ஆண்டுகளில், நிறைவேற்றுவதற்காக எடுத்துக் கொள்ளப் பட்ட பல சிறு பாசனத் திட்டங்கள் முடிக்கப்பெறாதிருந்தன. அவற்றுள் சில, ஒன்பது ஆண்டுகளாக நிறைவு பெறாதிருந்தவை. இத்திட்டங்களை நிறைவேற்றுவதற்காக 1978-79-ல் சிரிய முயற்சி எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன் விளைவாக, ஆண்டு ஆரம்பத்தில் முடிக்கப்பெறாது இருந்த 216 திட்டங்களில் 189 திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. மீதியுள்ள 27 திட்டங்கள் அடுத்த ஆண்டு நிறைவேற்றப்படும்.

10. நூறு எக்கரும் அதற்கு மேற்பட்டுமுள்ள ஆயக்கட்டுகளுக்கு பாசன வசதி அளிக்கும் நீர்த் தேக்கங்களின் நிர்வாகப் பொறுப்பினை பொதுப்பணித் துறை மேற்கொண்டுள்ளது. நூறு எக்கருக்குக் குறைவாக ஆயக்கட்டுகள் உள்ள நீர் நிலைகளை நிர்வகிக்கும் பொறுப்பு ஊராட்சி ஒன்றியங்களுக்கு கொடுக்கப்பட்டுள்ளது. இந்நீர் நிலைகளும் கூட பொதுப்பணித் துறையால், தரத்திற்கு கொண்டு வரப்பட்டபின் ஊராட்சி ஒன்றியங்களிடமே ஒப்படைக்கப் படும்.

[1979 மார்ச் 29

11. 1974 லிருந்து தீவிரப்படுத்தப்பட்ட சிறு பாசனத் திட்டங்கள் அமுல் படுத்தப்படுகின்றன. சிறு பாசன வசதிகளை, தரத்திற்கு கொண்டுவருவதும், சீர்திருத்துவதும் இதன் முக்கிய நோக்கங்களாகும். தூர் எடுப்பது, உபரி நீரை ஒழுங்குபடுத்த மதகுகள் அமைப்பது, தேவையான இடங்களில் புதிய கால்வாய்கள் தோண்டுவது, மற்ற வசதிகள் செய்வது போன்றவைகள் இத்திட்டத்தின் கீழ் செய்யப்படும் நிரந்தர மேம்பாட்டுப் பணிகள் ஆகும். இம்மேம்பாட்டுப் பணிகளுக்காக 1978-79-ம் ஆண்டில் ரூ. 75 லட்சம் பொதுப் பணித்துறை நீர் நிலைகளுக்கும், ரூ. 50 லட்சம் ஊராட்சி ஒன்றியங்களின் நீர்நிலைகளுக்கும், ரூ. 10 லட்சம் முன்னாள் ஜமீன் நீர்நிலைகளுக்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

12. மேற்கூறிய சிறுபாசனத்திட்டங்களை நிறைவேற்றுவதற்காக 1979-80-ம் ஆண்டிலும், ரூ. 75 லட்சம் பொதுப் பணித்துறையின் கீழுள்ள நீர் நிலைகளுக்காகவும், ரூ. 50 லட்சம் ஊராட்சி ஒன்றியத்தின்கீழ் உள்ள நீர் நிலைகளுக்காகவும், ரூ. 10 லட்சம் முன்னாள் ஜமீன் நீர்நிலைகளுக்காகவும், ஒதுக்கீடு செய்யப்பட்டு இருக்கிறது.

13. இம்மாநிலத்தில் 3-ல் ஒரு பங்கு பாசன வசதி அளிக்கும் 37,000-க்கும் அதிகமாகவுள்ள கண்மாய்களை நவீனப்படுத்தும் தேவையை அரசு நன்கு உணர்ந்துள்ளது. 500 ஏக்கர் அல்லது அதற்கு மேற்பட்ட ஆயக்கட்டுகளைக் கொண்ட, 500 கண்மாய்களை உலக வங்கி உதவியுடன் நவீனப்படுத்த ஒரு பெருந்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் விவரங்களைத் தயாரிக்க, இந்திய அரசுடன், அதிகாரிகள் அளவில் பேச்சு வார்த்தைகள் நடத்தப் பட்டன. இந்த நவீனப்படுத்தும் திட்டத்தின் பொருளாதாரம் பற்றி ஒரு தெளிவான கருத்தினைக் கொள்வதற்கு ரூ. 109 இலட்சம் செலவில் 1979-80-ல் எட்டு முன்னோடித் திட்டங்களை எடுத்து நடத்த அரசு முடிவு செய்துள்ளது.

நிலநீர் :—

14. பொதுப்பணித்துறையில் நில நீர் பிரிவானது, நில நீர் சம்பந்தப்பட்ட, முறையான ஆய்வு வேலைகளில் ஈடு பட்டுள்ளது. புள்ளிவிவரங்கள் சேகரிப்பது, புவியியல் படம் எடுப்பது, மண்வள ஆய்வு செய்வது, நில நீர்க்கான சோதனைக் குழாய் அமைப்பது, நீர் வடிநில ஆய்வு செய்வது, மணல் படிவ சோதனை செய்வது ஆகியவை நில நீர்ப் பிரிவின் பணிகளாகும். வானில் இருந்தும், வான வெளியிலிருந்தும் எடுக்கப்படும் புகைப் படங்கள் மூலம் கிடைக்கும் தகவல்களை ஆராயும் வேலையும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

15. அடையாறில் நீர் ஆய் நிலையம் ஒன்று ரூ. 10 இலட்சம் செலவில் கட்டப்பட்டு வருகிறது.

1979 மார்ச் 29]

16. இந்த நிலையத்தை மேம்படுத்துவதற்கு 0.49 மில்லியன் அமெரிக்க டாலர் ஐக்கிய நாடுகள் வளர்ச்சி திட்டத்திலிருந்து உதவி பெறுவதற்கான திட்ட அறிக்கை ஒன்று, மத்திய அரசின் மூலமாக ஐக்கிய நாடுகள் வளர்ச்சி திட்டக் குழுவிற்கு அனுப்பப்பட்டுள்ளது. மத்திய திட்டக்குழு மற்றும் மத்திய அரசின் அறிவியல் தொழில் நுணுக்கத்துறை, தொழில் நுட்ப வளர்ச்சி இயக்குநர், இவர்களுடைய அனுமதியும் எதிர்பார்க்கப்படுகிறது. உலக வளர்ச்சி ஆணைக்குழு ஒதுக்கியுள்ள 2.5 மில்லியன் அமெரிக்க டாலர்களில், 1,35 மில்லியன் டாலர்கள், கருவி வாங்குவதற்கும் அதிகாரிகளின் வெளிநாட்டுப் பயிற்சிக்காகவும், செயற்கை கோள்களின் தகவல்களை வாங்குவதற்கும் ஒதுக்கப்பட்டுள்ளது.

17. மாநிலத்தின் பல பகுதிகளிலும் நிலநீர் அளவு குறைந்து வருவது அரசுக்குக் கவலை அளிக்கிறது. இந்த மாநிலத்தின், நெடுங்கால நன்மையைக் கருதி, நில நீரை வெளியில் எடுப்பதைக் கட்டுப்படுத்தவும், அதைச் சரியாக பயன்படுத்தவும் தகுந்த நடவடிக்கைகளை எடுப்பது அவசியமாகிறது. இதற்கான மசோதாவை அரசு ஏற்கனவே அறிமுகப்படுத்தி உள்ளது. இம் மசோதா சட்ட மன்றத்தின் இணைத் தேர்வுக் குழுவின் பரிசீலனையில் உள்ளது.

வெள்ளம், வெள்ள நிவாரணம் :

18. வட கிழக்கு பருவ மழையானது முதற் சட்டத்திலேயே மாநிலத்தை முழு வேகத்தோடு தாக்கியது. நதிகளும் கால்வாய்களும் வெள்ளமாகின. கனமழையின் காரணமாக மேட்டூருக்கு கீழே பவானியிலும், காவேரியிலும் அதிகமான வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. பெரும்பாலான மாவட்டங்களில் நீர்ப்பாசன நிலைகள் பெரு மழையினால் பாதிக்கப்பட்டன. தஞ்சாவூர் தென்னாற்காடு, புதுக்கோட்டை, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்கள் பெரும் அளவில் பாதிக்கப்பட்டன.

வடகிழக்குப் பருவக் காற்று டிசம்பர் திங்கள் மத்தியில் நின்றுவிடுவது வழக்கம். ஆனால், 1978 ஆம் ஆண்டில் டிசம்பர் திங்கள் இறுதி வாரத்தில் வடகிழக்கு பருவக் காற்றால், செங்கல்பட்டு, இராமநாதபுரம், தென்னாற்காடு, தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களிலும், சென்னை நகரிலும் பெருமழை பெய்து, பாதிப்பு ஏற்பட்டது. தொடர்ந்து பெய்த மழையால் சென்னை மாநகரத்தின் பல பகுதிகள் வெள்ளக் காடாயின. செம்பரம்பாக்கம் ஏரி நிரம்பி வழிந்தது.

ஏரிகள், நீர்த்தேக்கங்கள், அணைக்கட்டுக்கள், கால்வாய்கள், ஆறுகள் போன்ற சுமார் 2,000 நீர் நிலைகள் பாதிக்கப்பட்டன உடைப்புகளை அடைப்பது போன்ற உடனடி பணிகளுக்கென ரூ. 76.39 இலட்சம் தேவைப்படுமென மதிப்பிடப்பட்டது, பாதிக்கப்பட்ட நீர்ப்பாசன நிலைகளுக்குச் செய்ய

வேண்டிய நிலையான சீரமைப்பு வேலைகளுக்கு ரூ. 248.61 இலட்சம் தேவைப் படும் என மதிப்பிடப்பட்டது. இவ்வாறாக, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட நீர்நிலைகளைச் சீராக்குவதற்கு ரூ. 325 இலட்சம் மொத்தச் செலவாகும் என மதிப்பிடப்பட்டது. இதில் ரூ. 250 இலட்சத்திற்கு நடப்பு ஆண்டிலேயே ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. பணிகள் முடியும் தருவாயில் உள்ளன.

அடையாற்றில் தொடர்ந்து ஏற்படுகின்ற வெள்ளம் செம்பரம்பாக்கம் ஏரியிலுள்ள நீரை கட்டுப்படுத்தி சீராக வெளியேற்றும் அவசியத்தை தெளிவுறக் காட்டியது. 1978 ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில், செம்பரம்பாக்கம் ஏரியை மேம்படுத்துவதற்கென ரூ. 79.45 இலட்சத்திற்கான மதிப்பீட்டிற்கு அரசு ஒப்பளித்தது. ஏரிக்கரையை தரமான நிலைக்கு கொண்டுவருவது, தற்போதுள்ள நீர் வழிந்தோடும் அமைப்புகளுக்குப் பதிலாக மதகுகள் அமைப்பது, ஆகியவை மேம்பாட்டுப் பணியில் உள்ளடங்கியுள்ளன. இப்பணிகள் முன்னேறி வருகின்றன. அடுத்த மழைப் பருவகாலத்திற்கு முன் முடிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதுபோலவே, பெருமழையால் சென்னை மாநகரத்திலுள்ள ஓட்டேரி வடிகாலும் வெள்ளப் பெருக்கெடுத்து நகரின் சில பகுதிகளை பாதிக்கிறது. இக் கழிவுநீர் வடிகாலை மேம்படுத்துவதற்கு ரூ. 12.30 இலட்சம் மதிப்பீடு உள்ள திட்டத்திற்கு ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது.

1978 ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் ஏற்பட்ட வெள்ளத்தால் ஊட்டி ஏரி அமைப்பு வெகுவாகப் பாதிக்கப்பட்டது. எவ்விதமான மேம்பாடு ஊட்டி ஏரி அமைப்பிற்கு தேவையென ஆராய சிறப்பு பணியாளர்கள் அரசினால் நியமிக்கப்பட்டார்கள். இந்த ஆய்வுகளின் அடிப்படையில் ஏரி அமைப்பிற்கு மேம்பாடு காண்பதற்கென, ரூ. 30 இலட்ச மதிப்பீட்டிற்கு ஒப்புதல் அளிக்கப் பட்டுள்ளது.

காவிரி நீர்ப்பிரச்சனை :

19. இவ்வாண்டிலும் காவிரி நீர் பிரச்சனைக்கு ஒரு தீர்வு கிடைக்கவில்லை. 1978 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்களிலிருந்து அக்டோபர் திங்கள் வரை காவிரி நீர் வழிமுறை சம்பந்தப்பட்ட மாநிலங்களின் முதல் அமைச்சர்கள் மாநாடு டெல்லியிலும் பெங்களூரிலும் மூன்று முறை மத்திய அரசால் கூட்டப்பட்டது. மேல் நடவடிக்கை எடுப்பது குறித்து மாநில அரசு ஆய்ந்து வருகின்றது. தமிழ்நாட்டிலுள்ள காவிரி ஆயக்கட்டினுடைய நலன்களை முழுமையாகப் பாதுகாக்கின்ற வகையில் இப்பிரச்சினைக்கு ஒரு தீர்வுகாண இவ்வரசு பாடுபடும் என்பதை மீண்டும் உறுதிப்படுத்துகிறது.

1979 மார்ச் 29]

மேற்கு நோக்கி ஓடும் ஆறுகளைத் திருப்பிவிடுதல் :

20. இவ்வரசு எடுத்துக் கொண்ட முயற்சியின் விளைவாக இம்மாநிலத்தில் வறட்சியால் பாதிக்கப்படுகின்ற பகுதிகள் பயன் பெறும் வகையில், மேற்கு நோக்கி ஓடுகின்ற ஆறுகளில் உள்ள மிகுதியான நீரினை கிழக்குத் திசையில் திருப்பிவிடுவதற்கான திட்டங்கள் குறித்து பரிசீலனை செய்து, யோசனை கூறுவதற்குகென ஒரு தொழில் நுட்பக்குழுவை மத்திய அரசு அமைத்தது. இக்குழுவில் தமிழ்நாடும் அங்கம் வகிக்கின்றது இக்குழு ஐந்து முறை கூடி, இப்பிரச்சனையின் பல்வேறு தன்மைகளையும் மற்றும் தமிழ்நாடு கொடுத்த தொடக்க நிலை செயற்குறிப்புகளையும், கர்நாடகமும், கேரளமும் கொடுத்த தொடக்க நிலைக் குறிப்புகளையும் பரிசீலனை செய்தது. இப்பேச்சு வார்த்தைகள் தொடர இருக்கின்றன.

சென்னை மாநகருக்குக் கிருஷ்ணா ஆற்றுத் தண்ணீரைக்கொண்டு வருதல் :

21. சிரிசைலம் நீர்த் தேக்கத்திலிருந்து சென்னை மாநகருக்கு குடி தண்ணீருக்காக 15 டி. எம். சி. கிருஷ்ணா ஆற்று நீரைக் கொண்டு வருவதற்கான ஏற்பாடுகள் குறித்து 1978 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 15 ஆம் நாளன்று ஆந்திரப் பிரதேச முதலமைச்சரும், தமிழ்நாட்டு முதலமைச்சரும் பேச்சு வார்த்தைகள் நடத்தினர். இத்திட்டத்திற்கான விரிவான ஆய்வினை உடனடியாக மேற்கொள்ள வேண்டுமென முடிவு செய்யப்பட்டது. ஆந்திரப் பிரதேச அரசு தனது பகுதியில் ஆய்வினை மேற்கொள்ளுவதற்கென நான்கு கோட்டங்களைக் கொண்ட ஒரு வட்டத்தினை அமைத்துள்ளது. தமிழ்நாட்டு எல்லைக்குள் ஆய்வினை மேற்கொள்ளுவதற்கென ஒரு கோட்டம் இவ்வரசினால் அமைக்கப்பட்டுள்ளது. இரு மாநிலங்களிலும் ஆய்வு வேலை நடந்து வருகின்றது. இவ் வேலையின் முன்னேற்றத்தினை ஆய்வு செய்வதற்கென இரு மாநிலங்களின் அரசு அலுவலர்களைக் கொண்ட ஒரு தொடர்பு குழு (Liaison Committee) அமைக்கப்பட்டுள்ளது.

1978-79 ஆம் ஆண்டில் நீர்ப்பாசனம் :

22. 1978-79 ஆம் ஆண்டில் காவிரியின் நீர்ப்பிடிப்புப் பகுதியில் தென் மேற்குப் பருவ மழை வழக்கத்திற்கு அதிகமாகவே இருந்தது. மேட்டூர் நீர்த்தேக்கம் 1978 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 5 ஆம் நாள் அன்று திறந்து விடப்பட்டது. இந்நீர்த்தேக்கம் நல்ல நீர் வரவினைப் பெற்று நிரம்பியது. வடகிழக்குப் பருவ மழை 1978-79-இல் சற்றுக் காலதாமதமாகத் தொடங்கியது. இதுவும் வழக்கத்திற்கு அதிகமாகவே இருந்தது. பவானி சாகர், அமராவதி, நீர்த்தேக்கங்கள் நிரம்பி வழிந்தன. 1978 ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் மணிமுத்தாறு நீர்த்தேக்கம் நல்ல நீர்வரத்தினைப் பெற்றது; அவ்வாண்டு டிசம்பர் திங்களில் இந் நீர்த்தேக்கம் நிரம்பி வழிந்தது. எல்லா நீர்த்தேக்கங்களுமே நல்ல நீர்வரத்தினைப் பெற்றன.

TRUTH ALONE TRIUMPHS

உள்நாட்டு நீர்வழிகளை மேம்படுத்துதல் :

23. இவ்வரசு தயாரித்துள்ள ஒரு பெருந்திட்டத்தின் படி, வட பக்கிங்காம் கால்வாயினை மேம்படுத்த ரூ. 310 இலட்சம் தேவைப்படும். மத்திய அரசு ஆதரவு திட்டமாக இதைக் கருதுவது குறித்து இந்திய அரசுடன் கடிதப் போக்குவரத்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

சிறுபாசனம் குறித்து ஆலோசனைக் குழு :

24. சிறுபாசனத் திட்டங்களைக் கண்காணிப்பதற்கும் மதிப்பீடு செய்வதற்கும், மற்றும் இத்திட்டங்களின் சாதனைகளை திறனாய்வு செய்வதற்கும் தலைமைச் செயலரைத் தலைவராகக் கொண்ட உயர் மட்டக்குழு ஒன்றினை அரசு அமைத்துள்ளது.

மாநிலங்களில் உள்ள ஆறுகளின் வடிநிலப்பகுதிகள் சம்பந்தப்பட்ட திட்டங்கள் :

25. இதுவரை ரூ. 25 இலட்சத்திற்குக் குறைவாக செலவாகும் திட்டங்கள் சிறு பாசனத்திட்டங்கள் எனக் கருதப்பட்டு வந்துள்ளன. திட்டங்களுக்காக ஆகின்ற செலவைப்பற்றி கருதாமல், 2,000 ஹெக்டேருக்கு உட்பட்ட நிலங் களுக்குப் பாசன வசதி தரும் திட்டங்களே சிறுபாசனத் திட்டங்கள் என்று மத்திய திட்டக்குழு, சிறு பாசனத் திட்டங்களுக்கு புதியதொரு இலக்கணம் தற்போது வகுத்துள்ளது. நடுத்தரத் திட்டங்களைப் போலல்லாமல், சிறு பாசனத் திட்டங்களை மத்திய நீர்க்குழுவின் அனுமதிக்காக அனுப்ப வேண்டியதில்லை. ஒன்றுக்கு மேற்பட்ட மாநிலங்களில் பாயும் நதிகளிலிருந்து பாசன வசதி பெறும் நடுத்தரத் திட்டங்களைப் பரிசிலிக்கும் போது, சம்பந்தப்பட்ட எல்லா மாநிலங்களின் உரிமைகளையும், மத்திய நீர்க்குழு கவனத்தில் கொள்கிறது. சிறுபாசன திட்டங்கள் என்பதன் இலக்கணம் மாற்றப்படுவதனால் வருங்காலத்தில், 2,000 ஹெக்டேர் நிலங்களுக்குட்பட்ட பாசன வசதி தருகின்ற ஏராளமான சிறுபாசனத் திட்டங்களை மத்திய அரசின் அனுமதி பெறாமலேயே எந்த மாநிலமும் அமுலாக்க முடியும். இதன் தொடர் விளைவாக, கீழ் மட்டத்தில் அமைந்துள்ள மாநிலங்கட்கு இடையூறு விளையும். ஆகவே, புதிய இலக்கணப்படி, அவை சிறுபாசனத் திட்டங்களாயினும், மாநிலங்களுக்கிடையே உள்ள ஆற்றுப் பள்ளத்தாக்குகளில் அமைந்துள்ள சிறுபாசனத்திட்டங்களுக்கு, மத்திய அரசு ஒப்புதல் வழங்க வேண்டுமென்று, இந்திய அரசை வற்புறுத்துவது அவசியமாகும். மாநிலங் களுக்கு இடையே சுமுகமான நல்லுறவு நிலவுவதற்கும் மாநில அரசுகளின் வீணான செலவைத் தவிர்ப்பதற்காகவும், எல்லா மாநிலங்களுக்கும் சமநீதி வழங்குவதற்காகவும், இது இன்றியமையாததாகும். எல்லா மாநிலங்களுக்கும் இது தொடர்பாக, தக்க அறிவுரைகள் வழங்குவதற்காக மத்திய அரசிடம் இவ்விஷயத்தை இம்மாநில அரசு எடுத்துரைத்துள்ளது.

1979 மார்ச் 29]

26. பாசனத் திட்டங்களின் பயன்—செலவு விகிதம்—ஒரு புதிய கண்ணோட்டம்.

தமிழ்நாட்டின் நீர்ப்பாசன வளத்தில் 90 சதவிகிதத்தை நாம் பயன்படுத்தி விட்டோம். எஞ்சியுள்ள பாசனவளம் சம்பந்தமாக தற்போதைய பயன்-செலவு விகித அடிப்படையில் ஆதாயம் தரத்தக்க திட்டங்களை வகுப்பது கடினமாகியுள்ளது. இத்தகைய திட்டங்களில் சில பாசன வசதியே பெற்றிராத பகுதிகளிலும், குறிப்பாக வறட்சிக்குட்பட்ட பகுதிகளிலும் உள்ளன. பல பாசனத் திட்டங்களில் சிறந்த திட்டம் எது என்பதைத் தேர்ந்தெடுப்பதற்கு, பயன்-செலவு விகிதாச்சாரம் ஓரளவுக்கு பொருத்தமாயிருக்கலாம். ஆனால், பயன்படுத்துவதற்குரிய பாசன வளம் மிகக்குறைவாக உள்ள நமது மாநிலத்தில், இந்த பயன்-செலவு விகிதாச்சார முறையை முற்றிலும் பின்பற்றுவது அவ்வளவு பொருத்தமாயிராது. மற்றும், வட்டாரங்களுக்கிடையே காணப்படும் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை போக்குவதற்கும், இந்த பயன்-செலவு விகிதாச்சாரத்தைத் தளர்த்த வேண்டியுள்ளது. நீர் வளம் உயர்ந்து வேளாண்மைத் துறையில் செழுமை ஏற்பட்டால் அதன் பயன் அத்துறையை அடுத்துள்ள துறைகளிலும் பரவுவது நாம் காணலாம். எனவே, பயன்-செலவு விகிதாச்சாரத்தை மட்டும் கணக்கிட்டு, நாட்டுக்கு நலம் பயக்கும் பாசனத்திட்டங்களை நாம் கைவிடக்கூடாது. முற்றிலும் ஆதாயமில்லாத பாசனத்திட்டங்கள் மேற்கொள்ளப் படாமலிருப்பதற்கு ஒரு வகை விதிமுறை அவசியமாயிருந்தாலும், அந்த விதிமுறை தமிழ்நாட்டை பொறுத்தவரையில் இங்குள்ள நிலைமைகளுக்கேற்ப போதிய அளவிற்குத் தாராளமான வகையில் அமைய வேண்டும். இந்தக்கருத்தினையொட்டியே பயன்-செலவு விகிதாச்சாரத்தைத் திருத்துவதில் நியாயம் இருப்பதோடு மட்டுமல்லாமல், அவ்வாறு திருத்தப்படும் விகிதாச்சார முறையை, தனித்தனித் திட்டங்களை ஆராயும் பொழுது அனுசரிப்பதில் ஓரளவு தாராளமாகவும் இருக்கவேண்டும். அந்தந்த திட்டப்பகுதியிலுள்ள பொருளாதார, சமூக சூழ்நிலைகளையும், பிற முகாந்திரங்களையும் கருத்தில் கொண்டு அந்தத் திட்டம் பயன்-செலவு விகிதாச்சார அளவுக்குச் சற்றுக்குறைந்திருந்தாலும் கூட அந்தப் பணிக்கு அனுமதி அளிக்கப்பட வேண்டும்.

தமிழ்நாட்டில் ஓடும் ஆறுகள் சிலவற்றில் இரண்டாண்டுக் கொருமுறையோ அல்லது மூன்றாண்டுக்கு ஒருமுறையோ தான் வெள்ளப் பெருக்கு உண்டாகிறது. அடுத்துள்ள வறட்சிப் பகுதிகள் பயன் அடையும் வண்ணம் இவ்வெள்ளப் பெருக்கத்தைத் திருப்பி விடலாம். இவ்வாறு வெள்ளப் பெருக்கு இரண்டாண்டுகளுக்கு ஒருமுறையோ, மூன்றாண்டுகளுக்கு ஒரு முறையோ தான் ஏற்படுவதால், எல்லா ஆண்டுகளையும் ஒரே சீராக எடுத்துக் கொண்டு பயன்-செலவு விகிதாச்சார அடிப்படையில் கணக்கிடுவோமானால், இந்த

1979 மார்ச் 29]

வெள்ளப் பெருக்குகளை அடுத்துள்ள பகுதிகளுக்குத் திருப்பிவிடுவது சாத்தியமாகாது. எனவே, வறட்சிக் குட்படும் பகுதிகளுக்கு பாசன வசதி கிட்டும்படிச் செய்வதற்காகவும், சில ஆற்றுத் திட்டங்களில் ஏற்படும் வெள்ளப் பெருக்கினைத் தடுப்பதற்காகவும், எந்தெந்த ஆண்டுகளில் வெள்ளப் பெருக்கு ஏற்படுகிறதோ அந்த ஆண்டுகளை மட்டுமே எடுத்துக் கொண்டு பயன்-செலவு விகிதாசாரத்தைக் கணக்கிட்டு, மேற்சொன்னவாறு அடுத்துள்ள பகுதிகளுக்கு அந்த வெள்ளப் பெருக்கைத் திருப்பிவிடும் திட்டங்களுக்கு அனுமதி அளிப்பது உசிதமாகும்.

9—2—1979-ல் திருவனந்தபுரத்தில் நடைபெற்ற பாசன அமைச்சர்களின் மாநாட்டில் இக்கருத்துக்கள் தமிழ்நாட்டின் சார்பில் விரிவாக எடுத்துக் கூறப் பட்டன. அப்போது அம்மாநாட்டிற்கு வந்திருந்த மைய அரசுப் பிரதிநிதி கள், பயன்-செலவு விகிதாச்சாரத்தின் கோட்பாடு, அதன் செயல்திறன் ஆகியவை குறித்துப் புதிதாக ஆய்வு செய்வதற்கென குழு ஒன்றை அமைக்கும்படி திட்டக் குழுவை கேட்டுக் கொள்ளலாமென்று ஒப்புக் கொண்டார்கள்.

இம்மாநிலத்தின் பல பகுதிகளில் இப்போது கரும்பு, வாழை போன்ற பணப் பயிர்களைப் பயிரிடுவது வழக்கமாகிவிட்ட போதிலும்கூட தற்போது பாசனப் பணிகளால் கிடைக்கும் பயனை மதிப்பிடுவதில் பொதுவாக இவற்றைக் கருத்தில் கொள்வதில்லை. பணப் பயிர்களை விட குறைந்த ஆதாயம் தருகிற உணவுப் பயிர்களின் அடிப்படையில் மட்டுமே இப்பாசனத் திட்டங்களின் பலன் மதிப்பிடப்படுகிறது. பாசனத் திட்டப் பணிகளின் பயனைச் சரியான முறையில் மதிப்பிடும் பொருட்டு, பயன்-செலவு விகிதாச்சாரத்தைக் கணக்கிடுவதற்காக பணப் பயிர்களையும் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று அரசு கருதுகிறது.

27. 1978-79 ஆம் ஆண்டுக்குரிய பாசன மானியக் கோரிக்கை மீது நடை பெற்ற விவாதங்களில் மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் தெரிவித்த எல்லாக் கருத்துக்களையும் அரசு மிகக் கவனமாக ஆய்வு செய்துள்ளது. இக்கருத்துக் களின் மீது எடுத்துள்ள நடவடிக்கைகள் பற்றிய விவர அறிக்கை ஒன்று இம் மாமன்றத்தின் முன் வைக்கப்பட்டுள்ளது.